# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை 9 : வள்ளுவர் ஆண்டு 2030 புரட்டாதி 22 சனிக்கிழமை (09-10-1999) SANJEAVY -Regenerative Tamil Weekly சிகரம்:19


# வன்னியில் பெரும் நடவடிக்கை மாரி முடியும் வரையும் இல்லை!

## படை வட்டாரங்கள் தகவல்

கொழும்பு,ஒக்ரோபர்9

**வன்னியில் மழைகாலம் முடிவடையும் வரை பாரிய இராணுவ நடவடிக்கை எதையும் படைத்தரப்பு மேற்கொள்ளும் சாத்தியம் இல்லை.**

**வன்னிப் படைகளின் தலைமையக வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புச் செய்தி ஏஜென்சிகள் இத்தகவலை வெளியிட்டன.**

அந்த வட்டாரங்கள்மேலும் தெரிவித்ததாவது:-

"வன்னியில் மழைகாலம் ஆரம்பித்துவிட்டது. அங்கு பணிபுரியும் படையினருக்கு கொலரா,மலேரியா போன்ற தொற்று நோய்கள் ஏற்படாமல் இருப்பதற்காகத் தடுப்புநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"மழைகாலம் முடியும்வரை - அதாவது ஜனவரி மாதத்துக்கு முன்னர் - பாரிய இராணுவ நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் சாத்தியமில்லை.

"கிழக்கு மாகாணத்தில் இருந்து விடுதலைப்புலிகளின் படையணிகள் வன்னிக்கு நகர்வதாக்த் தகவல்கள் கூறுகின்றன. பாரியதாக்குதல் ஒன்றை மேற்கொள்ளும் நோக்குடனேயே இந்த நகர்வு - படைதிரட்டல் - இடம்பெறுகின்றது என்று புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன." - இப்படி அவ்வட்டாரங்களமேலும், தெரிவித்தன.

# திருநெல்வேலி ஈ.பி.டி.பி. முகாமில் நேற்றுக்காலை குண்டு வெடிப்பு!

## அமைப்பின் உறுப்பினர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக்.9

திருநெல்வேலி ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நேற்றுக்காலை 6.30 மணியளவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் அந்த அமைப்பின் உறுப்பினர் ஒருவர் பலியானார்.

கென்னடி என்று அழைக்கப்படும் கந்தையா ரகுலேஸ்வரன் (வயது 20-15ஆம் வட்டாரம், நெடுந்தீவு) என்பவரே பலியானவராவார்.

குண்டு வெடிப்பினால் வயிறுபிளந்த நிலையிலும் ஒரு கை துண்டிக்கப்பட்ட நிலையிலும் இவரின் சடலம் காணப்பட்டது.

குண்டுவெடிப்பினைத் தொடர்ந்து கோப்பாய் பொலீஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன் இது தொடர்பாக யாழ். நீதிமன்றத்திற்கும் தகவல் கொடுத்தார்கள்.

இதனைத்தொடர்ந்து யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏக நாதனின் பணிப்பின்பேரில் திடீர் மரண விசாரணை அதிகாரி சட்டத்தரணி க. கேசவன் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லுமாறும் உத்தரவிட்டார்.

இரவு கிரனேட் மற்றும் குண்டுகளுடன் நித்திரை செய்த இவர் கிரனேட் தவறுதலாக வெடித்தமையால் பலியானதாக ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வீ.கே.ஜெகன் தெரிவித்தார். (உ-3-5-13-139)

## இராணுவத்தின் பொன்விழா

# இந்திய,பாக்.,பங்களாதேஷ் ராணுவத் தளபதிகள் வருகை

கொழும்பு.ஒக்.9

இலங்கை இராணுவத்தின் பொன் விழாவையொட்டி நாளை கொழும்பு காலிமுகத்திடலில் இடம்பெறவுள்ள இராணுவ அணிவகுப்பு மற்றும் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் இராணுவத் தளபதிகள் இலங்கை வருகின்றனர்.

பொன்விழா நிகழ்வுகளின் ஓர் அங்கமாக நேற்று முன்தினம் முதல் காலிமுகத்திடலில் இடம்பெற்றுவரும் கண்காட்சி இன்று பூர்த்தியாகின்றது.

பொன்விழா ஆண்டை நினைவு கூர்ந்து நாணயம், முத்திரை ஆகியன நாளைய நிகழ்ச்சிகளின்போது வெளியிடப்படவிருக்கின்றன.

இந்த நிகழ்ச்சிகளையொட்டி கொழும்புநகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

காலிமுகத்திடலை அண்டிய பகுதிகள் ஊடானபோக்குவரத்தும் நாளை தடைசெய்யப்படும்.

(உ-3)

# கண்ணி அகற்றும் பணி வலி. வடக்கில் ஆரம்பம்

அளவெட்டி,ஒக்.9

வலி.வடக்கில் புதைந்து கிடக்கக் கூடிய மிதிவெடிகள் மற்றும் கண்ணி வெடிகளைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளை ஸிம்பாப்வே நிபுணர்குழு ஆரம்பித்துள்ளது.

படையினரால் கைவிடப்பட்ட காவலரண் பகுதிகள், பாடசாலைகள் ஆகியவற்றின் சுற்றாடல் பிரதேசத்தில் மோப்ப நாய்களின் உதவியுடன் இந்த நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

நிபுணர் குழுவினர் கண்ணிவெடிகள் இருக்கக்கூடிய இடங்களை முதலில் இனங்காணுவர் என்றும் -

அதன்பின்பே அவற்றை அகற்றும் பணியை ஆரம்பிப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டது.



முருகன் நளினி சாந்தன் பேரறிவாளன்

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் நால்வரின் மரணதண்டனை ஊர்ஜிதம்

## மறு ஆய்வு மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்தது

சென்னை.ஒக்.9

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் நால்வர் சமர்ப்பித்த மறு ஆய்வு மனுவை இந்திய உச்ச நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

இந்தக் கொலை வழக்கில் குற்றவாளிகளான நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு சென்னைச் சிறப்பு நீதிமன்றம் வழங்கிய மரணதண்டனைத் தீர்ப்பை உயர் நீதிமன்றம் முன்பு உறுதிசெய்திருந்தது.

அத்துடன் இந்த வழக்கில் சிறப்பு நீதிமன்றத்தினால் மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த எஞ்சிய 22 பேரையும் உயர் நீதிமன்றம் விடுதலை செய்திருந்தது.

மரணதண்டனைக் கைதிகள் நால்வரும் சமர்ப்பித்த மறு ஆய்வு மனுவை ஆராய்ந்த நீதியரசர்களின் பெரும்பான்மை விருப்பப்படி இந்த மனுவின் கோரிக்கைகள் தள்ளுபடி செய்யப்பட்டன.

மனுவை விசாரனை செய்த நீதிபதிகளில் தலைமை நீதிபதியான கே.ரி. தோமஸ் எதிரிகளில் ஒருவரான நளினிக்கு சிறு குழந்தை உள்ளதால் அவருக்கு மன்னிப்பு வழங்கவேண்டும் என்று தெரிவித்தார்.

ஆனால் ஏனைய இரு நீதிபதிகளான டி.பி.வாக்வா, எஸ்.எஸ்.காத்ரி ஆகியோர் மரணதண்டனைத் தீர்ப்பை உறுதிசெய்யவேண்டும் என்று தெரிவித்தனர்.

அதேநேரம் -

தடா குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள ஏனைய 22 பேரின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கோரி மத்திய புலனாய்வுத் துறை தாக்கல்செய்த மனுவை மூன்று நீதிபதிகளும் ஏகமனதாக நிராகரித்தனர். (உ-3-6)

# பொ.ஐ.முன்னணிக் கட்சிகள் அடுத்தவாரம் கூடுகின்றன

நீண்டகால இடைவெளியின் பின்னர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் நிறைவேற்றுக் குழுக்கூட்டம் அடுத்த வாரம் நடைபெறவிருக்கின்றது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெறவிருக்கும் இந்தக் கூட்டத்தில் அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கும். அரசுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் தொடர்பான விவகாரம் முக்கிய இடத்தைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் யாழ்.மாவட்ட ஒதுக்கீட்டு விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் புறக்கணிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும் -

தமது கட்சிக்கு எதிராக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ள கருத்துத் தொடர்பாகவும் -

இந்தக்கூட்டத்தில் தாம் குரல் எழுப்பவிருப்பதாக அமைச்சர் அஷ்ரப் தெரிவித்தார்.

"எமது கட்சி விடயத்தில் அரசாங்கம் ஒழுங்காகச் செயற்படாத பட்சத்தில் அரசுக்கு வழங்கும் ஆதரவை வாபஸ் பெறுவது குறித்து ஆராயப்படும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் சிலர் அரசுக்கு எதிராகக் கூறி வரும் கருத்துக்கள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது. (உ-3-6)

## அரசுக்கு ஆதரவளிப்பதா?

# கட்சியின் முடிவை எடுக்கும் அதிகாரம் அஷ்ரப்புக்கு!

அரசுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவதா அல்லது இல்லையா என்பது குறித்து முடிவு செய்யும் பொறுப்பை அமைச்சரும் கட்சியின் தலைவருமான எம்.எச்.எம்.அஷ்ரப்பின் பொறுப்பில் விடுவதென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் குழு நேற்று முடிவு செய்தது

நேற்று மாலை கூடிய அரசியல் குழுவின் கூட்டத்தில் இதுதொடர்பாக நீண்ட நேரம் ஆராயப்பட்டது என்றும்-

அதன்பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதென்றும் - கட்சி வட்டாரங்கள் தகவல்வெளியிட்டன.

# கடற்புலிகளின் துணைத்தளபதியும் மன்னார் கடற்சமரில் உயிரிழப்பு

மன்னார் கடற்பரப்பில் நேற்று முன் தினம் அதிகாலை 1.30 மணியளவில் கடற்படையினருடன் இடம்பெற்ற எதிர் பாராத மோதலில் கடற்புலிகளின் துணைத்தளபதி லெப்ரினன்ட் கேணல் [illegible] உயிரிழந்தார் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்த மோதலில் மேலும் 14 கடற்புலிகள் உயிரிழந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் - கடற்படையில் ஒருவர் காயமடைந்தார் என்றும் -

கடற்படைக்குச் சொந்தமான இரு டோறாப் படகுகள் சிறிய சேதத்திற்குள்ளாயின என்றும் -

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனசமூக நிலைய பொன்விழா

யாழ்ப்பாணம், ஒக்.9

அரியாலை சனசமூக நிலையத்தின் பொன்விழாவை ஒட்டி விசேட நிகழ்வுகள் நாளை பிற்பகல் 2.00மணி முதல் நிலையத்தின் தற்காலிக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

நிலையத்தலைவர் எஸ்.ரி.கணநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். ப.நோ.கூ.ச.தலைவர் சி.வி.கே. சிவஞானமும் கௌரவ விருந்தினராக நிலைய முன்னாள் தலைவர் எஸ்.கே. சண்முகலிங்கமும் சிறப்பு விருந்தினராக நிலைய லண்டன் பிரதிநிதியான க.செல்வராசாவும் கலந்துகொள்வர்.

இந்நிகழ்வில் நிலைய முன்பள்ளி பாலரின் விளையாட்டுப்போட்டிகள் இடம்பெறும். அத்துடன் விநோத வேடப் போட்டியும் இடம்பெறும். (ஐ-3)

# ஆடைக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.9

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்ட ஆடை தைத்தல் பயிற்சி நெறி நிறைவு விழா கண்காட்சி இன்று சனிக்கிழமை காலை 9.00மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் தி.சிவதட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்தக் கண்காட்சி நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கமும், சிறப்பு விருந்தினராக நல்லூர் உதவி பிரதேச செயலர் எஸ்.வேல் முருகோன்பிள்ளையும், ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தைச் சேர்ந்த றிச்சார்ட் காண்ட், ரி.கனகசபை உட்பட பலர் கலந்து கொள்வர்.

(ஐ-5)


## ஷண் ஓடியோ

அதிரடி மலிவு விற்பனை

நவராத்திரி வெளியீடு



மகாநதி சோபனா பாடிய மங்கள நாயகி
வாணி ஜெயராம் பாடிய மங்கள நவராத்திரி



சீர்காழி கோவிந்தராஜன், சீர்காழி சிதம்பரம் பாடிய சகலகலா வல்லி மாலை



யாழ் நகரில் பெற்றிட
ஷண் றெக்கோடிங் ஸ்பொட்
24/2, பெரியகடை யாழ்ப்பானம்.

ஷ ண்
ஓடியோ வீடியோ போட்டோ & கொமினிகேசன்
44/A, கொட்டாஞ்சேனை வீதி. கொழும்பு - 13.
Tel : 074-616349, 075-351856 Fax : 075-351855

பிந்திய செய்தி : அழகிய மூவர்ண சரஸ்வதி படம் இலவசம்



## நல்லூர் லயன்ஸ் கழகத்தின் இலவச மருத்துவ முகாம்

We Serve

இடம் :- முத்துத்தம்பி வித்தியாலயம்

திருநெல்வேலி LION Dr பிரதீப்குமார் தலைமையில் மருத்துவபீட மாணவர்களும் கலந்து கொள்வார்கள். எஸ்.எம்.பெர்ணாண்டோ நிறுவனத்தினர் கண் பரிசோதனை மேற்கொள்வார்கள்.

குறிப்பு: நீரிழிவு, இரத்த அழுத்தம், வாய்ப்புற்றுநோய், கண்பரிசோதனை உட்பட அனைத்து நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

V.S. சொக்கலிங்கம்
(செயலாளர்)

பதிவு செய்யுமிடம் :- தேவி தொலைத்தொடர்பு சேவை
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

விளம்பர அன்பளிப்பு:
**சுரன் ரெக்ஸ்ரைல்ஸ்**
பலாலி வீதி, திருநெல்வேலி.

(C9273)


## இரண்டாவது ஆண்டு நினைவுகளில்

தோற்றம்
04 - 12 - 1939



மறைவு
02 - 10 - 1997

அமரர்
**சி.தணிகாசலம் (ஆசிரியர்)**

திதி: 09.10.1999.

துன்பமும் துயரமும் நெஞ்சிலே பொங்கிட
மனம் எண்ணியே ஏங்குது உங்களின் பிரிவினை

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்.

'அமராபதி;
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

மனைவி, மகள், பெறாமகன
மற்றும் குடும்பத்தினர்.

(69707)

## இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், ஒக்.9

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 14ஆவது ஆண்டு நிறைவு விழாவும் 12ஆவது சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் கழகத் தலைவர் சி.குலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, கரவெட்டி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாஸன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்வினை ஆரம்பித்துவைப்பர்.

இந்த நிகழ்வில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி ச.சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகவும் தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபைப் பரிசோதகர் கி.கிருஷ்ணபாலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

(க)

# இலவச மருத்துவப் பரிசோதனை

தென்மராட்சி, ஒக்.9

பளை லயன்ஸ் கழகத்தினர் எழுதுமட்டுவாழ் தெற்கு விவசாய சம்மேளனத்தின் அனுசரணையுடன் எழுதுமட்டுவாழ், கரம்பகம், எழுதுமட்டுவாழ் வடக்கு, முகமாலை, கிளாலி, இத்தாவில், நாகர்கோவில் ஆகிய பகுதிகளின் மக்களுக்காக இலவச மருத்துவப் பரிசோதனை முகாமை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் நடத்தவுள்ளனர்.

இந்த முகாமில் இரத்த அமுக்கம், நீரிழிவு, கண், வாய்ப்புற்று, பொது மருத்துவம் ஆகியன தொடர்பான பரிசோதனைகள் நடைபெறுமென கழக செயலாளர் லயன் கு.ந.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

(க-117)

# வெள்ளி விழா சிறப்பு மலர்

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ். பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா சிறப்புமலர் வெளியீட்டு விழா நாளை மாலை 3மணிக்கு துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் ஏ.சோமசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விரந்தினர்களாக பேராசிரியர்கள் கே.பாலசுப்பிரமணியம், செ.சிவஞானசுந்தரம், சு.சுசீந்திரராஜா, வ.ஆறுமுகம் ஆகியோர் கல்ந்துகொள்ளவுள்ளனர்.

அறிமுக உரையை பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்த வெளியீட்டுரையை பேராசிரியர் ப.கோபால கிருஷ்ணஐயர் நிகழ்த்துவார். (ஐ-5)

## நாளை

புரட்டாதி - 23
ஞாயிற்றுக்கிழமை
திதி: பிரதமை
மாலை 5.54 வரை
நட்சத்திரம்:- சித்திரை
முன்னிரவு 10.02 வரை
நவராத்திரி விரதாரம்பம்
சுப நேரம்:-9.02 - 10.33
ராகு காலம்:4.32 - 6.02
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)


## ராஜா

(யாழ்ப்பாணம்)

அர்ஜூன் ~ குஷ்பு
மற்றும் பலர் நடித்த
ரோஜாவைக் கிள்ளாதே
10.30, 2.00, 5.00

(c-9162)

## நாகம்ஸ்

(சுன்னாகம்)

விஜய் ~ சங்கவி ~ சுவாதி
ரகுவரன்
நடித்து
செல்வா
11.00, 2.30, 5.15
(புதிய நேரம்)

(69791)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## வெள்ளி விழா
### நன்றி நவிலல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழாவினை முன்னிட்டுச் சிறப்பு மலரினை எவ்வித பல்கலைக்கழக நிதியுதவியுமின்றி வெளியிட்ட உதயன், வீரகேசரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளுக்கும் அவ்வாறு வெளிவர விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் மனப்பூர்வமான நன்றியைப் பல்கலைக்கழக சமூகந் தெரிவித்துக்கொள்கின்றது. அத்துடன் வெள்ளிவிழாவிற்கு நினைவுச் சாசனம் வெளியிட்ட துர்க்காதேவி தேவஸ்தானத்தினருக்கும் யாழ்.பல்கலைக்கழக எழுதுவினைஞர், தொழிநுட்பவியலாளர் அலுவலர் ஒன்றியத்திற்கும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை,
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம.

(C/9272)

## 31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு
12.06.1922



உதிர்வு
09.09.1999

**திருமதி யாக்கோப்பு மாகிறேற**

திங்களொன்று சென்றதம்மா - உங்கள்
அன்பு முகம் காணாது
நெஞ்ச மலர் வாடுதம்மா - உங்கள்
நேச மொழி கேளாது
நீங்கள் எமைப் பிரிந்தாலும் - உங்கள்
நினைவலைகள் எம்நெஞ்சை விட்டகலாது.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
கொப்பாட்டப்பிள்ளை.

16/1, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(69800)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா கார்த்தியேசு

அராலி வடக்கைச்சேர்ந்த செல்லையா கார்த்தியேசு 08.10.99 அன்று காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக்கணவனும், காலம்சென்ற சண்முகம், காலம்சென்ற நடேசு, கணேசன் (அராலி வடக்கு), மகேஸ்வரி (அராலி வடக்கு), ஆகியோரின் அன்புச்சகோதரனும், கமலராணி, யோகராணி, கருணாகரன், பாஸ்கரன், ஜெயராணி (ஜேர்மனி), சிவகரன் (ஜேர்மனி), சிறீகரன் (ஜேர்மனி), பிரபாகரன் (ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகுதந்தையும் சிவராசா, காலம் சென்ற தவராசா, மஞ்சுளா, தேவராணி, விஜயராணி (ஜேர்மனி) தயாரஞ்சினி, மயில்விழி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (10-10-1999) ஞாயிற்றுகிழமை காலை10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அராலி வடக்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வடக்கு

தகவல்
**செ.கணேசன் (சகோதரன்)**
உரிமையாளர், ஸ்ரீமுருகன் லோன்றி,
யாழ்ப்பாணம்.

69804

### பேரம்பலம் கனகசிங்கம்

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வீ.மாணிக்கம் பிரதர்ஸில் கடமை ஆற்றியவரும் வவுனியாவில் வசித்தவருமாகிய பேரம்பலம் கனகசிங்கம் 7-10-99இல் காலமாகிவிட்டார்.

அன்னார் பேரம்பலம் நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், இராமநாதன் செல்லம்மா தம்பதிகளின் (கோப்பாய்) அன்பு மருமகனும் லெட்சுமியின் அன்புக் கணவரும், பேரின்பநாதன் (பிரான்ஸ்), பேரின்பராணி (ஆசிரியை), புஸ்பராணி, ஜெயராணி (பிரான்ஸ்), விஜயராணி, வசந்தராணி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், விக்கினேஸ்வரன், சிவசோதி, மோகன், ஆகியோரின் அன்பு மாமனாரும் கணபதிப்பிள்ளை (துரைசிங்கம்), நடேசபிள்ளை, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகேஸ்வரி, அமிர்தவல்லி, பரமேஸ்வரி, சிவசுப்பிரமணியம், கனகரெத்தினம் (ஜேர்மனி), யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று 8-10-99 வவுனியாவில் நடைபெற்றது.

"நாகபவனம்"
மட்டுவில் தெற்கு
சாவகச்சேரி.

தகவல்:
**நடேசபிள்ளை**
(சகோதரன்)

(69808)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மக்களவைத் தேர்தலில் பி.ஜே.பி.கூட்டணி ஈட்டிய வெற்றி!

இந்தியாவின் 13ஆவது மக்களவைக்கான தேர்தல்கள் முடிவடைந்துவிட்டன. ஏற்கனவே வாக்குக்கணிப்புக்கள் தெரிவித்தது போன்று பாரதீய ஜனதாக் கட்சித் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுவிட்டது.

நாளை ஞாயிற்றுக்கிழமை தேசிய ஜனநாயகக்கூட்டணி புதுடில்லியில் கூடி சம்பிரதாயப்படி அடெல் பிஹாரி வாஜ்பாயை தனது தலைவராகத் தெரிவு செய்யும். அநேகமாக வாஜ்பாய் தலைமையிலான புதிய அரசாங்கம் அதே தினம் அல்லது ஓரிரு



கருணாநிதி

தினங்களில் பதவியேற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய மக்களவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 545 ஆகும். இதில் இருவர் ஜனாதிபதியால் தெரிவுசெய்யப்பட 543 தொகுதிகளுக்கே தேர்தல் நடைபெற்றிருக்க வேண்டும். எனினும் வேட்பாளர் மரணம் உட்பட பல்வேறு காரணங்கள் காரணமாக 537 தொகுதிகளில் மட்டுமே வாக்களிப்புக்கள் இடம்பெற்றன. அறுதிப்பெரும்பான்மைக்கு தேவையான இடங்களைவிட சுமார் 20 இடங்களைக் கூடுதலாகப் பெற்றுள்ளது தேசிய ஜனநாயகக் கூட்டணி.

## தெலுங்கு தேசம் வெளியிலிருந்துஆதரவு

24 கட்சிகள் கொண்ட இந்தக் கூட்டணியில் பாரதீய ஜனதாக் கட்சிக்கு அடுத்ததாக பெரிய கட்சியாக தெலுங்கு தேசம் விளங்குகிறது. இந்தக் கட்சி சார்பாக போட்டியிட்டவர்களில் 25பேர் வெற்றிபெற்றுள்ளனர்.

பாரதீய ஜனதாக்கட்சி தனித்துப் பெற்ற இடங்கள் 182 ஆகும்.

தெலுங்குதேசம் கட்சி கடந்த ஆட்சியின்போது நடந்துகொண்டது போன்று இம்முறையும் பிரச்சினைகளின் அடிப்படையில் வெளியிலிருந்து ஆதரவு வழங்கவே முடிவுசெய்துள்ளது.கடந்த ஆட்சியின்போது வெளியிலிருந்து ஆதரவு வழங்கிய மமதா பனர்ஜீ தலைமையிலான திரிணாமூல் காங்கிரஸ் இம்முறை ஆட்சியில் பங்குபற்ற முன்வந்துள்ளது. தெலுங்கு தேசம் வெளியிலிருந்து ஆதரவு வழங்கப் போவதாக அறிவித்திருப்பது பாரதீய ஜனதாவின் வெற்றியில் ஒரு கீறலை ஏற்படுத்திவிட்டது என்றே கூறவேண்டும்.

தேர்தல் முடிவுகள் அத்தனையும் வெளிவந்த நிலையில் பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 296 இடங்களிலும் காங்கிரஸ் கூட்டணி 134 இடங்களிலும் கம்யூனிஸ்ட் கட்சிகள் 42இடங்களிலும் மற்றைய கட்சிகள் 65 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன.

## பெரும்பாலான தலைவர்கள் வெற்றி

இம்முறை மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் வரிசையில் அடெல் பிஹாரி வாஜ்பாய், எல்.கே. அத்வானி, ஜோர்ஜ் பெர்னாண்டஸ், சோனியா காந்தி, சந்திரசேகர், முலாயம்சிங் யாதவ், மாயாவதி, மேனகா காந்தி, பூலான் தேவி,அஜித்சிங், நவீன் பட்நாயக் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

மற்றும் தோல்வி அடைந்தவர்களில் மன்மோகன்சிங், அஜித் யோகி, தேவகௌடா, ஜே.எச். பட்டேல், லாலு பிரசாத் யாதவ் அடங்கியுள்ளனர்.

## தமிழ்நாட்டில்

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டின் 39 தொகுதிகளில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி 26 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு 13 தொகுதிகள் கிடைத்துள்ளன. அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் அ.தி.மு.க.வுக்கு 10 இடங்களும், காங்கிரஸுக்கு 2 இடங்களும், மார்க்சிஸ கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஓர் இடமும் கிடைத்தன.

கடந்த தேர்தலில் அ.தி.மு.க - பாரதீய ஜனதா அடங்கிய கூட்டணிக்குக் கிடைத்த 30 தொகுதிகளுடன் ஒப்பிடுகையில் இம்முறை தி.மு.க. - பாரதீய ஜனதா அடங்கிய கூட்டணிக்கு கிடைத்த இடங்கள் குறைவாகும். கடந்த தேர்தலில் இருந்த காங்கிரஸ் எதிர்ப்பு அலையும் இதற்கொரு காரணம் என்று கூறப்படுகின்றது. தமிழ்நாட்டில் இம்முறை தோல்வி அடைந்தவர்களில் ஜனதாக் கட்சி தலைவர் சுப்பிரமணியசுவாமி, தமிழக ராஜீவ் காங்கிரஸ் தலைவரும் மத்திய அமைச்சருமான வாழப்பாடி ராமமூர்த்தி, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ், அ.தி.மு.க. முன்னாள் சட்டத்துறை அமைச்சர் தம்பித்துரை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

13 மாதகால பாரதீய ஜனதா ஆட்சியின் வீழ்ச்சியின் சூத்திரதாரியாகக் கருதப்பட்டவர் சுப்பிரமணிய சுவாமி ஆவார். கடற்படைத் தளபதி அட்மிரல் பகவத்தை பதவி நீக்கம் செய்யவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஜெயலலிதாவை இறங்க வைத்ததும் சுப்பிரமணிய சுவாமிதான். அதுவும் பகவத்தின் பிரச்சினையை விடுதலைப் புலிகளின் பிரச்சினையுடன் சம்பந்தப்படுத்தியதும் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியின் ஆதரவைச் சுலபமாகப் பெறுவதற்குத் தான்.

தற்பொழுது இத்தேர்தல் முடிவுகள் 'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டி'யின் நிலைக்கு ஜெயலலிதாவையும், சுப்பிரமணிய சுவாமியையும் தள்ளிவிட்டன. மதுரை மக்களவைத் தேர்தலில் சுப்பிரமணிய சுவாமி கட்டுப்பணத்தை இழந்ததுடன் நான்காவது இடத்துக்குத் தள்ளப்பட்டார்.

காங்கிரஸ் மத்தியில் ஆட்சி

## உலக உலா
### என்.பி.சீலன்

அமைக்கும் பட்சத்தில் தமிழ்நாட்டில் தி.மு.க. அரசைக் கலைத்துவிடலாம் என்றும் தமக்கெதிரான ஊழல் வழக்கிலிருந்து தப்பிவிடலாம் என்றும் பகற்கனவு கண்டுகொண்டிருந்த ஜெயலலிதாவுக்கு இம்முறை மீளமுடியாத தோல்வி ஏற்பட்டுள்ளது. ஜெயலலிதாவின் பரமவைரி கருணாநிதி. அத்துடன் ஆட்சியை வீழ்த்தியதற்காக பாரதீய ஜனதாத் தலைவர்கள் ஜெயலலிதாவை பழிவாங்கத் தயங்கமாட்டார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்தத் தேர்தல் முடிவுகளால் ஊழல் வழக்கு விசாரணைகளில் இருந்து தப்பக்கூடிய வாய்ப்புக்களை ஜெயலலிதா முற்றாகவே இழந்து விட்டார் என்றே கருதப்படுகிறது.

## ஜெயலலிதா குற்றச்சாட்டு

தேர்தல் முடிவுகள் தமது கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவும் அல்ல தோல்வியும் அல்ல என்று ஜெயலலிதா தெரிவித்திருக்கின்றார்.


பாரதீய ஜனதாவும் தி.மு.க.வும் தமிழ்நாட்டில் அதிகாரத் துஷ்பிரயோகம் செய்து தேர்தலில் வெற்றி ஈட்டி உள்ளன என்று ஜெயலலிதா குற்றஞ்சாட்டி உள்ளார்.

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மூலம் நடைபெற்ற வாக்குப் பதிவுகளில் குழப்பங்களும் சந்தேகங்களும் நிலவுவதாகவும் இந்தியாவில் மின்னணு வாக்குப்பதிவு முறை தேவை அற்றது என்றும் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் ஜெயலலிதாவின் அரசியல் அந்தகாரம் ஆரம்பம்

## ஜெயலலிதா குறிவைத்த இருவர்

தமிழ் நாட்டில் இம்முறை ஜெயலலிதா இருவரை வீழ்த்துவதற்கு குறி வைத்திருந்தார். ஒருவர் வாழப்பாடி



ராமமூர்த்தி. மற்றவர் சுப்பிரமணிய சுவாமி.

பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சியைக் கவிழ்க்கும் வரை ஜெயலலிதாவுக்கு மிகவும் நெருக்கமாகக் கருதப்பட்டவர் சுப்பிரமணிய சுவாமி. பின்னர் மாற்று அரசு அமைக்கமுடியாது போகவே இருவருக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. சுப்பிரமணிய சுவாமிக்கு தேர்தலில் டிக்கெட் வழங்கவும் ஜெயலலிதா மறுத்திருந்தார். இத்துடன் அவர்களது உறவு முறிந்தது. சுவாமியை விட்டால் ஆபத்து என்பது ஜெயலலிதாவுக்குத் தெரியும்.

## காங்கிரஸுக்கு ஏற்பட்ட தோல்வி

காங்கிரஸைப் பொறுத்தவரை தோல்வி முன்னரே எதிர்பார்க்கப்பட்ட ஒன்று என்றாலும் இத்தகைய மோசமான தோல்வி எதிர்பார்க்கப்படவில்லை. தேர்தலுக்கு முன்னர் நடத்தப்பட்ட வாக்குக்கணிப்புக்களில் கூட எந்த ஒரு வாக்குக்கணிப்பும் காங்கிரஸின் தேர்தல்முடிவை இவ்வளவு குறைந்த அளவுக்கு எடைபோடவில்லை.

காங்கிரஸுக்கு ஏற்பட்ட தோல்விக்கு காங்கிரஸின் தலைவர்கள் பல்வேறு காரணங்களைக் கூறி சமாளிக்க முயற்சிக்கின்றனர். எனினும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி தோல்வியை ஒப்புக்கொண்டுள்ளார். காங்கிரஸ் இவ்வளவு தூரம் பின் தங்கும் என்று தாம் எதிர்பார்க்கவில்லை என்று சோனியா காந்தி கூறுகிறார்.

இந்திராகாந்தியின் ஆட்சி வரை தூய்மையான கட்சியாகக் கருதப்பட்ட காங்கிரஸில் தற்பொழுது சகல மட்டங்களிலும் ஊழல்கள் நிலவுகின்றன. தேர்தல் தோல்வியின் பின்னர் காங்கிரஸைப் புனரமைக்கும் பெரும் பொறுப்பு சோனியா மீது சுமத்தப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் சூறாவளிப் பயணம் மேற்கொண்டு நூற்றுக்கணக்கான பொதுக்கூட்டங்களில் பேசிய சோனியாவுக்கு தேர்தல் முடிவுகள் ஏமாற்றத்தையே அளித்துள்ளன.

## அடிபட்டுப் போன 3 ஆவது அணி

இம்முறை தேர்தலில் ஏற்பட்ட மற்றொரு திருப்பம் மூன்றாவது அணி என்பது இல்லாமற் போனதுதான்.

கடந்த தேர்தல்களைப் போன்று அல்லது இம்முறை பாரதீய ஜனதாவா அல்லது காங்கிரஸா ஆட்சி அமைப்பது என்ற பிரச்சினை முன்னி

லைப்படுத்தப்பட்டிருந்தது. இந்தப் போட்டியில் மூன்றாவது அணி அடிபட்டுப் போய்விட்டது. தமிழ்நாட்டில் மூப்பனார் தலையிலான தமிழ் மாநில காங்கிரஸ் தோல்வி அடையவும் இதுவே காரணம்.

மூன்றாவது அணியில் உள்ள கட்சிகளின் முலாயம்சிங் யாதவ் தலைமையிலான சமாஜவாதிக் கட்சி 26 இடங்களைப் பெற்றுள்ளது. பெரும்பாலும் மூன்றாவது அணியில் உள்ள கட்சிகள் ஒன்றில் பாரதீய ஜனதாவுக்கோ அல்லது காங்கிரஸுக்கோ ஆதரவு அளிக்கும் நிலையே தற்போது இருந்துவருகிறது.

45 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளைப் பொறுத்தவரை காங்கிரஸின் பொருளாதாரக் கொள்கையுடன் மட்டுமே அவற்றுக்கு முரண்பாடு உண்டு. இதனைவிட கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் காங்கிரஸுக்கும் இடையில் பெரிதாக வேறுபாடு கிடையாது. இந்த மூன்றாவது அணிக்கட்சிகள் காங்கிரஸுக்கு ஆதரவு வழங்கினாலும் காங்கிரஸ் ஆட்சி அமைக்க முடியாத நிலைமையை தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தி



சோனியா

இருப்பதால் இந்திய அரசியலில் மூன்றாவது அணி என்ற குழப்பம் நீங்கிவிட்டது என்றே கூறவேண்டும்.

## உத்தரப்பிரதேசத்தில் ஏற்பட்ட தோல்வி

85 தொகுதிகளைக் கொண்ட இந்தியாவின் பெரிய மாநிலமான உத்தரப்பிரதேசத்தைப் பொறுத்தவரை பாரதீய ஜனதாக் கட்சி கடந்த தேர்தலில் பெற்ற தொகுதிகளில் பல தொகுதிகள் காங்கிரஸ் உட்பட ஏனைய கட்சிகளுக்கு சென்றடைந்து விட்டன.

கடந்த தேர்தலில் ஒரு தொகுதியிலாவது வெற்றி பெறத் தவறிய காங்கிரஸ் இம்முறை 10 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது.

கர்நாடகம், உத்தரப்பிரதேசம், கேரளா போன்ற மாநிலங்கள் இம்முறை பாரதீய ஜனதாக் கட்சியைக் கைவிட்ட போதிலும் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், ராஜஸ்தான்,மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்கள் கைகொடுத்ததால் பாரதீய ஜனதா தலைமையிலான கூட்டணி அமோக வெற்றியீட்ட முடிந்தது.

கர்நாடகத்தில் பாரதீய ஜனதாவுக்கு ஏற்பட்ட தோல்விக்கு முக்கிய காரணங்களில் ஒன்று ஜே.எச்.பட்டேல் தலைமையிலான ஐக்கிய ஜனதாதள் கட்சியுடன் கூட்டணி அமைத்ததுதான்.

மகாராஷ்டிர மக்களவைத் தேர்தலில் பாரதீய ஜனதா - சிவசேனைக் கூட்டணி சிறப்பான முறையில் வெற்றிகளை ஈட்டி இருந்தாலும் சட்டப் பேரவைத் தேர்தலில் இந்தக் கூட்டணி பின்னடைவுகளைச் சந்தித்துவிட்டது.

காங்கிர்ஸைப் பொறுத்தவரை லாலு பிரசாத் யாதவ் தலைமையிலான ராஷ்ட்ரிய ஜனதாதள் கட்சியுடனும் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க.வுடனும் அது கூட்டணி அமைத்துக் கொண்டது விவேகமானதாகக் கருதப்படவில்லை. இந்த இரு கட்சிகளுமே இந்தமுறை தேர்தலில் தோல்வி கண்டுவிட்டன. கடந்த தேர்தலில் தமிழ்நாட்டில் 18 தொகுதிகளில் வெற்றியீட்டிய அ.தி.மு.க இம்முறை 10 தொகுதிகளில் தான் வெற்றி பெறமுடிந்தது.

தி.மு.க. தனித்துப் பெற்ற இடங்கள் 11ஆகும்.

## சட்டப்பேரவை தேர்தல்கள்

இம்முறை மக்களவைத் தேர்தலுடன் 5 மாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தல்களும் நடைபெற்றன.

மக்களவைத் தேர்தலில் 25 இடங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டிய சந்திரபாபு நாயுடு தலைமையிலான தெலுங்கு தேசம் கட்சி ஆந்திர மாநில சட்டப்பேரவைத் தேர்தலிலும் பெரும் வெற்றி ஈட்டி உள்ளது.

பாரதீயஜனதாக் கட்சியுடன் கூட்டணி அமைத்து இந்தக்கட்சி போட்டியிட்டபோதிலும் தனித்து அறுதிப் பெரும்பான்மை பெற்றது சந்திரபாபு நாயுடுவின் அரசியல் சாணக்கியத்துக்குக் கிடைத்த பெரிய வெற்றி என்றே கருதப்படுகிறது.

ஆந்திர அரசியலில் இம்முறை ஏற்பட்ட மற்றொரு முக்கிய திருப்பம் புதிதாக அமைக்கப்பட்ட அண்ணா தெலுங்கு தேசம் கட்சி தோற்கடிக்கப்பட்டதுதான். என்.டி.ராமராவின் மனைவி லக்ஷ்மி பார்வதி, மகன் ஹரி கிருஷ்ணா ஆகியோரும் தோற்கடிக்கப்பட்டுவிட்டனர்.

ஆந்திராவுடன் கர்நாடகம், மகாராஷ்டிரம், அருணாச்சல், சிக்கிம் ஆகிய மாநிலங்களிலும் இம்முறை மக்களவைத் தேர்தலுடன் சட்டப்பேரவைத் தேர்தல்கள் நடைபெற்றன.

கர்நாடகத்திலும் அருணாச்சல் பிரதேசத்திலும் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று அரசு அமைக்க உள்ளது. சிக்கிமில் சிக்கிம் ஜனநாயக முன்னணி வெற்றி பெற்றுள்ளது. மகாராஷ்டிரத்தில் பாரதீய ஜனதா - சிவசேனைக் கூட்டணி கூடுதல் ஆசனங்களைப் பெற்றுள்ள போதிலும் அறுதிப் பெரும்பான்மைப் பலம் அதற்கு இல்லை.

சரத்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸும் காங்கிரஸும் இணைந்து மற்றும் சில உதிரிக் கட்சிகளையும் சேர்த்துக்கொண்டு ஆட்சி அமைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்த முயற்சிக்கு எந்தப் பகுதியில் இருந்தும் இதுவரை ஆதரவு இல்லை.

## கருத்துக் கணிப்பு

தேர்தலுக்கு முன் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புக்களில் பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றிபெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தாலும் எந்த ஒரு கருத்துக் கணிப்பும் சரியான முடிவுகளை வெளியிடவில்லை.

'தூர்தர்ஷன்' எடுத்த கருத்துக்

( 8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயைக் கத்தியால் குத்திய மகனை தடுப்புக்காவலில் வைக்க உத்தரவு

யாழ்ப்பாணம்,ஒக்.9

அச்சுவேலிப் பகுதியில் தனது தாயாரை கத்தியால் குத்திக் காயப்படுத்தியதாகக் கூறப்படும் 14 வயதுச் சிறுவன் ஒருவன் பொலீஸாரால் கைது செய்யப்பட்டான்.

கடந்த 3ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் திருமதி.எஸ். செல்வராசா என்பவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான செல்வராசா செல்வக்குமாரன் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அவரை தடுப்புக் காவலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் எஸ்.ஏ. ஈ.ஏகநாதன் உத்தரவிட்டார். (3-5)

## 6 ஆம் மாத நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு
12 - 04 - 1916



உதிர்வு
16 - 04 - 1999

### திருமதி சின்னம்மா கார்த்திகேசு

திதி : அமாவாசை 09.10.1999

எமது குடும்பத்தலைவியின் பிரிவின்போது சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் எங்கள் துக்கத்தில் பங்கெடுத்த அனைவருக்கும் எமது நன்றியைக் கூறி இன்று 09.10.1999 இல் நடைபெறும் நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

-குடும்பத்தினர்

'திருக்குற்றாலம்',
சரசாலை தெற்கு,
சரசாலை. (69736)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று சிலை திறப்புவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.9

யாழ்.பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டின் விசேட நிகழ்வுகளின் கீழ் இன்று சேர் பொன் இராமநாதன் சிலை திறப்பு விழாவும் நினைவுப் பேருரையும் இடம்பெறவுள்ளன.

பல்கல்லைக்கழக வளவில் நிறுவப்பட்டுள்ள சேர் பொன். இராமநாதனின் சிலையை துனைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை சம்பிரதாய பூர்வமாக திறந்துவைப்பார்.

அதைத்தொடர்ந்து கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் நினைவுப் பேருரை நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கல்வியியல் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் வ.ஆறுமுகம் உரையாற்றுவார். (3-5)

## எழுவைதீவில் மருத்துவ முகாம்

நெடுந்தீவு,ஒக்.9

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் பிரிவின் ஊர்காவற்றுறைக் கிளை எழுவைதீவில் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்றை நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்தவுள்ளது.

வைத்திய கலாநிதி என்.யோகநாயகம், வைத்தியகலாநிதி வை.தியாகராசா ஆகியோர் பொது மருத்துவ பரிசோதனைகளையும் வைத்திய கலாநிதி செல்வி ஜி.கிருஷ்ணவேணி கண்பரிசோதனையையும் மேற்கொள்வர். (3-111)

## புதன்கிழமைகளில் பயில்வோர் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஒக்.9

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறியைப் பயிலும் மாணவர்களுக்கு பிரதி புதன்கிழமை தோறும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பணி பயில்வோர் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக நிலைய இணைப்பாளர் பேராசிரியர் சித்திரவடிவேல் தெரிவித்தார்.

யாழ்மாவட்டத்திலுள்ள கடல் தொழிற்சங்கங்கள், சமாசங்கள் ஆகியவற்றுக்கு இவர்கள் சென்று மீனவர் கூட்டுறவுச் சங்க கட்டமைப்பு, முகாமைத்துவம், மற்றும் நடைமுறைப் பிரச்சினைகள், மீன்பிடிமுறை, மீன் இனங்கள், மீனவ குடும்பங்களின் சமூக பொருளாதார நிலைகள் என்பன தொடர்பாக அறிந்து கொள்வர் என்றும் அவர் கூறினார். (3-10)

## தவறிவிழுந்து மரணம்


யாழ்ப்பாணம்,ஒக்.9

கள் சீவுவதற்காக தென்னைமரத்தில் ஏறிய சமயம் தவறி வீழ்ந்து அந்த இடத்திலேயே எட்டுப்பிள்ளைகளின் தந்தை மரணமான சம்பவம் வரணி கரம்பைக் குறிச்சியில் இடம் பெற்றது

அதே இடத்தைச் சேர்ந்த மாதன் தம்பையா (வயது 48)என்பவரே மரணமானவராவார். (30117)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம்
10 - 10 - 1974



அஸ்தமனம்
10 - 10 - 1998

### அந்தோனிப்பிள்ளை சுரேஸ்

(விஜி களஞ்சிய வர்த்தகர்)

ஓராண்டுகாலம் உருண்டு மறைந்தாலும்
உன் உயிர் மூச்சு மறைவதில்லை
ஓராயிரம் யுகங்கள் ஓடி ஒழிந்தாலும்
உன் நினைவுகள் ஓய்வதில்லை
சொந்த பந்தம் வருவதில்லை
எம் இல்லத்தரசனாய் வழிகாட்டிய
எம் தெய்வத்தின் நினைவு மாறாது

பிரிவால் துயருறும்
மனைவி: மாலா
தாய்: இராசாத்தி
சகோதரர்கள்:
அ.குமார்
அ.இடியமீன்
அ.லலிதா
அ.சுபாஸ்

V.M.T,
பளை. (69789)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தில்லை சோதிடம்

இந்தியாவில் கடலங்குடியில் சோதிடக்கலையைக கற்றவரும திரு.ஜி.பார்த்தசாரதியின் மாண வியுமான ஸ்ரீ அன்பு ஜெயவதனி என்பவரிடம் ஜாதகம் பார்த்தல், ஜாதகம் எழுதுதல், திருமணப் பொருத்தங் களைப்பார்த்தல் போன்றவற்றைப் பார்த்து உங்கள் வாழ்வு நலம்பெற தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: அ.தில்லையம்பலம் (கரைப்பிட்டி விநாயகர் கோயில் அருகில்) அராலி தெற்கு,அராலி. (69288)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி புறொயிலர் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு 1Kg 120/= தொடர்பு:- இல.31 மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு), விதானை வளவு, பொன்னாலை வீதி, மானிப் பாய். (69634)

இறைச்சிக்கோழி (Broiler) விற் பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற் றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.15 6ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம், சின்னக்கடை அருகில். (69746)

### யாழ்ப்பாணம்

ஆசிரியர்களே! மாணவர்களே! நடிப்பதற்கு நாடகங்கள் தேடித்தவிக் கின்றீர்களா? எந்த நிகழ்விலும் நடிப் பதற்குப் பொருத்தமான நாடகங்கள் கொண்ட நூல் அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை எழுதிய யாழ்ப்பாணமா? கொழும்பா? ரூபா-50 (69737)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த 33 வயதுடைய பட்ட தாரி ஆசிரியருக்குத் தகுந்த மணமக ளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்புகளுக்கு: விள. இல - 955 மே/பா-உதயன் யாழ்ப்பாணம். (69732)

### தவறிவிட்டது

நாகராசா ரூபிகா ஆகிய எனது விசேட அடையாளஅட்டை (091044090) கடந்த 23-09-99 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் கொடுத்துதவவும் சிவா றேடிங கோ, 22,டச்சுவீதி சாவகச்சேரி. (69744)

சாவகச்சேரி சிவன்கோயிலடியில் வசிக்கும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவியான தம்பையா ஜெனார்த் ஆகிய எனது விசேட அடையாள அட்டை (091052949) 19-09-99 அன்று சங்கத்தானை பிறைற்றின் கல்வி நிலையத்திற்குச் செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி சிவா ரேடிங் கோ அல் லது கல்லூரியில் ஒப்படைத்து உத வவும். (C/9224)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள T.V.S மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு 2 மணிக் குப்பின் பார்வையிடலாம். தொடர்பு: N.பத்மதேவா, யாழ்ப்பாண வீதி, சுதுமலைச்சந்தி, மானிப்பாய். (69747)

யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில் சிவன் கோயில் வீதியிலி ருந்து 100மீற்றர் தூரத்தில் மாரியம் மன் லேனில் 4 பரப்பு காணி சகல வசதியுடன் கூடிய வீட்டுடன் விற்ப னைக்கு உண்டு. விவரங்களுக்கு 01-597707 என்னும் தொலைபேசி இலக்கத்தில் சிவகுமாரனுடன் தொடர்பு கொள்ளவும். (C/9241)

## பரத நாட்டிய அரங்கேற்றம்



### செல்வி ஷாமினி சிவதாஸன்

ஜேர்மனி கானப்பிரியா நர்த்தனாலய மாணவியும் சிவதாஸன் ~ ஜெயகுமாரி தம்பதிகளின் அருமைப் புதல்வியுமான செல்வி ஷாமினி சிவதாஸனின் பரத நாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 29.10.99 வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில்

**Museum Dah Lemdorf Lansstrasse - 8**
**14495 Berlin** இல்
அரங்கேறவுள்ளது.

இவர் கானப்பிரியா நர்த்தனாலய இயக்குநரும் நர்த்தன வித்தகி யுமான திருமதி மேனகா சுதேசகுமாரின் உதவி ஆசிரியை செல்வி தீபனா சற்குணநவராஜாவினது மதிப்புக்குரிய மாணவியுமாவார்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

***Mr & Mrs. Sivadasan,***
*Urban - Ste - 87,*
*10967 Berlin,*
*Germany.*

(C/9205)

## வைத்தியம்

சகல நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும். நோயா ளரின் நலனைக் கருத்திற்கொண்டு முற்றிலும் சேவையே நோக்கமாகக்கொண்டு குறைந்த கட்டணம் அறவிடப்படும். குழந்தைகளுக்கு விசேட சிகிச்சை வழங்கப்படும் (மாலை 3 மணிக்குப்பின்).

**ராஜன் வைத்திய நிலையம்,**
164, மானிப்பாய் வீதி,
(பழைய் ஈழநாடு காரியாலயம் அருகில்)
யாழ்ப்பாணம். (69727)


"இப்பொழுது ஒரு புதிய சேர்க்கை"

# றொக்லண்ட்

ஹனப்பியர் பிரண்டி
லெமன் ஜின்
ட்றை ஜின்




மேலதிக பலத்துடன்
39% செறிவு
ரூ. 390/-

மேலதிக பலத்துடன்
38% செறிவு
ரூ. 385/-

மேலதிக பலத்துடள்
38% செறிவு
ரூ. 420/-

இப்போது யாழ்ப்பாணத்தில் கிடைக்கின்றது

ROCKLAND
றொக்லண்ட் டிஸ்றிலறிஸ் லிமிட்டெட்
*ஏழ தசாப்தத்திற்கும் மேலான சிறந்த தரம்!*

**உத்தரவு பெற்ற சகல**
**மதுபான விற்பனை நிலையங்களிலும்**
**வாமாஸ் வைன் ஸ்ரோரிலும் கிடைக்கும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 28 - 10 - 1941

உதிர்வு 19 - 09 - 1998

அமரர்

## சரஸ்வதி வைகுந்தசாமி

திதி : 1999.10.09

பொன்னனையாய் நின் கணவனின் பெருநிதியே
மின்னெனவே மறைந்துவிட்டாய் - அன்னையே
அக்காவை, தம்பியர், தங்கையர், பெறாமக்கள்
எக்காலம் காண்பார் மீண்டும் - தங்கச்சி, பிள்ளை
எனத் தாய், உறவினர் தேடி அழுகின்றனர்

அக்கா இல்லம்,
14, திருமகள் வீதி,
அரியாலை - யாழ்நகர்.

குடும்பத்தவர்.

(69730)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 07 - 01 - 1977

மறைவு 10 - 09 - 1999

அமரர்

## குணசிங்கம் ஞானேந்திரன்

(குட்டி, கண்ணா)

(உரிமையாளர் கோபிகா ஆடையகம்)

செந்தமிழ் உறவே! செந்தாமரை அழகே
திசைகள் அழுதிட பிரிந்தது ஏன்?
சந்தன நதியே! சங்கீத மொழியே
உறவுகள் கதறிட பிரிந்தது ஏன்?
முருகனின் ஒளியே! மரகத மணியே
ஞானேந்திரக் கிளியே பறந்தது ஏன்?
கோபிகாவின் விழியே! காவியத்தின் மொழியே
திருவிழாவில் தீக்குள் மறைந்தது ஏன்?
நந்தவன நதியே! நண்பர்களின் மலரே!
தென்றல் அழுதிட தெய்வமானது ஏன்?

10.09.1999 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப ஒளிவிளக்காம் கண்ணாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது இல்லத்தில் நாளை 10.10.99 ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவுள்ள அன்னாரின் ஆன்ம ஈடேற்றச்சடங்குகளிலும் மதியபோசன நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கோபிகா ஆடையகம்,**
3/4 நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(C/9227)

**குடும்பத்தினர்,**
158/1 நாவலர் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### சேர் பொன். இராமநாதன் நினைவுப்பேருரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் வருடாவருடம் பட்டமளிப்பு விழாவினைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக அமைவிடத்தின் ஸ்தாபகரான சேர் பொன். இராமநாதன் அவர்களை நினைவுகூரும் வகையில் நினைவுப் பேருரை நடத்தப்பட்டு வருகிறது. இவ்வருடம் இப்பேருரையை யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறைப் பேராசிரியர் வ.ஆறுமுகம் அவர்கள் 'இருபதாம் நூற்றாண்டு இலங்கையில் கல்வியும் தேசிய ஒருங்கிணைப்பும், எனும் தலைப்பில் 1999.10.09 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நிகழ்த்தவுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரும் அன்புடன்
அழைக்கப்படுகின்றீர்கள்.

(C/9243)

-துணைவேந்தர்.

## HOUSEHOLD GOODS FOR SALE

New Baby Belling Electric Cooker, "NATIONAL" Electric Rice Cooker, "PHILIPS" Pedestal Fan 16", K.D.K Table Fan 16", "REMINGTON" English Type Writer, "SHELL" Gas Cylinders, "G.E.C" Electric Wall Fan 6", Swedish Electric Sewing Machine, "CITIZEN" Day / Date Wall Clock, Imported Wall Rack with 4 Shelves, Nylon Baby Bath etc:

**Mr.Rasiah,**
22, St.Annes Road, Pandianthalvu,
Ariyalai,
Chundikuli.

(69635)

### நன்றித் திருப்பலி

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டமளித்து கௌரவிக்கப்பட்ட கத்தோலிக்க பட்டதாரிகளுக்கான நன்றித் திருப்பலி நாளை ஞாயிறு காலை 7.30 மணிக்கு நல்லாயன் நிலைய ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் (ஐ)

### நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை நாளை ஞாயிறு மாலை 3.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நினைவுப் பேருரையை கொழும்பு ...ல்கலைக்கழக கல்வித் ...ணைப் பேராசிரியரான பேரா ...ஸ்.சந்திரசேகரம் நிகழ்த்த (ஐ-5)

### 479 பேருக்கு நாய் கடித்து சிகிச்சை

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ். குடாநாட்டில் கடந்த மே மாதம் தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரையான 5மாதகாலப் பகுதியில் 479பேர் நாய்களால் கடியுண்டு யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைபெற்றுள்ளனர்.

சண்டிலிப்பாய்,மானிப்பாய், வட்டுக்கோட்டை, சுழிபுரம், சுன்னாகம், அராலி, கொக்குவில், குருநகர் போன்ற இடங்களைச் சேர்ந்தவர்களே அதிகளவில் நாய்கடிக்கு இலக்கானதாக யாழ்.போதனா வைத்திசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை யாழ்.மாநகரசபையினால் இவ்வாண்டு இதுவரை 700 கட்டாக்காலி நாய்கள் பிடித்தழிக்கப்பட்டன. (ஐ-9-10)

### மரம் தறித்தோர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ். பழைய பூங்கா வளவிற்குள் அனுமதியின்றி மரம் தறித்த மூன்று இளைஞர்கள் யாழ். பொலீஸாரினால் கடந்த செவ்வாயன்று கைது செய்யப்பட்டனர்.

யாழ். திருநகரைச் சேர்ந்த என்.தேவதாஸ், ஆர்.நித்தியகுமார், எஸ். அரசலிங்கம் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இந்த மூன்று சந்தேக நபர்களும் பொலீஸாரினால் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். (ஐ-5)





ஒளிமயமான
வெண்மைக்கு
நவீன
தாய்மாரின்
புதிய தெரிவு

யாழ். ஏக விநியோகஸ்தர்கள்

**S.V.M**
No. 154, HOSPITAL ROAD.
JAFFNA.
T.P NO:- 021 - 2202
021 - 2991
021 - 2911

**CITY AGENCY**
NO. 158, STANLEY ROAD,
JAFFNA.
T.P NO:- 021 - 2055
021 - 2100

அன்புக்கு அம்மா வெண்மைக்கு நீள்மா

(C/9049)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PHARMACIST COURSE IN JAFFNA

**COLOMBO PHARMED ACCADAMY** யின் யாழ்ப்பாணம் கிளை நிறுவனத்தால் நடத்தப்பெறுகின்ற PHARMACIST வகுப்புக்கள் யாவும் 10-10-99 காலை 10.30 மணிக்கு (புதிய நேரம்)

**JAFFNA PRIVATE MEDICAL CENTER** இல்
(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)
நடைபெறும்.

விவரங்களுக்கு:-
அம்பிகா டிஸ்பென்சரி,
சாவகச்சேரி.
மெடிலான்ற் ஆங்கில மருந்து நிறுவனம்,
பிரதானவீதி, சங்கானை.
மெடிலான் சொப்,
ஆலடிச் சந்தி, மானிப்பாய்
(அந்தோனியார் கோயில் அருகில்).
T.P - 021-2943

K.P.R.NAVARATNARASA,
METILANT,
MAIN STREET,
CHANKANAI.

(69781)


## முதியோர் தின நிகழ்வு

வேலணை,ஒக்.9

வேலணை பிரதேச செயலர் பிரிவில் முதியோர் வாரத்தினை முன்னிட்டு முதியோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுமார் 60 முதியோர்களுக்கு உடுபுடைவைகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. (3-167)

## திருட்டு அதிகரிப்பு

அளவெட்டி,ஒக்.9

அண்மையில் மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்ட வித்தகபுரம், தெல்லிப்பளை ஆகிய பகுதிகளிலும் மற்றும் மகாஜனாக் கல்லூரிச் சுற்றாடல் பகுதிகளிலும் உள்ள ஆள்களில்லாத வீடுகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது. இந்த வீடுகளிலுள்ள கதவுகள், ஜன்னல்கள், ஓடுகள், தீராந்திகள், நிலைகள் என்பன அதிகளவில் திருடப்பட்டு வருவதாக தெரியவருகிறது. (3-13)

# அனுராதபுரத்துக்கு எழுவர் அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.9

குடாநாட்டின் பல பகுதிகளிலும் படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்தவர்களில் 7 பேர் கடந்த முதலாம் திகதி அனுராதபுரம் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டனர்.

ஜோசப் கிருஸ்துராஜா(சுன்னாகம் கிழக்கு), சண்முகலிங்கம் ரமேஸ்குமார் (மூத்தவிநாயகர் வீதி,நல்லூர்), முத்துராசா அன்ரன்(ஐந்துசந்தி, யாழ் நகர்), யோகிதராசா சிவானந்தராசா (செங்ககலடி, மட்டக்களப்பு), சின்னத்தம்பி ஜெயகரன்(கைதடி கிழக்கு), மாணிக்கம் ரூபநேசன்(அச்சுவேலி வடக்கு), தர்மரட்ணம் சுதன்(நவாலி வடக்கு) ஆகியோரே அனுராதபுரம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்.அலுவலக அதிகாரி எஸ்.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

அதேவேளை - காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தேவநாயகம் றொனால் தேவசுதன்(வயது24 - மூத்தவிநாயகர் வீதி,நல்லூர்) என்ற இளைஞர் மட்டுமே உள்ளார் என்றும் அவர் கூறினார்

(3-10)


தேவார இசைமணி தாவடியூர்
எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் அவர்கள் பாடிய

## "திருமுறைத் தேனமுது"
## ஒலிப்பதிவு நாடா வெளியீட்டுவிழா

**காலம்** :- 10-10-1999 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி (இல.நேரம்)
**இடம்** :- நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்.

தலைவர் :- பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்
(தலைவர், இந்துநாகரிகத் துறை, யாழ். பல்கலைக்கழகம்).
முதன்மை விருந்தினா :- பேராசிரியர் அ.சண்முகதாஸ்
(பீடாதிபதி, உயர்பட்டப் படிப்புகள் பீடம், யாழ். பல்கலைக்கழகம்).
பாதபூஜை :- சிவஞானம் வெற்றிவேலாயுதம்
மங்கலவிளக்கேற்றல்:- திரு. இ.குமாரவடிவேல்
(முதுநிலைப் பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்).
திரு. R.தெய்வேந்திரன்
(வைத்திய கலாநிதி, தலைவர், சைவசமய விவகாரக் குழு, யாழ். மாநகர சபை).
திரு. க. திருநாவுக்கரசு
(வடஇலங்கைச் சர்வோதயம்)
திருமுறை ஓதல :- திரு சி.சிவகோணேசன்
(வைத்திய கலாநிதி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்).
வரவேற்புரை :- சைவப்புலவர் வ.கந்தசாமி
அருளாசியுரை :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர் பரமாசாரிய சுவாமிகள்
(நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்)
ஸ்ரீமத் சோமாஸ் கந்தவேள் சுவாமிகள்
(ஸ்ரீ சிவகுருநாத குருபீடம்).
சிவஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள்
வாழ்த்துரை :- கவிஞர் சோ.பத்மநாதன்
(அதிபர், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை).
திரு இராஜா மகேந்திரசிங்கம்
(இயக்குநர், இராமகிருஷ்ணாலயம்)
திரு A.K. ஏரம்பமூர்த்தி
(சங்கீத பூஷணம், சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்)
திரு வ.பேரின்பநாயகம்
(தலைவர், அகில இலங்கைத் திருமுறை மன்றம்)
சிறப்புரை :- திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்
(தலைவர், பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபை)
திரு இ.குழந்தைவடிவேலு J.P
(தலைவர், ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமம், கைதடி)
வெளியீட்டுரை :- ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்
(செயலர், பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபை)
முதற் பிரதி :- பேரம்பலம் நாகரத்தினம் E.S.P & Co
பட்டமளிப்பு :- 'அருளிசை அரசு'
(எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன்)
வாழ்த்திதழ் :- பண்ணிசைப் புலவர் வேலுப்பிள்ளை சிவஞானம்

### சிறப்பு இசையரங்கு

கலாபூஷணம் L.திலகநாயகம் போல் - பாட்டு
கலாவித்தகர் K.பத்மநாதன் - வயலின்
இசைக்கலைமணி S.துரைராசா - மிருதங்கம்
வித்துவான் M.கஜன் - முகர்சிங்

விழா சிறப்புற அனைவரையும் இருகரம் கூப்பி அழைக்கின்றோம்.

இ.குழந்தைவடிவேலு
(தலைவர், ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமம்)

இராசையா குகதாசன்
(செயலர், விழாக் குழு)

திரு மு.க.திருலோகநாதன்.
(ஸ்ரீ சக்தி வர்த்தக நிலையம்)

சி.வெற்றிவேலாயுதம்.
(கணக்காளர்)

க.சந்திரசேகரம்
(கிராம சேவை அலுவலர்)

(69750)



## 31ஆவது நாள் நினைவஞ்சலி
(நாள் 10.10.99)

தோற்றம்
07
-
01
-
1977



மறைவு
10
-
09
-
1999

### குணசிங்கம் ஞானேந்திரன்

ஆண்டுகள் பலவானாலும்
அணையாத குல விளக்கே - கண்ணா!
காலமெல்லாம் ஒன்றாய்க்
கூடிவாழ்வோ மெனக் காத்திருக்க
பாதியிலே எம்மைவிட்டுப்
பிரிந்த கதை என்ன சொல்வோம்?

குறைவுகள் ஏதுமின்றிக்
குடும்பத்தில் நிறைவு காட்டி
வளமாய் இருந்துவுந்தன்
வாழ்வு தனில் இடி வீழப்
பாதியிலே எம்மைவிட்டுப்
பிரிந்த கதை என்ன சொல்வோம்?

சொன்னால் வேத வாக்கு
செய்தால் நன்மை நோக்கு
பார்வையிலே கனிவு காட்டிப்
பாசத்தை யெமக்களித்துப் பின்
பாதியிலே எம்மை விட்டுப்
பிரிந்த கதை என்ன சொல்வோம்?

மனமெல்லாம் நினைவாகி நிதம் நிறைந்த
மன்னவனே! இங்கெம்மை
இன்னலில் அழவைத்து
உன்னுயிரைக் கரைத்து நீயும்
மண்ணோடு கலந் தெம்மை
மறந்த கதை என்ன சொல்வோம்?

கண்ணீரை அறியாது
களிப்புடனே இங்கிருந்தாய்!
தண்ணீரில் விட்ட கோல
மது போல நீ மறைந்தாய்!
இருளில் எம்மை விட்டு நீயும்
சென்ற கதை என்ன சொல்வோம்?

போன இடம் தெரியாது
புலம்புதடா எங்கள் மனம்!
துயர் நீக்க யாருமின்றி
துடிக்கின்றார்கள் உன்
கோபிகா தோழர்களே!
துடிக்குதடா என் நெஞ்சம்!
தூயவனே! எம் வாழ்வில்
திரும்பவும் நீ வரவேண்டும்!

சருகான வுன் வாழ்வு
அரும்பாகி மலர வேண்டும்!
சலிப்படைந்த எம் மனமோ
சந்தோஷமடைய வேண்டும்!
கண்ணா நாமுன்னோடு
கதை பேசிக் களிக்க வேண்டும்

கண்ணா! என்று உன்னை
அன்புடனே அழைக்க வேண்டும்!
உன் அன்புப்பாதமதில்
பாத பூசை செய்ய வேண்டும்!
துயர் கொண்ட எம் மனம்
தூவுதப்பா கண்ணீர்ப்பூக்கள்!

வாழவைத்த தெய்வமுனை
வரமொன்று கேட்கின்றோம்!
கண்ணனவனிங்கின்றி
கண்ணீரைத் தூவுகின்றோம்!
என்றுமுன் நினைவோடு
இங்கிருப்போம் சாந்தி கொள்....!

நாவலடி அல்வாயைச் சேர்ந்த
இலங்கை காப்புறுதி முகவர்
(மாஸ்ரர் மோகன்)

(69671)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.பல்கலைக்கழகத்தின் 18ஆவது பட்டமளிப்பு விழா கடந்த புதனன்று கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. விழாவில் துணைவேந்தர், பதிவாளர், பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள் ஆகியோர் மேடையில் எழுந்துநிற்பதை முதலாவது படத்திலும் பட்டம் பெறுவதற்காக கோல உடையில் மண்டபத்தை நோக்கி வந்த மாணவர்களில் ஒருபகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம். கவிஞர் இ. முருகையனுக்கு கௌரவ கலாநிதிப் பட்டத்தையும் கவிஞர் ந.வீரமணிஐயருக்கு கௌரவ முதுகலைமாணி பட்டத்தையும் துணைவேந்தர் பேராசிரியா பொ.பாலசுநதரமபளளை வழஙகுவதை அடுதத இரு படஙகளிலும காணலாம. (ஐ)

# தமிழ்க் கல்வி உலகிற்கு இராமநாத வள்ளலார் தந்த

# அரும்பெரும் முதுசொம் யாழ்.பல்கலைக்கழகம்

**யாழ்.பல்கலைக்கழக வெள்ளிவிழா ஆண்டு விசேட நிகழ்ச்சியாக சேர். பொன். இராமநாதனின் சிலை திறப்பு விழாவும் நினைவுப் பேருரை நிகழ்வும் இன்று இடம்பெறுகின்றன. அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சட்டசபை 1833ஆம் ஆண்டு தொடக்கம் 1931ஆம் ஆண்டு வரை நீடித்திருந்தது. இக்காலப்பகுதியிலே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆ.குமாரசுவாமி, அவரின் மகன் முத்துக்குமாரசுவாமி, பின்னையவரின் மருமகன் சேர்.பொன் இராமநாதன் ஆகியோர் தொடர்ச்சியாக முக்கியமான உறுப்பினர்களாக விளங்கினர்.

இச்சபையின் தமிழ் பேசும் பிரதிநிதியாக முதலில் கெருடாவில் ஆறுமுகத்தா பிள்ளை குமாரசுவாமி முதலியார் விளங்கினார். இவரின் மகள் செல்லாச்சி என்பவரை ஆனைக்கோட்டை அ.பொன்னம்பலம் திருமணஞ் செய்தார். இவர்களிற்கு குமாரசுவாமி முதலியார் (7.12.1849), இராமநாதன் (16.4. 1851), அருணாசலம்(14.9.1853) ஆகிய பிள்ளைகள் மூவரும் பிறந்தனர். இவர்கள் கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்றனர். மூத்தவர் 'புறக்ரராகவும்' நடுவர் 'அட்வகேற்றாகவும்' பின்னையவர் 'கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டமும் பின்பு சட்டத்துறையில் பரிஷ்ரர் பட்டமும் பெற்று இலங்கை சிவில் சேவையாளராகவும் தகுதிபெற்றனர்.

இம்மூவரையும் இவர்களின் தாய்மாமன் சேர்.முத்துக்குமாரசுவாமி வழிநடத்தினார். இவரே ஆசியாக் கண்டத்தில் முதலாவதாக சேர் பட்டம் பெற்ற பரிஷ்டர் ஆவார். இவரின் தந்தை ஆறுமுகத்தாபிள்ளை குமாரசுவாமிக்குப் பின் இலங்கை சட்டசபையில் தமிழ் பிரதிநிதியாக சேர்.முத்துக்குமாரசுவாமி இருந்தார். இவரின் மகனே உலகம் அறிந்த கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி. எனவே ஆனந்தக்குமாரசுவாமியும் இராமநாதனும் மைத்துனர்கள். 1879இல் சேர்.முத்துக்குமாரசுவாமி காலமானதும் பொன்னம்பலம் இராமநாதனே சட்டசபை அங்கத்தவரானார். தொடர்ந்து இறக்கும் வரை (26.11.1930) சட்டசபையில் சுமார் 50 ஆண்டுகள் பணிபுரிந்தார். அவர் 1910 முதல் 1920 வரையிலான காலப்பகுதியில் இலங்கையில்கல்வி கற்ற இலங்கையருக்கான (தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர்) ஏகப்பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இராமநாதன் அவர்கள் தாம் பிறந்து வளர்ந்த குடும்ப கௌரவத்திற்கும், சைவத் தமிழ் பாரம்பரியத்திற்கும், தாம் பெற்ற சட்டத்துறை, அரசியல் துறை சார்ந்த கல்விப்பேறிற்கும் இயைந்த வகையில் வாழ்க்கை நடத்தினார்.

கொழும்பில் அக்காலத்தில் பெரும் செல்வந்தராகவும், சைவப் பணி செய்பவராகவும் விளங்கிய நன்னித்தம்பி முதலியார் அவர்களின் மகள் செல்லாச்சி ஆச்சி என்பவரை இராமநாதன் திருமணஞ் செய்து ஏழு பிள்ளைகளைப் பெற்றார். பின்னர் ஆத்மீக



ஞானோபதேசம் பெறத் தம்மிடம் வந்த ஆஸ்திரேலிய மாது லீலாவதி(செல்வி. கரிசன்) என்பவரைத் திருமணஞ் செய்து சிவகாமசுந்தரி எனும் மகளைப் பெற்றார். இம்மகளே புகழ்பெற்ற

## இன்று அவரது சிலை திறப்பு விழா

கல்விமான் சு.நடேசனின் மனைவி.

கல்விமிக்க நாட்டமுள்ளவரான இவர் சைவத்தமிழ் பெண்களிற்காக மருதனார்மடத்திலே இராமநாதன் கல்லூரியை 1913இல் நிறுவினார். பின்னர் ஆண்களுக்கான பரமேஸ்வராக் கல்லூரியை திருநெல்வேலியில் நிறுவினார். 1923இல் சைவக் கல்விமான்கள் சிலரோடு சேர்ந்து சைவவித்தியா விருத்திச்சங்கத்தினை நிறுவி அதன் மூலம் பல இந்து ஆரம்ப பாடசாலைகளும் நிறுவப்படுவதற்கு ஏதுவாக விளங்கினார். கொழும்பிலே சைவமங்கையர் கழகத்தினை உருவாக்கினார்.

கொழும்பில் கருங்கற்களாலான பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தை 1912இலும் யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வரன ஆலயத்தை 1926இலும் அமைத்தார். இலங்கையில் மாத்திரமன்றி அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் சமயமன்றங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் சமயம் தொடர்பான பேருரைகளை ஆற்றினார். தமிழ் நாட்டிலே தமிழ் சைவமன்றங்களிலும் தலைமை வகித்து பேருரைகள் நிகழ்த்தினார். இவரது சமய அறிவினையும் திறமையையும் பலர் பாராட்டினர்.

சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வழியில் நின்று அவரைப்போல் சைவம், தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகியவற்றை நன்கு ஆதரித்து வளர்த்தவர். பலதிறப்பட்ட அறிவியலிலே தேர்ச்சியும் புகழும் பெற்றவர். சமகால இலங்கை அரசியல், சட்டம் முதலியவற்றிலே பிரபல்யம் வாய்ந்து விளங்கியவர். தலைசிறந்த வழக்கறிஞர்; சிறந்த தேசியவாதி; அதேவேளை இந்துசமயஞானியாகவும் விளங்கினார். கல்விக்குச் சமயம் அவசியமென ஆழத்திக் கூறியவர். தேசிய மட்டத்திலே அரசாங்கமே கல்விக் கொள்கையை வகுத்து அனைவரிற்கும் கல்வி வசதியளிக்க வேண்டுமென விரும்பியவர். சி.டபிள்யூ. டபிள்யூ.கன்னங்கராவின் இலவசக்கல்விக் கொள்கைக்கு முன்னரே இலவசக்கல்விக்குக் குரல் கொடுத்தவர். வட இலங்கையிலே சுதந்திர பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென 1924இல் குரல் கொடுத்தவர். இவரது சகோதரர் சேர்.பொன்.அருணாசலம் அவர்கள் இலங்கையிலே பல்கலைக்கழகம் நிறுவப்படுவதற்கு நன்கு பாடுபட்டவர்களில் முக்கியமானவர்.

**பேராசிரியர்**
**சு.மோகனதாஸ்**
**விவசாயபீடம்**
**யாழ்.பல்கலைக்கழகம்**

சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் தமது வாழ் நாள் முழுவதும் சேர்த்த சொத்துக்கள் அனைத்தையும் பொதுப் பணிகளிற்கு அர்ப்பணித்த வள்ளலாராவர். அவர் சேர்த்த வீடுகள், கமநிலங்கள், மற்றும் சொத்துக்கள் யாவும் இன்று பாடசாலைகளுக்கும் யாழ். பல்கலைக்கழகத்திற்கும் சேர்ந்து விட்டன. கோயில்கள் பொதுக் கோயில்களாயின. அவர் எமக்கு விட்டுச்சென்ற பாரிய முதுசொம் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகமாகும். அதற்கு திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி மையமாகவும் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி வளவில் ஒருபகுதி பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் பிரிவாகவும் மற்றும் கிளிநொச்சியில் 40ஏக்கர் வயல் நிலம் விவசாயப் பீடத்திற்கும் வந்து சேர்ந்தன. இவற்றையெல்லாம் வழங்கிய வள்ளலார் இராமநாதன் இவையெல்லாம் பரமேஸ்வரப் பெருமான் தந்தவை என்று பாடிமகிழ்ந்து இறைவனடி சேர்ந்தார்.

**சேவை நலன் பாராட்டு**

**டாக்டர் சி. கருணானந்தம்**

டாக்டர் சி. கருணானந்தம் அவர்கள் வடபிராந்திய சத்ய சாயி நிறுவனங்களின் இணைப்புக் குழுவின் சேவைப் பொறுப்பாளராகவும் சாவகச்சேரி ஸ்ரீ சத்யசாயி பாபா சமித்தி முன் னாள் தலைவராகவும் தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக வைத்திய சேவை யையும் சமூக தொண்டையும் செய்துவிட்டு கொழும்பு செல்வதனால் இன்றைய தினம் நடைபெறும் சேவைநலன் பாராட்டு விழாவையும் பாராட்டி மேலும் அவரின் தொண்டு வளர இறையருளை வேண்டுகின்றோம்.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

(C/9265)

## சமய சந்நிதிகளில்

புதுவையூர் மஞ்ச உனா நகுல வைரவர் ஆலய தீர்த்தத் திருவிழா இன்று சனிக்கிழமை இடம்பெறும்.

காலை 6.00மணிக்கு சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து காலை 10.00 மணிக்கு நிலாவரைத் தீர்த்தத்தில் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## இந்திய மக்கள...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கணிப்பில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 287 இடங்களிலும் காங்கிரஸ் கூட்டணி 174 இடங்களிலும் வெற்றி பெறும் என்று தெரிவித்திருந்தது.

'ஸ்ரார் நியூஸ்' நிறுவனம் எடுத்த கருத்துக் கணிப்பில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 295 முதல் 305 இடங்களிலும் காங்கிரஸ் கூட்டணி 145 முதல் 153 வரையான இடங்களிலும் வெற்றிபெறும் என்று தெரிவித்திருந்தது.

'ஜெயின் ரி.வி' எடுத்த கணிப்பில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 291 இடங்களிலும் காங்கிரஸ் கூட்டணி 147 இடங்களிலும் வெற்றிபெறும் என்று தெரிவித்திருந்தது. 'லோக்மத்' மற்றும் சி.எம்.சி.ஆர், ஐ.எம்.எஸ் நிறுவனங்கள் இணைந்து நடத்திய கருத்துக் கணிப்பில் தேசிய ஜனநாயகக் கூட்டணி242 இடங்களிலும் காங்கிரஸ் கூட்டணி 227 இடங்களிலும் வெற்றி பெறும்என்று தெரிவித்தது.

காங்கிரஸுக்கு ஏற்பட்ட மோசமான பின்னடைவு எந்த ஒரு வாக்குக் கணிப்பிலும் தெரிவிக்கப்படவில்லை.

பாரதீய ஜனதாக்கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றிபெறுவதற்கு காரணமாக இருந்தவற்றில் கார்கில் பிரச்சினையுமஒன்று. அத்துடன் சோனியாவின் வெளிநாட்டவர் பிரச்சினையும் காங்கிரஸில் ஏற்பட்ட [illegible] இந்திய வாக்காளர்கள் வாஜபாய் தலைமையிலான ஸ்திரமான ஆட்சி ஒன்றை விரும்பியதுதான்.

**பொருள் காட்சியும் விற்பனையும்**

**மகளிர் அபிவிருத்தி நிலைய மனைப்பொருளியல் டிப்ளோமா மாணவர்களது சான்றிதழ் வழங்கலும் பொருள்காட்சியும் ஒக். 9,10ஆம் திகதிகளில் (சனி,ஞாயிறு) மகளிர் நிலைய பணிமனையில் நடை பெறும்.**

**பிரதம விருந்தினர் :- சரஸ்வதி ஜெயராஜ்**
(அதிபர் யா/இந்து மகளிர் கல்லூரி)

பணிப்பாளர்,
**மகளிர் அபிவிருத்தி நிலையம்.**

19,அரசடிவீதி,
யாழ்ப்பாணம்.

(69803)

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



**தோற்றம்** 20 - 05 - 1928 **மறைவு** 09 - 09 - 1999

**திருமதி சிரோன்மணி மகாதேவா**
(குரும்பசிட்டி)

பொல்லாத உலகினிலே எல்லோரையும்
நல்லவரென எண்ணி வாழ்ந்தாயம்மா!
நில்லாது வாழ்வு என்று எங்கள் மீது
நிலையான அன்பு வைத்தாய் அம்மா!
சொல்லாலும் செயலாலும் இறைவழி
நின்றாயம்மா தெய்வமே!
எல்லாம் வல்ல ஈசனடி சேர
பிரார்த்திக்கின்றோம் அம்மா!

பிரிவால் துயருறும்
**பிள்ளைகள்,பேரப்பிள்ளைகள், மருமகன், சகோதரர்கள்.**

இணுவில் மேற்கு
இணுவில்.

(சி-9254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிரடி அரங்கு

அளவெட்டிப் பகுதியில் கடந்த மாத இறுதியில் நடைபெற்ற ஒரு சம்பவம் குறித்து சில கடிதங்கள் வந்திருக்கின்றன. அவற்றில் தெரிவிக்கப்பட்டிருந்த விவரம் இதுதான்:-

அங்குள்ள கல்லூரி ஒன்றுக்கு சங்கீத பாட ஆசிரியர் அன்று வரவில்லை. ஏழாம் வகுப்பு மாணவர்கள் அவரின் பாடவேளையில் மைதானத்துக்குள் இறங்கி முழு மூச்சாக விளையாடிக்கொண்டிருந்தனர். திடீரென வந்த அதிபருக்கு கோபம் வந்துவிட்டது. சில மாணவர்களை முழங்காலில் மைதானத்தைச் சுற்றி நடந்து வருமாறு தண்டனை விதித்தார். அதிபரின் கண்டிப்புக்குப் பயந்து, மைதானத்தில் உள்ள குறுணல் கற்கள் குற்றக் குற்ற மாணவர்கள் முழங்காலில் மைதானத்தைச் சுற்றி வந்தனர். இதனால் காயமுற்ற மாணவர்கள் இப்பகுதி ஆஸ்பத்திரிக்கு ஒன்றுவிட்ட ஒரு நாளைக்குச் சென்று சிகிச்சை பெற்றதையும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

அதிபரின் கண்டிப்பையும், ஒழுக்கத்தை நிலை நாட்டும் அவரின் ஆவலையும் நாம் குறைகூற முடியாதெனினும் மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய உடற்பாதிப்பைக் கவனத்தில் கொள்ளாது விட்டதை நியாயப்படுத்த முடியாது.

இது குறித்து அந்தக் கடிதத்தில் கடுமையாகக் குறை கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

என்றாலும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மற்றொரு விடயத்தையும் இங்கே குறிப்பிட்டேயாக வேண்டும்.

"மாணவர்களின் ஒழுக்கத்தில் காட்டும் அதே சிரத்தையையும், வேகத்தையும், விசுவாசத்தையும் ஒருசில ஆசிரியர்களின் ஒழுக்கக்கேடு விவகாரத்திலும் அதிபர் காட்டினால் மிக்க நல்லது - அவர்கள் தமக்கு நெருக்கமாக இருந்தாலும் கூட." - இவ்வாறு அந்தக் கடிதத்தில் கூறப்பட்டிருப்பது அதிபருக்குச் சமர்ப்பணம்.

இந்தக் கல்லூரியில் ஆசிரியர் ஒருவர் இளம் மாணவிகளுடன் தவறாக நடப்பதாக அல்லது நடக்க முயற்சிப்பதாகக் குற்றம் சுமத்தப்படுவது குறித்து இப்பத்தியில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்ததும் -

அதற்குப் பதிலளித்த சம்பந்தப்பட்ட அதிபர், "தற்போது விசாரணை செய்கின்றேன். அதிகாரிகளிடமும் கதைத்திருக்கின்றேன். விசாரணையின் பின் நடவடிக்கை எடுக்க முயல்கிறேன்" - என்று எமக்கு தெரிவித்த தகவல் இதே பத்தி மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்ததும் - தெரிந்தவையே.

இதுவரை காலமும் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவோ, பலனேதும் கிட்டியதாகவோ எமக்குத் தெரியவில்லை.

"நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரம் அல்லாது நிலை நாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்" - என்பதையும் இங்கு கூறிவைக்க விரும்புகிறோம்.

* * *

நவாலி அன்பர் ஒருவர் தெரிவித்த தகவல் இது:-

திருமணமாகி இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஒருவர் மாமியாரின் காணி ஒன்றைத் தன் பெயருக்கு எழுதி மாற்றுவதற்கு புதுவழி ஒன்றில் மாமியாரை (பல தடவைகள்) துன்புறுத்தி வருகின்றாராம்.

இந்த (ஆ)சாமி மது அருந்திவிட்டு வந்து, சாமி ஆடுவது போல ஆடி "எனக்கு ஆஞ்சநேயர் வந்துவிட்டார்! அனுமார் வந்துவிட்டார்" என்று கூத்தாடி மாமியாருக்கு நல்ல சாத்தும் சாத்தி, அட்டகாசம் புரிந்து வருகின்றாராம்.

அனுமாருக்கு ஆலயம் என்ற பெயரில் அக்காணியைத் தன் பெயருக்கு மாற்றி மடக்குவதே இவரின் திட்டம் என்று ஒரு சாரார் கூறுகின்றனர். நவாலி வடக்கில் உள்ள மற்றொரு (ஆ)சாமியும் இதற்கு உடந்தை என்றும் கூறப்படுகின்றது.

இந்த நபரின் ஆஞ்சநேயர் ஆட்டத்தினைக் கண்டுகளிக்க பலரும் அங்கு அவ்வப்போது 'விசிட்' செய்வதாகவும் தகவல்.

காணிச் சொந்தக்காரியான மாமியார் பெரிதும் நொந்து போயிருப்பதாகவும் தெரிகின்றது.

* * *

யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 25 வருடங்கள் பூர்த்தியானதை ஒட்டி பலவேறு வெள்ளிவிழா நிகழ்ச்சிகள், கொண்டாட்டங்கள் போன்றவை - மிக அமைதியாக நடைபெற்று வருகின்றன. பல்கலைக்கழக கட்டடங்களும் புதிதாக வர்ணம் பூசப்பட்டு சுற்றாடல் நன்கு பராமரிக்கப்பட்டு புதுமெருகூட்டப்பட்டுக் காட்சியளிக்கின்றது.

கடந்த 25 ஆண்டுகளாக யாழ். பல்கலைக்கழகம் ஈழத் தமிழர்களுக்கு - குறிப்பாக குடாநாட்டுத் தமிழர்களுக்கு - ஆற்றி வந்த சேவை அளப்பரியது; பாராட்டத் தகுந்தது.

என்றாலும் பல்கலைக்கழகத்தைப் பீடித்த சில கோணங்கித்தனங்கள் இன்னும் விலகியபாடில்லை. அந்த வரிசையில் ஒன்று - 'ராகிங்'. மற்றொரு உதாரணமாக வெள்ளி விழா பட்டமளிப்பு நிகழ்வின்போது நடந்த சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

பட்டமளிப்பு விழா மிக ஒழுங்கு முறையாக - நேர்த்தியாக - நேரக் கட்டுப்பாட்டோடு - அமைதியாக - கௌரவத்துடன் - நடைபெறுவது வழமை.

கடந்த புதனன்று கைலாசபதி அரங்குக்குள் முதலாவது அமர்வு நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம், எதிர்காலத்தில் பட்டம்(?) பெறப்போகும் குழுவொன்று வெளியே நின்று கூச்சலும், கும்மாளமும் போட்டு, தனது கௌரவத்தை(?) நிலைநிறுத்திக் கொண்டது. விசில் அடித்தும், உரக்கக் கத்தியும் அந்தக் குழு செய்த கோமாளித்தனங்கள் வெறுப்பூட்டுபவை.

அதுமட்டுமா? முதலாவது அமர்வு முடிந்த பின்னர் துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகள் குடை, கொடி, ஆலவட்டம் சகிதம் துணைவேந்தர் அலுவலகத்துக்கு பவனியாக அழைத்துச் சென்ற சமயமும் அந்த மரபு முறையை கேவலப்படுத்தும் விதத்தில் அக்குழு விசில் அடித்துக் கூக்குரல் போட்டது. ரஜனியின் படம் ஒன்றின் பெயரைத் திரும்பத் திரும்பக் கூறி சத்தமிட்டது அக் கும்பல்.

தமக்குப் போதிக்கும் ஆசான்களுக்கு எதிராகவே தமது 'திறமையைக்' காட்டிக் கொண்ட இத்தகைய கும்பல்கள் பெருமளவு முளைப்பதற்கு உரிய முறையில் திருத்துபவர்கள் எவரும் இல்லை என்பதுதான் காரணமோ...?

ஆசான்கள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் பெரியோர்கள் "ராகிங்" மற்றும் இதுபோன்ற பொது ஒழுக்கக்கேடுகளை, அநீதிகளைக் கண்டும் காணாமல் இருப்பது மற்றைய காரணம். மாணவர்களின் ஒழுங்கின்மையைத் திருத்தும் விடயத்தில் வழிகாட்டிகள் தவறினால் அந்த ஒழுங்கீனம் ஒரு நாள் வழிகாட்டிகளுக்கு எதிராகவும் திரும்பி விடும் என்பதை சம்பந்தப்பட்டோர் இப்போது நன்கு உணர்ந்திருக்க வேண்டுமே!

* * *

அதிகாரிகள் பலவிதம். தவறு செய்யும் ஊழியர்களுக்கு தண்டனை விதிப்பதிலும் கூட அதிகாரிகளுக்கு அதிகாரி நடவடிக்கை மாறுபடும். அவரவர் கையாளும் முறையும் மாறுபடும்.

இது வடபிராந்திய போக்குவரத்துச் சபை அலுவலகம் ஒன்றில் எடுக்கப்பட்ட நடவடிக்கை. அண்மையில் நியமனம் பெற்ற நடத்துநர்கள் சிலரின் கணக்குகளில் தவறுகள் இருப்பதைக் கண்டுபிடித்த அதிகாரிகள் இந்த ஊழியர்களின் மனைவி அல்லது பெற்றோரை உடனே அலுவலகத்துக்கு அழைத்து வரச் செய்தனர்.

அவர்களின் முன்னிலையிலேயே சம்பந்தப்பட்ட ஊழியர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர். பின்னர் தொடர்ந்து வேலை செய்ய அனுமதிக்கப்பட்டனர்.


இந்தப் புதிய அணுகுமுறை பலனளிக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஆனால் மனிதநேயம் மற்றும் உளவியல் ரீதியில் விடயத்தைக் கையாண்ட அதிகாரிகள் வித்தியாசமானவர்கள்தான்!

* * *

தென்மராட்சி மந்துவில் பகுதியில் உள்ள ஒரு பாடசாலை குறித்தும் அதன் அதிபர் குறித்தும் அங்கு நடக்கும் லீலைகள், நிர்வாகச் சீர்கேடுகள் குறித்தும் பல கடிதங்கள், தகவல்கள் அதிரடிப் பகுதிக்கு வந்து குவிந்த வண்ணம் உள்ளன.

உண்மைத் தகவல்களை ஊர்ஜிதப்படுத்திப் பெறமுடியவில்லை. என்றாலும் பாடசாலையின் பெயர், 'ரிப்பேர்' ஆக முன்னர் கல்வித்திணைக்களம் விரைந்து நடவடிக்கை எடுப்பது நல்லது. உரிய அதிகாரிகளுக்கு இத்தகவல் சமர்ப்பணம். தேவையானால் அதிகாரிகளுக்கு உரிய தகவல்களைத் தந்துதவவும் தயாராக உள்ளோம்.

-மின்னல்.



இருபாலை எக்ஸ்பிறஸ் கல்வி நிலையத்தில் அண்மையில் வாணி சிலை பிரதிஷ்டை வைபவம் இடம்பெற்றது. பிரதிஷ்டா குரு சிவஸ்ரீ வரதராஜக் குருக்கள் சிலையை பிரதிஷ்டை செய்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் நிறுவன ஆசிரியர் பண்டிதர் கு.துரைராஜாவும் நிறுவன அதிபர் த.வரதராஜாவும் காணப்படுகின்றனர். (ஐ-3)

# புதுக்குடியிருப்புக்கு விசாரணைக் குழு

## அனுப்பக் கோருகிறார் ரணில்

கொழும்பு, ஒக்.9

புதுக்குடியிருப்புப் பகுதியில் பொது மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்த அரசாங்க அதிகாரிகள், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றை அங்கு அனுப்பவேண்டும் என்று ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் கோரினார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிப்பது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கோரிக்கை விடுத்தார்.

புதுக்குடியிருப்புச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தக் குழுஒன்றை அங்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த உறுதி அளித்தார்.

இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்பது யார் என்று ரணில் கேள்வி எழுப்பிய சமயம், இந்தத் தாக்குதல் விடுதலைப் புலிகளின் மற்றொரு பிரசாரமாக இருக்கலாம் என்று அனுருத்த பதில் அளித்தார்.

அரசாங்கம் மூன்று வருடமாக முயற்சி மேற்கொண்டும் யாழ்ப்பாணத்துக்கான தரைப்பாதையை திறப்பதில் தவறிவிட்டது என்று ரணில் குற்றஞ் சாட்டினார்.

பாதுகாப்புப் படையினருக்கு ஏற்படும் இழப்புக்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சு வெளியிடும் தகவல்களுக்கும், தளநிலைத் தகவல்களுக்கும் இடையில் பெரிய இடைவெளி உள்ளது என்றும் ரணில் கூறினார். (இ-3-4)

### அவசரகாலச் சட்ட நீடிப்பு:

# முஸ்லீம் காங்கிரஸ் ஆதரித்து வாக்களிப்பு

கொழும்பு, ஒக்.9

அவசர காலச்சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீது நேற்று முன்தினம் இடம்பெற்ற வாக்கெடுப்பில் முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தது.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின் இறுதியில் வாக்கெடுப்பின் போது பிரேரணைக்கு ஆதரவாக முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., இ.தொ.கா. ஆகியன வழமைபோல் வாக்களித்தன.

பிரேரணைக்கு எதிராக தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜே.வி.பி ஆகியவற்றின் உறுப்பினர்களும், வாசுதேவ நாணயக்காரவும் வாக்களித்தனர்.

ஈ.பி.டி.பிக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக முஸ்லிம்காங்கிரஸ் அவசரகால நீடிப்புப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு ஆதராவாக வாக்களித்தது. பன்முகப்படுத்தப்பட்ட நிதி விவகாரம் தொடர்பாக தொடர்ந்து அரசுடன் பேச்சு நடத்துவது என்றும் -

அரசு சரியான தீர்வைத் தராவிட்டால் அரசுக்கு ஆதரவளிப்பதை மறுபரிசீலனை செய்வது என்றும் - முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் குழு முடிவு செய்துள்ளது. (ஐ-3)

## தொலைபேசி இலக்கம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக்.9

பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைக் காரியாலயத்தில் இயங்கி வரும் மனித உரிமை பேணும் பிரிவின் அலுவலகத் தொலைபேசி இலக்கம் மாற்றப்பட்டுள்ளதாக பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

பொது மக்கள் தமது முறைப்பாடுகளை இனிமேல் 021-3000 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என்றும் -

இயக்குநர் இல்லாத சந்தர்ப்பங்களில் தமிழ், ஆங்கில மொழிகளில் பதிவு செய்யப்பட்டுள்ள விதி முறைகளுக்கு அமைய முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம் என்றும் -

பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரிவில் தெரிவிக்கப்படும் சகல முறைப்பாடுகளும் உரிய காலத்தில் பரிசீலனை செய்யப்பட்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-க)

### நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்

# 900 குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா

வலி.கிழக்கு, ஒக்.9

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரமாகவும் இடம் பெயர்ந்தும் வசித்து வரும் 900 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவான 5ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இக் கொடுப்பனவுகளுக்குரிய பணம் காசோலைகளாக வங்கிகளுக்கு அவரவரது கணக்கிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

நாளை 10ஆம் திகதிக்குப் பின்னர் கிராம உத்தியோகஸ்தருடன் தொடர்பு கொண்டு உரியவர்கள் பெயரை உறுதிப்படுத்தி வங்கிகளில் பணத்தைப் பெறமுடியும் என பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

இக் கொடுப்பனவை இதுவரை பெற்றுக் கொள்ளாத குடும்பங்களுக்கு விரைவில் வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஐ-180)





சர்வதேச முதியோர் தினத்தை ஒட்டி யாழ் செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் கடந்த முதலாம் திகதி நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றன. அன்று காலை திருநெல்வேலி முத்துமாரி அம்மன் கோவிலடியில் இருந்து வயோதிபர்கள் ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டபோது எடுக்கப்பட்ட படத்தை முதலாவதாகவும் -

முதியவர் ஒருவருக்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலர் எஸ்.செந்தில்நந்தனன் பரிசில் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

படங்கள்:
வலி கிழக்கு செய்தியாளர் பொ.இராஜேஸ்வரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகக் குண்டு வெடிப்புகளுக்கு விடுதலைப் புலிகள் காரணம் அல்லர்!

## வீரவிதான மீது குற்றம் சுமத்துகிறார் தொண்டா

கொழும்பு, ஒக்.9

"மலையகத்தில் இடம்பெறும் குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்கு விடுதலைப்புலிகள் காரணம் அல்லர். வீரவிதான போன்ற அமைப்புகளே காரணம்" - என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எஸ்.தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மலையகத்தில் விடுதலைப் புலிகள் எவரும் ஊடுருவவில்லை. அங்கு நடக்கும் குண்டுவெடிப்புக்கும் அவர்களுக்கும் தொடர்பில்லை.

மலையகத்தில் குழப்பம் விளைவிக்கும் நோக்குடன் வீரவிதான அமைப்பினரும் பொலீஸ் அதிகாரிகளும் குண்டு வெடிப்புச் சம்பவங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

மலையகம் பாதுகாப்பற்ற யுத்த பிரதேசம் எனக்காட்டி அங்கு தொடர்ந்து பணிபுரிய வேண்டும் என்ற நோக்கத்துடன் பொலீஸாரும்-

குழப்பம் ஏற்படுத்தி மலையகத்தில் அமைதியின்மையை தோற்றுவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் வீரவிதான அமைப்பினரும் -

செயற்படுகின்றனர்.

மலையக இளைஞர்கள் இதுவரை ஆயதம் ஏந்தவில்லை. அவர்களை ஆயுதம் ஏந்தத்தூண்டும் வகையில் இந்தச் செயற்பாடுகள் அமைகின்றன - என்றார் அவர். (உ-3)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்.மாவட்ட தாச்சி சங்கம், பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்திவருகின்ற தாச்சி சுற்றுப்போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் நாளை பிற்பகல் கொக்குவில் வராகி வி.க. மைதானத்தில் இடம்பெறும். இந்த ஆட்டத்தில் இணுவில் ' அண்ணா வி.க.அணியை எதிர்த்து மயிலிட்டி பூமகள் வி.க. அணிமோதும்.

*　*　*

யாழ்ப்பாணக் கல்விவலய பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று காலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு :-

### துரையப்பா விளையாட்டரங்கில்

* 18 வயதுப்பிரிவு:- யாழ்.மத்திய கல்லூரி எதிர் சென்.சார்ள்ஸ் வித்தி.

* 16 வயதுப்பிரிவு:- யாழ்.இந்து எதிர் நாவாந்துறை றோ.க.வி.

* 18 வயதுப்பிரிவு:- யாழ்.இந்து எதிர் நாவாந்துறை றோ.க.வி.

### யாழ்.இந்து மைதானத்தில்

* 16 வயதுப்பிரிவு:- முத்துத்தம்பி ம.வி. எதிர் சென்.ஜேம்ஸ் வித்தி.

* 18 வயதுப்பிரிவு:- பெரியபுலம் ம.வி. எதிர் கனகரத்தினம் ம.வி.

இன்று பிற்பகலில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

* 16 வயதுப்பிரிவு:- புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தி. எதிர் புனித ஜோசப் வித்தி.

* 16 வயதுப்பிரிவு:- அத்தியார் இந்து எதிர் உரும்பிராய் இந்து.

* 18 வயதுப்பிரிவு:- அத்தியார். இந்து எதிர் உரும்பிராய் இந்து.

*　*　*

யாழ். மக்கள் வங்கியின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற டாக்டர் டி.ரி.நைல்ஸ் ஞாபகார்த்த மேசைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று யாழ். மத்தியகல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி ஏ.எவ்.ஸி.ரூபசிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார் (உ-ரி)

*　*　*

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ்.மாவட்ட கரபந்தாட்டச் சங்கம் 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தின் அனுசரணையுடன் கல்வியங்காட்டில் உள்ள சங்கத்தின் மைதானத்தில் நடத்திவந்த கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நாளை பிற்பகல் 4.00 மணிக்கு அதே மைதானத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும் பதில் நீதிவான் கனக. கேசவன் கௌரவ விருந்தினராகவும் வைத்தியகலாநிதி வை.தியாகராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (உ-3)

## கிரிக்கெட் அணி இன்று புறப்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ். மாவட்ட - 15 வயதுக்கு உட்பட்ட - கிரிக்கெட் தெரிவு அணியில் இடம்பெற்றுள்ள 15 வீரர்களையும் பயண ஏற்பாடுகளுடன் இன்று காலை 7.30 மணிக்கு யாழ் மத்திய கல்லூரிக்குச் சமுகம் தரும்படி யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் கோரியுள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா அணிகளுடன் விளையாடுவதற்காக இந்த அணி இன்று விமானம் மூலம் அநுராதபுரம் புறப்பட்டு செல்கின்றது.

பின்னர் அங்கிருந்து அந்தந்த மாவட்டங்களுக்குச் சென்று அந்த மாவட்ட அணிகளுடன் விளையாடும்.

இந்த அணிக்கான விமான மற்றும் போக்குவரத்துச் செலவினங்களை யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் வழங்குகின்றது. (உ-3)

# கணவன், மனைவி உட்பட மூவர் காங்கேசனில் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.9

கணவன், மனைவி உட்பட மூவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்களின் உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொக்குவில் பொற்பதி ஒழுங்கையைச் சேர்ந்த சின்னத்தம்பி விக்னேஸ்வரன் (வயது 33), அவரது மனைவியான விக்னேஸ்வரன் அஜந்தினி (வயது 21) ஆகியோருடன் அவர்களது உறவினரான காரைக்காட்டு ஒழுங்கை, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த செல்வரட்ணம் சிவரூபன் (வயது16) ஆகிய மூவருமே ஊரெழுப் பகுதி இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் அஜந்தினியை விசாரணைக்கு வருமாறு கிராமசேவையாளர் ஊடாக ஊரெழு முகாம் படையினர் அழைத்ததாகவும் -

தாயாருடன் சென்ற அவரை அங்கு தடுத்து வைத்தனர் என்றும் கூறப்பட்டது.

அதைத் தொடர்ந்து அவரது கணவரான விக்னேஸ்வரனையும், சிவரூபன் என்பவரையும் முகாமுக்கு வருமாறு படையினர் கோரினர் என்றும் -

அச்சம் அடைந்த அவர்கள் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவிடம் உதவி கோரியதாகவும் -

பின்னர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் அவர்கள் முகாமுக்கு சென்றனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இந்த மூவரையும் விசாரணை செய்த படையினர் தற்சமயம் அவர்களை காங்கேசன்துறை தடுப்பு முகாமில் வைத்துள்ளதாகக் கூறப்பட்டது.

## பட்டதாரிகள் தினம்

யாழ்ப்பாணம்,ஒக்.9

யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று அனுஷ்டிக்கப்படும் பட்டதாரிகள் தின நிகழ்வுகளின் ஓர் அங்கமாக காலை 9.00மணி முதல் கிரிக்கெட் மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகள் இடம் பெறவுள்ளன.

பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறிய பட்டதாரிகளுக்கும் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் உறவினை வலுப்படுத்தும் வகையில் முதல் தடவையாக பட்டதாரிகள தினம் அனுஷ்டிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (உ-3-5)

## தொண்டர்கள் அழைப்பு

கொழும்புத்துறை,ஒக்.9

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் புரட்டாதிச் சனி உற்சவம் இன்று இடம்பெறுவதை முன்னிட்டு தொண்டர் சேவையில் ஈடுபடுவோரை ஆலயத்துக்கு சமுகமளிக்குமாறு யாழ்.மாவட்ட இந்து இளைஞர் பேரவை கேட்டுள்ளது. (உ-7-30)

## இரு இளைஞர் கைது

யாழ்ப்பாணம்,ஒக்.9

திருநெல்வேலி பகுதியைச் சேர்ந்த உறவினர்களான இரு இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாரியம்மன் வீதி திருநெல்வேலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் மேகநாதன் (வயது 34), கதிரவேலு ரதீஸ்குமார் (வயது 19) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

மேகநாதன் கடந்த 7ஆம் திகதி வீட்டில் வைத்தும் -

ரதீஸ்குமார் நேற்றுக்காலை 11 மணியளவில் கன்னாதிட்டியில் உள்ள நகைக்கடை ஒன்றில் பொற்கொல்லர் வேலை செய்து கொண்டிருந்த சமயமும் -

கைது செய்யப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-5-9)

## கோப்பாயில் ஆலயகோபுரத்தை தாக்கியஇடிமின்னல்

நெல்லியடி,ஒக்.9

கோப்பாய் அங்கிலிக்கன் ஆலய கோபுரம் மீது நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடிமின்னல் தாக்கியது.

இதனால் கோபுரத்தின் ஒருபகுதி உடைந்து சேதமடைந்தது.

இந்த ஆலய வளவிலேயே கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அமைந்துள்ளது. சம்பவம் நடைபெற்றபோது, பாடசாலை விட்டு மாணவர்கள் வெளியேறிக்கொண்டிருந்த போதிலும் தெய்வாதீனமாக உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (உ-109)

## நாளை நடப்பவை

கொழும்பு வட்ட லயன்ஸ் கழகமும் இடைக்காடு இந்து நெறிக் கழகமும் இணைந்து நடத்தும் இலவச கண் பரிசோதனையும், மூக்குக் கண்ணாடி வழங்கல் நிகழ்வும் நாளை காலை 9.00 மணி முதல் இடைக்காடு மகா வித்தியாலயத்தில் இடம்பெறும்.

ஏற்கனவே தம் பெயர்களைப் பதிவு செய்துகொண்ட - வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட - மாணவர்கள் மற்றும் வயோதிபர்களுக்கு இந்த முகாமில் சிகிச்சை அளிக்கப்படும்.(க)

*　*　*

யாழ்ப்பாணம்,ஒக்.9

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச கண் பரிசோதனை முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கண் பரிசோதனையினை யாழ். போதனா வைத்தியசாலை கண் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.குகதாசன் மேற்கொள்வார்.

'கற்றாக்'கினால் பாதிக்கப்பட்ட - வசதி குறைந்தவர்களுக்கு சத்திர சிகிச்சையினை இந்த முகாமில் வைத்து மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

*　*　*

சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய உயர்தர மாணவ மன்றத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தினால் நடத்தப்படும் இலவச மருத்துவப் பரிசோதனை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மேற்படி பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கண், இரத்த அழுத்தம், சலரோகம் போன்ற நோய்களுக்கான பரிசோதனைகள் இடம் பெறவுள்ளன. (க-28)

## தமிழர் கைது

கொழும்பில் தெமட்டகொடை, பொரளை, நவகம்புர, வெல்லம்பிட்டி ஆகிய இடங்களில் உள்ள தமிழர் வாழ்விடங்கள் நேற்று முன்தினம் இரவு சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றது.

இந்தத் தேடுதலில் 493 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும், அவர்களில் நால்வரைத் தவிர ஏனையோர் நேற்றுக்காலை விடுவிக்கப்பட்டனர் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

## ரெலோ வாகனம் விபத்தில்!

ரெலோ அமைப்பின் 'ஹைஏஸ்' வாகனம் எதிரே வந்த மினிபஸ் ஒன்றுடன் நேருக்குநேரே மோதியதில் இருவர் காயமடைந்தனர்.

இருபாலைச் சந்தி கற்பக விநாயகர் ஆலயத்துக்கு முன்பாக நேற்று மாலை இடம்பெற்ற இந்தவிபத்தில் ரெலோ அமைப்பைச் சேர்ந்த சிறி (வயது 30 - சாரதி), ஜெ.சுதன்(வயது - 22) ஆகியோர் காயம் அடைந்தனர்.

பயணிகள் எவரும் இன்றி சென்றுகொண்டிருந்த தனியார் பஸ்ஸுடன் வேகமாக வந்துகொண்டிருந்த 'ஹைஏஸ்' மோதியது என்றும்- தெரிவிக்கப்பட்டது. (உ-3-180)

## விபத்தில் ஒருவர் பலி

வலி.கிழக்கு,ஒக்.9

கல்வியங்காட்டில் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - ஓட்டோ விபத்தில் வங்கிஊழியர் ஒருவர் உயிரிழந்தார்; மற்றொருவர் காயமடைந்தார்.

மக்கள் வங்கியின் பருத்தித்துறைக் கிளையில் பணிபுரியும் காரைநகரைச் சேர்ந்த ரவீந்திரன் என்பவரே உயிரிழந்தவராவார்.

அவருடன் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## அகதிகள் படகு புங்குடுதீவில் கரை ஒதுங்கியது

வேலணை,ஒக்.9

வன்னியில் இருந்து குருநகர் நோக்கி 15 அகதிகளுடன் வந்து கொண்டிருந்த படகு ஒன்று புங்குடுதீவில் நேற்றுக்காலை கரை ஒதுங்கியது.

இந்தப் படகில் இருந்த 15 பேரையும் காவலில் வைத்துள்ள கடற்படையினர் அவர்களை குருநகர் சீநோர் தடுப்பு முகாமில் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த அகதிகள் மாதகல், பளை, எழுதுமட்டுவாழ் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்பட்டது. (உ-167-3)


### தடங்கலுக்கு வருந்துகிறோம்

**நேசம் புதிசு** வீடியோ CD பிரதிகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் குறித்த நேரத்திற்கு விநியோகிக்க முடியாததையிட்டு வருந்துகின்றோம். இன்று காலை இப்பிரதிகளை பெற்றுக்கொள்ளவும்.

**ஆர்க் வீடியோ லைபிறறி,**
**அம்மன் வீதி,**
**யாழ்ப்பாணம்.** (C/9278)


# மரண அறிவித்தல்கள்

## செல்வி சபாரட்ணம் அன்னராணி

கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி சபாரட்ணம் அன்னராணி (லிகிதர், யாழ். மாநகரசபை) அவர்கள் 7-10-99 வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சபாரட்ணம், திருமதி சபாரட்ணம் அன்னபூரணம் ஆகியோரின் பாசமிகு மகளும், திருமதி பேரம்பலம் இந்திராணி, திருமதி சிதம்பரநாதன் தயாமணி, காலஞ்சென்ற தவராசா, காலஞ்சென்ற சோமலிங்கம் புஸ்பராணி, திருமதி சந்திரராஜன் யோகராணி, புஸ்பராசா, நந்தகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (8-10-99) வெள்ளிக்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் தயவுடன் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

9/6, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
**ச. புஸ்பராசா**
69808)

## விநாசித்தம்பி செல்வநாயகம்

(ஓய்வுபெற்ற பிராந்திய தபால் அத்தியட்சகர் - வவுனியா)

அச்செழுவைப் பிறப்பிடமாகவும் அல்வாய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி செல்வநாயகம் அவர்கள் 5.10.99இல் சிவபதம் அடைந்தார்.

அன்னார் நேசரத்தினத்தின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற விநாசித்தம்பி - சின்னம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற சிதம்பரநாதர்-இராசம்மா தம்பதிகளின் மருமகனும் தயாபரன் (பிரான்ஸ்), சாந்தினிதேவி (ஜேர்மனி), பவானிதேவி(பிரான்ஸ்), ஸ்ரீதரன் (கணக்காளர் - மகாராஜா நிறுவனம், கொழும்பு), பகீரதன்(பிரான்ஸ்), திவாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரூபினி (பிரான்ஸ்), யோகேஸ்வரன்(ஜேர்மனி), வரதராஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற செல்லத்துரை, தவமணிதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நவரட்ணசிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சதாசிவம், காலஞ்சென்ற சச்சிதானந்தம், தேரானந்தம், கனகம்மணி (நியூசிலாந்து), கமலாதேவி, காலஞ்சென்ற வசந்தாதேவி, சொர்ணாம்பிகை(கனடா) ஆகியோரின் மைத்துனரும் கிருஜன், விஷ்ணுஜன், ஜிவிதன், பிரதீப், பிரவீன்(பிரான்ஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.10.99) ஞாயிறு காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காராளர் வளவு,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

தகவல்:
**செ.ஸ்ரீதரன்**
(மகன்)
(C/9277)


ஒக்டோபர் 10 - உலக உளநல நாள்

## முதுமை என்பதோர் அழகினைப் போற்றுவோம்!

**முதுமை –**

**வாழ்வை மீள்பரிசீலனை செய்யும் காலம். முதியவர் வாழ்க்கைக்கான அர்த்தத்தைத் தேட விளைவர். இற்றை கால வாழ்வின் இருப்பெடுப்பில் ஈடுபடுவர். இறை நம்பிக்கை உடையவர், ஆலய வழிபாடு, விரதம், ஓதல், கேட்டல் என்பவற்றில் நாட்டங் கொள்வர்.**

**அவர் தம் ஆன்மீகத் தேவைகளுக்கு உறுதுணையாய் இருப்போம்**

**யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்**

அகவொளி　உளநலச் சங்கம்　சுகவாழ்வு　சாந்திகம்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியர் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09-10-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸஞ்சீவி சஞ்சிகை

சஞ்சீவி 09.10.1999



ராகங்கள் பலவிதம்,
'ராகம்ஸ்' தரும்
சேலைச் சோலைகள்
ஒவ்வொன்றுமே
புதுவிதம்! தனிரகம்!

ராகம்ஸ்
பட்டுச்சோலை

24,நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

கிளை: பிரதானவீதி,
(பஸ்நிலையம் அருகில்)
சங்கானை.

## கருத்துக் கலசம்

மயூரா

### இலட்சியம் நிறைவேற....

**ஓர் இலட்சியம் நல்லதாக இருந்தால் மட்டும் போதாது. அது நடைமுறைக்குச் சாத்தியமான நிலையிலும் இருக்கவேண்டும். அன்றாட வாழ்க்கைக்கு உகந்ததாகவும் இருக்க வேண்டும். - ரூசோ -**

ஒவ்வொருவரும் தாம் வாழ்க்கையில் அடையவேண்டியதான இலட்சியத்தை அல்லது இலட்சியங்களை வகுத்துக்கொள்வர். அதனை அடையும் பொருட்டுக் கடினமாக உழைப்பர். பலவழிகளாலும் பாடுபடுவர். குறுக்கு வழிகளைத் தேடுவோரும் உள். பலரது இலட்சியம் அல்லது இலக்கு நிறைவேறுவது உண்டு. கைகூடிவிடும். ஆனால் இன்னும் பலருக்கு அவர்களது இலட்சியம் நிறைவேறுவதில்லை.

இலட்சியம் இல்லாத, இப்படித்தான் வாழ வேண்டும் என்ற இலக்கு இல்லாத, வாழ்க்கை மாலுமி இல்லாத கடற்கலம்போல அங்கும் இங்கும் அலைந்து, ஆபத்தில் மாட்டிக் கொண்டு உடைந்துபோயும் விடலாம். ஆகையால் இலட்சியம் வாழ்க்கைக்கு இன்றியமையாதது.

ஆனால் நடைமுறைச் சாத்தியம் இல்லாத கற்பனைவாத இலட்சியங்கள் ஒருவரின் வாழ்க்கைக்கு சீர்சேர்க்காது, சீராக்கமாட்டாது. அறிஞர் கூறியதுபோல இலட்சியங்கள் மிக நல்லவையாக இருக்கலாம். அவை நடைமுறைச் சாத்தியமற்றவையாக, கைக்கு வந்து எய்தமுடியாதவையாக இருப்பின் அந்த இலட்சியத்துக்காக உழைப்பதால் என்ன பயன்?

அது விழலுக்கு இறைத்த நீராகிவிடும். விளைவு தராத, அறுவடை செய்ய முடியாத நிலத்தில் விவசாயம் செய்யலாமா? எங்கள் சக்தியையும் நேரத்தையும், செலவிட்டு நெற்றி வியர்வையை நிலத்தில் சிந்தி அங்கு உழைப்பதால் பயன் ஏது?

விரலுக்கு ஏற்ற வீக்கம் என்பார்கள். அதேபோன்று ஒவ்வொருவரும் தத்தமது தகுதிக்கும் திறனுக்கும் ஏற்பத் தமது இலட்சியங்களை வகுத்து அவற்றை அடைய விடாமுயற்சியுடன் பாடுபட வேண்டும். அஃதன்றி எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விடுவது போலவும், முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவதுபோலவும் நடைமுறையில் சாத்தியமில்லாத இலட்சியங்களை நோக்கி, எமது சக்தியை செலவிடலாகாது.

அறிஞர் ரூசோ சொல்வதற்கு ஏற்ப எங்கள் இலட்சியங்கள் அன்றாட வாழ்க்கைக்கு உகந்தவையாக இருப்பின் அவற்றின் பெறுமதிகள் மேலும் உயரும்; பயன்கள் பெருகும். எனது இலட்சியம் மிகச்சிறந்தது அதனை விட வேறெதுவும் இருக்கமுடியாது என்று கைக்கு வந்துசேரமுடியாத இலட்சியம் குறித்து வாதாடுவதும், கற்பனை உலகில் நின்று அவை கிடைத்துவிடும் என்று நம்புவதும் ஏற்புடையவை அல்ல.

தனிமனித இலட்சியங்கள் சமூகப் பயன்பாடு உள்ளனவாகவும் அமைவதே சிறப்பு. மிகக் குறிப்பாக சமூக சேவை செய்யப் புறப்படுவோர் மக்களுக்குப் பயன் விளைவிக்கக்கூடிய இலட்சியங்களை, இலக்குகளையே கொள்ள வேண்டும். தமது சொந்த சுய விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப இலக்குகளை வகுத்து அவற்றை மக்கள் மீது திணிக்க முயலக்கூடாது.

அடைய முடியாதவற்றை கற்பனையில் முன்னிறுத்தி அல்லது முதன்மைப்படுத்தி அவற்றோடு உங்கள் சக்தியையும் வளங்களையும் வீணாக்காதீர்கள். உங்களால் ஈட்டக்கூடிய இலட்சியங்களுக்காக மட்டுமே உழையுங்கள். அதுவே விவேகம்.

# பாவினால் கடிதம் வரைந்த பண்டிதமணியும் கி.வா.ஜவும்



ஒரு காலத்தில் தமிழகத்தின் தமிழறிஞர்களும் பிரபுக்களும் ஈழத்துத் தமிழறிஞர்களின் புலமையை அறிந்துகொண்டு பெருமதிப்புச் செய்தனர். அண்ணாமலைப பல்கலைக்கழகத்தின் நிறுவுநர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தொடங்கியபோது ஈழத்து அறிஞர் சுவாமி விபுலானந்தரின புலமையை அறிந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையின் முதலாவது பேராசிரியராக அவரை நியமித்தார். அதேபோலப் பலவகையிலும் தமிழ் அறிஞர்கள் தமிழ் நாட்டுக்கு அழைக்கப்பெற்றுக் கௌரவிக்கப் பெற்றார்கள்.

கி.வா. 'ஜகந்நாதன், டாக்டர் உ.வே. சாமிநாதையரின் மாணவன்; தமிழறிஞர்; சமயம் தெளிந்தவர்; எழுத்தாளர்; சொற்பொழிவாளர். இவற்றுடன் 'கலைமகள்' இதழின் ஆசிரியராக இருந்து பல ஆண்டு காலம் சிறப்புறப் பணிபுரிந்தவர். அவர் 'கலைமகள்' ஆசிரியராக இருந்த காலத்தில் தமிழகத்து அறிஞர்களின் ஆக்கங்களைக் 'கலைமகளில்' வெளியிட்டது போல ஈழத்து அறிஞர்களின் ஆக்கங்களையும் 'கலைமகளில்' வெளியிட்டார்.

**புலவர் ம.பார்வதிநாதசிவம்**

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் சிந்தனைத்திறன் மிக்கவர். கிரேக்க தத்துவஞானி சோக்கிரட்டீசுடன் ஒப்பிடக்கூடிய சிந்தனையாளர்; எழுத்தாற்றல், பேச்சாற்றல், கற்பித்தல் ஆற்றல், விமர்சன ஆற்றல் எனப் பல ஆற்றல்கள் கொண்டவர். திருவள்ளுவர் உள்ளத்தைப் பரிமேலழகர் புரிந்து கொண்டது போல ஆறுமுகநாவலரின் உள்ளத்தைத் தெளிவாக புரிந்து கொண்டவர். பல துறைகளில் தனித்துவம் பெற்றிருந்த அவர் உரை நடையிலும் தனித்துவம் பெற்றிருந்தார். அவரின் உரைநடையின் ஆற்றலைத் தெரிந்து கொண்ட கி.வா.ஜகந்நாதன் அவர்கள் அவரது கட்டுரைகளைக் 'கலைமகளில்' வெளியிட்டார்.

## பண்டிதமணி கி.வா.ஜ. நட்பு

சங்கப்புலவர்களின் நட்பு ஆழவேரூன்றி இருந்தது போலவே பண்டிதணி கி.வா.ஜ. நட்பும் ஆழவேரூன்றி இருந்தது. கி.வா.ஜ. யாழ்ப்பாணம் வரும் போதெல்லாம் திருநெல்வேலி சென்று பண்டிதமணியைச் சந்திக்கத் தவறுவதில்லை.

ஒரு முறை 'கலைமகள்' ஆசிரியர் கி.வா.ஜ. அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெற இருந்த சைவமகாநாடு ஒன்றுக்கு வருமாறு அழைப்பு விடப்பட்டிருந்தது. அது தொடர்பாக கி.வா.ஜ., பண்டிதமணிக்குப் பாட்டாகக் கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் இருந்த விவரம்:-

**நாவன்மைமிக்க பண்டிதமணி அவர்களே!**

**எனது பண்பான நல்வணக்கம். முருகப்பெருமானருளால் நலமாக உள்ளேன். உங்கள் நலத்தை அறிவியுங்கள்.**

**உவ்விடத்து நடைபெற உள்ள சைவ மகாநாட்டில் வந்து கலந்து கொள்ளுமாறு அன்பர்கள் அழைப்பு விட்டிருக்கிறார்கள். அதனால் உவ்விடம் வர எண்ணியுள்ளேன் . உங்களைக் கண்டு இன்புறுவேன்.**

**நீங்களும் சைவ மகாநாட்டில் கலந்து கொள்வீர்கள் என்றே நம்புகிறேன். எனினும் நிகழ்ச்சிக் கோவை கிடைக்கவில்லை. நீர்வேலியில் தங்கி நின்று நாள்தோறும் உங்களைச் சந்திக்கலாம் என்று நீர்வேலிக்கந்தசுவாமிக் கோயிற் குருக்கள் கூறி இருக்கின்றார்கள்.**

**ஒருவார காலம் உவ்விடம் தங்குவேன். உங்களோடும் உங்கள் போன்ற அறிஞர்களோடும் ஆர்வமுடன் சந்தித்து உரையாடி இன்புற்றுத் திரும்பலாம் என எண்ணியுள்ளேன். எல்லாவற்றுக்கும் முருகபிரான் அருள் செய்வாராக!**

இக்கருத்தைக் கொண்ட கி.வா.ஜகந்நாதனின் பாடல் வடிவில் உள்ள கடிதம்:-

**திண்டிறல் சேர்நாவுடையாய்!**
**திகழிலங்கை போற்ற[illegible]**

**பண்டிதமாமணியே! நற்**
**பண்பான நல்வணக்கம்!**
**மண்டுபுகழ் வேளரு ளால்**
**வாழ்வுடையேன் சேமங்காண்**
**அண்டியநின் நல மெளியேன்**
**அறியவகுத்து ரைத்திடுதி.**

**ஆங்கிலங்கை சைவ மகா**
**நாடுபல அன்பர் களால்**
**பாங்குறவே நடைபெறுங்கால்**
**வந்து நீ பணிபுரிகென்**
**றோங்குமன்பர் அழைத்ததனால்**
**ஊங்குவரும் நினைவுடையேன்**
**தேங்கு கல்விக் கடலாம்நின்**
**செவ்விகண்டே இன்புறுவேன்.**

**பேரவையில் நீயும் வந்து**
**பேசுவை யென்றேயிருந்தேன்!**
**ஆரும் நிகழ்ச்சிக் கோவை**
**அங்கிருந்து போந்திலதால்**
**நீருடைய நீர் வேலி**
**தனில் நின்று நித்தமங்குச்**
**சேரல் நலம் எனக்குருக்கள்**
**செப்பினார் ஓம் என்றேன்.**

**ஒருவாரம் அங்குறைந்தே**
**உன் னனைய அன்பரொடும்**
**பெருகார்வ முறக்குலவிப்**
**பிறங்குமின்பம் நனிபெற்று**
**வரலாகும் எனக்களிப்பு**
**மண்டுகின்றேன் எனையாண்ட**
**திருவாளன் முருகபிரான்**
**திருவருளே துணைசெய்க.**

அன்பன்
கி.வா. ஜகந்நாதன்.

## பண்டிதமணியின் பதில்

இதற்குப் பதில் எழுதிய பண்டிதமணி அவர்களும் பாட்டிலேயே பதில் எழுதினார். பண்டிதமணி பாட்டில் எழுதிய கடிதத்தின் விவரம்:-

**செந்தமிழில் தேன் ஒழுகியது போன்ற இனிய கவிதைகளை - உழுந்து உருளுவதற்கு முன்னதாக - அவ்வளவு வேகமாக எழுதும் பெரும் புலவரே! உங்கள் அன்பொழுகும் கவி அமுதத்தில் எனது உள்ளம் மூழ்கிவிட்டது. உவகை பொங்கி எழுந்தது.**

**சந்திரன் வளரும செஞ்சடையை உடைய சிவபெருமான் திருவருளால் நலமாக உள்ளேன். தங்கள் வரவை எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்களைச் சந்தித்துத் தமிழ் விருந்து நுகர்வேன். உள்ளம் ஒன்றுபட்ட எனது வணக்கங்கள்.**

இக்கருத்தைக் கொண்ட பாடல் வடிவில் உள்ள பண்டிதமணியின் கடிதம்:-

**செழுந்தமிழில் தேனொழுகிற்**
**றென இனிய கவிகள் பல**
**உழுந்துருள முன்னெழுதும்**
**உவமனிலாப் பெரும் புலவீர்**
**அழுந்திய தென்னுள்ள நும**
**தன் பொழுகு கவியமிழ்தில்**
**எழுந்து வகை பொங்கியதால்**
**எழுதுவல் பின்வருமாறு**

**திங்கள்வளர் செஞ்சடையார்**
**திருவருளால் நலமுடையேன்**
**தங்கள் திருவரவுன்னித்**
**தளிர்க்கின்றேன் பெருவணக்கம்**
**நுங்களையான் சந்தித்து**
**நுகர்ந்திடுவன் தமிழ்விருந்து**
**எங்கள் உளம் ஒருமைசெயும்**
**'ஓம்' இனிது வாழியவே**

அன்புள்ள
சி. கணபதிப்பிள்ளை.

### பாட்டின் வேகம்




பாட்டின் வேகத்தை "மூச்சுவிடும் முன்னே முந்நூறும் நானூறும் ஆச்சென்றால ஐந்நூறும் ஆகாவோ என்றும் - "இம்மென்னு முன்னே எழுநூறும் எண்ணூறும் அம்மென்றால் ஆயிரம் பாட்டாகாவோ" என்றும் முன்னைய புலவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பண்டிதமணி அவர்களோ, பாட்டின் வேகத்தை உழுந்து உருளுவதற்கு முன்னர் பாடி முடித்து விடக் கூடிய வேகம் என்று புதுமை ஒளிவிடப் பாடியுள்ளார்.

பண்டிதமணியும் கி.வா.ஜ.வும் பாட்டினால் கடிதம் எழுதிக்கொண்டது அவர்களது காலத்து அறிஞர்களின் கவித்துவத்தைக் காட்டுகிறது. பாட்டின் வடிவம் கவித்துவத்தைக் காட்ட, பாட்டின் உட்பொருள் அவர்களது அன்புள்ளத்தைக் காட்டு கிறது.

இத்தகைய பேரறிஞர்களின் நட்புறவுபற்றிய தகவல்கள் கூட இன்றைய இலக்கிய ஆர்வலர்களுக்கு சுவைபடைப்பதாக இருக்கின்றதன்றோ!

## முதலைக் கண்ணீர்!



**நீலித்தனமாகக் கண்ணீர் விடுபவர்களைப் பார்த்து "இது முதலைக் கண்ணீர்!" என்று சொல்லுவது உண்டு. முதலை அப்படி கண்ணீர் வடிப்பது உண்டா என்று அறிவியலார் ஆராய்ந்து பார்த்தனர். முதலைக்குக் கண்களில் நீர் சுரக்கும் சுரப்பிகள் இல்லை. ஆனால் கண்களுக்கு அருகில் வேறு சில சிறப்பான சுரப்பிகள் உள்ளன. முதலையின் சிறுநீரகங்கள் வலிமை இல்லாதவை; அவை, உணவில் அதிகப்படியாய் இருக்கும் உப்பைச் சேர்த்து வைக்க இயலாதவை. உணவில் இருக்கும் அதிகப்படி உப்பு நீரில் கரைந்து உப்பு நீராக மாறி, முதலையின் கண்களுக்கு அருகில் இருக்கும் சிறப்புச் சுரப்பிகள் வழியே வெளியேறுகின்றன. இதைத்தான் முதலைக் கண்ணீர் என்கிறோம்.**

– கௌதம் பாரதி –

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டாங்கிகளைப் பாதுகாக்க திட்டம் வகுக்கவேண்டிய நிலை



ஆனையிறவுக்குத் தெற்கே பரந்தன் பகுதியில் படையினரின் யுத்த டாங்கி ஒன்றைத் தகர்த்தழித்த புலிகளின் டாங்கி எதிர்ப்பு ஏவுகணை தொடர்பாக கடந்தவாரம் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

புலிகளின் அந்த ஏவுகணை பற்றிய விவகாரமே இன்னமும் பாதுகாப்பு வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது.

ஏவுகணை வெடித்த இடத்தில் இருந்து மீட்கப்பட்ட அதன் எச்சங்கள் வெளிநாட்டில் சோதனை செய்வதற்காக கடந்த வெள்ளியன்று ஐரோப்பிய நாடு ஒன்றின் தலைநகருக்கு விமானம் மூலம் எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

புலிகள் பயன்படுத்திய ஏவுகணை டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளின்முதல் தலைமுறைக்கு (Generation One) உரியதாகவே இருக்கக் கூடும் என இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த நிபுணர்கள் நம்புகின்றனர். கண்களால் இலக்கைப் பார்த்து ஏவப்படும் இந்த ஏவுகணைகள் வயர் இணைப்பு மூலம் வழிநடத்தப்படத்தக்கவை. இந்த அடிப்படையில் முதல் தலைமுறைக்குரிய மூன்றுவகையான டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளில் ஒன்றையே புலிகள் பயன்படுத்தி இருக்கலாம் என உள்நாட்டுப் பாதுகாப்பு நிபுணர்கள் சந்தேகிக்கின்றனர்.

அவற்றில் ஒன்று **மல்யுத்கா** (9கே11) டாங்கி எதிர்ப்பு ஏவுகணை: (Malyutka anti - tank guided missile system) நேட்டோ நாடுகளால் **சக்கர்** என அழைக்கப்படும் இந்த ஏவுகணை 1963ஆம் ஆண்டு முதன் முதலில் தயாரிக்கப்பட்டது. ஆள்களால் இலகுவாக இடத்துக்கிடம் எடுத்துச் சென்றும், வாகனங்களில் பொருத்திவைத்தும் இயக்கக்கூடிய இந்த ஏவுகணை ஐரோப்பா எங்கும் பயன்படுத்தப்பட்டு வந்தது. பல்கேரியா, ஈரான், ருமேனியா மற்றும் யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளில் இவை தயாரிக்கப்பட்டன. தற்சமயம் பிரிந்து சென்றுள்ள முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளிலும், முன்னாள் வார்ஸோ நாடுகளின் படைகளாலும் எகிப்து, ஈரான், வடகொரியா, சிரியா, முன்னாள் யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளிலும் இந்த 'சக்கர்' ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டன. கடந்த காலங்களில் உக்ரைன் நாட்டில் இருந்து பணம் கொடுத்து இந்த ரக ஏவுகணைகளைத் தாங்கள் பெற்றிருப்பதாக சில கெரில்லா அமைப்புக்கள் தெரிவித்திருந்தன.

இந்த டாங்கி எதிர்ப்பு ஏவுகணை நீர் உட்புகாத ஒரு கண்ணாடி இழைக் கவசத்தினால் மூடப்பட்டிருக்கும். இவை ஆயிரம் மீற்றர் தூரம் சென்று இலக்கைத் தாக்கவல்லவை.

இந்த 'சக்கர்' ரக ஏவுகணையே புலிகளின் கைக்குக் கிடைத்திருக்கலாம் என்று படை நிபுணர்கள் நம்புகின்றனர். (இது குறித்து கடந்த வாரம் இப்பத்தியில் தெரிவித்திருந்தோம்).

இரண்டாவது **பாகொட்** (9கே111) டாங்கி எதிர்ப்பு ஏவுகணை (Fagot anti - tank guided missile system): நேட்டோ நாடுகளால் **ஸ்பைகொட்** (Spigot) என அழைக்கப்படும் இந்த ரக ஏவுகணைகள் ரஷ்யாவிலும், பல்கேரியாவிலும் தயாரிக்கப்பட்டவை.

ரஷ்யா, குறோஷியா மற்றும் முன்னாள் 'வார்ஸோ' நாடுகளின் படைகளால் பயன்படுத்தப்பட்டவை. குறோஷியா ஊடாக இவை பின்னர் பல்வேறு குழுக்களின் கைகளுக்கு கிடைத்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

மூன்றாவது வகை டாங்கி எதிர்ப்பு ஏவுகணை **கொன்கூஸ்** என அழைக்கப்படுகின்றது. (Konkurs (9கே113) anti - tank guided missile system): 1974ஆம் ஆண்டு முதல் பாவனைக்கு வந்த இந்தரக ஏவுகணைகள் ரஷ்யாவிலும், பல்கேரியாவிலும் தயாரிக்கப்பட்டவை. நேட்டோ நாடுகளில் இவை **ஸ்பன்ட்ரல்** (Spandrel) என அழைக்கப்படுகின்றன. முன்னாள் சோவியத்ஒன்றிய நாடுகளாலும் இந்தியா, செக்குடியரசு, ஸ்லோவாக்கியா மற்றும் முன்னாள் வார்ஸோ நாடுகளின் படைகளால் பயன்படுத்தப்படுகின்றன. 'பாகொட்' ரக ஏவுகணைகளை ஏவப் பயன்படுத்தப்படும் ஏவும் கருவி (லோஞ்சர்) மூலம் இந்த ரக ஏவுகணைகளையும் ஏவமுடியும். 75 முதல் 4 ஆயிரம் மீற்றர் தூரத்துக்குச் சென்று இலக்கைத் தாக்கவல்ல 'கொன்கூஸ்' ஏவுகணைகள் வயர் இணைப்பு மூலம் வழிநடத்தப்படுகின்றன.

மேற்கூறிய மூன்று வகையான ஏவுகணைகளில் ஒன்றையே புலிகள் பெற்றிருக்கவேண்டும் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

வெளிநாட்டு பரிசோதனை முடிவுகள் கிடைக்கும் போதுதான் உண்மை தெரிய வரும். ஏவுகணைகளின் எச்சங்கள் பெரும்பாலும் நேட்டோ நாடு ஒன்றுக்கே பரிசோதனைக்காக அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஏவுகணையின் இனம், ரகம் மற்றும் தயாரிக்கப்பட்ட காலம் என்பவற்றை உறுதி செய்வதற்காகவே அதன் எச்சங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. பரிசோதனை மூலம் இந்த விவரங்கள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே டாங்கிகளைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்பு அமைச்சு முடிவுசெய்யும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

புலிகள் டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களை ஏற்கனவே பயன்படுத்தி வந்துள்ளனர். எனினும் வழிநடத்தல் மூலம் இயக்கப்படும் டாங்கி எதிர்ப்பு ஏவுகணையைப் புலிகள் இதுவரை பயன்படுத்தியதாகத் தகவல் இல்லை.

தற்பொழுது கறுப்புச் சந்தையில் முதல் தலைமுறைக்குரிய டாங்கி எதிர்ப்பு ஏவுகணை ஒன்றின் பெறுமதி சுமார் ஒரு லட்சத்து 28 ஆயிரம் டொலர்களாகும்.

ஏவுகணையைச் செலுத்தும் கருவியே (லோஞ்சர்) பெறுமதி கூடியதாகும். லோஞ்சர் ஒன்றின் விலை ஒருலட்சத்து 15ஆயிரம் அமெரிக்க டொலர்களாகும். ஏவுகணை ஒன்றின் விலை 13ஆயிரம் டொலர்கள் மட்டுமே.

சண்டையின்போது களத்தில் டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளைப் புலிகள் தாராளமாகப் பயன்படுத்தும் சாத்தியம் இல்லை என்றே பாதுகாப்புத் தரப்பினர் கருதுகின்றனர். எனினும் இந்த ரக ஏவுகணையைப் பயன்படுத்தி புலிகள் வேறு இலக்குகளைத் தாக்கக் கூடும் என்பதே அவர்களின் அச்சம்.

பரந்தன் பகுதியில் புலிகள் நடத்திய மற்றொரு தாக்குதலில் இரு படையினர் மயக்கமடைந்தது குறித்தும் -

புலிகள் நச்சுவாயுவை அல்லது இரசாயன ஆயுதத்தைப் பயன்படுத்தினரா என்ற சந்தேகம் பாதுகாப்பு வட்டாரங்களில் எழுந்திருந்தது பற்றியும் -

கடந்தவாரம் தகவல் வெளியாகி இருந்தது.

அந்தத் தாக்குதலுக்குப் புலிகள் பயன்படுத்திய ஆயுதம் தொடர்பாக எழுந்த ஐயங்களுக்கு படைத்தரப்பில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

கலகக்காரர்களைக் கலைப்பதற்கு பொலீஸார் பயன்படுத்தும் கண்ணீர்ப்புகையை ஒத்த குறைந்த செறிவுடைய வாயுவைப் பயன்படுத்தியே புலிகள் இத்தாக்குதலை நடத்தி இருப்பது உறுதிசெய்யப்பட்டிருக்கிறது.

## மறுபக்கம் வார விமர்சனம்

நல்லூர் தாஸ்

புலிகள் இத்தகைய புகைக்குண்டுகளைப் பயன்படுத்தி இருப்பது இதுவே முதல் முறை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பரந்தன் பகுதியில் புலிகள் இதனைப் பரீட்சித்துப்பார்த்துள்ளனர். எதிர்காலத்தில் படையினருக்கு எதிரான சண்டைகளில் புலிகள் இவற்றை அதிகளவு பயன்படுத்தக்கூடும் என எதிர்பார்க்கும் பாதுகாப்புத்தரப்பினர் அதனை எதிர்கொள்ள மாற்றுவழி உண்டு எனத் தெரிவித்துள்ளனர்.

கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசுவதன் மூலம் படையினரை பங்கர்களுக்குள் முடங்கச் செய்து படைநிலைகளை நோக்கி முன்னேறுவதை இலகுவாக்கமுடியும். இதுவே புலிகளின் நோக்கம் என்கிறது படைத்தரப்பு.

### எரிபொருள் கப்பலே இலக்காம்

கடந்த மாதம் 26ஆம் திகதி முல்லைத்தீவுக் கடலில் கடற்படையினருக்கும் கடற் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற சண்டையில் 'ஜுஜியா' (YUJIA) என்ற சீனச் சரக்குக் கப்பல் சேதமடைந்தது தெரிந்ததே.

இந்தக் கப்பலைக் கடற்புலிகளே தாக்கியதாக அரசும், கடற்படையினரே தாக்கியதாக புலிகளும் மாறிமாறிக் குற்றஞ்சாட்டி இருந்தனர்.

அந்தக் கப்பல் விடுதலைப்புலிகளால் தவறாக இலக்கு வைக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு எரிபொருள் ஏற்றி வந்த 'சில்க்றூட்' என்ற எண்ணெய்க் கப்பலைத் தாக்கவே புலிகள் திட்டமிட்டிருந்ததாகவும் ஆனால் அச்சமயம் அதே வழித்தடத்தில் பயணம் செய்த சீனக் கப்பல் தவறுதலாகத் தாக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கில் பருவமழை தொடங்கி இருப்பதால் வன்னியில் அடுத்த சில மாதங்களுக்கு இராணுவ நடவடிக்கைகள் மந்தமான நிலையையே சந்திக்கவேண்டி இருக்கும். அதே வேளை யாழ்.குடாநாட்டிலும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் குறைந்துள்ளன. தாக்குதல் சம்பவங்கள் நடக்காததால் புலிகளின் செயற்பாடுகள் முடங்கிவிட்டதாகக் கருத முடியாது. குடாநாட்டில் தென்படும் இனம்புரியாத அமைதி புயலுக்கு முந்திய அமைதியாகவும் இருக்கலாம்.

புலிகளின் கவனம் வடக்கில் இருந்து கிழக்கிற்கும் மலையகப் பகுதிகளுக்கும் திரும்பி இருப்பதாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.


குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் புலிகள் தமது நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான உயர்மட்ட மாநாடு ஒன்று கடந்த ஞாயிறன்று நடைபெற்றது. அரச அதிகாரிகள், பொலீஸ் அதிகாரிகள் கலந்துகொண்ட அந்த மாநாட்டில் அம்பாறை 31 ஆவது கொலனி கிராமத்தில் அண்மையில் இடம்பெற்ற படுகொலைகளை அடுத்து அங்குள்ள எல்லைக் கிராமங்களின் பாதுகாப்பு தொடர்பாக எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

கிழக்கிலும் தலைநகர் கொழும்பிலும் மத்தியமலைநாட்டுப் பகுதிகளிலும் புலிகள் தங்கள் நடவடிக்கைகளை அதிகரித்திருப்பது தேர்தல்கள் நெருங்கும் வேளையில் அரசுக்குப் பெரும் சவாலாக மாறியுள்ளது.

வன்னியில் புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கையில் குறிப்பிடக்கூடிய வெற்றியை எட்டாத நிலையில் நாட்டின் ஏனைய பகுதிகளில் பாதுகாப்பு நிலைமையை மேம்படுத்த வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

*



அமெரிக்க இராணுவத்தின் கலாட்படைப்பிரிவின் சண்டைக் கவசவாகனம் ஒன்றைப் படத்தில் காணலாம். எதிரியின் கவசவாகனங்களைத் தகர்க்கக்கூடிய 'ரோ-2'(Tow-2) ரக டாங்கி எதிர்ப்பு ஏவுகணை இந்த சண்டைக் கவசவாகனத்தில் உள்ளது. இந்தரக ஏவுகணை ஒன்று வாகனத்தில் இருந்து ஏவப்பட்டு மேற்கிளம்பிச் செல்வதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்புச் செலவுக்கு அதிக நிதி ஒதுக்கீடு

# போரைத் தீவிரமாக முன்னெடுக்கும் முனைப்பே!

**உள்ளும் புறமும்**
**குறுமுனி**

ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை இலங்கை அரசாங்கத்தை ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது எல்லோருக்கும் தெரிந்த விடயமே.

இலங்கை அரசாங்கம் தொடர்ந்து நடத்தும் போரினால் உண்டாகும் பாதிப்புக்கள் இந்த நாட்டுக்கு மட்டுமன்றி, இந்தப் பிராந்தியத்தில் வாழும் மக்கள் அனைவரையும் பாதிக்கும் அபாயம் உண்டு. காரணம் இலங்கை தனது போரை உயர்தொழில்நுட்பம் செறிந்ததாக மாற்றிவருகிறது. அது மேலும் உக்கிரமடையும் வாய்ப்புக்கள் அதிகம் -

அணு ஆயுத நாடுகளாக மாறிவரும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இலங்கை அண்டை நாடாக விளங்குகிறது. இங்கு உயர் தொழில்நுட்பம் சார்ந்த போர் ஒன்று நடைபெறும் பட்சத்தில் தென்னாசியாவில் நெருக்கடியும் பதற்றமும் தோன்றும் சாத்தியம் நிறையவே உண்டு.

இலங்கையில் போர் நடைபெறுவதற்கு மூல காரணம் ஐம்பது வருடங்களுக்கு மேலாக தீர்க்கப்படாமல் நீடிக்கும் இனப்பிரச்சினை. அந்தப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதில் உரியவாறு நாட்டம் கொள்ளாமல் போரைத் தொடர்வதிலேயே அது முழு சக்தியையும் செலவிடுகிறது. ஆகையால் தென்னாசியப் பிராந்தியம் பதற்ற நிலையுள்ள பகுதியாக மாறிவிடும் -

இதனைக் கருத்தில்கொண்டு இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஐக்கியநாடுகள் சபை மூன்றாந்தரப்பாக உதவவேண்டும் - தலையிட வேண்டும் - என்று ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தைப் பார்த்து ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு இந்தக்கோரிக்கையை விடுத்திருந்தது.

அவ்வேளை, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்துகொள்ள நியூயோர்க் சென்றிருந்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் காதில் மூன்றாந்தரப்பாக ஐ.நா. பங்களிக்க வேண்டும் என்ற கோரிக்கை விழுந்தது.

அவ்வாறு விழுந்ததும் அவர் சன்னதம் ஆடியது, மற்றும் அவருக்குக் கலை வந்தது குறித்து சென்ற வாரம் இப்பத்தியில் மேலோட்டமாக எழுதியிருந்தோம். இடநெருக்கடி காரணமாக அதனைச் சுருக்கமாகவே சொல்ல நேர்ந்தது.

இனப்பிரச்சினை விவகாரத்தில் தனது அரசு சொல்வதை வெளிநாட்டு அரசுகளும் அமைப்புகளும் நம்பவேண்டும் என்பதற்காகவே கதிர்காமருக்கு வெளிவிவகார அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. இல்லையெனில் சட்டத்துறைப் பிரமுகரான இவருக்கு நீதி அமைச்சுப் பதவி வழங்கப்பட்டிருக்கும். இவரை சந்திரிகாவுக்கு அறிமுகப்படுத்திய நீலன் திருச்செல்வமும் ஒரு சட்டத்துறை நிபுணர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் ஒரு தமிழராக - (பெயரளவில் மட்டும்) இருப்பதால், தமிழர் பிரச்சினை தொடர்பாக இவர் வாயில் இருந்து விழும் சொற்கள் சரியானது, உண்மையானது என்று வெளி உலகத்தை இலகுவில் நம்பவைக்கலாம் என்ற உள்நோக்கத்துடனேயே கதிர்காமருக்கு இந்தப் பதவி வழங்கப்பட்டது.

சந்திரிகா எதிர்பார்த்தது போலவே, அவருக்கு விசுவாசமுள்ள சேவகனாகி அவர் தமது காரியத்தை ஆற்றி வருகிறார். விடுதலைப் புலிகளை உள்நாட்டில் ஒடுக்குவது சாத்தியப்படாது என்பது ஜனாதிபதிக்கு நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும்.

மாமனார் அனுருத்த ரத்வத்தை விடுதலைப் புலிகளை போர் மூலம் ஒழித்துவிடலாம் என்று கூறியதை, 1995 ஏப்ரலில் பேச்சுவார்த்தை முறிந்த கையோடு சந்திரிகா நம்பியிருக்க நியாயம் உண்டு. அரசாங்கத்துக்கு எதிராக விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினால் - நடத்தும்போது அரசாங்கம் அமைதி பேணுவது, மீண்டும் சமரசம் செய்யப்போவது கௌரவக் குறைவு என்று, அவர் உணர்ச்சிவசப்பட்டிருந்த வேளை அது. அப்போது அமைச்சர் அனுருத்தவின் ஆலோசனை சந்திரிகாவுக்கு சரியாகவே பட்டது.

1995 டிசெம்பரில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி, பழைய மன்னர் காலத்து மரபுப் பிரகாரம் 'யாப்பன பட்டுவ' வெற்றி கொள்ளப்பட்தாக பட்டயம் எழுதிப் பேழையில் வைத்து அனுருத்த கையளித்தபோது, ரத்வத்தை சொல்வது போல விடுதலைப்புலிகளை ஒழிக்கலாம் அது முடியாவிடில் ஒடுக்கவேனும் செய்யலாம் என்று ஜனாதிபதி நம்பினார்.

ஆனால் யாழ்ப்பாணத்துக்குப் பாதை திறக்கவென்று ஆரம்பிக்கப்பட்ட 'வெற்றி உறுதி' (ஜயசிக்குறு) இராணுவ நடவடிக்கை பதினாறு மாத காலத்தின் பின்னர் படைத்தரப்பில் மிகுந்த இழப்புக்களுடன் தோல்வியில் முடிவடைந்தபோது விடுதலைப் புலிகளை ஒடுக்குவதும் கடினமாகவே இருக்கும் என்ற முடிவுக்கு ஜனாதிபதி வந்திருக்கவேண்டும்.

எனினும் புலிகள் வசம் இருக்கும் பிரதேசத்தில் இத்தனை வீதம் அரச கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது என்ற புதிய கணக்கு வாய்ப்பாட்டை அனுருத்த புரட்டிக் காட்டத் தொடங்கியதும், சரி அந்த வகையிலாவது ஒரு வகை வெற்றி காணுவோம் என்று ஜனாதிபதி நினைத்திருப்பார் என்பது நிச்சயம். இராணுவத் தாக்குதல்களை அரசியல் அட்டவணைக்கு ஏற்ப நடத்தி வெற்றி காட்டினால் பிரதமர் பதவிக்கு உரிமை கோரலாம் என்ற எண்ணம் அமைச்சர் அனுருத்தவுக்கு.

போரினால் விடுதலைப்புலிகளை முழு அளவில் பலவீனமாக்குவதும், ஒடுக்குவதும் சாத்தியமில்லை என்று கண்டு சர்வதேச அரங்கில் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி அவர்களுக்குக் கிடைக்கும் வளங்களைத் தடுக்க வியூகம் வகுக்கப்பட்டது. அதனைச் செய்து முடிக்கும் பொறுப்பு வெளிவிவகார அமைச்சரிடம் கொடுக்கப்பட்டது.

தமக்கு அளிக்கப்பட்ட பொறுப்பைக் கணிசமான அளவில் கதிர்காமர் கனகச்சிதமாகச் செய்து வருகிறார் என்று சந்திரிகா சந்தோஷப்படுகிறார் என்பதில் ஐயமில்லை. ஆசிரியரிடம் அதிக புள்ளிகளைப் பெற்று கெட்டிக்கார மாணவனாக அவர் திகழ்வதினாலேயே அவருக்கே பிரதமர் பதவி வழங்கப்படலாம் என்ற ஊகங்கள் அரசியல் வட்டாரங்களில் இருந்து வெளியாகின.

விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் பட்டியலில் அமெரிக்காவைக் கொண்டு சேர்ப்பித்தது தொடக்கம் ஏனைய சில ஐரோப்பிய நாடுகளை, புலிகளின் விடயத்தில் தாம் மிக அவதானமாக இருப்பதாகச் சொல்ல வைத்தது வரை கதிர்காமரின் கெட்டித்தனம் பளிச்சிடுகிறது.

இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், இனப் பிரச்சினையைத் தீர்க்கவும் போரை நிறுத்தவும் ஐ.நா.வின் தலையீடு அவசியம் என்ற வாசகம் நியூயோர்க்கில் நின்ற கதிர்காமர் காதில் நாசகாரமாக ஒலித்தது. இதே செய்தி அவ்வேளை அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டனில் நின்ற ஜனாதிபதி சந்திரிகாவின் காதிலும் விழாமல் இருக்கக் காரணமில்லை.

இந்தப் புதிய திருப்பம் அல்லது போக்கு (Trend) குறித்து கதிர்காமர் ஜனாதிபதியுடன் கலந்து ஆலோசிக்காமல் இருந்திருக்கமுடியாது. எனினும் இந்த யோசனையை நிராகரித்து சர்வதேசத்தை அதன் பக்கம் இழுபடாமல் தடுக்கும் பொறுப்பை கதிர்காமரிடமே சந்திரிகா ஒப்படைத்தார் எனக் கொள்ளலாம்.

சந்திரிகா வாஷிங்டனில் கலந்து கொண்டது - தலைமை வகித்தது - உலக வங்கி சர்வதேச நாணய சபை ஆகியவற்றிடம் 'பிச்சை' கேட்கும் 24 நாடுகள் கலந்து கொண்ட 'G 24' குழுவின் மாநாடு. அங்கு நின்று கொண்டு இது குறித்துக் கருத்துச் சொல்ல அவர் விரும்பாமல் இருந்திருக்கலாம். தமக்குக் கொடுத்த வேலையைத் திறம்படச் செய்ய நினைத்தார் அமைச்சர்.

இரண்டு நாடுகளுக்கிடையே பிணக்கு இருந்தால்தான் வெளியார் தலையீடு தேவை. இலங்கை இனவிவகாரம் முழுக்கமுழுக்க உள்நாட்டு விவகாரம். அதில் ஐ.நா. தலையிட முடியாது என்று அமைச்சர் கதிர்காமர் விவாதம் செய்தார். மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தை நிராகரிப்பது என்ற அரசின் நிலைப்பாட்டை தளர்ந்து விடாமல் பார்த்துக் கொள்வதில் மிகக் கவனமாக இருந்தார். அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு இன்னும் தயாராகவே இருப்பதாக ஒரு காயையும் இடையே தூக்கிப் போட்டார் - நகர்த்தினார் அவர்.

மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் என்ற நிலைப்பாட்டை வலியுறுத்தி வருபவர்கள் விடுதலைப் புலிகள். அது சாத்தியமாகிவிட்டால் அரசாங்கத்துக்குத் தோல்வியும் புலிகளுக்கு வெற்றியும் என்றாகிவிடும். அந்த நிலை வந்தால் விடுதலைப் புலிகளை ஒடுக்கவும் பலவீனப்படுத்தவும் தாம் மேற்கொண்ட முயற்சிகள் நிலத்தில் ஊற்றிய பாலாகிவிடும் என்று கதிர்காமர் நினைத்திருப்பார். நியூயோர்க்கில் நின்ற போது உணர்ச்சி வசப்பட்டு கலை ஆடியதற்கு அதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

இத்தனைக்கும் போரை நிறுத்தவும், விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவும் ஐக்கிய நாடுகள் சபை போன்ற ஒரு சர்வதேச நிறுவனத்தின் உதவியை நாடினால் என்ன என்ற கேள்வி அரசாங்க உயர் வட்டாரங்களிலேயே எழுப்பப்பட்டதாகக் கொழும்பில் அரசியல் அவதானிகள் மத்தியில் பேசப்படுகிறது. ஐ.நா. சமாதானப் படையை அழைப்பது குறித்து அரச உயர் வட்டாரங்களில் கிசுகிசுக்கப்பட்டதாம்!

## தமிழ்க் கட்சிகள் என்ன செய்யப்போகின்றன; சளப்பல் காரணங்களை மக்கள் ஏற்கமாட்டார்கள்

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தும் போது மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் தேவை என்பதை அரசாங்கம் உணர்ந்ததாலேயே ஐ.நா. மத்தியஸ்தம், ஐ.நா, சமாதானப் படை குறித்துச் சிந்திப்பதாகவும் அப்போது சொல்லப்பட்டது. இது குறித்து மிக அந்தரங்கமாக ஆலோசனை செய்யப்பட்டதாகவும், நுணுக்கமாக ஆராயப்பட்டதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.

வடக்கு - கிழக்கில் சமாதானத்தை நிலைநாட்டுவதில் ஐக்கிய இலங்கை என்பது உறுதிப்படுத்தப்படின், ஐ.நா.வின் சமாதான முயற்சிக்கும், சமாதானப் படை வருகைக்கும் ஆதரவு அளிக்கலாம் என்ற கருத்துக்கூட அந்த ஆலோசனைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டதாகத் தகவல்.

அவ்வாறெல்லாம் ஆராய்ந்த பின்னர், ஐ.நா.வின் மத்தியஸ்தம் குறித்து கதிர்காமர் எடுத்தெறிந்து பேசியதும் இது விடயத்தில் ஜனாதிபதி கருத்துக் கூறாமல் ஒதுங்கிக் கொண்டதும் அரசியல் களத்தைப் பெரும் கலக்குக் கலக்கி 'கலங்கல்' ஆக்கியுள்ளது.

### பேச்சில் நாட்டமில்லை

ஆயினும் பேச்சுவார்த்தையில் அரசுக்கு நாட்டம் வரக் காரணமில்லை என்று மீண்டும் அடித்துச் சொல்லப்பட்டுள்ளது! அடுத்த வருட வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவுக்கு 5,250 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதனையே இங்கு குறிப்பிடுகின்றோம்.

"அடுத்த ஆண்டு சமாதான ஆண்டு. இந்த வருட இறுதியோடு போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு விடும். புதிய வருடத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்" என்று ஜனாதிபதி சில காலமாகக் கூட்டங்களிலும் பேட்டிகளிலும் கூறிவந்தார். ஆனால் 2000ஆவது ஆண்டில் போரை நவீன ஆயுதங்கள் கொண்டு நடத்துவதற்காக இந்த நாட்டின் வருமானத்தில் 30 சத வீதத்தை அரசாங்கம் உத்தேசமாக ஒதுக்கியுள்ளது. உண்மையான செலவு 40 சதவீதம் வரை உயரும்.

அடுத்த ஆண்டில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்ற நிலையை மாற்றி முழுக்க முழுக்க இராணுவத் தீர்வு என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது. எதிர்வரும் வருடத்தின் ஆரம்பத்தில் - ஜனவரியில் - ஜனாதிபதி தேர்தலுக்குத் திகதி நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வந்தன. அது எப்படியோ, அடுத்த வருடம் தேர்தல் ஆண்டாக அமையும் என்று இப்போது நம்பலாம்.

அரசியல் அட்டவணைக்கு ஏற்பப் போரை நடத்தி, வெற்றிகளைக் காட்டி சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக போரைத் தீவிரமாக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வையே இந்த அரசு நாடுகிறது. ஆனால் வெளிப்பேச்சுக்கு அரசியல் தீர்வுப்பொதி என்றெல்லாம் நடிக்கிறது. இந்த உண்மையை நம்பாதவர்கள் பாதுகாப்புச் செலவுக்கு முந்திய வருடங்களை விட அடுத்த வருடத்துக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டதற்கு வேறு காரணம் எதனையும் கூற முடியுமா?

போர் தொடங்கிய காலத்திலிருந்தே பாதுகாப்புச் செலவு வருடாந்தம் அதிகரிக்கப்பட்டு வருவது வழமையாகிவிட்டது. தேசிய வருமானத்தை அது பெரியஅளவில் விழுங்கிவிடுகிறது.

1983 தொடக்கம் 1996 வரையான போர்ச் செலவு குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் பிரகாரம் -

அந்தக் காலப்பகுதியில் அரசாங்கத்துக்கும், விடுதலைப்புலிகள் அமைப்பிற்கும் ஏற்பட்ட நேரடிச் செலவீனங்கள் (1996 விலைகளின் பிரகாரம்) 22,800 கோடி ரூபாவாகும். இந்தச் செலவை - சுமையை - சகல இன சமூகங்களையும் சேர்ந்த மக்களே தாங்கவேண்டியுள்ளது. 13வருட கால மொத்த தேசிய உற்பத்தி இழப்பு (1996 விலைகளின் பிரகாரம்) 22,400 கோடி ரூபாவாகும். இது 1996ஆம் ஆண்டின் மொத்தத் தேசிய உற்பத்தியைவிட மூன்று மடங்கு அதிகமானதாகும்.

1996ஆம் ஆண்டை ஒரு மாதிரியாகக் கொண்டு ஆராய்ந்தபோது, போருக்கான மொத்த ஆகு செலவு சுமார் 16,500 கோடி ரூபாவாகும் (இந்தச் செலவு போருக்கான செலவீனம், இழக்கப்படும் உற்பத்தியின் பெறுமதி, வருமான இழப்பு ஆகிய அங்கங்களை உள்ளடக்கியது) இந்தத் தொகை அப்போதைய மொத்தத் தேசிய உற்பத்தியில் 21.3 சத வீதமாகும்.

ஆனால் 1997இல் பாதுகாப்புநிதி ஒதுக்கீடு 3,397 கோடி ரூபாவாகவும் 1998இல் 4,499 கோடி ரூபாவாகவும், 1999இல் 4,735 கோடி ரூபாவாகவும் உயர்த்தப்பட்டது. எனினும் எல்லா வருடங்களிலும் உண்மையான செலவு 30முதல் 40சத வீதம் உயர்ந்திருக்கிறது.

அதுபோலவே 2000ஆம் ஆண்டுக்கான உண்மையான செலவு 7,000 கோடி ரூபாவாக உயர வாய்ப்புண்டு.

1996இல் அந்த ஆய்வும் கணக்கெடுப்பும் செய்யப்பட்ட வேளையில் பின்வருமாறு அவதானிக்கப்பட்டிருந்தது:-

* போர் மிகவும் விசாலமான சமூக - அரசியல் விளைவுகளைக் கொணர்ந்துள்ளது. அது மக்களால் தமது சாதாரண வாழ்வில் அனுபவிக்கவேண்டிய சமூக சேமநலன் உணர்வுக்கு மிக முக்கியமான பாதுகாப்பு உணர்வு மற்றும் நடமாட்ட சுதந்திரம் என்பவற்றை அவர்கள் இழந்து விட்டதைக் குறிக்கின்றது.

* பாதுகாப்பு நடவடிக்கைகளின் அதிகரிப்பு, அவசரகால நிலைமை மற்றும் போர்க் கெடுபிடிகள் தொடர்வதால் மக்களின் மனித உரிமைகளில் கட்டுப்பாடுகளை அல்லது மட்டுப்படுத்தல்களைத் திணிப்பதோடு அவர்களின் தனி அந்தரங்கத்தினையும் மீறுகின்றன. *இந்நிலைமைக்கு இலகுவில் பலியாகக் கூடியவர்கள் தமிழ் மக்களே.*

1996இன் நிலைமையை விட 1999இல் தமிழர் நிலைமை எவ்வளவு மேலும் மோசமாகியது என்பது தமிழர்கள் எல்லோர்க்கும், தமிழ்க்கட்சிகளுக்கும் நன்கு தெரியும்.

2000ஆம் ஆண்டில் நவீன தொழில் நுட்ப போரினால் தமிழர்கள் எவ்வாறு துவம்சம் செய்யப்படுவார்கள் என்று அளப்பதற்கு தொழில்நுட்பமாணி எதுவும் தேவையில்லை. அவரவர் மனத்தினால் அளந்து விடலாம் அல்லவா?

போரைத் தீவிரமாக்குவது, நவீன மயப்படுத்துவது என்பது வடக்கு - கிழக்கை சுடுகாடாக்கும் முயற்சி என்றே கருதவேண்டியுள்ளது. புதுக்குடியிருப்பில் நடைபெற்றது போல புலிகளின் இலக்குகளைத் தாக்குவதாகக் கூறி தமிழ் மக்களே கொல்லப்படுவார்கள். அவர்களே அகதிகளாக்கப்படுவார்கள். உணவு மற்றும் மருந்துகள் போதிய அளவில் வழங்கப்படாமல் பட்டினிச் சாவை எதிர்நோக்கவைக்கப்படுவார்கள். கடந்த ஒன்பது வருடங்களாக அனுபவிக்கும் அவலங்களையும் காணும் அழிவுகளையும் விட பெரும் அவலங்களையும் அழிவுகளையும் தமிழ் மக்கள் அடுத்த ஆண்டில் அனுபவிக்க நேரிடும். போர் நவீனமயப்பட்டால் அழிவும் அனர்த்தமும் உச்சக் கட்டத்தை அடையும்.

அரசியல் தீர்வு, தீர்வுப் பொதி என்றெல்லாம் கூறிவிட்டு பாதுகாப்பு நிதியை அதிகரித்திருப்பது அரசு போரை நடத்துவதிலேயே முனைப்பாக உள்ளதை, அதற்கே கங்கணம் கட்டி நிற்கிறது என்பதனைத் தெளிவாகக் காட்டுகிறது.

இதனைத் தமிழ் அரசியல் கட்சிகள் நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். பாதுகாப்புக்கான நிதி நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் வாக்களிக்காமல் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும். இ.தொ.காங்கிரஸ் மற்றும் ஐ.தே.க. உறுப்பினர்களுடன்பேசி அவர்களையும் பாதுகாப்புஅமைச்சு ஒதுக்கீட்டுக்கு எதிராக வாக்களிக்கத் தூண்டினால் அரசைப் போரை நிறுத்தத் தூண்டும் ஒரு செயலாக அமையும்.

அவசரகாலச் சட்ட விதியினால் தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள், தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள், சந்தேகப் பிராணிகளாகப் பார்க்கின்றார்கள் என்று கூறிக்கொண்டே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அதனை மாதாந்தம் ஆதரித்து வாக்களிக்கின்றார்கள்.

பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டிலும் இப்படி இரட்டைவேடம் போட முயலக்கூடாது. அதிக பாதுகாப்பு நிதி என்பது தமிழர்களை அழித்து வடக்கு - கிழக்கை பொசுக்கத்தான் என்பதனை மனதார உணர்ந்தால் தமிழ் மக்கள் நலனையே முன்னிறுத்தினால், வேறு எந்தச் சளப்பல் காரணமும் கூறாது பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டை நிறைவேறாமல் தடுக்கச் செயற்பட வேண்டும்.

போர் நிறுத்தப்பட வேண்டும் என்று உரக்கப் பேசும் ஐக்கிய தேசியக் கட்சியிடம் தமது முயற்சிக்கு ஆதரவு தருமாறு தமிழ்க்கட்சிகள் கேட்கலாம். தேர்தல் காலம் நெருங்குவதால் அக்கட்சியும் இதனைப் பரிசீலனை செய்ய வாய்ப்புண்டு. தமிழர் நலனில் ஐக்கியதேசியக் கட்சிக்குள்ள உண்மையான அக்கறையைச் சோதிப்பதற்கு இது நல்ல சந்தர்ப்பமாகவும் அமையும் அல்லவா?

தமிழ்க்கட்சிகள் இதுவிடயத்தில் என்ன உத்தியைக் கையாளப்போகின்றன, எதனைச் சாதிக்கப்போகின்றன என்பதனைத் தமிழ் மக்கள் மிக உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள்! வெறும் அறிக்கைகளாலும், சளப்பல் காரணங்களாலும் தமிழ் மக்களை இம்முறை ஏமாற்றிவிடமுடியாது. இது தமிழ் மக்களின் உயிரோடு சம்பந்தப்பட்ட மிகவும் பாரதூரமான விவகாரம்.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனமொழி

## உங்கள் கவிதைகள்



பயங்கரத்தில் பாய்ந்துவரும்
படுபாவியே!... யார் நீ?
பூகம்பத்தில் புதையுண்டுபோன...
ரோட்சினின் கொளோஸஸ்-சிலையா?
புனிதன் யேசு புரிந்துரை செய்த
அந்தக்கால அழிவுக் கிறிஸ்துவா?
நம்புங்கள் நாராயணன் நம்பவைத்த
செய்தி கூறிய செவ்வாய் மனிதனா?
எரியும் பூமியை எரிக்க வந்திடும்
மிலேனியத்தின் மிலேச்சத் தெய்வமா?...

-செ.சுதர்சன்-
உடுப்பிட்டி.

மனிதா!
இயற்கையாலும் மேலாக
எனக்கு இடர் தந்தாய்...
என் இயல்புக்குப் பொறுத்தேன்...
இனியும் நீ விளையாடாதே – ஏன்
நானும் ஒரு வகையில் பெண்தானே...

-வ.சசிகுமார்-
சுன்னாகம் தெற்கு.

மலரும் புதிய நூற்றாண்டை
மகிழ்வுடன் வரவேற்க முடியாது
புதிய கல்விச் சீர்திருத்தமாய் - இங்கு
புறப்பட்டிருக்கும் சாத்தான்......
ஐயோ...! தினம் தினம் எம்மை எல்லாம்
கொல்லாமல் கொல்கின்றானே!

-தமிழ் மகள்-
மட்டுவில்.

அன்று~
சிவன் முப்புரத்தை எரிப்பதற்காக
கரத்தில் தீச்சுடரை ஏந்தி
சிவதாண்டவம் ஆடினான்
இன்று,
நீ எப்புரத்தை எரிப்பதற்காக
கரத்தில் தீச்சுடரை ஏந்தி
இத்தாண்டவம் ஆடுகின்றாய்?
எத்தாண்டவம் நீ ஆடினாலும்
உன் புகழ் பதிக்கப்படமாட்டாது
உன் கரத்தில் உள்ள பதிவேட்டில்.....

-பூ.சைத்திரி-

சுதந்திரமாய்ச் சிலையொன்று....
வயது வற்றிப் போனாலும்
வார்த்தை வரண்டு போனாலும்
ஒலிம்பிக் சாதனையாய்
உலகை எரித்ததுக்கொண்டு.
சுதந்திரமாய் – சிலையொன்று!

-சௌஜன்யா-

கையில் தீபமும் வேதமும்
காக்க அழிக்க பைகளும்
கொண்டு சுற்றும் முதியவர்
பாதை சண்டையா சமாதானமா?

-சா.அம்பிகை-
மீசாலை.

நடு நிசியில்
அக்கினி உன்னை
அடையாளம் காட்ட,
அக்கிரம குறிப்புக்களை
அணைத்தபடி–தேர்தல் திருவிழாவில்
அமர்க்களமாக
அம்மணியின் வருகையிது
தமிழா ஜாக்கிரதை!

-ப.அகிலநாயகி-
மீசாலை மேற்கு.

யார் யாரோ மோதுகிறார்கள்
நடந்தாலும் நடக்கும்
மூன்றாவது உலகப்போர்
வேண்டவே வேண்டாம்
நீ மூட்டி விடு தீயை
பொசுங்கட்டும் உலகம்

-எஸ்.நிஷா-
கரவெட்டி.

கடவுள் மனிதனைப் படைத்தான்
மனிதன் என்னைப் - படைத்தான்
என் பெயர்?
சொன்னதைச் சொன்னபடி - செய்யும்
நன்றியுள்ள 'அணுக்குண்டு'!

-வண்ணை க.பிரசாந்தன்-

மதங்களால் வந்து மூண்டதே போர்
தீயினில் வெந்து வழியுதே பார்.
விழிதனில் நாளும் வழியுதே நீர்.
வாழ்வினில் வந்து சேருமோ சீர்....?

-பொலிகையூர்சு.க.சிந்துதாசன்-

உலக வல்லூறே.
கலக நாயகரே
பைபிளையும் றைபிளையும்
பக்கத்தே கொண்டு
(பே)பாராட்சி செய்ததுவும் போதும்
உன் ஆயுத பூசைக்கு
ஆசியாவா பலிக்கடா?
பூமிப் பந்தின் புதல்வர்
நாமும் கூடத்தான்
புரிந்து கொண்டால் நலமுண்டாகும்
வறுமைத் தீயில் வாடும்மண்ணுக்கு
வாரி வழங்கினால் வரலாறு வாழ்த்தும்.

-இ.ஜெயக்குமார்-

அன்று
அமெரிக்காவின்
ஒளிவிளக்காய்
விளங்கிய
சுதந்திர தேவியின்
திருக்கோலம்
இன்று
உலகையே
எரிக்கின்ற
சாத்தானின்
அவதாரமாக
புதுக்கோலம்!

-ஜெயன்-
தென் அல்வாய்.

போர் அரக்கனின்
கைகளில் புனிதபூமி!
மனிதம் சாக....
மரணம் மலிய....
தொடரும் அவன்பயணம்!
எழுக சகோதரரே!
எம் நிலம் மீட்க!

-ச.சாரங்கா-
சங்கத்தானை.

ஆதிக்கக் கரத்திலெம்
அன்னை பூமி
சாதிக்கப் புறப்பட்டு
சதிவலையில் வீழ்ந்த
தம்பியரால் மிதிபட்டு
மீதியிருப்பதென்ன
ஒன்றுமில்லை சாமி!

-பண்ணாக நாரதன்-

உன்னைப்படைத்த - இந்த
உன்னத உலகை - நீ
ஊறு செய்து எரிக்கலாமோ?
வாழ விரும்பும் - மானிடத்தை
வழி தவறி நடக்க - நீ
வைக்கலாமோ?
பூமியை அழிக்க முயலும்
புதல்வனே இன்று யோசி!

-க.தயாளன்-
கைதடி கிழக்கு.

இது -
உலகக்கிண்ணமல்ல
உலகம் கிண்ணத்திற்குள்
அமெரிக்காவின் ஆதிக்கப்பிடியில்
உலகப்பந்து உருள்கிறது
ஊழித்தீயிது
ஒருவரும் தப்பமுடியாது!

-முல்லைப்பிரியன்-

அணிகளுக்கிடையே பந்தாட்டம் ஆரம்பமானால்
அதன் முடிவை சில நாள்களில் அறியமுடியும்
அணுஆயுத நாடுகள் ஒன்றையொன்று ஆக்கிரமித்தால்
யாருக்கு வெற்றி என்பதைப் பார்க்க யாரும் இருக்கமாட்டார்கள்.

-வி.பி.ஆர்.இராம்-
வல்லிபுரம்.

## மௌனமொழி - 55



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது. இதனை வரைந்தவர் அராலி மேற்கைச் சேர்ந்த எஸ்.வி.ரூபன்

தீயில் பழுத்த
தீர்வுச் சோதியைக்
கொண்டு ஆட்சி
என்று ஆச்சி
நடக்கின்ற அச்சா
நடையைப் பாருக்கோ!

-ஜோ.ஜெஸ்ரின்-
கொழும்புத்துறை.

இது!
ஆதிக்கக் கூண்டின்
அழுத்தங்களுக்குள்
அகப்பட்டுப்போன.....
ஐந்தறிவு ஜீவனின்
வாழ்வுப் போராட்டம்!
ஆற்றாமையின்
ஆர்ப்பரிப்பால்.....
விழித்தெழுந்து.....
உடைத்தெறிப்பட்ட
உணர்ச்சிப் பிரவகத்தின்
உச்ச..... களியாட்டம்!!!

-நா.சோபினி-

பிறக்கப் போகும்
புதிய நூற்றாண்டில்
நடக்கப் போகும்
அநீதிகளை
எதிர்வு கூறும்
நத்தார்த் தாத்தாவின்
உருவப் படம் இது.

-சிவராணி-
பெரிய அரசடி

ஓ! கடவுளே!
வேதாகமத்தை
பின்பற்றாதவர்கள்
எரியுண்டு அழிவார்கள்
என்பதை விளக்கவா
உன் கோலம்?

-கு.விஜயகுமார்-
சாவகச்சேரி.

உலக அதிசயமே!
உன்னை உருமாற்றிய
உத்தமன் யார்?
யுத்த யுகத்தை எரித்து
புதியதோர்
உலகம் செய்!

-ந.சிறீதரன்-
கிளிநொச்சி.

வல்லரசு வாணலியில்
வறுக்கப்படும்
வளர்முக தேசங்களே...!
வறுமை, போர்
வலிந்தெதிர்ந்தாலும்
வளையாதே....!
விடியட்டும் விழித்தெழு....!
விஷமத் தீயதில்
விட்டில்களாய்...
வீழ்ந்துயிர் துறவாதே....!!!

-கிராஞ்சியூரான்-

சுதந்திர சிலைக்குள்
இழையோடிய
தந்திர நரித்தனங்கள்!
ஐ.நா. ஊதுகுழலாக...
நீரோ நியதி நிரல்களாக...
கிரீன்பராட்டாக...
யுத்த வயகராவாக...!

-அம்பு-
கலாசாலை.

சுந்தர அமெரிக்காவின்
சுதந்திரத் தேவியிவள்-பிறர்
சுதந்திரம் சிதைவதற்காய்
சுமந்துவிட்டாள் தீப்பந்தம்!

-அனலையூர்ச் சேந்தன்-

தன்னை வெல்லாதவன்
உலகைக் கவனிக்கிறான்
தன்னை வென்றவனை
உலகம் கவனிக்கிறது.

-கதா-

சுற்றும் இந்த
யுத்த பூமியை
வெட்டிப் புதைக்க
இவ்வளவு பெரிய
கல்லறைக்கு - நான்
எங்கே போவது?
அதுதான் எரித்துக்
கொண்டிருக்கின்றேன்...!

-எம்.பிருந்தா-
கோண்டாவில்

ஒப்பற்ற உலகிதனை
ஒழித்துக்கட்ட
ஓலமிடும் துப்பாக்கிகள்
தவமிருக்க
மானுடத்தின் வரலாறும்
முடிந்துபோக,
மானுடத் தெய்வமே
தீச்சுடரேந்தி அழிக்கும்
துயர நிலையிது!

-எம்.சுயர்சன்-
கோண்டாவில்.

சுதந்திர சிலையே!
அக்கிரமங்கள்
மலிந்துபோன இவ்
உலகை அழித்து
அடுத்த நூற்றாண்டில்
சுதந்திரமான புதிய
சமுதாயத்தினைப்
படைக்கத்தானே
துணிந்துவிட்டாய்..?

-சி.என்.ஹெய்ன்ஸ்-
நவாலி வடக்கு.

வேதம் மனிதனைப் பேதமின்றிக்~
காக்கும்
என்ற வேதம் இன்று பல் மதமாய்
போலி மதவாதிகளின் சொல்பட்டு
தீச்செயலுற்று, கறைபட்டுப்போக
பாதியுலகம் மதத்தால் மறைய...
மீதியுலகம் போரால் பொசுங்கும்!

-பராங்கதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த விமானம்...

இரண்டாயிரம் ஆண்டு பிறக்கும்போது கணனிகளில் கோளாறு ஏற்படலாம் என்ற அச்சம் பலரையும் பீடித்து இருக்கிறது. அந்தச் சுபவேளையில் தமது நடவடிக்கைகள் பலவற்றையும் சஞ்சலத்துடன் நிறுத்தி வைக்கப் பல கம்பனிகள் தயாராகின்றன.

பல விமானச்சேவைகள் அன்று முன்ஏற்பாடாக இடைநிறுத்தப்படலாம். கணனிகளால் இயக்கப்படும் பல்வேறு துறைகளில் ஆழம் புரியாத பிரச்சினைகள் எதிர்பார்க்கப்படலாம்.

நான்கு இலக்கங்களில் ஆண்டைப் பதியும் கணனிகள் 9999 ஆண்டு முடிவடைந்து 10,000 ஆண்டு பிறக்கும் போதுதான் கோளாறுபண்ணத் தொடங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டு இலக்கங்களில் ஆண்டைக் குறித்துச் செயற்பட்ட ஏராளமான பழைய கணனிகள் '99' முடிவடைந்து '00' ஆக மாறும்போதுதான் இந்த 2000 பிரச்சினை வெடிக்க இருக்கிறது.

'00'ஐ இக் கணனிகள் 2000 என்று கருதுமா அல்லது 1900 மற்றும் 1000 என்று எதை நினைக்குமோ என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம்.

இத்தகைய கணனிகள் உலகின் எந்தெந்த நாடுகளின் மூலை முடுக்குகளில் எந்தெந்த நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகின்றனவோ என்பது தான் பிரச்சனை.

இவற்றோடு தொடர்புடைய புதிய கணனிகளும்கூட கோளாறு பண்ணக் கூடும். 2000 பிறந்து விடிந்துதான் விடயம் வெளிச்சத்துக்கு வரும்.

கணனிகளில் கோளாறு ஏற்படவேண்டின் அதற்கு 2000 வரைதான் காத்திருக்கவேண்டும் என்றில்லை. எப்போதும் கணனிகள் தவறுசெய்யக் காத்திருக்கின்றன அவற்றைக் கையாள்வதில் அவதானம் தேவை.

விமானி மோலியின் உத்தரவின் பேரில் கப்டன் பான்பி விமானத்தைத் தரையிறக்கத் தயாராகிறான். நான்கு தொகுதியானசில்லுகளையும்வெளியே கொண்டுவருவதற்கான கியா விசையை அழுத்தவும் திகில் மனதில் படர்கிறது.

கண்முன்னே பரந்துகிடக்கும் காட்டிக் கருவிகளின் தொகுதிகளில் குறிப்பிட்ட ஓர் இடத்தில் அவர்களின் கண்கள் குத்திநின்றன. நான்கு பச்சை ஒளிரல்களுக்குப் பதிலாக மூன்றே மூன்று பச்சை ஒளிரல்கள் - ஒன்று சிவப்பாகக் கண்ணைக் குத்தி நிற்கிறது.


இது கணனிக் கோளாறா? விமானக் கோளாறா? கணனிக் கோளாறாக இருந்துவிட்டால் போகிறது! சில்லுகள் நான்கும் வெளிப்பட்டுவிட்டால் போதும்

கும். தாம் பறந்துகொண்டிருக்கும் விமானம் தரையிறங்கத் தயாராகும்போது சில்லுகள் வெளிப்படுவதைக் கண்ணாடியூடாகக் கண்டு நிம்மதிப் பெருமூச்சு விடுபவர்கள் இருக்கிறார்கள். இவர்களும் விமானத்தின் வயிற்றுப் பகுதிச்

காட்டி நிற்கிறதே!

மோலி உத்தரவிட பான்பி மீண்டும் சில்லுகளை உள்வாங்கி வெளியே தள்ளும் விசையினை அழுத்தினான். மீண்டும் அந்த ஒரு சிவப்பு மின்னல் தான். அது மறைய மறுக்கிறது. விமானிகள் இருவரும் ஆளைஆள் பார்த்துக்கொண்டனர். விழிகள் மௌன மொழி பேசின.

இன்னமும் 2000 ஆண்டு பிறக்கவில்லை. அதற்கிடையில் கணனிகள் கோளாறு பண்ணுமா? அன்றோ 1997 நவம்பர் 5ஆம் திகதி. மாலை மூன்று மணியைக் கடந்து சில நிமிடங்களே




சில்லுகளைப் பார்க்கமுடிவதில்லை.

சில்லுகள் ஏதாவது காரணத்தால் வெளிப்படத் தவறினால் விமானத்தைத் தரையிறக்குவது ஒன்றும் இலகுவான காரியம்அல்ல. பலநூறுமைல் வேகத்தில் ஓடு பாதையினை முத்தமிடத் தாழப் பதிந்துவரும் விமானத்தின் வேகத்துக்கு ஈடுகொடுத்து அதன் சில்லுகள்தான் தரையைத் தொடுகின்றன. அக்கணம் கிளம்பும் புழுதிப்புகை மண்டலம், உரசல் ஒலி, உந்தல் எல்லாம் விமானம் தரையைத் தொடும் போதுதான் அதன் வேகத்தை உணர வைக்கும்.

இந்த நிலைமையில் சில்லுகள் வெளிப்பட மறுத்து. விமானத்தின்

ஆகின்றன.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸில் இருந்து லண்டனின் ஹீத்றோ (Heathrow) விமான நிலையத்தை நோக்கிய 11மணி நேரப் பயணம் முடிவடையும் தறுவாய் அது! அத்திலாந்திக் சமுத்திரத்தின் மேலாக எந்த ஆட்ட அசைவும் இன்றி லாவகமாகப் பறந்து வந்தது அந்த எயர் பஸ் விமானம்.

சிவப்பு நிறமான வாற்செட்டையைக்கொண்ட அந்த வெண்ணிற விமானத்தில் 98 பயணிகள் இருந்தார்கள். அவர்களைவிட 16 விமானப் பணியாட்களும் இருந்தனர்.

தரையிறங்கி நெருங்கிவந்த விமானம் மீண்டும் உயரக் கிளம்பியதும் - அதன் உறுமல் ஏதோ பாதகமாகப் பட்டது பலருக்கும். இருபத்தைந்து நிமிடங்கள் வட்டமடித்துக் களைத்துப் போன விமானிகள் - கட்டுப்பாட்டுக் கோபுரத்தை நெருங்கியபடி விமானத்தைப் பறக்கவிட்டனர்.

சில்லுகளின் ஒருதொகுதி வெளிப்பட மறுத்தமையை கட்டுப்பாட்டுக் கோபுர கண்காணிப்பாளர்கள் உறுதி செய்தனர். கணனிகள் சரியான தகவலையே காட்டி நிற்கின்றன. இப்போது பிரச்சினை சிக்கலானதுதான் என்பது உறுதியாகிவிட்டது. இடதுபக்கச் சில்லுகள் தமது உறைவிடத்திலிருந்து வெளிப்படவில்லை.

எரிபொருள் நிலைமை இனி அதிகம் தாக்குபிடிக்காது. விமானத்தை உலுப்பி உயர்த்திப் பதித்தோ, ஒழுங்கான சில்லுகளை ஓடுபாதையில் சடாரென உரச வைத்தோ வெளிவர மறுக்கும் சில்லுகளை புவியீர்ப்பின் இழுவையால் வெளிக்கொணர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இருக்கைப் பட்டிகளுடன் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டுவிட்ட பயணிகள் இந்தகைய உலுப்பல்களினால் உயிரையே விட்டுக்கொண்டனர். ஆனால் சில்லுகள் மட்டும் வெளிப்படவேயில்லை.

அவை வெளிப்படத் தேவையான எலக்ட்ரோனிக் உத்தரவுகள் கொடுபடவில்லையா? அல்லது உத்தரவை ஏற்றுச் செயற்பட அவற்றின் பொறிமுறை பிசகிவிட்டதா?

ஆராய நேரம் அதுவல்ல. விமானத்தை உரசித் தரையிறக்க விமானிகள் அனுமதி கேட்டனர்.

கோரத்தை எதிர்கொள்ள உலகின் பிரபல்ய விமானத் தளமொன்று தயாரானது. ஓடுபாதையில் புறப்படத் தயாரான விமானங்கள் தூர விலக்கப்பட்டன. வந்துகொண்டிருந்த விமானங்கள் வேறு தளங்களுக்குத் திசைதிருப்பப்பட்டன.

ஓடுபாதை நெடுகிலும் - இரண்டரை மைல் நீளத்திற்கும் - ஆங்காங்கே தீயணைப்பு இயந்திரங்கள் தயாராகிவிட்டன. ஏன் வைத்திய சாலைகள் கூட தயாராகி விடும்படி உத்தரவுகள் போடப்பட்டன. அம்புலன்ஸுகள் ஆயத்தமாகிவிட்டன.

ஓடுபாதை தெளிவாகவும் விசாலமாகவும் இருந்தது. அங்கே எந்தத் தடங்கலும் இல்லை. எங்கும் பரபரப்பு. என்றால் விமானத்துள் இருப்பவர்களின் மனநிலை எப்படி இருக்கும்?

பயணிகளைப் போலியாகச் சமாதானப் படுத்துவதில் விமானப் பணியாள்கள் தீவிரமாக இறங்கி இருந்தனர். எதையும் ஏற்கும் நிலமையில் பயணிகள் மனது இல்லை.

விமானிகளாலும் வல்லுநர்களாலும் சமாளிக்க முடியாத சிக்கல் எழும்போது வெறும் வார்த்தைகள் என்ன ஆறுதலைத் தர இயலும்?

வது இருப்பின் மனிதநேய உதவிகளுக்கு அவர்கள் தம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ளல் வேண்டுமென்ற அறிவிப்பும் பதற்றத்தை மேலும் அதிகமாக்கியது.

தான், தான் தப்ப வழியுண்டோ தெரியாது என்ற நிலைமையிலும் கடமை அழைக்கிறது.

நேரமோ 4.19 ஆகியிருந்தது. வட்டமடிக்கத் தொடங்கி ஒரு மணி நேரம் கழிந்துவிட்டது. ஓடுபாதை இலக்கம் 27இல் உரசித் தரையிறங்க அனுமதி வழங்கப்படுகிறது. விமானத்தைப் படம் பிடிக்கக் காத்திருக்கும் பல்வேறுசெய்தியாளர்கள், அடுத்தடுத்த பறப்புகளுக்கென வந்திருந்த பயணிகள் எனக் கூட்டம் அலைமோதியது.

கடுமையான - கண்டிப்பான - உத்தரவுகள் பிறப்பிக்கப்பட பயணிகள் காற்றுத் தலையணைகளில் முகம் புதைத்து கைகளால் தலைக்கு முட்டுக் கொடுத்தபடி - இதயம் அசுர வேகத்தில் அடிக்கக் - காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டனர்.

கடந்த ஒரு மணி நேரமாகப் புயலாக மாறிவிட்ட பதினொருமணி பயணம் பதற்றத்தின் உச்சத்தில் அவர்களை நிறுத்தியிருந்தது.

பிரமாண்டமான பறவை ஒன்று ஒற்றைக்காலில் தரையைத் தொட வருவது போன்ற காட்சி. அந்த ஒற்றைச் சக்கரத் தொகுதி விமானத்தின் முழுப் பாரத்தையும் தாங்கித்தரையிறங்குமா? சமநிலை பேணப்படுமா?

## மு.சிவநேசன்

அந்த 150 தொன் எடை ஒற்றைச் சக்கரத் தொகுதியினூடாகத் தரையைத் தொடவும், விமானத்தின் வேகம் தணிய மறுத்து அது சாகசம் காட்டிற்று. விமானியின் மன உறுதி விமானத்தை ஓடுபாதை நெடுகிலும் சறுக்க விடவும் அதன் எஞ்சின் புட்டிகள் கொங்கிரீட் தரையைத் தழுவலாயின. சாணைக்கல்லில் பிடிக்கப்படும் கத்தி போலானது விமானம். உரசல் உச்சம் காணவும் வாணவேடிக்கைக் கோலம் போட்டது அதன் வயிறு.

தற்போது மூக்கு நுனிச் சக்கரங்களை வெளிப்படுத்தினான் விமானி. விமானத்தைக் கலைக்கும் தீயணைப்பு இயந்திரங்களை விமானத்திலிருந்து கிழிந்து பொரிந்துவரும் உலோகத் துண்டுகள் பதம்பார்த்தன.

ரயர்கள் தீப்பிடித்து றிம் உலோகத் தகடாகி வளைய விமானம் பெரும்பாடுபட்டு ஓய்வுக்கு வந்தது. தீயணைப்பு எந்திரங்கள் நுரையைப் பீய்ச்சின. அனால் அங்கே தீ என்று ஏதும் பெரிதாக இல்லை.

கணப்பொழுதில் பயணிகள் அவசர அவசரமாக வெளியேற்றப்படத் தொடங்கினர். எவருக்கும் ஏதும் ஆகவில்லை.

## பாதுகாப்பாக

உலோக வயிறுதான் தரையைத் தேய்த்து இறங்கவேண்டிய நிலமை எழுந்தால் நிலைமை என்னாகும்? தீப்பொறி மின்னி வெடிக்கும்; உரசல் உச்சம் காணும்; விமானம் பொசுங்கிப்போகும்.

கற்பனையிலும் சிந்திக்கமுடியாத பயங்கரம் இது. வானத்தில் விமானத்தில் இருந்து அந்தரத்தில் தவிப்பது பட்டுப்பார்க்காமலே புரியும். இத்தகைய காலகட்டங்களில் விமானிகளின் பணி மிகவும் இக்கட்டாக அமைகிறது.

பயணிகளைப் பதறாமல் பார்த்துக் கொள்ளுவது, அதேவேளை முற்றிலும் நிலைமையை மறைக்காது அவர்களைத் தயார்ப்படுத்துவது போன்ற பாரிய பொறுப்புக்கள் அப்போது விமா

கிலாரி என்ற விமானப் பணிப்பெண் அன்று மிகவும் உற்சாகமாக இருந்தாள். அவளது தாயும் தகப்பனும் அந்த விமானத்தில் இருந்ததே அவளின் உற்சாகத்துக்குக் காரணம்.

போதாது என்று கப்டன் விடுத்த அழைப்பொன்று அவளை இரட்டிப்பு மகிழ்ச்சியில் ஆழ்த்தி இருந்தது. விமானம் தரையிறங்கும் காட்சியை - அது ஓடுபாதையை நோக்கி தாழப் பதிந்து வரும் லாவகத்தை - விமானி அறையில் இருந்து பார்க்க அவளது தகப்பன் ஜோன்ஸை அழைத்தான் கப்டன்.

அவனும் குஷியாக வந்து விமானி அறைக்குள் குந்திக்கொண்ட வேளையில்தான் பரிதாபம் இந்தச் சிவப்புச் சமிக்ஞைப் பிரச்சினை எழுந்தது.

அழைப்புவிடுத்தவர்கள ஜோன்ஸை இருக்கைக்குத் திரும்புமாறு மறுகணமே வேண்டிக்கொண்டனர். இந்த விமானத்தில் பெற்றோரை ஏன் ஏற்றி வந்தோம் எனத் தவித்தாள் கிலாரி.

750அடிவரை தாழப்பதிந்து விமான நிலையத்தை நெருங்கிவிட்ட விமானத்தை மீண்டும் உயரக் கிளப்பினான் பான்பி. அது மீண்டும் முகில் கூட்டங்களிடையே புகுந்து கொண்டது.

எலக்ட்ரோனிக் சாதனங்களில் ஏதாவது தவறு இருக்கலாம் என்று கருதி விமானி மத்தீசன் வெவ்வேறு கருவிகளைத் துளாவத் தொடங்கினான். ஏனைய இரு விமானிகளும் சில்லுகளை உள்ளெடுப்பதும் வெளியேற்றுவதுமான முயற்சிகளில் மீண்டும் மீண்டும் இறங்கினர்.

பாரிய சில்லுத்தொகுதிகள் வெளிப்படும்போதும் உள்வாங்கப்படும் போதும் அந்த உந்தல்களை விமானத்தில் இருப்பவர்களால் உணரமுடிகிறது. ஏதாவது கொழுவுப்பட்டிருப்பின் அதை விடுவிக்கும் முயற்சியில் மீண்டும் மீண்டும் விமானிகள் போராடத் தொடங்கினர். பயணிகள் மத்தியில் பீதிபடரத் தொடங்கியது.



உயிர் மீண்டபின் தாய், தந்தையுடன் கிலாரி.

தரையிறக்கிவிடலாம் என நினைத்தார்கள் விமானிகள்.

கணனிகளைவிட விமானத்தின் மீது நம்பிக்கை அதிகம் இருந்தது அவர்களுக்கு. ஆனால் எட்டிப்பார்த்து உறுதிசெய்ய இயலாத நிலைமை. உள்ளே இருந்து பார்க்கும்போது வயிற்றுச் சில்லுகள் தெரிவதில்லை.

விமானப் பயணிகளுக்கோ பல ஏக்கங்கள் சமயத்தில் வந்துவிடுவது இயற்கை. அவற்றைப் பற்றிய அறிவு அதிகம் இன்றிச் சிவனே என்று ஏறி இறங்கிப் போய்விடுபவர்கள் அதிகம் மூளையைக் குழப்பிக்கொள்ள மாட்டார்கள்.

சற்றுத் தொழில்நுட்பம் விளங்கிக் கொண்டால் சிக்கல்கள் பெரிதாகத் தென்படும். விடுவிக்க இயலாதவற்றுக்கெல்லாம் மனது விடைகாணத் துடிக்

னிகளிடம் வந்துவிடும்.

பரசூட்டில் பாய்ந்து தப்பிக்காமல் - தமதுயிரைத்துச்சமென மதித்து பதறாமல் - அவர்கள் செயற்பட வேண்டிய ஆபத்தான கட்டங்கள் ஏற்பட்டு விடுகின்றன.

இப்போது வாய்த்திருப்பதும் அப்படியான ஒரு நிலைமைதான். விமானத்தின் சில்லுகளில் ஒரு தொகுதி வெளிப்பட மறுக்கிறதா? அதை நம்பவோ, ஏற்கவோ விமானிகளின் மன நிலை தயாரில்லை. எலக்ட்ரோனிக் சாதனங்கள் குளறுபடி பண்ணக் கூடியவை. சில்லுகள் வெளிப்பட்டே இருக்கவேண்டும். அந்த நிலைமையை இந்தக் காட்டி ஏன் தெளிவுபடக் காட்ட மறுக்கிறது?

சிவப்பு நிறம் மறைந்து பச்சை நிறம் வர வேண்டும்! [illegible] ருக்க அந்தப் பச்சைநிறம் 'பாச்சா'

## தரையிறங்குமா?

என்றாலும் தமது முகத்தைக் கலவரமின்றிக் கலகலப்பாக வைத்துக் கொள்ள முயன்றனர் பணிப்பெண்கள்.

விமானிகள் ஆளை ஆள் பார்க்கும் பார்வைகளிலேயே தீப்பொறி கிளம்புவது போன்ற உணர்வு. பதற்றம் இன்றிப் பாரத்தைத் தரையிறக்க வழியேது?

தரையிறக்கத்தான் போகிறோம். வேகமாக வரும் விமானத்தின் வயிற்றுப்பாகம் தரையை உரசிப் பார்க்கும் கணம் நெருங்கிக்கொள்கிறது. பயணிகள் பாதுகாப்புப் பற்றிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. அவசரகால கதவுகள் மீது அவர்களின் கண்கள் பாய்ந்து கொண்டன. ஆனால் இன்னமும் உடல் இருக்கைகளில்தான்.

பயணிகளில் தீயணைப்பு படையினர், பொலிஸார், விமானப்படையினர், வைத்தியர்கள் என்றெல்லாம் எவரா

புன்னகை பூத்த முகத்தினராய் வெளிப்பட்ட விமானிகளின் சாதனை பாராட்டுக்குரியது. சக்கரங்கள் சரிவர வெளிப்படாத நிலைமையில் - பிரேக்குகளைப் பிரயோகிக்கும் உத்தரவுகளை கணனிகள் ஏற்கமறுத்த நிலைமையில் - கணனிக் கோளாறுகளை மிஞ்சி மனத்திடத்துடன் அவர்கள் செயற்பட்டு இருந்தனர்.

மீண்டும் ஒருமாத காலத்தின் பின் அந்த விமானம் பயணிகள் சேவைக்குப் புறப்பட்டுப் பறந்துபோயிற்று.

இத்தகையோரின் மன உறுதியை நம்பினால் 2000ஆண்டு பிறக்கும் போதும் விமானத்தில் பறந்துகொண்டிருக்கலாம்.

விமானிகள் கலகலப்பாகவும் கம்பீரமாகவும் விமானத்தில் ஏறும் காட்சி பயணிகளைத் தெம்பூட்டி விடுகிறது. கோளாறு காணாதவரை பயணம் உல்லாசமே. *

## குறள் வெள்ளம்

ஒழுங்கான வழியில் சம்பாதிக்கத் தெரியாதவனே அடுத்தவன் செல்வத்தைக் கண்டு பொறாமைப்படுகிறான். இப்படிப் பொறாமையையே மூலதனமாகக் கொண்டு அவன் எந்தத் தொழிலைச் செய்தாலும் அது நட்டமாகவே முடியும்.

பொறாமை (அழுக்காறு) ஆளை உருப்படவிடாது. ஆக்கத்தை அது சாணேற முழம் சறுக்க வைப்பது போலவே இந்த ஒழுக்கமும் கெடும்போது அதுவும் ஆளை உயர்ச்சி அடைய விடமாட்டாது.

பெற்ற [illegible] தலைகுனிவைத் தேடித் தருவது ஒழுக்கக் குறைவுதான். கற்ற கல்வியை அடுத்தவர் பழிக்கவைப்பதும் இந்த ஒழுக்கத் தவறுதான்.

யானைபோல் மிடுக்குடனே உலாவருபவரின் அடி எங்கே சறுக்கும், எதிலே சறுக்கும் என்று பழி சொல்லக் காத்திருக்கும் பொல்லாத உலகம் இது

அவர்களின் சொல்லுக்கு இரையாகி விடாமல் எள்ளவும் தவறாமல் வாழ்ந்து விடவேண்டியது பண்பாளன் கடமை. தப்பினால் தாழ்வு தான் எஞ்சும் என்பதை வள்ளுவர்தான் சொல்லித்தரல் வேண்டும் என்றில்லை.

**அழுக்கா றுடையான்கண் ஆக்கம் போன்று இல்லை**
**ஒழுக்கம் இலான்கண் உயர்வு.** - 0135

ஒழுக்கமுடைமை

- அம்பிகைபாகன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தளை

அக்காவுக்கு கல்யாண வீடுநடக்கும்போது எனக்கு பள்ளிக்கூடம லீவுவிட்டிருந்தது. பாலர் வகுப்பு. கடைசித்தவணை. பள்ளிக்கூடம் தொடங்கிய பிறகு கல்யாண வீடு நடந்திருக்கலாமென்றிருந்தது. மேலும் ஒருகிழமை பள்ளிக்கூடம் போகாமல் நின்றிருக்கலாம்.

அத்தானை எனக்கு முதல் பார்வையிலேயே பிடித்துவிட்டது. அவருடைய முதல் புன்னகை மறக்க முடியாத ஒரு கவிதையைப்போல மனசிலை பதிந்துவிட்டது. எதிரில் இருப்போரையும் முகம் மலரச்செய்யும் அற்புதம் அந்தப்புன்னகையில் இருந்தது. அந்தக் கறுப்பு முகமும், அடர்ந்த மீசையும், அந்தப் புன்னகைக்குத்தான பொருத்தமானவை என்று தோன்றியது.

ஒருநாள் விளையாடிய களைப்பில், தண்ணி குடிக்காலமெண்டு வீட்டுக்குள்ள அவசரமாக வந்தபோதுதான் வீட்டுக்கு ஆக்கள் வந்திருப்பது தெரிந்தது. வெளியாலை ஒரு



காரும் நிண்டது. விறாந்தையின் மூலையில் நின்றுகொண்டிருந்த அம்மாதான் என்னை அவசரமாக குசினுக்குள்ளை கூட்டிக்கொண்டுபோனா.

"அக்காவை பொம்பிளை பார்க்க வந்திருக்கினம். முகத்தைக் கழுவிப் போட்டு உடுப்பை மாத்திக்கொண்டு வாடா" எண்டா.

"அக்காச்சி எங்கை?" என்றேன்.

"அறைக்குள்ளே வெளிக்கிடுறாள்" எண்டா.

நான் தண்ணி குடிக்கவில்லை. அறைக்குள் ஓடினேன்.

அக்கா வெளிக்கிட்டு நிண்டா. அம்மாவின்ரை சாறி ஒன்றைத்தான் கட்டியிருந்தா. கரும் பச்சையிலை சரிகை போடர் போட்டது. அம்மா கல்யாண வீடு, கோயில் எண்டு கட்டிற சாறி. அக்காவுக்கு நல்ல வடிவா இருந்தது. அக்காவிடம் எல்லாவற்றிலும் எனக்கு பிடித்தமான விசயம் பெரிதாகவும் இல்லாமல் சிறிதாகவும் இல்லாமல், அக்கா வைக்கும் சிரட்டைப் பொட்டு. ஏதோ அக்காவையும் என்னையும் அந்தச் சிரட்டைப் பொட்டுத்தான் இணைத்து வைத்திருக்கிற மாதிரி. அன்று அந்தச் சிரட்டைப் பொட்டுக்கு மேலும் களைசேர்த்தது போலிருந்தது.

அக்காவிடம் எப்பவுமே ரெண்டு, மூண்டு சிரட்டையிலை பொட்டு இருக்கும். அக்கா அனேகமாக ஒரு மந்தாரமான பின்னேர வேளைகளில் தான் வீட்டுக்குப் பின்னாலை கல்லு வைச்சு அடுப்பு மூட்டி, ஒரு பழைய சட்டியிலை, அரிசி மாக்கட்டை, செவ்வரத்தம்பூ, மருதோண்டி எல்லாம் போட்டு பொட்டுக் காச்சும். பொட்டு திரண்டு கறுப்பாக வருவதைப் பார்க்க சுவாரஸ்யமாக இருக்கும். நான்தான் நிறைய செவ்வரத்தம்பூவும், மருதோண்டியும் அக்காவுக்குப் பிடுங்கிக்குடுப்பன். அக்கா, அப்பா சீவிக் கொடுத்த சிரட்டையிலை பொட்டை வடிச்சு ஊத்தி கிணத்துக் கட்டிலை காயவைக்கும். நான் ஒவ்வொரு நாளும் அடிக்கடி சிரட்டை மையத்தில் படலமிட்டிருக்கும் பொட்டைத் தொட்டுப் பார்த்துக் கொள்வேன். அது ஒவ்வொரு நாளும் வத்திக்கொண்டு போவதைப் பார்க்க ஆனந்தமாக இருக்கும்.

"மாப்பிளையைப் பாத்தனியேடா?" அக்காதான் கேட்டா.

"நீ பாத்தனியோ?" என்றேன்.

"இல்லை" என்ற பதிலில் ஒரு வெட்கம் கலந்திருந்தது.

எனக்கு முகத்தைத் துடைச்சு, பவுடர்போட்டு தலையிழுத்து சேட்டும் போட்டுவிட்டு போய்ப் பாக்கச் சொன்னா. இயல்பாகவே கூச்ச சுபாவமுள்ள எனக்கு எப்படி அவ்வளவு பேருக்கு முன்னால் மாப்பிளையைப் பார்ப்பது என்றிருந்தது. மெதுவாக அம்மாவுக்குப் பின்னால் போய் நின்று கொண்டேன். அம்மாவின் சீலையைப் பிடிச்சுக்கொண்டு மெதுவாக எட்டிப் பார்த்தன். என் முதல் பார்வையில் பட்டதே அத்தான்தான். அப்போதுதான் அவருடைய முதல் புன்னகையைச் சந்திக்க நேர்ந்தது. முதல் பார்வையிலேயே அவர்தான் மாப்பிளை என்று எப்படித் தீர்மானித்துககொண்டேன என்று தெரியவில்லை.

அத்தானின் புன்னகை என்னுள்ளும் தொற்றிக் கொண்டது. அவர் என்னைத் தன்னிடம் கூப்பிட்டார். அவருடைய புன்னகையில் என்னுடைய கூச்சமெல்லாம் எங்கு போனதோ, அவர் கூப்பிட்ட உடனேயே அவரிடம் சென்று விட்டேன். "உங்களுக்கு என்ன பேர்? எங்கை படிக்கிறனீங்கள்? எத்தினையாம வகுப்பு?" போன்ற சம்பிரதாயமான விசாரிப்புக்கள் கூட மனசைத் தொடுவது போலிருந்தன.

கல்யாண வீட்டிலை நான்தான் மாப்பிளைத் தோழன். அக்காவுக்கு ஒரேயொரு தம்பியாயிற்றே. நான் பட்டு வேட்டிதான் கட்டி இருந்தேன். அதை கழட்டிப்போட்டு எப்ப காற்சட்டையோடை நிற்பேன் என்றிருந்தது எனக்கு. மாப்பிளை வரவேற்பின் போது, நான் அத்தானின் கால்களைக் கழுவி நிமிர்ந்தபோது, அவர் என்னை மெதுவாகத் தூக்கி, தன்னுடைய பொக்கற்றில் இருந்த மோதிரத்தை எடுத்து என் கையில் போட்டு சொக்கையிலை கொஞ்சினார். அது இப்பவும் ஈரம் காயாத மாதிரி இருக்கு. அப்போதும் அவருடைய முகத்தில் அந்தப் புன்னகை நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

கல்யாண வீடு முடிஞ்சு ரெண்டு நாள்கள் அக்காவும் அத்தானும் அத்தான் வீட்டிலைதான் இருந்தார்கள். நானும் அங்கைதான் நிக்க வேணும் எண்டு எவ்வளவு கெஞ்சியும், அம்மா அனுமதிக்கவில்லை. அத்தான் கூட என்னை அங்கை நிக்கச்சொன்னார். அம்மாதான் ஏதோ சொல்லி சமாளிச்சு என்னை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வந்தா. எனக்கு அம்மாவிலை ஆத்திரமாக இருந்தது. அக்கா, அங்கை நிற்கச்சொல்லி சொல்லாதது எனக்குக் கவலையாக இருந்தது. அந்த ரெண்டு நாள்களும் எனக்கு வீட்டிலை இருக்க என்னவோ போல இருந்தது. வீட்டிலை இருந்த பலகாரங்களைக் கூடச் சாப்பிட மனமிருக்கவில்லை.

அக்காவும் அத்தானும் வீட்டுக்கு வந்தபோது அக்காவின் முகத்தைக் கவனித்தேன். அக்காவின் முகத்தில் ஏதோ ஒரு சோபை கூடி இருந்தது போல இருந்தது. அக்காவின் முகத்தில் பெரிதாகவும் இல்லாமல், சிறிதாகவும் இல்லாமல் இருந்த குங்குமப் பொட்டுதான் மனசை என்னவோ செய்தது. அதை அழிச்சுப் போட்டு ஒரு சிரட்டைப் பொட்டை வைக்கலாமோ என்றிருந்தது. அக்கா என்னிலை இருந்து விலகிப்போனது போல் இருந்தது.

அதுநாள் வரைக்கும் அக்காதான் எனக்கு அம்மா மாதிரி இருந்தா. அக்காவுக்கும் எனக்கும் பதினெட்டு வருஷம் வித்தியாசம். எனக்கு குளிக்கவார்ப்பதில இருந்து, பள்ளிக்கூடம் வெளிக்கிடுத்துவது, சோறு தீத்துவது வரை எல்லாமே அக்காதான் செய்து விடுவா. அக்காவைத் தவிர வேறொருவர் இதையெல்லாம் செய்வதற்கு நான் சம்மதிக்கமாட்டேன். எனக்கு அக்காதான் எல்லாம் செய்துவிட வேண்டும். அந்த ஒரு கொஞ்சநேரத்தில் எப்படி அக்காவிடம் இருந்து விலக முடிந்தது என்று தெரியவில்லை.

அக்கா வந்த உடனேயேஎன்னிடம்தான் வந்தா.

"ஏன்ரா கதைக்கிறாயில்லை என்னோடை கோபமே?"எண்டா. எனக்கு, அப்படிக் கேட்டதே பிடிக்காத மாதிரி இருந்தது. "இல்லை" என்று சிரிக்க முயன்றேன்.

"நீ வைச்சிருக்கிற சிரட்டைப் பொட்டுகளை சித்திற்றைக் குடுக் கட்டே"

இதை அக்காவிடம் நான் கேட்ட போது என்முகம் இறுகிப்போயிருந்தது. சித்திக்கு அப்போதுதான் குழந்தை ஒன்று பிறந்திருந்தது.

அக்காவின் முகம் ஒரு கணம் சலனமற்றுப் போனது.

"வேண்டாமடா" என்று சொல்லி என் தலையைத் தடவியபோது, அக்காவின் முகத்தில் வெட்கம் கலந்த சிரிப்பொன்று இருந்தது.

அத்தான் வந்து ரெண்டு நாள்களிலேயே அக்காவிடம் இருந்த பாசமெல்லாம், அத்தானிடம் தொற்றிக் கொண்டு விட்டது. கல்யாண வீடு முடிஞ்சு வீட்டுக்கு வந்த அந்த முதல்நாளே, அத்தான் என்னை தூக்கி எறிஞ்சு பிடிச்சது எனக்கு புது அனுபவமாக இருந்தது. அம்மாவும் அக்காவும் தான் பயந்து போச்சினம்.

அத்தான் வந்து அடுத்த நாள் என்னைக் கேட்டார் "நீ என்னை என்னண்டடா கூப்பிடப்போறாய்?"

"உங்களுக்கு என்ன பெயர்" என்றேன்.

"அத்தான்" என்றார்.

நான் 'அத்தான்' என்று அவரை பெயர் சொல்லிக் கூப்பிட்டும் அம்மாவோ அப்பாவோ என்னை ஏசாதது எனக்கு அப்போது அதிசயமாக இருந்தது.

அத்தானும் அக்காவும் ஒரு கிழமைதான் வீட்டிலை இருந்திச்சினம். அதுக்குப் பிறகு அத்தான் படிப்பிக்கிற பள்ளிக்கூடத்துக்கு பக்கத்திலேயே வீடெடுத்துப் போயிட்டினம். அத்தான் வீட்டில இருந்த ஒரு கிழமையும் மறக்கமுடியாதது.

எங்கடை வீட்டுக்கு முன்னாலை இருந்த மாங்கொப்பிலை, அத்தான் ஏறி ஓர் ஊஞ்சல் கட்டிவிட்டார். கல்யாணம் முடிச்சப் பிறகும் அவர் மாமரத்திலை ஏறி ஊஞ்சல் கட்டினது எனக்கு அதிசயமாக இருந்தது. ஊஞ்சல்லை என்னை வைத்து பின்னேர வேளைகளில் நெஞ்சிலை குளிருகிற மாதிரி, வேகமாக ஆட்டி விடுவார். எனக்குத் திகிலாக இருக்கும். அக்காதான் பயந்து போகும் பாவம். காலை வேளைகளில் அத்தான் என்னை சந்தைக்கோ கடற்கரைக்கோ கூட்டிக்கொண்டு போவார். அப்போதுதான் முதல்முறை சந்தைக்கும் கடற்கரைக்கும் போனது. அது எனக்கு புதுஅனுபவமாக இருந்தது.

அக்காவும் அத்தானும் வீ[illegible]னாப்பிறகு எனக்கும் பள்ளிக்கூடம் தொடங்கிவிட்டது. எனக்கு எப்போது சனி, ஞாயிறு வரும் என்று இருக்கும். சனி ஞாயிறுகளில் அக்கா வீட்டை போகலாம். அத்தான்தான் வந்து கூட்டிக்கொண்டு போவார். அந்த நாள்களில் அத்தான்தான் எனக்கு குளிக்கவார்த்து விடுவார். சில சமயங்களில் சோறு கூட தீத்தி விடுவார். எனக்கு அக்காவின் கையால் சாப்பிடுவதை விட அத்தானின் கையால் சாப்பிடுவது விருப்பமாக இருந்தது.

அந்த சனி, ஞாயிறுகளில் அத்தான் ஏதாவது ஒரு தியேட்டருக்கு படம் பார்க்கக் கூட்டிக்கொண்டு போவார். நான், அக்கா, அத்தான் மூண்டு பேரும் போவம். எனக்கு என்ன படம் பார்த்தேன் என்று நினைவில்லை. என்றாலும் தியேட்டரின் இருண்ட, ரம்மியமான சூழ்நிலை மட்டும் அத்தானைப் போலவே மனசிலை பதிஞ்சுபோச்சு.

அக்காவுக்கு கல்யாணவீடு முடிஞ்சு ஒரு மூண்டுமாதம் கழித்த பிறகு ஒரு நாள் வெள்ளிக்கிழமை பின்னேரம்நான் வெளிக்கிட்டு அத்தானின் வருகைக்கு காத்திருந்தபோது அக்கா வீட்டுக்கு வந்தா. நடந்து தான் வந்தா. முகம் களைச்சுப்போய் இருந்தது. கையிலை ஒரு சூட்கேஸும் இருந்தது. அக்காவுக்கு அப்பா வாங்கிக் கொடுத்த சூட்கேஸ். அப்ப அம்மாவோ,அப்பாவோ வீட்டில இருக்கவில்லை. "அத்தான் எங்கை?" என்றேன்.

"அவர் இனி வரமாட்டார்" என்று சொல்லிக்கொண்டே அறைக்குள்ளை போட்டா. அங்கை காலிலை முகம் புதைச்சு குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கீற்றா. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நான் அழுதால் அவ எனக்கு எவ்வளவு கதையெல்லாம் சொல்லித்தேற்றுவா. எனக்கு மட்டும் ஒன்றும் செய்ய முடியாதது கவலையாக இருந்தது.

அம்மா வந்தவுடன். நான்தான் அம்மாவிடம் நடந்ததைச் சொன்னேன். அம்மாவின் முகம் குழம்பிப் போனது மாதிரி இருந்தது. "என்ன பிரச்சினை?" எண்டு அம்மா எவ்வளவு கேட்டும் அக்கா ஒண்டும் சொல்லவில்லை. அம்மாவின்ரை மடியிலை படுத்து அழத்தொடங்கீற்றா. எனக்கு அத்தானிலைதான் ஆத்திரமாக இருந்தது. அப்பா, அத்தானோடை கதைக்கப் போவதாக வெளிக்கிட்டார். அக்காதான் "அவரோடை ஒண்டும் கதைக்க வேண்டாம்" எண்டு தடுத்துப்போட்டா.

இரவு நான் அக்காவுடன்தான் நித்திரை கொண்டேன். இரவு நான் விழித்த நேரங்களிலை அக்காவின் விசும்பல் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. இனிமேல் அக்கா அத்தானுடன் ஒருபோதும் கதைக்கா விட்டால் நல்லது என்று தோன்றியது. நானும் இனிக் கதைக்க மாட்டேன் என்று தீர்மானித்துக் கொண்டேன். விடிய நான் எழும்பும்போது அக்கா நல்ல நித்திரை கொண்டுகொண்டிருந்தா. நான் அத்தான் எனக்குப் போட்டுவிட்ட மோதிரத்தை கழட்டி அக்காவின் சூட்கேஸுக்குள்ளை வச்சிட்டன். விடிய நேரத்தோடையே அத்தான் வீட்டுக்கு வந்திட்டார். அம்மாவும் அப்பாவும்தான் அவரோடை கதைச்சினம். அவரிடம் பிரச்சினை என்னவென்று எவ்வளவு கேட்டும் அவரும் ஒன்றும் சொல்லவில்லை. அக்காவோடைதான் கொஞ்சம் கதைக்கவேணும் எண்டு சொன்னார். அத்தானின் முகமும் அழுதமாதிரி வாடிப்போய்க் கிடந்தது.

"அக்காவை ஒருக்கா வரட்டாம் எண்டு சொல்லு"

அம்மா என்னிடம் சொன்னா.

நான் அக்காவை எழுப்பி விசயத்தைச் சொன்னேன்.

"அவரோடை ஒண்டும் கதைக்கிறதுக்கில்லை எண்டு போய்ச் சொல்லு" எண்டு சொல்லிவிட்டு அக்கா தலையணையில் முகம் புதைச்சு அழத் தொடங்கீற்றா. அக்கா அழுவது கவலையாக இருந்தாலும் அத்தானுடன் கதைக்கமாட்டன் எண்டு சொன்னது சந்தோசமாக இருந்தது. அம்மாவிடம் அக்கா வரமாட்டாவாம் எண்டு சொன்னேன். அப்ப அத்தானின் முகம் அழுது விடுவார் போல இருந்தது. 'அத்தானுக்கு இதெல்லாம் வேணும்' என்று எண்ணிக் கொண்டேன். இதுக்குப் பிறகு ரெண்டு, மூண்டு நாள் கழிச்சு ஒரு பின்னேரம் அத்தானை எங்கள் வீட்டுப் படலையடியிலை கண்டேன். அத்தான் என்னைக் கூப்பிட்டர். அத்தானின் முகம் மெலிந்துபோயிருந்ததோடு, தாடியும் வளர்ந்திருந்தது. அவருடைய புன்னகையைக் கூட முகத்திலை காணேல்லை. நான் வீட்டுக்குள்ள ஓடி வந்திட்டன். கொஞ்சநேரத்துக்குப் பிறகு அத்தானைக் காணவில்லை. பின்னேரம் கொஞ்சம் இருண்ட பிறகுதான் அக்காவிடம் அத்தான் வந்ததைச் சொன்னேன் அம்மாவிடமோ அப்பாவிடமோ ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் 'அவரை வீட்டுக்குள் கூட்டிக்கொண்டு வந்திடுவினம்' என்று தோன்றியது. அக்கா ஒண்டும் சொல்லவில்லை. ஒரு 'பாக்'கை கொண்டு வந்து என்னிடம் தந்தா. அப்பா கடைக்கு கொண்டுபோற பாக்.

"பாக்கிலை காசிருக்கு, அப்பாவுக்கும், அம்மாவுக்கும் தெரியாமல் ஒரு ஆறு முழம் நைலோன் கயிறு வாங்கிக் கொண்டு வா. அத்தானை கட்டிப் போடுவம்" என்று சொல்லி கண்ணில வழிஞ்ச கண்ணீரை விரலால் சுண்டினா.

'நாளை அத்தான் வரும்போது அப்பாவும் அம்மாவும் வீட்டிலை இருக்காவிட்டால் நல்லது' என்று தோன்றியது. அவர்கள் அத்தானை கட்டிப்போட அனுமதிக்கமாட்டார்கள். "என்ன நிறக் கயிறு?" அக்காவிடம் கேட்டேன்.

"உனக்கு விருப்பமானதை வாங்கு" எண்டா.

நான் நீலக்கயிறு வாங்கலாம் என்று தீர்மானித்துக்கொண்டேன்.

"மிச்சக்காசு எனக்கு" என்றேன்.

அக்கா 'ஓம்' எண்டு தலையாட்டினா.

எனக்கு சந்தோஷமாக இருந்தது. அத்தானைக் கட்டிப்போட்டு அடிக்க வேணும் எண்டு தீர்மானித்துக் கொண்டேன்.

கடையில் நீலக்கயிறு இல்லை. மஞ்சள் கயிறுதான் கிடைத்தது. மிச்சக்காசுக்கு நிறைய இனிப்பும் வாக்கிக் கொண்டேன்.

இரவு அக்கா தன்னுடைய மடியிலை என் தலையை வைத்து தலையைத் தடவிக்கொண்டிருந்தா. என்னுடைய முகத்தில் ரெண்டு, மூண்டு கண்ணீர்த்துளிகள் விழுந்து தெறித்தது. கனநேரத்துக்குப்பிறகு என்னை வளர்த்திப்போட்டு நெத்தியிலை கொஞ்சினா.

அபிநவன்

காலை நாலுமணி இருக்கும் மாட்டுக்கொட்டிலுக்கை அக்கா தூக்குப்போட்டு செத்திருப்பதை அப்பா தான் கண்டார். அப்பாவின் "ஐயோ!" என்ற ஈனமான சத்தத்தில்தான் நான் கண்விழித்து எழுந்தேன். அக்காவின் பிணத்தைக் கயிறிலை இருந்து இறக்கி வீட்டுக்குள் கொண்டுவரும் வரைக்கும் அக்காவைப் பார்க்க என்னை ஒருவரும் விடவில்லை. மாட்டுக் கொட்டில் கப்பிலை அந்த மஞ்சள் கயிறு மட்டும் தொங்கிக் கொண்டிருப்பதைத்தான் பார்த்தேன்.

அத்தான்தான் அக்காவுக்கு கொள்ளி வைச்சார். அத்தான் உருண்டு, பிரண்டு, என்னை கட்டிப் பிடிச்செல்லாம் அழுதது இப்பவும் கண்ணுக்கை நிக்கிறமாதிரி இருக்கு. இருந்தாலும் எனக்கு அத்தான் எல்லாமே 'நடிப்பென்றுதான் தோன்றியது. அந்த மஞ்சள் கயிறாலை அத்தானையும் தூக்கிலை போட வேணும் என்று ஆத்திரமாக இருந்தது.

* * *

இது நடந்து இப்ப பதினைஞ்சு வருசம் ஆகிவிட்டது. அக்கா செத்ததுக்குப் பிறகு நான் அத்தானுடன் ஒருக்காலும் கதைக்கவில்லை. கதைக்க மனம் விரும்பவில்லை. ஆனால் அத்தான் இதுவரைக்கும் வேறு கலியாணம் செய்யவில்லை. அக்கா செத்ததுக்கு பிறகு அவருடைய முகத்தில் புன்னகை எல்லாம் மறைஞ்சு முகம் உறைந்து போனது போல்தான் இது நாள் வரைக்கும் அவரைப் பார்க்கிறேன்.

"அத்தானை கட்டிப்போடுவம்" எண்டு அக்கா சொன்னதன் உள் அர்த்தத்தை இப்போதுதான் உணர முடிகிறது.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ முதியவனே!

ஓ முதியவனே!
ஐம்புலனும் செயல்குன்ற உன் ஆவி ஊஞ்சலென
அவ்வுலகும் இவ்வுலகும் சஞ்சரிக்க
உன்னருகில் உள்ளவரை உற்று உற்றுப் பார்க்கின்றாய்
என்ன தெரிகிறது?

அள்ளிக் கொடுத்து, அயலவர்கள் அழுக்காறு
கொள்ளும் வகையில்,
வைத்திய கலாநிதியை வரித்துக் கொடுத்தமகள்
கனடாவிருந்து கடமைசெய்ய வந்தாளா?
நாலு 'ஏ' எடுத்து போராதனை சென்று,
'ஈவண்' முடித்தவுடன் 'ஸ்கொல்' கிடைத்து,
'யுகே'க்கு ஓடியவன் உன்தன் நிலையறிந்து
ஓடிவந்து விட்டானா?

ஓடவில்லை படிப்பெனினும் நாடுபடும் பாடுதனை
சாதகமாக்கி, அகதி 'லேபலு'டன் ஜேர்மனியில்
வாழும் கடைக்குட்டி கடன் தீர்க்க வந்தானா?
'மகளுடன் சிலமாதம் வாழ்ந்துவிட்டு,
மறுபடியும் வருவனெ'ன
வெளிநாடு சென்ற உன்தன்
கிழவிதனும் வந்தாளா?
உற்றுப் பார்த்தென்ன பயன்?

'ஸ்ரேலிங் பவுணும்', 'டொலரும்' 'எக்சேஞ்சில்'
இங்கு வந்து லட்சமாய் மாறுகையில்
நெஞ்சை நிமிர்த்தினாய் நிகர் எனக்கு யாரென்றாய்
இப்போது
பஞ்சடைக்கும் கண்களால் பாசங்களைத் தேடுகின்றாய்

நிற்கும் அயலவர்கள் உன்கிரியை நிறைவேற்ற
ஒற்றைக் காலில் நிற்கின்றார்
அள்ளி அனுப்பும் உன் பிள்ளைகளின் சேதிகளை
சொல்லுகின்றார். கேட்கின்றதா?
வெளிநாட்டில் பார்ப்பதற்கு 'வீடியோ'ப் படப்பிடிப்பு,
கொழும்பில் 'பிறின்ற்' ஆன 'கொம்யூட்டர்' கல்வெட்டு
தேசியப் பத்திரிகை நினைவுதின அஞ்சலிகள்
கலக்கு கலக்கென்று கலக்குமுன்தன் இறுதிவிழா!
தொலைநகலில் பலலட்சம் செலவுக்கு வந்துவிடும்
தொலைவிலிருந்து பாசங்கள் மரணவிழா எடுப்பார்கள்
கலங்காமல் கண்மூடு!
ஆனாலும் ~ எமன் நாட்டில்
'கனடாவின் 'டொலரு'க்கும் 'யூக்கே'யின் 'பவுணு'க்கும்
'எக்சேஞ்'சின் வீதமென்ன?' என்று மட்டும் கேட்காதே
சிலருக்கு
மரணமும் பிரிக்காத பழக்கங்கள் பலவுண்டு!

**- புத்தூர். வே. இளையகுட்டி.**

## "வஞ்சகர் அழிந்திட வேண்டும்"

மனிதனை மனிதன் மதித்திடாப் பண்பு
மண்ணினை விட்டிட வேண்டும்
தனித்துத் தாமே சுவைத்திட எண்ணும்
தன்னலம் அகன்றிட வேண்டும்

போட்டிகள் போட்டுப் புவனம் மீதில்
பொருட்கள் சேர்த்தல் வேண்டும்
நாட்டினை உயர்த்தும் நற்பணி என்றும்
நயந்து செய்திடல் வேண்டும்

அடுத்தவனை மிதித்து அவனியில் உயரும்
அநியாயம் அகன்றிட வேண்டும்
அடுத்துக் கெடுத்துக் குடியை அழிக்கும்
அநீதி அகன்றிட வேண்டும்

என்றும் புவியில் எல்லோரும் ஒன்றென
எண்ணிடும் இயல்பு வேண்டும்
நன்றென ஆன்றோர் நவின்ற உண்மைகள்
நாடிப் புரிந்திட வேண்டும்

தீட்டிய மரத்தினிற் கூரினைப் பார்க்கும்
தீமை அகன்றிட வேண்டும்
ஏட்டுக் கல்வி நாட்டுக் குதவிட
ஏற்ற பணிசெய வேண்டும்

மூத்தோர் வார்த்தை முனைப்பாய்ப் பேண
முனைவோர் பெருகிட வேண்டும்
ஏத்தியே வைக்க ஏணியாய் நின்றோர்
இதயம் மகிழ்ந்திட வேண்டும்.

அரைகுறைப் படிப்புடன் ஆட்டங்கள் காட்டும்
அறியாமை அகன்றிட வேண்டும்
வரைமுறை இன்றி வாழ்ந்திட எண்ணும்
வஞ்சகர் அழிந்திட வேண்டும்

குறைகுடம் போலே குவலயம் மீதினில்
குழம்புவோர் அகன்றிட வேண்டும்
நிறைகுடம் போலே நித்தம் புவியில்
நிற்போர் நிறைந்திட வேண்டும்

அறியாமை அகற்றிய ஆசான் தன்னை
அவனியில் மதித்திடல் வேண்டும்
அறியார் செய்யும் அழிவுகள் தன்னை
அன்றே மறந்திடல் வேண்டும்

நாளும் பொழுதும் நன்றே செய்யும்
நற்குணம் மிகுந்திட வேண்டும்
நாளும் நம்பன் அடியினைப் போற்றி
நன்மைகள் பெற்றிட வேண்டும்.

**- செ.சுதாகரன்.**

# கனவில் வந்த காதலி.....?

கந்த மலர்க் காவிலே
கண் துயின்ற போதிலே
கஞ்ச மக ளானவள்
கன வினிலே வந்தனள்
சுந்தரி நீ யாரெனச்
செப்பி விடு? என்றதும்
"சிந்து தமிழ்ச் செல்வியான்"
என்று பதில் சொல்லினள்

நந்த வனப் பூக்களின்
மென்மை கொண்ட மேனியாம்
அந்தி(ப்) பட்டு வானமே
அவளு டைய ஆடையாம்
சந்தி ரனின் தண்மையே
சந்தனச் சாந் தாகுமாம்
சிந்து நதித் தென்றலே
செந்த மிழின் தந்தையாம்

சொந்தத் தமிழ் ஈழமே
சொற்ற மிழின் பூமியாம்
விந்தை யி(ல்)லை அன்னவள்
எங்க ளது ராணியாம்
இந்தி ராணி ஊர்வசி
இவளு டைய சேவகர்
மந்தி ரியாய் மன்மதன்
வந்து சேவை செய்குவான்

வந்த னங்கள் கூறியே
வாணி வீணை மீட்டுவாள்
செந்தி ருவாம் சிறிமகள்
சென்று கவரி வீசுவாள்
அந்த ரியாள் ராணியின்
அந்த ரங்கச் சேடியாம்
சந்த கவி பாடியே
ஔவை வாழ்த்துக் கூறுவாள்

தந்த னத்தோம் தாமெனத்
தஞ்சை வாணன் ஆடுவான்
சந்தம் பிச காமலே
சக்தி தாளம் போடுவாள்
நந்தி தேவன் மத்தளம்....
நந்த பாலன் வேய்ங்குழல்......
முந்து தமிழ் ஆட்சியின்
மாட்சி யிவை மாட்சியே

என்ன வளைப் பார்துயான்
இத்தனை நாள் எங்குந்
சென்றி ருந்தாய்? என்றதும்
செல்வி யவள் செப்பினாள்
அன்பரே யான் லண்டனில்
"திரு முருகன்" பேச்சினைக்
கண்டு வரப் போயினேன்
கலந்து வரப் போயினேன்....

உண்மை யிது மற்றிலை
என்று சொ(ல்)லி என்னவள்
கன்ன மதைக் கிள்ளினாள்
கள்ளி யெனச் சொல்லியான்
கண் விழித்த போதிலே
கண்ட யாவும் கனவென
எண்ண மதிற் புரிந்தது
எழுதுங் கவி பிறந்தது

**- த.தர்மேந்திரா.**

# ஆகா! நீயென் செவிலித்தாய்

தங்கத் தமிழே வணக்கம்
தஞ்சம் நீயே எனக்கும் ~ உன்
அங்கம் எல்லாம் இனிக்கும் ~ நல்
அன்பில் உள்ளம் சிறக்கும்

என்னைப் பார்த்துச் சிரித்தாய்
என்புக் கூக்கங் கொடுத்தாய்
அன்பே! என்று அழைத்தாய்
ஆகா! நீயென் செவிலித்தாய்

காதல் மழையைப் பெய்வித்தாய்
கவிதா மலரைச் செய்வித்தாய்
நாதா என்றே கூப்பிட்டாய்
நம்மை மே(த்)தா ஆக்கிட்டாய்

தமிழே நீயென் குலதெய்வம்
தருவேன் கவியா லேதீபம்
அமுதே அழியா தென்தாகம்
அடைவேன் உன்னை எந்நாளும்

**- த. இந்திரா.**

# கன்னல் தமிழ்மொழியின் கலைக்கரசி வாணி

(நாளை ஆரம்பமாகும் நவராத்திரியை ஒட்டி இக்கவிதை இங்கு பிரசுரமாகின்றது.)

இராகம்:- இராகமாளிகை தாளம்:- ஆதி

**எடுப்பு**

அன்னையே உந்தன்திருத் தாழினைத் தினம்பணிந்தோம்
தொன்மையைத் தொடர்வாய் துணிவாய் - (அன்னையே)

**தொடுப்பு**

கன்னல் தமிழ்மொழியின் கலைக்கரசி வாணி
இன்னல் இடர்நீங்கி ஏற்றமுடன் வாழ - (அன்னையே)

**முடிப்பு**

முத்தமிழ் மன்னர்கள் முச்சங்கத் தரியணையில்
முத்தமிட வளர்ந்தாய் மூவுலகும் பரந்தாய்
சித்தமுடன் கலைகள் சீர்பெறநீ வளர்த்தாய்
நித்தமுனைப் போற்ற நீடிய ஆயுள்பெற்றாய்..... (அன்னையே)

நாதியற்ற வராகி நாடெல்லாம் அலைகின்றோம்
பாதிப்பு மிக்கதனால் பதறித் துடிக்கின்றோம்
ஆதிக்கக் கொடுமைக்கு அடிமையாய் மாளுவதோ
ஆதியான தாயேயிது திருவுளச் சம்மதமோ?... (அன்னையே)

இன்பத் தமிழ்மொழியின் இனிய நடையெங்கே
அன்பின் வடிவமைந்த அருமைக் குணங்களெங்கே
அன்னிய மொழிகலைகள் ஆளுமை செய்குவதோ
இன்னமும் வெறுக்கலாமோ திருவுளச் சம்மதமோ?
(அன்னையே)

தான்நினைந் தூட்டிவிடும் தாய்வடி வானவளே
தேனினும் இனியவளே தேவியே சரணடைந்தோம்
மானினம் போலின்னும் மருளுதல் வேண்டாமம்மா
பூணிடர் நீங்கிவாழப் புவிதனில் துணைநில்லம்மா
(அன்னையே)

**- பழையூர் சுந்தரம்பிள்ளை.**




# நல்லதோர் உலகம் செய்வோம்!

சாதிகள் தனையழிப்போம் – நாளும்
ஊதியத்தை வளர்ப்போம்!
புகழாசையை விடுத்து – யாரும்
இகழாமல் வாழ்ந்திடுவோம்!
புறந்தனை ஒதுக்கிவிட்டு – தமிழ்
மறவராய் தலை நிமிர்வோம்!
பிறந்ததும் இதற்கே என்று
வரலாற்றில் எழுத வைப்போம்.

ஏரொன்று கைப்பிடிப்போம்!
ஊரவரை வாழ வைப்போம்!
பேனாவைக் கைப்பிடித்து – இருட்
போர்வையை கிழித்திடுவோம்! – புதுப்
புத்தகமாய் மாறி – இப்
புவிக்கொளி கூட்டிடுவோம்!
வசந்தகாலமாய் – எம்
வாழ்க்கைதனை ஆக்கிடுவோம்!

ஒளியில் ஒளிரும் பனியால் – விழியில்
ஒளிகள் கூட்டிடுவோம்!
விழியில் வழியும் நீரால் – வாழ்க்கை
வழியைத் துடைத்திடுவோம்!
பனியை உடுக்கும் மலரால்,
இனிமை உலகை வருடிடுவோம்!
இனியில்லை துன்பமே என்று,
இத் தரணியில் எழுதிடுவோம்!

பூக்கும் செடி உலகம் – அதில்
பூக்களே நாம் ஆனோம்!
தேடும் இன்பங்களை – எம்மை
நாடி வரச் செய்து,
வானக்கூரைக்குள் புதுப்பூமி
வடித்திடுவோம் – அங்கு
நாளும் ஒளியூட்ட – வண்ண
நட்சத்திரம் பூட்டிடுவோம்!

**- ச. சுஜிதா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாலைவனப்



தலையில் நிற்கும் வண்டு நீர் சேகரிக்கின்றது. கால்களில் உள்ள நீர்த்துளிகளைக் கவனிக்கவும்.



இராக்காலத்திற்குரிய குரைக்கும் பல்லி. கண்களில் பனிநீர் உறைய அதை நக்கி அருமையாகக் கிடைக்கும் நீரைப் பெற்றுக்கொள்ளும். பாம்புகளைப் போல இப்பல்லிக்கும் கண்மடல்கள் இல்லை.



ஒரு பச்சோந்தியின் வாயில் அகப்பட்ட வண்டு. இதன்வாயிலாக பச்சோந்திக்கு நீரும் உணவும் கிடைக்கும்.



ஒரு குளவி தான் பிடித்த சிலந்தியை விடமேற்றி மயக்கி மண்ணால் மூடி மறைத்துவிட்டு வளை தோண்டுகின்றது. இவ்வளையில் சிலந்தியை இழுத்துவிட்டு ஒரு முட்டையையும் இட்டு மூடிவிடும். தோன்றும் குடம்பிக்கு உயிருள்ள சிலந்தி முதல் உணவாகப் பயன்படும்.

பாலைவனங்களில் பேய்கள் நடமாடலாம். ஆனால் உயிரிகள் வாழமுடியாது என்ற நம்பிக்கை நிலவிவந்த காலமும் உண்டு. ஆனால் இன்று பேய்களில் நம்பிக்கையற்றுப் போய்விட்டது. ஆயினும் பாலைவனங்களில் உயிரிகள உண்டு என்பதனைக் கண்டறிந்து விவரித்து வருகின்றார்கள் சில ஆய்வாளர்கள். சாதாரண உயிரிகள் அங்கு வாழமுடியாது. காரணம் உச்சவெயிலில் வெப்பநிலை 66°c (150°F) வரை உயரலாம். ஆயினும் இந்த வெப்பநிலைகளையும் சமாளித்து உயிர்வாழும் அங்கிகளைக் கண்டறிந்துள்ளார்கள். இவ்வங்கிகள் பற்றிய விவரத்தைச் சுருக்கமாகவும், படவிளக்கங்கள் வாயிலாகவும் கவனிப்போம்.

தென்மேற்கு ஆபிரிக்கக் கரைக்குரிய நமீபியா (NAMIBIA) நாடு பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். தென் ஆபிரிக்காவுக்கு அண்டியநாடு. இதன் மேற்குக் கரையோரமாக, அத்திலாந்திக் சமுத்திரத்தின் கரையை அண்டி, 1300மைல்கள் நீளமுள்ள நமீப் பாலைவனம் (NAMIB DESERT) உண்டு. பாலைவனத்தின் பெயரிலிருந்துதான் நாட்டின் பெயர் பெறப்பட்டது. இங்கு பல விலங்குகளைக் கண்டறிந்து விவரித்துள்ளார்கள்; புதிதுபுதிதாக விலங்குகளைக்கண்டு, இனங்கண்டு விவரிக்கவும் செய்கின்றார்கள். 'இவ்விலங்குகள் பாலைவனப் பேர்வழிகளல்லவா! குணமும் மாறுபட்டதாயிருக்கும்.

பாலைவனத்தில் நீர் கிடைக்காது என்பது யாவரும் அறிந்ததே. நீரின்றி உயிர் வாழ்தலரிது. இப்பிரச்சினையை இவை எங்ஙனம் சமாளிக்கின்றன? இப்பிரதேசம் இரவில் குளிர் மிகுந்ததாகவும், பகலில் வெப்பம் மிகுந்ததாகவுமிருக்கும். அதிகாலையில் பெரும்பாலும் மூடுபனியிருக்கும். வருடத்தில் குறைந்தது அறுபது நாட்களுக்காவது இது நிகழும். இங்ஙனம் கிடைக்கும் ஈரலிப்பைக் கொண்டே இவை காலங்கழிக்கின்றன.

அது எங்ஙனம் என்று பார்ப்போம்.

தலையில் நிற்கும் வண்டு (HEAD - STANDER BEETLE) என்ற ஒருவகை வண்டு அதிகாலையில் மண்மேடுகளின் உச்சியை அடைந்து, தலையைக் கீழ்நோக்கியும் உடலைக் கால்களில் உயர்த்தியும் வைத்திருக்கும். உடலில் படும் பனி ஒடுங்கி நீர்த்துளிகள் தோன்றும். இந்நீர்த்துளிகள் வடிந்து வாய்ப்பகுதிக்குவர, வண்டு அதைப் பருகும். ஒருநாள் பருகிய நீரைக் கொண்டு பல நாள்களைக் கடத்தவேண்டியுமிருக்கலாம்.


சுகன்

தெறி வண்டு (BUTTON BEETLE) என்ற வண்டு அதிகாலையில் மண் மேடுகளின் உச்சியில் உழவுச்சால்கள் போன்ற சால்களை ஏற்படுத்தும். இச்சால்கள் எப்பொழுதும் சமாந்தரக் கோடுகளாகவேயிருக்கும், மேலும் மூடுபனிக் காற்றின் திசைக்குச் செங்குத்தாயிருக்கும். இங்ஙனம் இவை பனியிலுள்ள ஈரலிப்பைப் பொறிவைத்துப்பிடிக்கின்றன. பின் ஈரலிப்படைந்த மண்ணிலிருந்து நீரைப் பெற்றுக்கொள்ளும்.

மேற்படி இரு வண்டினங்களும் வெயில் ஏறுமுன் காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பிவிடவேண்டும். அல்லது கடும் வெப்பத்தில் பொரிந்துபோக நேரிடும். வனாந்தரத்திற்குரிய பூச்சியினம் பறக்கும் இயல்பை இழந்துவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. ஏற்ற வெப்பமுள்ள வேளைகளில் அவற்றின் நடமாட்டம் நிகழும். வெப்பம் ஏற மண்ணிற் புதைந்து தப்பித்துக்கொள்ளும். கடும் குளிரிலிருந்தும் மண் பாதுகாப்புக் கொடுக்கும். இங்ஙனம் இவற்றின் நடமாட்டம் நிலமட்டமும், நிலமட்டத்திலிருந்து மண்ணில் ஒருமீற்றர் ஆழம்வரையுமிருக்கும். இரை கௌவிகளும் மண்ணில் புதைந்தே வெப்பத்திலிருந்து தப்பித்துக்கொள்ளுகின்றன. ஓணான போன்ற சூழல்வெப்பக்குருதிநிலையானவை அதிகாலையில் உடலை வெப்பமேற்றியபின்தான் சுறுசுறுப்படையும். இரை கௌவிகளின் நீர்த் தேவையை அவற்றின் இரை பூர்த்தி செய்யும்.

சாதாரணமாக பசிய தாவரங்கள் உணவு உற்பத்தியில் ஈடுபடும். அதனால் அவை முதலான உற்பத்தியாளர் என அழைக்கப்படும். தாவர உண்ணிகள் தாவரங்களை உணவாகக்கொண்டு தமது சக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்யும். ஊனுண்ணிகள் பிற விலங்குகளை உணவாகக் கொள்ளும். இங்ஙனம் ஓர் உணவுத்தொடர் அல்லது உணவுச்சங்கிலி ஏற்படும். ஆனால் நமீப் வனாந்தரம் பசிய தாவரங்கள் இல்லாத சூழல். அதனால் இங்கு உணவுத் தொடர் மாறுபட்டதாக உள்ளது.

தாவர உண்ணிகள் - மண்புழு, கறையானைப் போன்று - குப்பையை உணவாகக்கொள்ளும். ஊனுண்ணிகள் குப்பையுண்ணிகளையும் பிற விலங்குகளையும் உணவாகக்கொள்ளும். இங்ஙனம் சூழலுக்குஏற்ப அங்கிகள் இயைபாக்கம் பெற்றவையாகக் காணப்படுகின்றன. இயற்கைத் தேர்வு



கல்லாக மாறிய பெரிய மரங்களின் சுவடுகள். இப்பிரதேசத்தில் பெரிய மரங்கள் உள்ள காடுகள் இருந்தமைக்கு இவை சான்று பகர்கின்றன. இடம் சகாராப்பாலைவனம்.

மூலம் இந்த இயைபாக்கங்கள் பெறப்படும்.

பசிய தாவரங்கள் இல்லாத சூழலில் குப்பை எங்ஙனம் கிடைக்கும்? அதைப்பற்றிய விவரத்தைப் பார்ப்போம். மேற்படி வனாந்தரப் பகுதியில் மண் மேடுகளுக்கு இடையே பள்ளத்தாக்குகள் உண்டு. எப்போதாவது மழை பெய்யும்போது இப்பள்ளத்தாக்குகளில் பல இனத்தாவரங்கள் முளைத்து, பூத்துக், காய்த்துப், பின் இறந்துவிடும். மிகக்குறுகிய காலத்திலலேயே இவை தமது வாழ்க்கை வட்டத்தை முடித்துக்கொள்ளும். இத்தாவரங்கள் இப்பிரதேசத்திற்கென்றே சிறப்பியல்புகள் பெற்றவை. அதாவது இயைபாக்கங்களை உடையவை. இவற்றின் வாயிலாகக் கிடைத்த குப்பை பள்ளத்தாக்குகளில் உள்ள அங்கிகளுக்கு மாத்திரமல்லாமல், காற்றினால் அள்ளப்பட்டு மண்மேடுகளை அடைந்து அங்கும் குப்பையுண்ணிகளுக்கு உணவாகக் கிடைக்கும். விலங்குகளின் உணவு தேடல் நிகழ்ச்சி - பகலில், காலையிலும் மாலையிலும் நிகழும். வெப்பம் அதிகமாகவுள்ள வேளைகளில் மறைவிடத்தை நாடிச்சென்றுவிட வேண்டும். அதாவது மண்ணில் புதையுண்டு போய்விடவேண்டும். வேறு மறைவிடம் கிடையாது, அல்லது பொரிந்து போக நேரிடும்.


மற்றுமொரு முறையில் மேற்படி குப்பையுண்ணிகளுக்குக் குப்பை கிடைக்கும். நமீப் வனாந்தரத்தின் மேற்குக்கரை, அத்திலாந்திக் சமுத்திரம். கிழக்குக் கரையில் பற்றைகளும் காடுகளுமுண்டு. இங்கிருந்து காற்றினால் அள்ளுப்பட்டு குப்பை வந்து சேரும். இங்ஙனம், கடல்வாழ் அங்கிகளுக்கு அலைகள் வாயிலாகப் பிளாந்தன் (அலையுயிரிகள் - தாவரங்களும், விலங்குகளும்) உணவு கிடைப்பது போல, இங்குள்ள குப்பையுண்ணிகளுக்கு காற்றின்உதவியால் குப்பையுணவு கிடைக்கும். தமது வாழ்க்கைக் காலத்திலேயே உயிருள்ள தாவரங்களைக் காணாத பல விலங்குகள் இங்கு வாழுகின்றன. இவற்றுள் வண்டுகள், சிலந்திகள், ஓணான்கள், பாம்புகள் அடங்கும். இப்பிரதேசத்தில் அருமையாக மழை பெய்யும்போது -

இந்நிகழ்ச்சி பத்து ...கள் அ...
காலத்துக்கு ஒரு மு...ழும்.
பட்ட ஒரு மலர்ச்சி ...ம். அ...
யுண்டு, உறங்குநி...லிருந்...
முளைத்துப் பூத்துக், ...கும். உ...
லிருந்த விதைகளும் ...ளும்
துக் காய்க்கும். இங்ங...ச்சூழ...
சூழற்றொகுதி (DEUS E...
நிலைப்பதற்கு இயற்...தவும்...
சில மாதங்களோ அ...ஒருசி...
நீடிக்கலாம். இக்கால... இப்பி...
விலங்குகள் அதிக ...ணிக்...
கமடையும். போதிய ...வு கி...
இனப்பெருக்க விகித...அதிகம...
மந்தமடையும். அதே... ப...
இப்பிரதேசத்தை நா... வ...
வுள்ள காடை (BURD)க...
திற்கு வரும். இத்தகை...ரை...
யாத இப்பிரதேசத்தி... வ...



சகாராப் பாலைவனில் ஒ...
பள்ளத்தாக்கான சி...டங்க...
நீருண்டு. இத்த...கைய ...களி...
கள் கூட்டமாக வளர்...க்கு...
திலுள்ள பாதைகள் இகைய...
ளைத் தொட்டே செல்லு மண்...
னிக்கவும்.

களுக்குச் சுலபமாகக் ...டைக்...
பயன்படும். விதைகளை உ...
தற்கு ஆயிரக்கணக்கில் ...
வானம்பாடிகள் (LARK போ...
வரும். உணவு குறைய வெ...
போய்விடும். இக்காலகத்தில்...
ளும் இங்கு குடியேறுவது... 
இடைப்பட்ட பள்ளத்தா...கள்
பெருக்கமடையவும் ஏற்...சூழ...
இங்ஙனம் குடியேறும் பா...ட்டிக...
(GERBILS) எனப்படும் ...யின...
கங்காரு எலிகளைப்போப் ...
உதவிகொண்டு குதித்துக்குதி...
புடையவை. மணற் பிர...சத்...
பெயர்ச்சி முறை, அதற்கேற்ப...
நெடியவையாகவிருக்கும் முன்...
யவை (கங்காருவைப் போல);...
கக்கொள்ளும் குள்ளநரிகளும்...
இவை மாத்திரமல்லாமல் ஏறிக்...
வனாந்தர அண்ரிலோப்பும் DES...
இங்கு குடியேறிப் பெற்றுப் பெரு...
வெள்ளாடு போன்ற, ஆனால் ...
ஏற்ற காலம் முடிய இவையெ...



பக்கநெளியன் பிடையன் பாம்பு (SIDE - WINDING ADDER). மிகவும் மணற்பாங்கான பிரதேசத்தில் பாம்புகளின் சாதாரண இடப்பெயர்ச்சி முறை உதவாது. அதனால் இப்பிரதேசத்திற்கு ஏற்ற இடப்பெயர்ச்சி முறையை இவை கையாளுகின்றன. முதலில் தலைப்பக்கத்தை ஒருபக்கமாகத் தூக்கிப்போடும், பின்னர் வாற்பக்கத்தை அதே பக்கமாகத் தூக்கிப்போடும். அதாவது முன்பாதி பின்பாதியாகத் தூக்கிப்போட்டு, ஓரளவு வேகமாக இடப்பெயர்ச்சி நிகழ்த்தும். மண்ணிலுள்ள எழுத்தையும், பாம்பின் தலைப்பகுதியையும் கவனிக்க இடப்பெயர்ச்சிமுறை புலப்படும். அமெரிக்காவின் அரிசோனா பாலைவனத்திற்குரிய பக்கநெளியன் கிலுகிலுப்பைப் பாம்பிற்கு ஒப்பான நடத்தைகளை இதுவும் காட்டுகின்றது. ஆயினும் இரண்டும் தூர இனத்தவர்களே. ஒத்த சூழல் ஒருவகைக்குரிய இயைபாக்கங்களைத் தோற்றுவிக்கும். இது இயைபாக்க ஒடுக்கம் (ADAPTIVE CONVERGENCE) எனப்படும்.




பக்கநெளியன் பிடையன் கூழாங்கற்களிடையே மறைந்திருக்கும் முறையைக் கவ...
மாத்திரம் வெளியே தெரிகின்றன. அவையும் கூழாங்கற்கள் போலல்லவா இருக்கின்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ப் பேய்கள்

...த்து வ...கள் அல்லது மேலான ...ஒரு முன...கழும். முற்றிலும் வேறு ...ளர்ச்சி ...டும். ஆழமாகப் புதை ...ங்குநிலிலிருந்த லில்லிகள் ...த்துக், ...கும். உறங்கு நிலையி ...களும் களும் முளைத்துப் பூத் ...இங்ஙனிச்சூழலுக்குரிய குப்பை ... (DETUS ECOSYSTEM) ...இயற்...தவும். இந்நிலை ஒரு ...ா அல் ஒருசில வருடங்களோ ...க்காலத் இப்பிரதேசத்திற்குரிய ...அதிக ...ணிக்கையில் பெருக் ...ாதிய ...வு கிடைக்கும் வரை ...விகித...அதிகமாயிருக்கும்; பின் ... அதேசம் பல பறவைகளும் ... நாடிம். வான் கோழி அள ... (BUSRD)கள் இப்பிரதேசத் ...த்தகைஇரைகௌவிகளை அறி ...சத்திற்...ய வண்டினம் காடை



...வனத்தில் ஒரு சோலைவனம். ... சில...இடங்களில் நிலத்தடி ...ய ...ங்களில்... பேரீந்து மரங் ...ளர்ந்திருக்கும். பாலைவனத் ...ர் இதகைய சோலைவனங்க ...ல்லும். மண்மேடுகளைக் கவ


...கக் ...கிடைக்கும் உணவாகப் ...ளை உணவாகக் கொள்வ ...கில்விஞ்சுகள் (FINCHES), ...RK... போன்ற பறவைகளும் ...ய ...வையெல்லாம் திரும்பிப் ...லகட்டத்தில் சில பாலூட்டிக ...வதுண்டு. மண்மலைகளுக்கு ...தாக்கள் இவை வாழவும் ...ஏற்ற சூழலைக் கொடுக்கும். ... பாலூட்டிகளில் ஜேர்பில்கள் ...ம் ...லியினமும் ஒன்று. இவை ...போலப் பின்னங்கால்களின் ...த்துக்குதித்து ஓடும் இயல் ...பிரதேசத்திற்கு ஏற்ற இடப் ...தற்கேற்ப பின்னங்கால்கள் ...ம். முன்னங்கால்கள் குறுகி ... போல); இவற்றை உணவா ...நரிகளும் இங்கு குடியேறும். ...ல் ஒறிக்ஸ் (ORYX) என்ற ...ும் (DESERT ANTILOPE) ...றுப் பெருகுவதுண்டு. இவை ...னால் பெரியவிலங்குகள். ...இவையெல்லாம் திரும்பிப்



...க் கவனிக்கவும். கண்கள் ...கின்றன.

போய் விடும்; ஆயினும் குப்பைச் சூழற்றொகுதி தொடர்ந்து பேணப்படும்.

இப்பிரதேசத்திற்குரியதாக ஒரு சிறப்பான தாவரமுண்டு. இதன் பெயர் வெல்விச்சியா மிறாபிலிப்ஸ் (WELWITSCHIA MIRABILIS) என்பதாகும்; ஆங்கிலப் பெயர் இல்லை. இது ஜிமினோசுப்பேரும்கள் (GYMNOSPERMS) எனப்படும் ஊசியிலை மரங்களுக்குரிய கூட்டத்தைச்சேர்ந்த, பூக்காத் தாவரம். இக்கூட்டத்தில் செடிகளோ, பூண்டுகளோ மிக அருமை; ஆயினும் வெல்விச்சியா பூண்டு போன்ற தோற்றத்தை உடையது. இதை உலகத்திலுள்ள விநோதத்தாவரம் ("STRANGEST PLANT ON EARTH") என்று கொள்ளலாம். இதற்கு ஒரு சோடி தோல் போன்ற இலைகள் மாத்திரமுண்டு. அவை ஒன்றுக்கு ஒன்று எதிராகவிருக்கும். இலைகள் மிகநீளமானவை. மடிந்தும் சுருண்டும் வளைந்தும் இருக்கும். வளரும்போது நீளத்துக்குப் பிரிந்து, முனைகள் கருகி இறக்கும். இங்ஙனம் பிரிந்திருப்பதனால் பல இலைகள் உள்ளது போலத் தோற்ற



ஆதிமனிதன் வரைந்த குகை ஓவியங்கள் - சகாராப்பாலைவனத்தில் படங்களைத் துலக்கமாக அறிவதற்காக ஒரு பிரெஞ்சு ஆய்வாளர் வெள்ளைக் கட்டி (CHALK) தீட்டுகின்றார். இப்படங்கள் அக்காலத்து விலங்குகளை இனங்காண உதவும். இப்படங்கள் கழுதைப்புலி (HYENAS) கள், நீர் எருமைகள் (WATER BUFFALOES), கசெல்மான்கள் (GAZELLES) போன்றவற்றை இனங்காட்டுவதாய் அமைகின்றன.

மளிக்கும். தண்டு நிலத்தில் புதையுண்டிருக்கும். முனை பீங்கான் (SAUCER) வடிவத்திலிருக்கும். இது நிலமட்டத்திலிருக்கும், நீரைத் தேக்கி வைத்திருக்க உதவும். வேர்கள் ஆழமாகவும் பரந்தும் செல்லும். வரண்ட காலங்களில் இலைகள் முளையிலிருந்து கருகி கபிலநிறம் பெறும். மழை பெய்தால் இலைகள் கபில அல்லது கபிலச் சிவப்பு நிறத்திலிருந்து பச்சைநிறம் பெற்று, தாவரத்தின் (அதாவது இலைகளின்) வளர்ச்சி வேகப்படுத்தப்படும். வெல்விச்சியா ஆயிரம் வருடங்கள்வரை, அல்லது அதற்குமேலான காலம் வாழக்கூடியவை.

இராக்காலத்திற்குரிய விலங்குகளின் நடமாட்டம் அதிகாலையில் அவை விட்டுச் சென்ற அடையாளங்களிலிருந்து புலப்படும். இதை மண்ணின் மேல் எழுத்து (WRITING ON SAND)என்பார்கள். இவ்வடையாளங்களைக் கொண்டு இவற்றைவிட்டுச் சென்ற அங்கிகளை இனங்காணுவதுடன், அவற்றின் மறைவிடங்களையும் கண்டு கொள்ளமுடியும். இத்தகைய அங்கிகளில் சில இராமபாணம் அல்லது புத்தகப்பூச்சி (SILVER FISH), நடனமாடும் வெள்ளைப்பெண் சிலந்தி (DANCING WHITE LADY SPIDER) போன்றவை. ஏற்றகாலங்களில் மண்மேடுகளுக்கு இடைப்பட்ட கூழாங்கற்கட்டுக்களில் (GRAVEL FLATS)பெரிய முதுகெலும்புள்ள விலங்குகளின் பாதை அடையாளங்களும் புலப்படும். ஒறிக்ஸ் ஆழமான பாதைச் சுவடுகளை ஏற்படுத்தும், அதனால் இப்பாதைகள் அவற்றை ஏற்படுத்திய விலங்குகள் விட்டுச்சென்ற பின்பும் பல ஆண்டுகள் நிலைத்து நீடிக்கும்.

குப்பையுள்ள பகுதியாகையால் இங்கு கறையான்களுமுண்டு. அவற்றை உண்ணும் விலங்களுமுண்டு. குரைக்கும்பல்லி(BARKING GECKO)



ஏமாந்த சோணகிரி ஓணான்! பாம்பு இருப்பது தெரியாமல் அண்மையில் வந்து அகப்பட்டுவிட்டது. விடம் ஊட்டப்பட்டதால் ஓணான் மயங்கிவிட்டது. பாம்பின் விழுங்கு படலம் ஆரம்பமாகிவிட்டது.

கள் இப்பிரதேசத்திற்குரிய விநோத விலங்குகளில் ஒன்று.

பிறிதொரு மிகவும் விநோதமான அங்கி ஓர் இன வண்டு. இப்பிரதேசத்தில் பொதுவாக வண்டினங்கள் எல்லாமே பொதுவான ஒரு நடவடிக்கையை காட்டும். காலையில் உணவுதேடும் வேளையில் பெண்கள் உணவுதேட ஆண்கள் பெண்களைத்தேடும் படலத்தில் ஈடுபடும். ஓர் ஆண் ஒரு பெண்ணைச் சந்தித்ததும், குதிரைவீரன் போல அதன்மேல் தொற்றியேறிக்கொண்டு, முன் சோடிக் கால்களால் திசைகாட்டி பெண்ணைச் செலுத்தும் (கடிவாளம் பிடிப்பதுபோல), பின் பின்சோடிக் கால்களால் போட்டிபோடும் மற்ற ஆண்களை உதைத்துத் தள்ளும். இங்ஙனம் ஒரு பெண்ணை வெற்றி கண்டதும் இனக்கலப்பு இங்கு நிகழுவதில்லை. மண்ணுக்கடியில் மறைவிடத்தில் நிகழும். தக்கன பிழைத்தலுக்கு இதுவும் ஓர் இயற்கைத் தேர்வு முறைதான்


இப்பிரதேசத்தில் ஆதிமனிதன் வாழ்ந்ததற்குரிய சான்றுகள் அவன் விட்டுச்சென்ற கல்லாயுதங்கள் வாயிலாகப் புலப்படுகின்றன. சில பள்ளத்தாக்குகளில் அவன் விட்டுச்சென்ற ஆயுதங்கள் மிக அதிக எண்ணிக்கையில் பரவிக்கிடக்கின்றன. இத்தகைய சூழலில் மனிதன் வாழ்ந்திருக்க முடியுமா? இப்பொழுது முடியாது. ஆயினும் அவன் வாழ்ந்த காலத்தில் முடிந்திருக்கும் என்பதற்குச் சான்றுகள் உண்டு. அக்காலத்தில் காலநிலை ஏற்றதாக இருந்திருக்கின்றது. ஆயுதங்கள் அதிமாக உள்ள பள்ளத்தாக்கில் ஆறு ஒன்று ஓடியதற்குரிய அடையாளங்கள் உண்டு. காலநிலை மாற மனிதன் குடிபெயர்ந்திருக்கவேண்டும். ஆயினும் தான் வாழ்ந்ததற்குரிய சான்றுகளாகத் தான் பயன்படுத்திய கூர் மழுங்கிய ஆயுதங்களை விட்டுச்சென்றிருக்கின்றான்.

பாலைவனங்கள் தோன்றுவதற்கு இரு காரணங்களுண்டு. ஒன்று இயற்கை. மற்றையது மனிதன். உலகளாவிய ரீதியில், நீண்டகாலத்திற்குரியதாக காலநிலையில் மாற்றங்கள் ஏற்படுவதுண்டு. நீண்ட குளிர்காலம் (GLATIAL PERIOD) நிலவலாம். பின்னர் நீண்ட வரண்டகாலம் (DRY PERIOD) நிலவலாம். இக்காலநிலை மாற்றங்களுக்கேற்ப இயற்கைச் சூழலிலும் பாரிய மாற்றங்கள் ஏற்படும். இத்தகைய காரணங்களினால், சகாரா பாலைவனப் பிரதேசத்தில் பாரிய மரங்களைக் கொண்ட அடர்ந்த காடுகள் இருந்திருக்கின்றன. பின்னர் வரட்சி மிகுதியால் காடுகள் அழிந்துவிட்டன. ஆயினும் அங்கு பாரியமரங்கள் இருந்ததற்கு அடையாளமாக கல்லாக மாறிய பெரிய மரங்களின் உயிர்ச்சுவடுகள் உண்டு. அக்காலத்தில் ஆதிமனிதன் வாழ்ந்ததற்குச் சான்றுகளாக அவன் விட்டுச் சென்ற குகையோவியங்களுண்டு. அக்கா


## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

லத்தில் அங்கு காணப்பட்ட விலங்குகள் சிலவற்றை இனங்காண ஆதிமனிதனின் ஓவியங்கள் உதவுகின்றன.


பாலைவனங்கள் தோன்றுவதற்கு மனிதனும் காரணமாக அமையலாம். மனிதன் நாகரிகமடைந்து நகரங்களை நிர்மாணிக்க ஆரம்பித்த காலத்தில் கண்மூடித்தனமாகக் கண்டபடி காட்டு மரங்களை வெட்டியதனால் (அதை மனிதன் இன்றும் செய்கின்றான்) காடுகள் அழிய பாலைநிலங்கள் தோன்றின. பழம்பெரும் நாகரிகங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. இங்ஙனம் சிந்து நதிப்பள்ளத்தாக்கு (பழந்தமிழரின் வாழிடம்), நைல்நதிப் பள்ளத்தாக்கு ரைகிறிஸ் - இயூபிறிற்றிஸ் நதிகளுக்குரிய பள்ளத்தாக்கு(சுமேரியா - பின்னைய பபிலோனியா) இன்று வனாந்தரங்களாகக் காட்சி தருகின்றன. நமது பிரதேசத்தில் வடமராட்சி கிழக்கையும் ஒரு குட்டி வனாந்தரமாகக் கொள்ளலாம். சரித்திரப் புகழ்பெற்ற சிங்கை நகரம் இங்கிருந்தது என்பதற்குப் பல சான்றுகளுண்டு. அண்மையில் வெள்ளையர்கள் அமெரிக்காவில் குடியேறிய பின், மந்தை வளர்ப்பில் ஈடுபட, மந்தைகளின் அதி மேய்ச்சல் காரணமாக சில இடங்கள் வனாந்தரமாக மாறி விட்டன.



வனாந்தரத்திற்குரிய ஒறிக்ஸ் (ORYX) விலங்கு. இவ்விலங்குகள் இப்பொழுது பெருமளவில் அருகி விட்டன. மனிதன் வேட்டையாடியதே காரணம். வான் [illegible] மிக அருமையாகவே இவை உள் [illegible] களில் இவற்றை பேணிவளர்க்கின்றார்கள்.



ஒரு சிலந்தி தன்னிலும் நீளமான வெட்டுக்கிளியைத் தனது பெரிய கொடுக்குகளினால் மடக்கிப் பிடித்துள்ளது. விடம் ஊட்டி மயக்கியபின் சாற்றை உறிஞ்சி உட்கொள்ளும். இச்சிலந்தியின் சாதாரண உணவு வண்டுகள் ஆயினும் கிடைத்ததை ஏன் விடுவான்? வண்டுகளைக் காட்டிலும் இது மென்மையான, சுவையான உணவல்லவா??



வெல்விச்சியா என்ற விநோதத்தாவரம். பல இலைகள் இருப்பது போலத் தெரிந்தாலும், உண்மையில் இருப்பது ஒன்றுக்கொன்று எதிராக இரு இலைகள் மாத்திரமே. இலைகள் நெடுக்காகப் பிளந்திருப்பதனால் பல இலைகள் போலக் காட்சி தருகின்றன. இலைகளுக்கிடையே தண்டின் உச்சியில் உள்ள பள்ளத்தையும் இனப்பெருக்கவுறுப்புக்களான கூம்புகளையும் கவனிக்கவும்.



ஓர் ஓணான் வெப்பத்திலிருந்து தப்புவதற்கு மண்ணில் புதையவாரம்பிக்கிறது.




ஓணான் ஒன்று அதிகாலையில் வயிற்றைச் சூடேற்றுகின்றது. குருதி வெப்பம் ஓரளவு அதிகரித்த பின்தான் ஓணான் சுறுசுறுப்படையும். நிலையான குருதிவெப்பமுள்ள விலங்குகளுக்கு (இளஞ்சூட்டுக் குருதி நிலையானவை) இந்தப்பிரச்சினை இல்லை.



மண்மேலெழுத்து. அங்கியையும் அதன் எழுத்தையும் கவனிக்கவும். அங்கி ஒரு தத்துவெட்டியன். அதிகாலையில் எழுத்துக்கள் துலக்கமாகத் தெரியும். பின் காற்று வீசுவதனால் மண்ணினால் மூடப்பட்டு எழுத்துக்கள் அழிந்துவிடும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




## ஆழமாக ஒப்பிட்ட போது...

10

சில மாதங்களாக அந்த எட்டாம் வகுப்பு முஸ்லிம் மாணவன் தொடர்ச்சியாகப் பாடசாலைக்கு வராததால் வகுப்பாசிரியர் அவனது பெயரை இடாப்பிலிருந்து நீக்கிவிடவேண்டியிருந்தது. அதுபற்றி அவர் என்னுடன் ஆலோசித்தபோது, அவன் வராததற்கான காரணத்தை அறிய விரும்பினேன்.

அவனது வீட்டு அயலிலிருந்து வரும் வேறு வகுப்பு முஸ்லிம் மாணவர்களிடம் விசாரித்ததில் அவன் கலகாவிலுள்ள முடிதிருத்தகம் (சலூன்) ஒன்றில் தொழில் பழகுவதாக அறிய முடிந்தது.

அறிந்ததை உறுதிசெய்யும் வகையில், அவனது அயலிலிருந்து வருகின்ற முஸ்லிம் ஆசிரியையிடம் அதுபற்றி விசாரித்தேன். சலூனில் அவன் தொழில் பழகுவது உண்மை என்று தெரிந்தது. தெரியாத்தனமாக, "அவன் 'பாபர்' குடும்பத்துப் பையனா?" என்று கேட்டுவிட்டேன்.

அந்த ஆசிரியை சற்று நிதானித்துவிட்டு "உங்கள் இனத்தவரிடையே தான் 'பாபர்', 'டோபி', அது, இது என்ற பாகுபாடெல்லாம் இருக்கு. எங்களிடம் தொழில் ரீதியாகவோ வேறு எந்த வகையாகவோ, சாதிஅமைப்போ பாகுபாடோ கிடையாது! நாங்கள் எல்லாருமே 'முஸ்லிம்' என்ற ஒரே சாதிதான்; ஒரே இனந்தான். டோபி, பாபராக தொழில் செய்பவர்கள் உங்கள் வீட்டுக்கு வந்தால்... 'ரீ' கொடுப்பதானால் கூட நீங்கள் குடிக்கும் பாத்திரத்தில் கொடுக்க மாட்டீர்களாமே...! என்ன தொழில் செய்தாலும் எல்லாரும மனித இனமே என்பதுதான் எங்கள் மார்க்கத்தின் - இஸ்லாத்தின் - கோட்பாடு!"

"அந்தப் பையனின் தந்தை பெட்டிக் கடை வைத்திருக்கிறார். மூத்த சகோதரன் 'மௌலவி' ஆசிரியராக (இஸ்லாமிய மத ஆசிரியர்) படிப்பிக்கிறார். குடும்பத்தில் பிள்ளைகள் அதிகம் என்பதால் வருமானம் போதாது. அதனால் அந்தப் பையன் வருவாய் வரும் ஒரு தொழிலாக முடி வெட்டப் பழகுகிறான்"

"எங்கள் இனத்தில் யாரும் எவரையும் திருமணம் செய்வதன் மூலம், குடும்பங்கள் உறவுகளாக இணைவதற்கு எவ்வித சாதிப்பாகுபாட்டுத் தடையும் கிடையாது. உங்கள் இனத்தில் அது சாத்தியமில்லை அல்லவா...?" என்று நீளமாக ஓர் உரையாற்றி முடித்தார்.

யாரும் வெட்டிப் பேசி, வென்றுபோகச் சம்மதிக்காத மனந்தான் எனது பலம்; அதுதான் எனது பலவீனமும். ஆயினும் பேசியது நீதியானதாயின் ஒத்துக்கொள்ளும் 'நல்ல பிள்ளைத் தனமும்' என்னிடம் நிரம்பவே இருந்தது.

"முஸ்லிம்களிடமும், 'செல்வந்தன்', 'வறியவன்' என்ற,சம்பிரதாயமற்ற பாகுபாடு இருப்பதாய்த் தெரிகிறதே!"என்று நான் சொன்னபோது -

"அந்தப் பாகுபாட்டின் அடிப்படை பொருளாதாரமே தவிர வேறெந்த வைதீகத்தனமோ மௌடீகத்தனமோ அதற்குக் கிடையாது...!அதுதான், 'சம்பிரதாயமற்ற' என்று நீங்களே சொல்லிவிட்டீர்களே!"என்றார் அந்த ஆசிரியை. (வைதீகத்தனம், மௌடீகத்தனம் என்பவற்றுக்குச் சமமான வேறுசொற்களையே ஆசிரியை பயன்படுத்தினார்).

வரவு டாப்பில் அப்பையனின் பெயர், 'வரவொழுங்கீனம்' என்ற காரணங்காட்டி நீக்கப்பட்டது.

விஷயம் முடிந்த பின்பும் அந்த ஆசிரியை சொன்ன'பாகுபாடுகள்' விஷயம் என்னை மிகவும் சிந்திக்க வைத்தது. அவர்களின் பாகுபாடற்ற சமூக அமைப்பை, எங்கள் சமூகத்துடன் ஆழமாய் ஒப்பிட்டுப்பார்த்தேன், ஒரு துரோகந்தான் எனக்குத் தெரிந்தது.

## வழிந்தது... அசடு!

20ஆம் திகதி வரவேண்டிய சம்பளப் பத்திரம் அம்மாதம் 25ஆம் திகதியாகியும் வரவில்லை.

அதிபர் செலவு விஷயத்தில் அநாவசியத் தாராளமானவர். அதனால் சம்பளத் திகதிக்குச் சில நாள்களுக்கு முன்னராகவே அவருக்கும் பற்றாக் குறைகள் மிகுந்து நிற்கும். அப்பற்றாக் குறைகளை எல்லா ஆசிரியர்களுக்கும் பொதுவானதாகக் கருதி, எல்லார் மீதும் ஏற்பட்ட அநுதாபத்தால், 'UNABLE TO WORK WITH EMPTY STOMACH' (வெறு வயிற்றோடு வேலைசெய்ய இயலாது) என்று ஆங்கிலத் தந்தியொன்றைப் பிராந்தியக் கல்விப்பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தார்.

அந்தத் தந்தியின் விளைவாகவோ, வேறு காரணத்தாலோ அடுத்து வந்த மாதங்களில் உரிய திகதியிலேயே சம்பளப் பத்திரம் வந்து சேர்ந்தது. தனது தந்தியின் வலிமை என்றே அவர் பெருமையோடு பிரஸ்தாபிப்பார். அக்காலத்தில் அஞ்சலகத்திலேயே சம்பளப்பணத்தை எடுப்பது வழக்கம்.

அந்த மாதச் சம்பளப் பணத்தை எடுத்து வந்து, தேவையான சில்லறையையும் மாற்றிவைத்துக்கொண்டு, நாங்கள் இருவர் சேர்ந்து அவரவர்க்கு உரிய சம்பளத்தைத் தனித்தனி 'என்வலப்'களில் இட்டு பெயர், தொகை குறித்து எடுத்து வைத்தோம். இறுதியில் 5ரூபா குறைந்து போயிற்று...!

எல்லாக் கவர்களிலும் உள்ள காசைத் திரும்பத் திரும்ப எண்ணியதில் அவரவரது சம்பளத்தொகை சரியாகவே இருந்தது. மொத்தப் பணமும் சம்பளப் பத்திரமொத்தமும் சமனாகவே இருந்தன. 5ரூபா குறைவதற்கு நியாயமில்லை. நாங்கள் இருவரும் அதைக் கண்டுபிடிக்கும் வழியைத் தீவிரமாக ஆலோசித்தோம்.

அந்த நேரம் எதேச்சையாக வந்த அதிபர் "என்ன பிரச்சினை?" என்றார். நாங்கள் பிரச்சினையைச் சொன்னோம். சம்பளப் பத்திரத்தை எடுத்து, சமபளத் தொகைகளை சடுதியாய்க் கூட்டி மொத்தத் தொகை 5ரூபா குறைவதைச் சொன்னார். "ஒவ்வொருவரது சம்பளத்தையும் தனித்தனி கூட்டிப் பார்த்து யாருடையதில் 5 ரூபா கூட இடப்பட்டது என்று பார்க்க வேண்டும்" என்று சொல்லி, தானே கூட்டிப் பார்க்கத் தொடங்கியவர், சட்டென்று ஓர் ஆசிரியரின் இறுதித் தொகை 5 ரூபா கூட இடப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டினார்.

அவரது அசாத்திய, வேகமான கண்டுபிடிப்பைப் பார்த்து நாங்கள் 'பிரமித்துப்போவோம்' என அவர் எதிர்பார்த்திருக்கவேண்டும். ஆனால் எங்களுக்குப் பிரமிப்பு என்ன... சின்னதாய் சிறு 'வியப்பு'க் கூட ஏற்படவில்லை.

## ஏன் ஏற்படாது போனது...?

ரூபாவின் இறுதி '0' ஆக இருந்தது, மிக இலகுவாக '5'ஆக மாற்றப்பட்டிருந்ததை நன்கு அவதானித்துக் கொண்டோம். 'மை' வித்தியாசமும் தெரிந்தது. பாடசாலையிலேயே இது மாற்றப்பட்டுள்ளது என்பதும் புரிந்தது.

அவர், தவறைக் கண்டுபிடித்த அசாதாரண வேகந்தான் - அசுர வேகந்தான் இலக்கத்தை மாற்றிவிட்டவர் யார் என்பதையும் புலப்படுத்தியது. திருடி ஒளித்து வைத்தவனே பொருளைக் காட்டியும் தந்ததாக உணர்ந்தோம்.

நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக்கொண்ட, உதடு இறுகிய குறுஞ் சிரிப்பில், எங்களுக்கு எல்லாம் விளங்கிவிட்டது என்பதை அவரும் தெரிந்து கொண்டபோது, அவர் முகத்தில் வழிந்ததே ஒன்று...! அதுதான் அசடு...!

## மெல்ல நழுவி விட்டார்

சூரனாய்க் காட்டிக்கொள்வதற்கும் ஒரு சூரத்தனம் தேவைதானே! அது அவரிடம் இருக்கவில்லை.

அவருக்கு இவ்வாறான சின்னச் சின்ன ஆசை - அபூர்வமாய் அவ்வப்போது ஏற்படுவது உண்டு. ஆயினும், அவர் மிக நல்லவர் என்பதில் எவருக்கும் அபிப்பிராயபேதம் இருந்ததில்லை.

## நெஞ்சில் சிறு நெருடல்

1969ஆம் ஆண்டின் இறுதி நாளுடன் எனது மலைநாட்டு வாழ்க்கையும் முடிவடைவதை அறிவிக்கும் கடிதம் எனது வீட்டு முகவரியில், இறுதித் தவணை லீவின்போது எனக்குக் கிடைத்தது.

யாழ். மாவட்டத்துக்கு மாற்றம் கிடைத்தது.

முதல் முறையாக, சொந்த இடத்தில் வேலைசெய்யும் சந்தர்ப்பம் கிடைத்தமை மிகுந்த சந்தோஷத்தைத் தந்ததாயினும், இனி அந்த மலைநாட்டுச் சீவியம் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்ற உண்மையும் இதயத்தில் சிறு நெருடலை ஏற்படுத்தியது.

கண்டியினதும் யாழ்ப்பாணத்தினதும் பிரதேச வேறுபாடுகள் - தரையமைப்பு, பனிக்குளிர், மழை, வெயில், நிலா, காற்று, நீர், மலர்கள், மனிதர், ஆகாரம் போன்ற - யாவற்றிலுமே நிறைந்திருப்பது போன்ற பிரமைஒன்று மனதில் அழுத்தப்பட்டிருந்தது.

## யாழ். மாற்றம்

1970 ஜனவரி 1இலிருந்து யாழ் பிரதேசத்துக்கு உரியவனானேன்.

யாழ். பிரதேசம் நான் பிறந்து, வளர்ந்து உருவாக்கம் பெற்ற பூமியாயிருந்தபோதும் இப்பிரதேசத்துக்கான ஓர் இசைவாக்கம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டியிருந்ததாக ஆரம்பத்தில் நான் கருதியது, வெறும் மனப்பிரமையே என்பது சில மாதங்களிலேயே எனக்குப் புரிந்தது.

வீட்டிலிருந்து சுமார் 4மைல் தொலைவிலுள்ள பாடசாலையில் எனது கடமை ஆரம்பித்தது.

## கவிதை மழை

தினமும் சைக்கிளில் பாடசாலை போய்வருவது கஷ்டமானால் ஒரு மைல் தூரத்துக்குள் உள்ள பாடசாலைகளுள் விரும்பிய ஒன்றுக்கு மாறக்கூடிய வாய்ப்பு எனக்கு அப்போது இருந்தது. ஆனாலும் இரு காரணங்களால் நான் மாறவிரும்பவில்லை.

புதிய பாடசாலை பலவிதத்திலும் எனக்குப் பிடித்திருந்தது. - அது ஒன்று. மற்றையது, ஒரு ஸ்கூட்டர் வைத்திருப்பதானால் ஒரு தேவை இருக்க வேண்டாமா...? நான் ஒரு ஸ்கூட்டர் வைத்திருப்பதற்கு பாடசாலையின் தூரம் 4மைலாவது இருத்தல் தேவையாயிருந்தது. எனவே எனது புதிய பாடசாலையை நான் மாற்ற விரும்பவில்லை.

பாடசாலை சென்று வருவதற்காக ஸ்கூட்டர் ஒன்று புதிதாய் வாங்கிக் கொண்டேன். அதன்பின்பு வீட்டிலிருந்து தாமதமாகப் புறப்படுவதும், அதிவிரைவாகச் செல்வதும் வழக்கமாகிவிட்டன.

இந்த வேகமான பயணத்தால் பலமுறை ஆபத்தான விபத்துக்கள் நேரவிருந்தன. தெய்வாதீனமாகவே தப்பினேன். இந்த விபத்துக்கள் குறித்தும், நான் ஸ்கூட்டர் ஓட்டும் வேகம் பற்றியும் வீட்டில் யாருக்கும் தெரியாது என்று எண்ணியிருந்தபோதுதான்,எனது நெருங்கிய உறவினர் ஒருவர் வீட்டுக்கு வந்து, நேரவிருந்த விபத்திலிருந்து நான் மயிரிழையில் தப்பிக்கொண்டதை விவரமாக வர்ணித்துச் சொல்லி, ஸ்கூட்டரை எப்படியாவது விற்கும்படி இலவச ஆலோசனையும் வழங்கிச் சென்றுவிட்டார். எனது தவறு எனக்கும் புரிந்தது.

அதிலிருந்து, நான் சைக்கிளில் புறப்படும் நேரத்திலும் பார்க்க முந்திப் புறப்படுவதை வழக்கமாக்கிக் கொண்டேன். நேரம் முந்திச்செல்வதாலேயே பாடசாலையில் கஷ்டம் ஒன்று என்னைக் காத்திருந்தது.

மிக நேரத்தோடு பாடசாலை வந்துவிடும் ஆசிரியர் ஒருவர் தினமும் என் வரவு நோக்கிக் காத்திருப்பது வழக்கமாகிவிட்டது. நான் போனதுமே தான் வைத்திருக்கும் 'புல்ஸ்காப்' பேப்பர்களை என்னிடம் தந்துவிடுவார். அந்தத் தாளில் கவிதை மழை பெய்திருப்பார்.

இரவு வெகு நேரம் கண் விழித்து அவர் எழுதிய கவிதைகளாயிற்றே! சும்மா மேம்போக்காகப் பார்த்து முடித்தால் நன்றாயிருக்காதல்லவா...? நான் கருத்தூன்றிக் கவனித்துக் கவனித்துப் படிப்பேன். "நன்றாயிருக்கே! ஏதாவது ஒரு பத்திரிகைக்கு அனுப்பிப் பாருங்களேன்! 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற மாதிரியாகவும் இருக்குமே!"என்று மதிப்புரை போன்று ஒரு புகழுரையும் வழங்குவேன்.

இதனால், உண்மையாகவே அவர் ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்துபோகிறார் என்பதும் எனக்குப் புரிந்தது. எனவே [illegible] தினமும் அவரது கவிதைக்குப் புகழுரை வழங்குவது என் நாளாந்த காலைநேரக் கடமையாயிற்று. அதோடு, அவரது நோக்கில் நானும் சிறந்த ஒரு கவிதா ரசிகனாகி விடுகிறேனே...!

ஆனாலும், எனக்கு உயிர்நிலை புரியாத கவிதைக்கு, நாள்தோறும் வெவ்வேறுவிதமாக புகழுரை வழங்குவது என்பது மிகச் சலிப்பான விஷயமாய் இருந்தது. இதை வேறுயாரிடம் பொறுப்பிக்கலாம் என்று யோசித்து, ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு, 'எதற்கும் இன்னாரிடம் ஒருமுறை காட்டிப் பாருங்களேன்...!' என்றும் கூறினேன்.

எவரிடத்தில் காட்டினாலும் என்னிடத்தில் காட்டும் மனத்திருப்தி அவருக்கு ஏற்படவில்லை என்றே தோன்றியது.

அவர் கவிதையில் சொல்லாட்சி இருந்தது. எதுகை மோனைச் சந்தமும் சிறப்பாய் அமைந்தது. சொல்ல வந்த பாங்கிலும் நுட்பமும் புதுமையும் இருந்தன. ஆனால், கவிதைக்கான உயிர்ச்சத்துக் குறைபாட்டினால், கவித்துவமானது இரத்தஞ்செத்துச் சோகை பிடித்து வெளிறிக் காணப்படுவதாய் நான் எண்ணினேன்.

கா.அருளானந்தம்
(கீழ்க்கருணையூர்)

அப்போதுதான் அது நிகழ்ந்தது -

அன்று ஞாயிற்றுக்கிழமை. அந்தப் பத்திரிகையின் வாரவெளியீட்டில் அவரது கவிதை - முன்னரே நான் படித்த கவிதை - பிரசுரமாகியிருந்தது.அதைப் பார்த்தவுடன் எனக்கு ஏற்பட்ட சந்தோஷத்தில், அவரைப் பார்ப்பதற்கு ஓர் ஆவல் பிறந்தது. அவர் அடையும் சந்தோஷத்தைப் பார்த்து அனுபவிக்க ஆவல் பிறந்தது.

வெளியே போகவேண்டிய தேவையுமிருக்கவே, பத்திரிகையுடன் புறப்பட்டேன். நான் முற்றத்தில் நின்று குரல் தந்ததும் மலர்ந்த முகத்துடன் வந்தார். என்னைக் கண்டதால் ஏற்பட்ட மகிழ்ச்சி தவிர, மேலதிக மகிழ்ச்சி எதுவும் இல்லை என்று தெரிந்தது.


"பத்திரிகை எதுக்காவது கவிதை அனுப்பியிருக்கிறியளா?" என்றேன்.

"அது... அனுப்பி ரண்டு மாசமாச்சு! இப்ப அதுக்கென்ன...?" என்றார்.

நான் பத்திரிகை பிரித்துக் கவிதை காட்டினேன். வாங்கி...இரவலைப்போல் தன் கவிதையைத் தானே இரு முறை படித்தார். அவர் உள்மனம் புரியும் ஆனந்த தாண்டவம், கண்களின் வழியே எட்டிப்பார்த்தது. நெஞ்சு போடும் தாளம், முகத்தின் விகசிப்பில் தெரிந்தது. அவரது கவிதைக்கு சமூக அங்கீகாரம் கிடைத்துவிட்டது.

அவர் எழுதியது அனைத்துமே கவிதைதான் என்று ஒப்புக்கொள்ள நான் இன்னும் மறுப்புக் காட்டினால்...? கோளாறு என் ரசனையில்தான்...! என்று நினைத்துக்கொண்டேன். ஒத்துப்போவதுதான் புத்திசாலித்தனம் என்பதே என் தீர்மானமாயிற்று.

அவர் இளைப்பாறிய பின்னர் எழுதிய மரபுக்கவிதைகள் மிக அற்புதமானவை; நெஞ்சைச் சிலிர்க்க வைப்பவை. என் இளமைப்பருவத்தில் அவரது கவிதைகளை எடைபோடும் அளவுக்கு எனக்கு ஆற்றல் இருக்கவில்லை என்ற உண்மையை மிகக் காலங்கடந்தே என்னால் உணர முடிந்தது.



## வாக்கு வேட்டைக்குப் பலியாகிப்போனது

அந்தப் பாடசாலையில் அந்த ஆசிரிய இளைஞருக்கு நியமனம் கிடைக்கு முன்னரே, திருமண நிச்சயதார்த்தம் முடிந்திருந்தது. நியமனம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் விவாகம் பேசி முற்றாக்கப்பட்டிருந்தது.

நியமனம் கிடைத்த போதுதான் சிக்கலும் வந்தது.

அப்போது, பிரதமராக நாட்டின் தலைமையை ஏற்றிருந்த சிறீமாவோ அம்மையாரின் அமைச்சரவையில் டாக்டர் என்.எம்.பெரேரா நிதியமைச்சராக இருந்தார். அவர் கொண்டுவர உத்தேசித்திருந்த புரட்சிகரத்திட்டம் ஒன்றினால், புதிதாக அரச நியமனம் பெறுவோர் கலியாணச் சந்தையில் சீதன விலை வீழ்ச்சியை எதிர்நோக்கினர்.

என்ன...? அப்படி ஒரு திட்டம்...!

குறித்த திகதிக்குப் பின்னர் நியமனம் பெறும் அரச ஊழியருக்கு, 'ஓய்வூதியம்' என்ற உரிமையை நீக்கும் திட்டமே அதுவாகும். 'பென்ஷன்' உரிமையை நீக்குவது என்ற திட்டத்தை அமுலாக்குவதில் தீவிரமான சிரத்தை காட்டியது அரசாங்கம்.

இளைஞர், யுவதிகள் எல்லாருமே, தத்தம் திறமைக்கேற்ற சுய தொழில் நாட்டம் ஏதுமின்றி, அரசாங்க வேலையையே நாடுவதற்கான கவர்ச்சியான அம்சங்களுள் பென்ஷன் உரிமையே முக்கியமானது என்ற கருத்தும் நிலவியது.

உடலும் உடுப்பும் நலுங்காமலும் அழுக்காகாமலும் செய்யக் கூடிய, அலுவலக வேலையையே இளைஞர், யுவதிகள் பெரிதும் விரும்பினர். இந்நிலையை மாற்றி, விவசாய, கைத்தொழில், மற்றும் தொழிற்றுறைகளை அபிவிருத்திசெய்யும் நோக்கிலும், வேலையற்றோர் தொகையைக் கட்டுப்படுத்தும் நோக்கிலுமே இறக்குமதிகள் இறுக்கமாகத் தடைசெய்யப்பட்டன. பாடசாலைகளில் தொழில் முன்னிலைப் பாடங்கள் புகுத்தப்பட்டன. சூழலின் வளத்துக்கும் திறமைக்கும் நாட்டத்துக்கும் ஏற்ப, சுயதொழில் பலவற்றிலும் மக்களை ஈடுபடச்செய்ய மேற்கொண்ட எத்தனங்களில் ஒன்றே இந்த ஓய்வூதிய நீக்கமும் ஆகும்.

ஆசிரிய இளைஞரின் விவாக விஷயத்தில் பெண்வீட்டார் ஆர்வம் குறைந்து சோர்வு தட்டியதற்கான காரணம், ஆரம்பத்தில் ஆசிரியர் வீட்டாருக்குத் தெளிவாகத் தெரியவில்லை. முதலில் ஒப்புக்கொண்ட சீதனத் தொகையை வெகுவாகக் குறைப்பதற்கு அவர்கள் முயன்ற போதுதான் 'பென்ஷன் இல்லாத மாப்பிள்ளை' என்ற சங்கதியும் வெளிப்பட்டது.

மாப்பிள்ளையின் இந்த 'மதிப்பிறக்கம்' மாப்பிள்ளை வீட்டாரிடம் ஒரு கௌரவப் பிரச்சினையாகத் தலை தூக்கியது. எவ்வளவு சீதனம் தந்தாலும் இனி இந்தக்கலியாணம் நடக்காது என்ற எல்லையை எட்டி நின்றது.

பின்னர் நடந்த உச்சமட்டச் சமரசப் பேச்சுக்களின் பயனாக, அத்திருமணம் இனிதே நிறைவெய்தியது.

ஓய்வூதியம் ஒன்று திருமணம் ஒன்றை ஒப்பேற்றவோ, தடுத்து நிறுத்தவோ கூடிய வல்லமை பெற்றிருந்ததே...! ஆச்சரியமாயில்லை...?

தேர்தலின்போது வாக்குச் சீட்டு வேட்டைக்கு குந்தகமாகும் என அஞ்சியோ என்னவோ, அதிகாரப் பதவி ஆசைக்கு, அந்த ஓய்வூதிய ஒழிப்புத் திட்டம் பலியாகிப் போயிற்று.

## பிணமும் வாய் திறக்கும்

அன்று வெள்ளிக்கிழமை.

பாடசாலை ஆரம்ப மணி ஒலிக்கும் நேரம்.

அதிபரின் அலுவலக அறையில் ஆரம்பப் பிரிவுகளில் படிக்கும் சிறுமியர் இருவர் நின்றனர். ஒரு சிறுமி 50 ரூபா நோட்டு ஒன்றை அதிபரிடம் நீட்டியபடி, அந்தக் காசு நோட்டு பாடசாலைக் 'கேற்'றுக்கு வெளியே ஓரமாகக் கிடக்கக்கண்டு எடுத்ததைச் சொன்னாள். அதிபர் விவரம் கேட்டறிந்து, அதை வாங்கி வைத்துவிட்டு அச்சிறுமிகளை வெளியே அனுப்பிவிட்டார்.

வெள்ளிக்கிழமை ஆராதனை முடிவின்போது, அதிபர், மாணவருக்கான அறிவுறுத்தல் ஏதாவது இருப்பின் கூறுவது வழக்கம்.

அன்று ஆராதனை முடிவில் அதிபர், ஒரு தொகைப் பணம் கண்டு எடுக்கப்பட்டுள்ளதையும் அப்பணத்துக்குரியவர் ஆதாரத்தோடு கோரினால் அது கொடுக்கப்படும் என்பதையும் மாணவர்களுக்குப் பகிரங்கப்படுத்தினார். அத்துடன் கண்டெடுத்து ஒப்படைத்த மாணவிகள் இருவரையும் பாராட்டி, அவர்களின் முன்மாதிரியான அந்நற்செயலைப் பெரிதும் புகழ்ந்தார்.

கண்டெடுத்த தொகை 50ரூபா என்பது அந்தச் சிறுமிகள் மூலமே மாணவர் மத்தியில் பரவிவிட்டது. (அக்காலக் கணிப்பில் 50/= கணிசமான ஒரு பெருந்தொகை எனலாம்.) அன்றையதினம் மாணவர் எவருமே அப்பணத்துக்கு உரிமைகோரி வரவில்லை.

அடுத்த பாடசாலை நாள் - திங்கள்.

9 மணியளவில் பாடசாலைக்கு ஒருவர் வந்து அதிபரிடம், தனது மகளின் வசதிகள் சேவைகள் கட்டணப் பணம் கட்டுவதற்காக 50 ரூபா கொடுத்தனுப்பியதை மகள் தொலைத்ததாகவும், கட்டணத்தை எடுத்துக் கொண்டு மீதியைத் தருமாறும் கேட்டார். 'அப்படியானால், அன்றே அவரது மகள் வந்து அதுபற்றிச் சொல்லியிருக்க வேண்டுமே' என்ற எண்ணத்தில் "நீங்கள் 12 மணிபோல் மீண்டும் வாருங்கள்" என்றார் அதிபர். வந்தவர் அறையை விட்டு வெளியேறினாலும்

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி பலன்

**09 - 10 - 1999 இலிருந்து 15 -10 - 1999 வரை**

| | | | |
|---|---|---|---|
| | வி சனி | | |
| | இராசிச்சக்கரம் | | ரா |
| கே | | | வெ |
| செவ் | | புத | சூ சந் |

*மாற்றம்:- அத்தம், கன்னி இராசியில் சந்திரன் நிற்கும்.*

*அரசியலில் நெருக்கடிநிலை தோன்றும். விட்டுக் கொடாத நிலையால் அழிவுகள் தொடர இடமுண்டு. எதிர்க் கட்சி செல்வாக்குத் தேடமுற்படும். இந்தியாவில் அரசியல் தேர்தலால் புதிய நெருக்கடிகளும், ஆட்சிப்பீட அரவணைப்பும், தலைவர்களின் மாறு பட்ட கருத்துகளும், தோன்றினாலும் பழைய முகங்கள் திரும்பவும் செல்வாக்குப் பெறும். மேற்குலகில் புதிய விஞ்ஞான முறையும் கிழக்கில் அழுத்தமும் மத்திய கிழக்கு நாடுகளில் யுத்த நெருக்கடி - பொருளாதார அழுத்தங்களும் ஏற்பட இடமுண்டு எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.*

## மேடம்

ஒருவன் வலிமை பெற்ற பின்பு அப்பாவிகளையும், சமாதானப் பிரியர்களையும் தாக்குவது அவன் தன்னை அழித்துக் கொள்வதற்குச் சமனாகும். தொழில் ஸ்தானத்தில் பொருள் ஈட்டுவதற்காக போராடியபடி இருப்பீர்கள். இதனால் சில தாக்கங்களால் நலிந்தவர்கள்பாதிக்கப்படுவார்கள். வீடு,வாகனம் சம்மந்தமான செலவுகள் அதிகரித்தாலும், சுகம் அனுபவிப்பீர்கள். எப்படியாவது இயங்குவது, வரவு - செலவு பின்பு பார்க்கலாம் என்ற சிந்தனை வட்டமிடும். உஷ்ணபீடைகள், காய்ச்சல், படபடப்பு இருக்கும். நிதானமற்ற போக்கு பல நஷ்டங்களைத் தரலாம். பொய் பேசி அகப்படுவீர்கள். கடல் துறை, போக்குவரத்துத்துறை, பத்திரிகைத்துறை, வியாபாரத்துறை, விவசாயத்துறையினர் பல நன்மைகள் அடைவார்கள். நீசச் சனியால் அடிக்கடி உடல் நிலை பாதிப்புக்களும் விஷபீடைகளும் பதற்ற நிலைகளும், நம்பிக்கையீனங்களும் குடும்பத்தில் ஏற்படலாம்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன், வெள்ளி.*

## இடபம்

மனித வாழ்வில் சக்தி,புத்தி, யுக்தியுள்ளவர்கள் எப்பொழுதும் அமைதியாக - பொறுமைசாலிகளாக - நீதி தர்மவான்களாக இருப்பார்கள். பொறுமைசாலிகளான நீங்கள் சந்தர்ப்பத்தைப் பார்த்து செயற்பட வேண்டும். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் வரும். சமாளித்துக் கொள்ளுங்கள். நெஞ்சு வருத்தம், நாரி நோ, வாய்வுத் தொல்லை, காயங்கள் என்பன வரலாம். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பிரயாணங்களால் வீண் செலவுகள் அதிகரிக்க இடமுண்டு. ரீ.வி, நிர்வாகம், மருந்து, போக்குவரத்து, இரும்பு, பண்ணைத்துறை சம்பந்தப்பட்டவர்கள் அதிக நன்மை அடைவார்கள். பொருள்களில் நிதானமாக இருக்கவும். செலவு, களவுகள் ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன், வெள்ளி.*

## மகாதேவா ஜோதிடம்

## மிதுனம்

காசுபணம் விஷக்குண்டுகள் வரை வளர்ந்து சமுதாய இன அழிவுகளைத் தருகின்றது. நீங்கள் எவ்வளவுதான் ஓடியாடி சமாதானம் பேசினாலும்அழிவு என ஒரு விதி இருந்தால் எதையும் மாற்றமுடியாது. தொழில் ஸ்தானத்தில் நல்லதைச் செய்ய முற்பட்டாலும் உங்கள் அபிப்பபிராயத்தைச் சிலர் ஏற்க மாட்டார்கள். சளி, முட்டு, குடல் வருத்தங்கள், தலைவலி, வாய்வு, வாத உளைவு எனவருத்தலாம். பத்திரிகை, அச்சுத்துறையினர், குருத்துறையினர், கலைத்துறையினர், வியாபாரிகள், விவசாயிகள் என்போர் அதிக இலாபங்களை அடைவார்கள். வாகனங்களால் அதிக செலவுகள் வரும். 7இல்இருந்து செவ்வாய் பார்ப்பதனால் அடிக்கடி உணர்வுகள் தூண்டப்பட்டு நண்பர்களுடன் கோபித்துக் கொள்வீர்கள்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன்.*

## கடகம்

வெட்கம் - மானத்துக்குள் மறைந்துள்ள விஷயம். எல்லோருக்கும் புரிவதில்லை. உணர்வுகளால் அடிக்கடி உந்தப்படுவதனால் கற்பனை வளம் ஏற்பட்டாலும் தொழில் ஸ்தானத்தில் உள்ள சிலரின் அபிப்பிராய நெருக்கடிகளாலமனமவேதனைப்பட இடமுண்டு. எதிர்ப்பாலாருடன் நிதானமாக நடந்து கொள்ளவும். நெஞ்சுப் படபடப்பு, கை கால் வலி, விறைப்பு, உஷ்ணபீடைகள், வாய்வுத்தொல்லைகள் என்பன ஏற்படச்செய்யும். சகோதரபாசத்துடன் ஏன் போட்டி போடுகிறீர்கள். கடல், கோவில், போக்குவரத்து , பத்திரிகை, வியாபாரம், அரசியல் துறையினர்கள் அதிக மாற்றங்களும் நன்மைகளும் அடைவார்கள். தூரதேசத்துச் செய்திகளை நம்பாதீர்கள். சந்தர்ப்பவாதிகளால் திசைதிரும்பாமல இருக்க முயலுங்கள்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன.*

## சோதிட சஞ்சீவி

## சிங்கம்

உண்மைகள் - உணர்வு பூர்வமான கருத்துக்கள் - எப்பொழுதும் நன்மை தந்தாலும் அவசர உலகில் எடுத்தவுடன் எல்லோரும் ஏற்றுக்கொள்வதில்லை. புதிய முயற்சிகளைத் தொழில் ஸ்தானத்தில் எடுப்பீர்கள். வசீகரமான பேச்சு அதிக நன்மைகளைத்தரும். எதிர்ப்பாலார் நன்மை செய்வார்கள். தோல் வருத்தங்கள், மனச்சஞ்சலம், நெஞ்சுபடபடப்பு, வாய்வுத்தொல்லை என சிறுசிறு வருத்தங்கள் வைத்தியங்களால் மாறும். புகழ்ச்சிக்கு மயங்கி நட்டப்படாதீர்கள். சிலர் புகழ்ந்து, புகழ்ந்து காரியங்களைச் சாதிக்கிறாகள். அவர்களை நம்பமுடியாது. சட்டம், நகை, ஆடை, குரு, கோயில் துறையினர்கள் அதிகநன்மை அடைவார்கள். பழைய சட்டதிட்டங்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்குமாயின் தைரியத்துடன் செயற்பட்டு அதை மாற்ற முயலுவீர்கள்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன்.*

## கன்னி

சிலர் எப்பொழுதும் சந்தர்ப்பவாதிகளாக இருக்கின்றார்கள். அவர்களை நம்பி நல்லவர்கள், மென்மையானவர்கள் பல சந்தர்ப்பங்களில் ஏமாறுகிறார்கள். கோவிலுக்குக் காவல் இருப்பவர்கள் கோவில் உண்டியல் உடைத்து எடுப்பது போன்று சிலர் தொழில் ஸ்தானத்தில் இருந்து செயற்படுவார்கள். இவர்கள் யார் எனக் கண்டுபிடிப்பீர்கள். விதி ஒன்று மாற்றம் செய்யும். கதியற்றவர்களுக்கு உதவி செய்வீர்கள். வாகனசுகம் அதிகமிருக்கும். உஷ்ண, வாய்வுப் பீடைகள், நரம்புத் தளர்ச்சிகள், சளித்தொல்லைகள், கை கால், நாரிநோ அடிக்கடி கொடுக்கும். சிரித்துச் சிரித்து எதையும் சாதித்துக் கொள்ளுங்கள். இரும்பு, குரு, மருந்து, எண்ணெய், நிர்வாகத் துறையினர்கள் பல நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன், வெள்ளி.*

## துலாம்

படபடப்புடன் - உணர்ச்சிவசப்பட்டு வார்த்தைகளை அளந்து கொட்டுவதனால் ஒருவரின் பலவீனங்களை மற்றவர்களை அறிய முடிகிறது. உங்கள் தொழில் ஸ்தானத்தில் பலவித எதிர்மாறான விஷயங்களைக் கண்டு அடிக்கடி மனக்கொந்தளிப்பு ஏற்படச் செய்யும். தீய நண்பரின் உறவு தொல்லை, இழப்புக்களைத் தரலாம். எதிர்பாலாரின் புறுபுறுப்புக்கு ஆளாகுவீர்கள். மின்னல் கிரகம் புதன் பல புதிய நடைமுறைத் திட்டங்களைத் தந்தபடி இருக்கும். தொழில் ஸ்தானத்தில் படபடப்பு இருக்கும். தோல்வருத்தம், மன வருத்தம், கைகால் விறைப்பு என்பன கொடுக்கும். விவசாயம், வியாபாரம், மருந்து, நகை, குருத்துறை, கோவில் வேலைகள் போன்றவற்றில் தொடர்பானவர்களுக்கு எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, புதன், வியாழன், வெள்ளி.*

## விருச்சிகம்

அயலவர்களின் தாக்கம் உங்களையும் ஓரளவு பாதிக்கத்தான் செய்யும். தொழில் ஸ்தானத்தில் இந்த நிலை இருக்கும். பொருளால்வேதனை வர இடமுண்டு. மறைமுக எதிரிகளால் வேதனை வந்து சேரும். களவு எடுப்பவனைக் கண்டுபிடிக்கு மட்டும் அவன் கள்வனல்ல. நல்லவன் மாதிரித்தான் நடமாடுவான். எனவே உங்களைச் சூழ நல்லவர் மாதிரி நடமாடுபவர்களை நம்பமுடியாது. நெஞ்சுநோ, விறைப்பு, கிருமித்தாக்கம், மூட்டுவலி என்பன சிலரை வருத்தும். மருந்து, இரும்பு,நிர்வாகம், சட்டத்துறையினர்கள், ஆலயவேலைகள் அதிகஇலாபங்களை அடைவார்கள். அரசியல் துறையில் ஈடுபட்டவர்களுக்கு மாற்றங்கள் கொடுக்கும்.இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, புதன், வியாழன், வெள்ளி.*

## தனுசு

படபடப்புடன் இருக்கும் குழப்படிப் பிள்ளை சரி, பிழைபாராமல் தமது அலுவல்களைச் செய்து வருவதைப் போல் உங்கள் செயற்பாடுகள் இருக்கும். தொழில் ஸ்தானத்தில் கஷ்டப்படாமல் காசு வருமா? மந்திரத்தால் காசு வருமா? என அதிகம் சிந்திப்பீர்கள். நிதானமாக வாழ்க்கையில் வாழ்பவர்கள் வழிதவறிப் போகமாட்டார்கள். பேச்சுச் சாதுரியம் இருந்தாலும், கண்படி பேசமுடியுமா? புதிய திட்டம் தொழில்பீடத்தில் பொருள் வரவைக் கொடுக்கும் காலமாகும். காசு வந்தால் மன உற்சாகமும் தானாக வரும். நாரிப்பிடிப்பு, வயிற்றுப் புகைச்சல், சிறுசிறு விபத்துக்கள், கிருமித்தாக்கம், பித்தமயக்கம் என்பன வருத்தலாம். எதிர்ப்பாலாரால் ஒரு மனத்திருப்பம் வர இடமுண்டு. அரசியல், சட்டம், கலை, நிர்வாகத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் அதிக இலாபங்களை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள் புதன், வியாழன், வெள்ளி.*

## மகரம்

பெற்றோர்களை ஏமாற்றும் பிள்ளைகளுக்கு - விதி என்ன பாடம் புகட்டுகிறது எனச் சிந்திக்கிறீகளா? ஓடி ஓடித் தேடும் பணக்காரனுக்கும் - நாடி வருவதை ஏற்று மெதுவாகச் செயற்படும் மனிதர்களுக்கும் இடையில் என்ன வித்தியாசம் எனச் சிந்திக்கிறீகளா? சிந்தனையில் நின்று விடாமல் தொழில் துறையில், பொருள் அடிப்படையில் இயங்கி இலாபங்களை அடைவீர்கள். வயிற்றுநோ, கைகால் பிடிப்பு, பித்தக் குழப்பம், மனக்குழப்பம், நரம்புத்தளர்ச்சி, விறைப்பு, தலைவலி என்பன வந்து வருத்தும். வாகனம், எண்ணெய்,இரும்பு, விவசாயத்துறையினர்,கூலிவேலைகள் செய்வோர் நன்மை அடைவார்கள். இந்தக்காலத்தில் எதிர்ப்பாலாருடன் அன்பாகநடந்து நன்மை பெற முயலுங்கள். தூரதேசப் பிரயாணங்களால நன்மையில்லை.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள்,வியாழன் வெள்ளி.*

## கும்பம்

உண்மைவழி, அறவழி தெய்வ வழியாகும். மெதுவாகச் செயற்பட்டாலும் நிதானமாக அவர்களால் வாழ முடிகிறது. தொழில் ஸ்தானத்தில் வசீகரப்பேச்சால் அதிக பொருள் வரவைப் பெறுவீர்கள். குடும்பத்தின் செலவுகள் மனக்கலக்கத்தைக் கொடுக்கும். நாரிப்பிடிப்பு, கைகால், மூட்டு வலிகள், நெஞ்சுப் படபடப்பு, ஓய்வற்ற நிலை, மனப்பயம் என்பவற்றால் வருந்தலாம். இடமாற்றங்களால் மன ஆறுதல் அடைவீர்கள். அன்பானவர்களின் ஆலோசனைகளால் ஆறுதல் உண்டு. சட்டம், பாதுகாப்பு , நிர்வாகம், விவசாயம், பத்திரிகை, செய்தி,ரீ.வி., தொழில் நுட்பத் துறையினர் அதிக இலாபங்களை அடைவார்கள். எதிர்ப்பாலாருக்கு உதவிசெய்வீர்கள். தூரதேசத்துச் செய்திகளால் நன்மை அடைவீர்கள். கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருங்கள்.

*அதிர்ஷ்டநாள்:-திங்கள், வியாழன*

## மீனம்

குடும்பம் ஓடவேண்டுமாயின்- நாலு வார்த்தைகளை அள்ளி வீசி மற்றவர்களை மடக்கி காசு பணம் தேடி வருவது எப்படி எனச் சிந்திக்கிறீர்களா? தூண்டில்போட்டு மீன் வேதனைப்பட்டாலும் எனக்கு இலாபம் என எண்ணும் மானிட வாழ்வில் அலை அலையாகவரும் சிந்தனைகளுக்கு மத்தியில் தொழில் செய்துவரும் ஒரு கால கட்டத்தில் இருக்கிறீர்கள் போல் தெரிகிறது. சொல்வாக்கு செல்வாக்குத் தரும். சளித்தொல்லை, வாய்வுக் குழப்பம், தலைச்சுற்றல், பித்தமயக்கம், மனப்பயம் என்பன கொடுக்கும். தொழில்நுட்பம், நிர்வாகம்,எண்ணெய், வியாபாரத்துறை போன்றவற்றில் ஈடுபாடு உடையவர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள். பொருள் இழப்பு திடீரென ஏற்படலாம். அவதானமாக இருக்கவும்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள்,வியாழன்.*

---

# நிறைவில் ஒரு மௌனம்

அழகிய தாமரைக்குளம். அசைவில்லாத நீர் சற்றே பாசித்தனமான ஒரு பச்சைநிறத்தினை ஆக்கியிருந்தது. தாமரைப் பூக்கள் தலை நிமிர்த்துகின்ற ஒரு காலைப்பொழுது. குளக் கரையோரத்தில் சிறு மகிழமரம் பூக்கள் சொரிந்திருந்தது. கீழே கொஞ்சமாய்ச் சிறுமிகள் மகிழம்பூக்களுக்கு மத்தியில் இருந்துகொண்டு தாமரைப் பூக்களை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஏன்? இருப்பவை கருதாது இல்லாதவற்றுக்காக ஏங்குவது வாழ்வாகிப் போகிறதே! மானுடத்தின் பொதுவான இயல்பிற்கு அந்தச் சிறுமிகள் மட்டும் எப்படி விதிவிலக்காக முடியும்?

**- ச.சாராங்கா -**
(சங்கத்தானை)


மெழுகு பூசியிருந்த இலைகள் நீரில் படர்ந்திருந்தன. அவற்றின் மேலே சிறுமுத்துக்களாய் நீர்த்துளிகள் சிவந்த முகங்காட்டி நளினமாகக் காற்றோடு பேசும் தாமரைப் பூக்கள்.இதெல்லாம் சந்தர்ப்பவசமாக அருகருகே அமைந்த ஒரு பொழுதில் பிரச்சனை எழுந்தது. ஓர் ஓரமாக, அப்பொழுதான் முகம்மலர்த்தியிருந்தது அந்தத் தாமரைப்பூ. சுற்றிய உலகத்தைப் பார்த்தது. தனது விஷேச அழகினைப் புரிந்துகொண்டது. பெருமை தலைக்கேறிற்று. பக்கத்தில் படுத்திருந்த இலையினை வலுச்சண்டைக்கு இழுத்தது.

"ஹேய்! வாழ்க்கையில வாழுற பொழுதெல்லாம் பிரயோசனமாய்...அழகாய்....இருக்கவேணும். என்னால தானே இந்தக் குளமே தாமரைக் குளம் எண்ட பேரோடை அழகாய் இருக்குது...." தன்னுடைய அயலில் உள்ள பூக்களையும் பெருமையுடன் பார்த்து தன் இனத்தவர்களென ஒரு சிரிப்புச் சிரித்து வைத்தது.

இலைக்குச் சடுதியாய்க் கோபம் தலைக்கேறிற்று. "ஏய்! வாழுற ஒற்றை நாளில இந்தக் கர்வமென்றால் எனக்கு எத்தனை கர்வமிருக்கும்? பச்சை இலைகள் - எங்கட புண்ணியத்தில - நாங்கள் செய்து தாற உணவிலை வளர்ந்து நிற்கிறீர். நீர் எதுக்கும் கொஞ்சம் அடக்கிவாசியும். இலைகள் மட்டும் இல்லையென்றால்... பிறகென்ன...?" தொடர்ச்சியாகக் கதைத்ததில் அது கொஞ்சம் மூச்சு வாங்கிற்று. நீர்ப்பரப்பில் லாவாகமாக உடலை நெளித்து சோம்பல் முறித்துப் பின் ஓய்வாகிற்று.

அந்தப்பொழுதில் மென்பச்சை இலையில் தாவியேறிற்று ஒரு நீர்த்துளி. இந்தச் சிறுசண்டையைப் பார்த்ததும் அதற்குச் சிரிப்பு வந்தது. நடுவு நிலையில் நின்று சிந்தித்தது. தாமரைப்பூ சொல்வதும் சரிதான். இந்தக் குளத்தையே மனிதர்கள் 'தாமரைக் குளம்' என்றும்தான் அழைக்கிறார்கள். ஒளித்தொகுப்போ - என்னமோ - இலை உணவு செய்யிறதும் மெய்தான். இந்த விவரங்களை எல்லாம் மகிழமரக் கரையோர விஸிற்றில்தான் நீர்த்துளி அறிந்திருந்தது. ஆனாலும்.... ஆனாலும்.... நானில்லாமல் இந்தக் குளந்தானேது? அது வார்த்தையாடத் தொடங்கிறது.

"இஞ்சாருங்கோ வீண்சண்டை வேண்டாம். இந்த இடத்திலை முக்கியமான ஆள் - மிகப் பெறுமதியான ஆள் - நான்தான். நான் பர[illegible]தில் ஒரு பகுதி. பரந்து கிடக்கின்ற பெரும் பயன்பாடுடைய நீரில ஒரு துளி! நான் பற்பல உயிர்களையும் தாங்குகிறேன். தரையில் பசுமையைப் பரப்புகின்றேன். எங்கும் பரந்தவன் நான். எனது பயணம் வான்முகில் வரை தொடரும். மீண்டும் மழையாய் மண்ணுக்கு இறங்குவேன் நான். எனக்கு இறப்பில்லை - உங்களைப் போல. அதனால் நான் இறைவன். நான் இருக்குமிடத்தினால் பலவித



அறிவையும் பரப்புகிறேன். இதோ தாமரை இலைகளின் மேலிருக்கின்ற [illegible] கற்பிக்கிறேன்." மிக நீண்ட வார்த்தைகள். சில விளங்கியது போலவும் சில விளங்காதது போலவும் இருக்க தாமரைப் பூவும் இலையும் வாயடைத்துப்போயின. நீர்த்துளி தன் பெருமைகளைச் சொல்லிக்கொண்டேயிருந்தது.

அந்த வேளையில் இவற்றுக்கு அண்மையாக மிதந்து வந்து கொண்டிருந்தது ஒரு சருகு. மகிழமரத்து இலை போலவும் இருந்தது அது. ஆனால் வாடிக்கருகி உடற்பாரம் முற்றாய் இழந்து முதுமையடைந்த தோற்றம். காற்றின் திசைவழியே ஒரு வயோதிபன் போலத் தள்ளாடிப் போய்க் கொண்டிருந்தது.

"ஏய்" இலை மீதிருந்து குரல் கொடுத்தது நீர்த்துளி. இது வரை தனது வீரப்பிரதாப உரை சருகின் செவிகளில் கேட்டிருக்கும் என்றும் அதற்குத் தெரிந்திருந்தது. ஏனெனில் சிறிது நேரமாகவே சருகு இவர்களின அருகில்தான் மிதந்துகொண்டிருந்தது.

"ஏய் என்ன செய்துகொண்டிருக்கிறாய்?" சருகைப்பார்த்து நீர்த்துளி கேட்டது.

"களைப்பாறுகிறேன்" ஒற்றை வார்த்தையில் பதில் வந்தது.

நீர்த்துளிக்கு அடக்கமாட்டாத சிரிப்பு "எதைச் சாதித்தாய் களைப்பாற? என் பெருமைகளைக் கேட்டாயா? சரி. சரி. உனக்குமஏதாவது புகழ் தரத்தக்க பெருமைகள் உண்டா?" கேள்விக்கு சருகிடமிருந்து பதிலேதும் இல்லை. கடைசியாக மீண்டும் பழைய கேள்வியையே கேட்டது.

"ஏன், களைக்கும்படி என்ன வேலை செய்தாய்?"

பதில் வந்தது

"ஒரு எறும்பைக் காப்பாற்றினேன். நடுக்குளத்தில் தத்தளித்த ஓர் உயிரைக் கரையிற் சேர்க்கும் கருவியாய் இறைவன் என்னை ஆக்கினார். இறைக்கு நன்றி" அடக்கம் மிகுந்த - ஆழப்பொருள் பொதிந்த - சருகின் மெல்லிய குரலில் நீர்த்துளி அமைதியானது.

"இப்போது நீங்கள் எங்கே போகிறீர்கள்?" மீண்டும் சருகிடம் கேள்வி கேட்டது.

"காற்றின் திசையில் எனது பயணம் தொடரும் நன்மையளிக்கும் கருவியாக யாருடைய வாழ்விலாவது பயன்படும் வேளைகளில் பெறுகின்ற ஆத்மதிருப்தியுடன்..... அமைதியாக என் பயணம் தொடரும்."

"இறுதியாய் ஒரே ஒரு கேள்வி. ஓர் உயிரைக் காப்பாற்றியும் கூட பெருமை பேசாது அமைதியாய் இருக்கிறீர்களே! அது எப்படி?"

சருகு மெதுவாய் நகரத் தொடங்கிற்று.

சற்றுத் தூரத்தில் நின்று திரும்பிப் பார்த்துச் சொன்னது.

"உண்மையைத் தெளிவதே ஞானம். ஞானம் பூரணத்துவம். அது முழுமை. முழுமை மௌனமாவது இயல்பு"

நீர்த்துளிக்கும் வாழ்வு புரிந்தது. தெளிவதாய்த் தோன்றிற்று. இலையிலிருந்து பெரும் நீர்ப்பரப்பில் குதித்தது. ஓர் ஆத்மா பரப்பிரம்மத்துடன் ஒன்றானது போல..... நீருடன் சங்கமமாயிற்று.

**சிந்தனைக்கு:**

**பொதுவாக மனித சமூகத்தில் அவதானிக்க கூடிய முழுமைகளின் மௌனங்களும் முழுமையற்றவற்றின் சல சலப்புக்களும் குறியீட்டுப் பொருள்களின் வடிவில் காட்டப்படுகின்றன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் கருகும் பூக்கள்...

ச. ஆனந்தி

பசுமையில் கூட எத்தனை விதங்கள்... கோடைகால வெயிலில் சாரமிழந்து நிற்கின்ற பசுமை. வரண்ட ஊதாக்காற்று வீசும் வேளைகளில் தூசிப் படலங்களால் மூடப்பட்டுச் சோகம் காக்கும் பசுமை. பிறகு ஊசியாய் அடித்துப்போகும் மாரியின் சாரலில் வெள்ளொளி வீசி நிற்கும் பசுமை. பனிக் காலப்பொழுதுகளில் வெண்ணீலப் புகைப் பனிக்கும் பின்னால் உறைந்து நிற்கும் பசுமை...

ஏனோ தெரியாமல் எல்லாப பசுமைகளிலும் மனம் வார்த்தையிழந்து லயித்து விடுகின்றது. ஆனால் எல்லாப் பசுமையைப் பார்க்கின்ற போதும் ஒரே வகையான உற்சாகஉணர்வு எழுவதாய் ஞாபகமில்லை. இன்றோ வெனில் மண்ணோடு சங்கமமாகிவிட்ட மழையின் ஞாபகமாகச் சின்னமான சின்ன நீர்த் துளிகளைத் தாங்கிவைத்திருக்கின்ற வெள்ளொளிப் பசுமைகூட அவளுள் ஈர்ப்பு எதையும் ஏற்படுத்தும் சக்தியற்றதாய் தோற்று நிற்கின்றது.

நேற்றுப் பின்னேரமும் அவள் கொஞ்சநேரம் இந்த மரத்தடிக் கல்லில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்தாள். இந்தச் சிறு செடிகள் சாம்பல் பூசி நின்றதாய்த்தான் நினைவு. 'ராத்திரிப் பெய்த புதுமழைதான்...' ஒளிர்கின்ற பசுமைக்கு மனது காரணம் சொன்னது.

'இந்த மழையைப்போல, ஒரு மாற்றம் - அற்புதமான மகிழ்வு தருகின்ற ஜீவத்துவத்தை எங்களின் மண்ணில் உயிர்ப்பிப்பதான ஒரு மாற்றம் - இந்த மண்ணிலும நிகழ்ந்து விடாதா...?'

ஏக்கமாய் எண்ணங்கள் நெஞ்சில் விரவின.

'எவ்வளவு உயிர்த்துடிப்பான இனிய நேரங்கள்...!' எப்போதோ நிகழ்வாயிருந்து இப்போது நினைவுகளில் தங்கிவிட்ட அந்தக் காலங்கள் கண்ணில் தோன்றின.


அப்போது அவள் இரட்டைச்சடைகளும் காதுநுனி தாண்டிப் போகாத சிறுமியாயிருந்தாள். அப்பாவுடன் கால் பாவாமல் பச்சையாய் விரித்து நிற்கும் வயல்வெளியில் துள்ளி ஓடுவது எவ்வளவு அருமையானது. அம்மா களை பிடுங்கும் நேரங்களில் அவள் நாற்றுக் களைப் பிடுங்கிவிட்டு அப்பாவிடம் வாங்கிக் கட்டியதுமுண்டு.

அப்போதெல்லாம் மழைதான வெள்ளொளி பச்சைவர்ணத்தைச் செடிகளுக்குக் கொடுக்கிறதென அவள் உறுதியாக நம்பினாள். இரவு மழையில்தான் குறிப்பாக அதிக சந்தேகம் வந்ததுண்டு. நிரூபணம் செய்வதற்காய் ஒரு நாள் இரவு மழையைத் தனது தேநீர்க்குவளையில் ஏந்திவைத்து விடியும்வரை தூங்காமல் தூங்கி விழுந்த பின் சூரிய ஒளியில் நிறம் பார்த்தது ஞாபகம் வந்தது.

திடீரென ஞாபகம் வந்தது போல கையைத் திருப்பி நேரம் பார்த்தாள். வேதனைத் தீயின் ஓரங்களில் தொட்டு வந்ததாய் உஷ்ணம் பரவிய பெருமூச்சுப் பிறந்தது அவளிடமிருந்து.

"இன்னும் மூண்டு மணித்தியாலம் இருக்கு..." தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

யுகங்களுக்கு முன்னர் தொடங்கிவிட்ட நீண்ட நாள் போல இருக்கிறது இந்த நாள். காலை மற்ற நாள்களைப் போலவே இருந்தது. மற்ற அறைகளில் அவளைப்போலவே வாடகைக்குக் குடியிருக்கும் சினேகிதிகளுடன்



வழமை போலவே போனது காலை - அந்தச் செய்தியைக் கேட்கும் வரை.

அந்த வார்த்தைகள் செவியில் விழுந்த கணத்தில் இதயத்தின் ஆழத்தில் குருதிசொட்ட ஆணியறைந்தாற் போலிருந்தது. கால்கள் நிற்கப் பலமிழந்துவிட்டதாய்த் தோன்றின. தூணில் சாய்ந்தபொழுது புனிதா பயந்திருக்கவேண்டும். 'சுடர்... சுடர்...' அவளது முகத்தின் வெளிறல் புனிதாவின் குரலில் கலவரமாகியது.

"ஏனம்மா... நீ அப்பிடி நினைக்கிறாய்... உங்கட ஊர்தான் எண்டாலும் எந்தத் திசையில, எங்க விழுந்தது எண்டு தெரியாதுதானே... சுடர் நீ ஏன் யோசிக்கிறாய்...?"

மலரும் செய்தியைக் கேட்டிருக்க வேண்டும்.

அவள் எதுவும் பேசாமல் நிமிர்ந்து பார்த்தாள். அந்தக் கருவிழிகளின் சிறிய வீட்டத்துள் துயரத்தின் சாயலை நேரடியாய்ப் பார்த்தபிறகு மலருக்கு வார்த்தைகள் எல்லாம் மறந்து விட்டாற் போலிருந்தன.

மலர் அவளை விலகி நடப்பது தெரிந்தது. அவள் உணர்வற்று அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்துகொண்டாள். நெஞ்சுள் எழுந்த சொல்லத் தெரியாத வேதனையை விழுங்க முடியவில்லை. கண்களுள் குமிழ்த்துக் கொண்டு பெருகியோடத் தயாராய் ஒரு வெள்ளம் வருவது தெரிந்தது.

வாசலில் வீட்டுக்காரப் பெரியவர் காற்றுக்குச் சொல்வது கேட்டது.

"பேப்பர் வாங்கிக்கொண்டுவாறன்..."

மலரோ புனிதாவோ அவர்களிடம் செய்தி சொல்லியிருக்க வேண்டும். அவள் சுவரில் தொங்கிய கிருஷ்ணர் படத்தையே வெறித்தபடி இருந்தாள். பத்திரிகை 'மேலதிக விவரங்கள் கிடைக்கவில்லை' என்பதாக மேலும் விவரங்களிருப்பதை உணர்த்தியிருந்தது.

பெரியவரின் மனைவியின்வற்புறுத்தலிலேயே அவள் பாடசாலைக்குச் சென்றிருந்தாள்.

"ரெலிபோன் பண்ணியும் விசாரிக்க ஏலாத இடம். எப்பிடியும் இரவுச் செய்திக்குத்தான் மற்ற விவரங்கள் தெரிய வரும்... அதுவரைக்கும் வீட்டில இருந்து யோசிக்கிறதைவிடப் பள்ளிக்கூடம் போனால் நல்லதம்மா... வெளிக்கிடு. புது நியமனம், அடிக்கடி லீவும் எடுக்கக்கூடாதெல்லே..."

அன்பும் பரிவும் நிறைந்த அந்தக் குரலை மீறமுடியவில்லை.

வகுப்புகளிலும் தன்னிலைக்கு வந்து கற்பிப்பதற்கு மிகுந்த பிரயத்தனம் செய்யவேண்டியிருந்தது. இடையிடையே அம்மா, அப்பாவின் முகங்கள் கண்முன் நின்றன. வெள்ளுடையில் துயரமற்று விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களுள் தம்பியும் தங்கையும் விளையாடிக்கொண்டிருக்கிறார்களா என்று தேடவேண்டும்போல ஆவல் பிறந்தது.

மூன்றாவது பாடவேளையில் வயது போன அந்த ஆசிரியை கண்களில் நிறையச் செய்திகளை வைத்துக் கொண்டிருப்பதுபோல அவள் முன் நின்று "சுடர்... அங்க நீங்கள் எந்த ஊர்...?" என்று கேட்டபோது அவளால் தாள முடியாமல் போனது.

"............" அவளின் முகத்தின் செம்மையும் கீழுதட்டைப் பற்களால் கடித்து அழுகையை அடக்கிய விதமும் முதிய ஆசிரியை எதிர்பார்த்த பதிலையே சொல்லின. தோளில் ஆதரவாகப் படிந்த சுருக்கம் விழுந்த கரங்களின் பரிவில் துவண்டபோது கண்களின் பெருகுதலைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

"ரீச்சிங்கை விட்டுட்டுப் பேசாமல் அங்கேயே போயிடலாம் போல இருக்கு ரீச்சர்..."

வேதனையில் குரல் நைந்து போயிருந்தது.

"..................."

"கண்ணுக்கு முன்னால எண்டாலும் தாங்கலாமோ தெரியேல்லை... இது ஆகக் கொடுமையாய் இருக்கு..."

செவ்வரி ஓடிய விழிகள் மீண்டும் நீரால் நிறைந்தன.

"இல்லையம்மா... அழக்கூடாது... கடவுளை நம்புவம்... நல்லது நடக்கும்..."

எதுவெனினும் எப்படி நல்லதாக முடியும்? அந்தச் சின்னக் கிராமத்தில் சிட்டுக் குருவிகளைக்கூட அவளால் இனங்கண்டுவிட முடியும். அப்படியிருக்க அந்தக் கிராமத்தின் மனிதர்கள் - உயிர்ப்பூட்டும் எளிமையான கிராமத்தின் சிரிப்பும் உண்மையான உழைப்புமாய் வளைய வந்தவர்களில் எவரோ ஒரு இருபத்திரண்டு பேர். அது அவளின் குடும்பத்தினராகவோ இல்லாமலோ இருக்கலாம். ஆனாலும் அவர்களும் மனிதர்கள். சிறுமியாய் அவள் உலகைப் புரிந்துகொள்ள முயன்ற கணங்களிலிருந்து அவளது சூழலைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள். அவர்களின் கொடுமையான இழப்புப் பற்றி எப்படி அவளால் சிந்தனையின்றி இருந்து விடமுடியும்?

கன்னத்து ஓரங்கள் ஈரமாய்ச் சில்லிட்டிருந்தன. சந்தடியில்லாத தனிமையிலிருந்து தன் அருமையான அந்தக் காலங்களையும் மனிதர்களையும் ஞாபகப்படுத்த வேண்டும் போலிருந்தது.

மதியம் அரைநேரத்துடனேயே அனுமதிபெற்று வீடு வந்துவிட்டாள். இந்தக் கல்லடியில் வந்து அமர்ந்த பிறகு தனிமை அகலக் கரம் விரித்து தன்மேல் குவிந்துகொண்டாற் போலிருந்தது. வீட்டுக்காரப் பெரியவரும் மனைவியும் எங்கோ போய்விட்டார்கள்.

நேரம் ஒரே இடத்திலேயே நிற்பது போல இரவு என்பது எங்கோ ஆயிரங் காலங்களுக்கு அப்பால் ஒளிந்து நிற்பது போலத்தோன்றிற்று.

"இன்னும் இரண்டரை மணித்தியாலம் இருக்கு..." வாய் முணு முணுத்துக்கொண்டது. 'எப்பிடிப் போகப் போகுதோ இந்த நேரம்...' நெஞ்சுள் ஏக்கம் படர்ந்தது.

திடீரென எழுந்த எண்ணம் இதயத் துடிப்பைச் சிலகணங்கள் நிறுத்திவிட்டது. 'அதுக்குப் பிறகு... அதுக்குப் பிறகு...' மேலே யோசிக்க முடியவில்லை. எல்லாம் தெரிந்துவிடும். அவளின் சின்னக் கிராமத்தின் அழகு; அந்த அன்பான மனிதர்கள் பற்றிய உள்ளார்ந்த ஈர்ப்பு எதுவும் இல்லாதவர்போல அறிவிப்பாளர் நீளமாய்ச் சொல்லிக்கொண்டே போவார். அவளால்தான் முழுமையாய்க் கேட்க முடியுமோ என்னவோ?

தோளில் படிந்த கரங்களின் ஸ்பரிசத்தால் தலைநிமிர்ந்தபோது புனிதா நின்றிருந்தாள்.

"வாங்கோ சுடர்... இருண்டு போச்சுது... உள்ளுக்குப் போவம்..."

மௌனமாய் உள்ளே போனபோது மதியம் சாப்பிடாதது ஞாபகம் வந்தது. முகம் கழுவி நீறிட்டு வானொலியின் முன்னால் அமர்ந்தபோது மலர் தேநீர் கொண்டு வந்திருந்தாள். கையில் சாப்பாட்டுப் பார்சலும்.

"மத்தியானம் சாப்பாடு எடுக்கப் போகேல்லையாம்... இப்ப இதைச் சாப்பிட்டு ரீயைக் குடி..."

மலரின் குரலில் விரைவுபடுத்தும் தொனி இருந்தது.

செய்தி அவளைச் சாப்பிட முடியாமல் செய்துவிடுமோ என்று பயந்திருக்க வேண்டும்.

விரல்களால் கிளறிக்கொண்டிருந்துவிட்டு சாப்பிட்டதாய்ச் சொல்லிக் கொட்டிவிட்டு வரும்போது செய்திக்கான ஆரம்ப வாத்தியஒலி நெஞ்சினுள் அதிர்வாய் முழங்கிற்று.

கண்களை மூடித் தலையை மேசையில் வைத்தபடி அமர்ந்திருந்தாள்.

எதுவும் யோசிக்க வலுவில்லாமல் போனது போலிருந்தது.

சொற்றொடர்களின் துண்டங்கள் மட்டும் கருத்துள் நுழைந்தன. நெஞ்சம் உறைந்து போயிருந்தது.

"தலைப்புச் செய்திகள்..."

"... நடைபெற்ற குண்டு வீச்சில் இருபத்திரண்டு பேர் பலியாகினர்..."

"...கொல்லப்பட்டோரின் விவரம்..."

"......................."

"......................."

"......................."

"... காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்..."

செய்தி நீண்டு கொண்டேபோயிற்று.

அவளில் அசைவு எதுவும் தெரியவில்லை. மலர் தயக்கமாய் அருகில் சென்று பார்த்தாள். கன்னம் தொட்டபோது புதுச்சூட்டுடன் நீர் வழிந்து கொண்டிருப்பதை உணர முடிந்தது.

"சுடர்... சுடர்... எழும்பம்மா..."

"......................."

"ஏதாவது தெரிஞ்ச பேர் சொன்னதே..."

முகத்தை நிமிர்த்தியபோது குறுக்கும் நெடுக்குமாய் கேசம் கண்ணீரில் நனைந்து முகத்தில் ஒட்டியிருந்தது.

"என்னம்மா... சுடர்..."

"இல்லை..." குரல் பலவீனமாய் ஒலித்தது.

"இடம்பெயர்ந்து தங்கியிருந்த ஆக்கள் போல இருக்கு..." புனிதாவின் குரல் மெலிதாய் ஒலித்தது.

பெரியவர் செருமிக்கொண்டே கூடத்தைவிட்டு வெளியேறுவது தெரிந்தது. அவரின் சந்தோஷமும் வாஞ்சையும் அந்தச் செருமலில்தான் வெளிப்படும் என்பது அங்கு எல்லோருக்கும் தெரிந்தேயிருந்தது. பெரியவரின் மனைவி நன்றியில் நெக்குருகும் குரலில் சஷ்டி கவசம் படிப்பது கேட்டது.

அவளது கண்களில் இன்னமும் நீர் பெருகிக்கொண்டிருந்தது. தன்னவர்களின் இருப்பையிட்டு எழுந்த மகிழ்வின் கண்ணீரா... முகம் தெரியாத அந்தத் தன்மொழி பேசும் மக்களின் இழப்பிற்கான கண்ணீரா... அன்றி இன்னொரு விடியல் இதேபோலச் செய்தியோடு விடியலாம் என நினைவா ...எதுவெனத் தெரியவில்லை அவர்களுக்கு.

எதுவெனினும் அந்தக் கண்ணீரின் மொழி இந்த மண்ணுக்குச் சொந்தமானதுதான். அவர்களால் அதைப் புரிந்து கொள்ள முடியும்.

வெளியே மழை உரத்துப் பெய்து கொண்டிருந்தது. நாளை தளிர்கள் வெள்ளொளிப் பசுமையாய்ச் சிரிக்கக் கூடும். *

# புதுமை மிக்க புரட்டாதிச் சனி



வருடாந்தம் புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் சனீஸ்வரனால் பாதிக்கப்பட்டவர்கள் விரதம் இருந்து எள்எண்ணெய் - கறுப்புச் சீலையில் - கறுப்பு எள்ளுப் பொட்டலம் கட்டி - சனீஸ்வரனுக்கு எரித்து 'எமது பாவங்களை எரித்து எமக்கு கஷ்டநஷ்டங்களைத் தராது துன்பங்களை அகற்றி நற்பலன்களைத் தரும்படி' வேண்டுதல் செய்து வருகிறார்கள்.

நான்கு வேதங்களான இருக்கு, யசுர்,சாமம்,அதர்வணம் ஆகிய வேதங்களில் ஓர் அங்கமான சோதிட சாஸ்திரத்தில் மக்கள் நம்பிக்கைகொண்ட காலம்தொட்டு வழிபாட்டு முறைகளைச் செய்துவருகின்றார்கள். துன்பங்கள் அகன்று வாழ்வில் நன்மைகள் நடக்கும் என்ற நம்பிக்கையுடனேயே அவர் வழிபாட்டுமுறைகளைக் கடைப்பிடிக்கின்றனர்.

ஆகம விதிப்படி - ஆலயங்கள் முறைப்படி - அமைக்கப்பட்டு செயற்படுவதனால்தான் அந்தந்த விதிப்படி துன்பங்கள் அகலமுடிகிறது. அதற்கு மக்களின் நம்பிக்கை மிக முக்கியமாகும். கல்லு கடவுளாகலாம்; கடவுள் கல்லுக்குள் இருக்கலாம். ஞானசம்பந்தர், அப்பர் பெருமானின் சொல்லால் கோயில் கதவு திறந்து, பூட்டுகின்ற தென்றால் கண்பார்வையால், வேண்டுதலால், அசைவால் நாதமும் - ஒளியும் அருவமும் - உருவமுமான அருள்சக்தியின் அளப்பரிய ஆற்றலால் எதுவும் நடக்கும். எமது தகுதிக்கு ஏற்ப இறைவனின் அருட்காட்சி, சக்தி அறியும் தன்மை எமக்கு அருளப்படுகின்றது. எல்லோரும் எல்லா நிலையையும் அடையமுடியாது. எத்தனையோ ஜென்மப் பிறவிப் பிணியால் பிறந்து - பிறந்து வந்து அடையும் நிலையில் ஒன்றுதான் இப்பிறவி. இப்பிறவி நிர்ணயம் எமது பிறவியின் இரகசியம். நாம் செய்துவந்த செயற்பாடுகளின் தன்மைகளை அளந்து எமது பிறவி உதயமாகிறது. அதற்குரிய அடையாளச் சின்னமாக எமது ஜனனக் குறிப்பு அமைகின்றது. அக் குறிப்பில் வரும் நவக்கிரகங்களில் ஒரு கிரகமே ஆயுள்காரனாக - சனீஸ்வரன் என்ற கிரகமாகும்.

நாம் பிறந்த அன்றே பிறந்த நட்சத்திரம் நமது பிறப்பின் உலகத்தொடர்பு குறியீடாகின்றது. எமது ஆயுள் கோட்டு அதிபதி சனீஸ்வரன் வரம்புக்குள் எமது வாழ்வு அமைகின்றது. இவ்வாறு இருக்கும் பொழுது எந்த மானிடஜீவன்களும் திடீரென பரமாத்மாவை உணரவோ, அடையவோ முடியாது.

"எத்தனையோ பிறவி எடுத்து இளைத்துவிட்டேன் எம் பெருமான்" என்றவரின் நிலை எப்படியானது?

"எனக்கு சாத்திரத்தில் நம்பிக்கை இல்லை. எனது மனைவி, பிள்ளைகள், நீங்கள் சஞ்சீவியில் எழுதுகிறதைப் பார்த்துவிட்டு ஒருக்கால் குறிப்புக்களைக் காட்டிப் பலனைக் கேளுங்கோ என்று தினமும் நச்சரிக்கிறார்கள்" என்ச் சொல்லி வந்த அன்பர் ஒருவர் - அவரைப் போன்ற பலர் எம்மத்தியில் உள்ளார்கள்.

## மகாதேவா ஜோதிடம்

முன்னேற்றத்திற்கு காரணமான நவக்கிரகங்களில் சாந்தியைக் கொடுக்கும் குருபகவானும், ஆயுள் பலத்தைக் கொடுக்கும் சனீஸ்வரனும் மிக முக்கியமானவர்கள். இந்தச் சனீஸ்வரன் மனிதர்கள் முற்பிறவியில் புண்ணியம் செய்திருந்தால் அள்ளி அள்ளி கொடுப்பான். பாவம் செய்திருந்தால் கெடுதிகள், துன்பங்கள், துயரங்களைக்கொடுத்து புடம் போடுவான்.

**இன்றைய நிலையில்:-**

* இடப இராசிக்காரர்களுக்கு:- அதாவது கார்த்திகை 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் முதலாம், 2ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு - ஆரம்பச் சனி அல்லது மங்கு சனியாக ஏழரை வருஷங்கள், சந்தேகம், பொருள் தொல்லை, வீட்டைவிட்டு குடும்பத்தில் குமுறும்நிலை - பிரிவு என்பன கொடுக்கும்.

* மேடம் இராசிக்காரர்களுக்கு:- அதாவது அச்சுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதங்களில் பிறந்தோருக்கு - நடுச்சனி, பொங்கு சனி போராடி விடுதலை, பணப்பிரச்சினை, காணிபூமிப் பிரச்சினை, அயலவர்களுடன் வாக்குவாதம், செய்யாத குற்றங்களுக்குத் தண்டனை, கடன் காசால் வேதனை, திடீர் பிரிவு, திடீர் பணவரவு என மாறிமாறிப் பலன் கொடுக்கும் நிலை 5வருஷங்களுக்கு நீடிக்கும்.

* மீனம் இராசிக்காரக்களுக்கு:- அதாவது புரட்டாதி 4ஆம் கால், உத்திரட்டாதி, ரேவதி நட்சத்திரக்காரருக்கு - கடைச்சனி புங்குசனியாக இரண்டரை வருஷமும் கடன் தொல்லை, குடும்பப் பிரிவு, பொருள் இழப்புக்கள், சொத்து பறிபடல் அல்லது இழுபறி, அன்னியரால் துன்பம் என்பன தொடரும். ஏழரைச் சனி - ஏழரை வருஷங்கள் தொடரும்.

* கன்னி இராசிக்காரர்களுக்கு அதாவது உத்தரம் 2, 3, 4ஆம் பாதங்கள் அத்தம், சித்திரை முதலாம், 2ஆம்பாதங்களில்பிறந்தவர்களுக்கு - இரண்டரை வருஷங்களுக்குக்கொடுக்கும்.

அட்டமத்துச் சனி யுத்தபயம், படிப்புக் குழப்பம், பயங்கரச் சந்தேகங்கள் கொடுக்கும். நண்பர்கள் எதிரிகளாவர், மேலும் ஒரு நாட்டில் நீதிமன்ற வழக்கு, சிறைச்சாலை, சட்ட நடவடிக்கைகள், இரும்பு, மருந்து, ஆட்சிபீடம், சமயத்துறை, நிர்வாக பீடம், அரசியல் என மாறிமாறிச் சனீஸ்வரன் தாக்கம் செய்வான். கோள் சொல்லும் அயலவர், படியாத மூத்த பிள்ளை, கணவனைப் பழிக்கும் மனைவி அல்லது மனைவியைத் தூற்றும் கணவன் போன்றோரை சனீஸ்வரன் ஆட்கொள்ளுவான்.

8ஆம் எண்ணில் பிறந்தவர்களுக்கும் சனீஸ்வரன் தாக்கம் ஏற்படும். தை, மாசி (தமிழ் மாதங்களில்) பிறந்தவர்களுக்கும் சனீஸ்வரன் ஓரளவு தாக்கம் கொடுப்பான்.

இவர்கள் விசேடமாக புரட்டாதி மாதச் சனிக்கிழமை விரதங்கள் இருந்து சாந்தி பெறலாம். ஏழைகளுக்குத் தானதர்மம் செய்வதனாலும், காகங்களுக்கு எள்ளுச்சாதம் படைப்பதனாலும் நீல மலர்களால் அர்ச்சனை செய்வதனாலும் சிவன், விஷ்ணு ஸ்தலங்களில் நவக்கிரக பீடங்களில் அர்ச்சனை செய்வதனாலும் நற்பலன்கள் பெறலாம்.

* முதலாம் வயதில் ஏழரை இருப்பின் முதலாம் சுற்று மங்கு சனி.

* 30 வருடங்களில் இரண்டாம் சுற்று - பொங்கு சனி.

* 60 வயதில் 3ஆம் சுற்று - புங்கு சனி.

* 90 வயதிலும், 120 வயதிலும் நான்காவது சுற்று - மரணச் சனி என மாறிமாறி வரும்.


மேலும் தமது ஜாதகக் குறிப்புக்களில் சனி மகாதிசை - புத்தி நடப்பவர்களும் சனீஸ்வரனுக்குப் பிரீதி செய் வதனால் நற்பலன் அடைவர்.

சனீஸ்வரன் பாதிப்புள்ள கிறீஸ்தவ அன்பர்கள் அந்தோனியார் அல்லது மாதா கோவில்களுக்கு விளக்கெரிக்க எண்ணெய், மெழுகுதிரி கொடுத்து நேர்த்தி செய்வதனால் நற்பலன்அடைவார்கள். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20ஆம் நூற்றாண்டில் உலக இலக்கியம்

## சில குறிப்புகள்



ரி.எஸ்.எலியட்

22

இத்தொடரின் இந்தப்பகுதியை எழுதத் தொடங்குகையில கேட்க நேர்ந்த வானொலிச் செய்தி தற்செயலானது. அது இந்தாண்டு இலக்கியத்திற்கான நோபல்பரிசு ஜேர்மன் எழுத்தாளரான குந்தர் க்ராஸ் அவர்களுக்குக் கிடைத்திருப்பதாகக் கூறிற்று. க்ராஸ் பற்றி இத்தொடரின் 19 ஆவது அங்கத்தின் இறுதியில் இரண்டே வரிகள் மட்டும் கூறப்பட்டிருந்தன - அவருடைய படைப்பான 'தகரமேளம்' பற்றியும். 'தகரமேளம்', 1959இல் முதலில் ஜேர்மன் மொழியில் வெளியானதாகவும் தெரிகிறது. நாற்பதாண்டுகள் கழித்து அதற்கு இந்த கௌரவம் கிடைத்திருக்கிறது.

இந்த இடைப்பட்ட காலத்தில், நாவல் பல்வேறு பதிப்புகளைக் கண்டுள்ளது. அது, சினிமாவாகவும் வெளியாகி, 'தங்கத் தெங்கு' விருது மற்றும் சிறந்த வெளிநாட்டுச் சினிமாவுக்கான 'ஒஸ்கார்' விருது போன்றவற்றையும் பெற்றிருந்தது.

1927இல் ஜேர்மனியின் டான்ஸிக் நகரில் பிறந்த க்ராஸ், வரைவல்லுநராக, சிற்பியாக, மேடை அமைப்பாளராக, நாடகாசிரியராக, கவிஞராக விளங்கியவர். இரண்டாம உலகப்போரின் போது ஜேர்மன் படையில் சேர்ந்து போரிட்ட அவர் அமெரிக்கரால் சிறைப்பிடிக்கப்பட்டார். போரின் பிறகு பாரிஸிலும் சிறிதுகாலம் வசித்தார். 'தகரமேளம்' பிரசுரிக்கப்படுவதற்கு முன், அவரை அதிகப் பேருக்குத் தெரியாதிருந்தது. தீவிர இலக்கியவாதிகளுக்கும் பரீட்சார்த்த நாடக முயற்சிகளை மேற்கொள்வோருக்கும் மட்டுமே அவர் அறிமுகமானவராயிருந்தார். 'தகரமேளம்' ஜேர்மன் மொழியில் மாத்திரமின்றி, ஆங்கில, பிரெஞ்சு மொழிகளிலும் மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றது.

அதன் பிறகு, 'பூனையும் எலியும்', 'நாய் வருடங்கள்', 'நத்தையின் தினக் குறிப்பிலிருந்து' போன்ற நாவல்களும், கவிதைத் தொகுதி, நாடகப் பிரதி, ஆகியவையும் பிரசுரம் பெற்றன. 'தகரமேளம்' அடுத்த நூற்றாண்டிலும் தன் செல்வாக்கைச் செலுத்தப் போகும் படைப்பாக மிளிரும் என பரிசுக்குழு அறிக்கை நம்பிக்கை தெரிவித்திருக்கிறது.

இனி விட்ட இடத்திற்கு - ஆங்கில எழுத்தாளர்களிடம் - மீண்டும் வரலாம். ஜோர்ஜ் ஓர்வெல் மிகமுக்கியமான ஒருவர். அவருடைய 'விலங்குப் பண்ணை' மற்றும் '1984' ஆகிய நாவல்கள் அதிகம் பேசப்படுவன. ருஷ்யப் புரட்சியின்பின் அமைந்த அரசு பின்னர் திசைமாறி அதிகாரப் போட்டியிலும் எதேச்சதிகாரத்திலும் சிக்குண்டு, புரட்சியின் இலட்சியங்களையே மறந்து, மக்கள் விரோதப் போக்கில் செயற்படத் தொடங்கியதாக ஓர்வெல் உணர்ந்தார். அதனைக் கிண்டல்செய்து, விமர்சிப்பதாயமைந்தது, 'விலங்குப் பண்ணை' என்ற சிறுநாவல். விலங்குகள் குறியீட்டுப் பாத்திரங்களாக வருகின்றன. ஈசாப் கதைகள் பாணியில் நாவல் நகர்ந்தாலும் அது சொல்லும் சேதி மிகவும் தெளிவாகவே அமைகிறது.

ஓர்வெல், ஒரு சத்திய ஆவேசத்துடனேயே 'விலங்குப் பண்ணை'யை எழுதியிருக்க வேண்டும்; அவரது சரித்திரத்தைப் பார்த்தால் அது புரியும். எரிக் ப்ளெய்ர் என்ற இயற்பெயர் கொண்ட ஓர்வெல், 1903இல் கிழக்கு வங்காளத்தில் பிறந்தார். ஆங்கில சாம்ராஜ்யத்தின் ஓர் அடிநிலை அதிகாரியான தந்தையின் தொழில் காரணமாக, குடும்பம் இந்தியாவிலிருந்தது. என்றாலும், படிப்பிற்காக மகனைத் தாய்நாட்டிற்கே அனுப்பிவைத்தார் தந்தை. ஓர்வெல்லுக்கு அங்கு ஒத்து வரவில்லை. முற்றுமுழுதான ஆங்கிலேயனாக இருந்தும், இந்தியாவிலிருந்து போனதாலும், பொருளாதார ஏற்றத்தாழ்வு காரணமாகவும் அவர் அந்நியமாக உணர்ந்தார். இந்த அனுபவங்கள், அவரை உழைக்கும் வர்க்கத்தின்பாலும், அநீதிக்குள்ளானவர் பேரிலும் அனுதாபம் கொள்ளவைத்தன. பின்னர் கல்லூரிப் படிப்பை மேற்கொள்ளாது, ஏகாதிபத்தியத்தின் காவல்துறையில் சேர்ந்து பர்மாவில் கடமையாற்றிய காலத்தில் இந்த நிலைப்பாடுகள் மேலும் வலுவுற்றன. வேலையை விட்டு இங்கிலாந்து திரும்பி, ஒரு தொழிலாளியாக வாழ்க்கை நடத்தலானார். ஒடுக்கப்பட்ட - போராடும் - மக்கள்பாலிருந்த ஈடுபாடு காரணமாக, ஸ்பானிய உள்நாட்டுப்போரிலும் கலந்து கொண்டு சர்வாதிகாரியின் படைகளுக்கெதிராகப் போரிட்டுக் காயமடைந்தார். இது நடந்தது 1936 இல். ருஷ்யாவின் புதிய, இளைய அரசின் மீது அன்பும் அபிமானமுங் கொண்டிருந்த ஓர்வெல், இந்த ஸ்பானியப் போரில் குடியரசுவாதிகளுக்கு ருஷ்ய ஆதரவு - எதிர்பார்த்ததுபோல் - கிடைக்காததில் ஏமாற்றமடைந்தார். புதிய சோவியத் அமைப்பானது, ஸ்தாலின் ஆட்சியின்கீழ் திசைமாறி,அடக்குமுறை அரசொன்றிற்கு இட்டுச் செல்வதாக அவர் உணர்ந்தார்.இந்த நிலைப்பாட்டினடியாய் உருவானவையே மேற்சொன்ன இரு நாவல்களும்.

இவ்விரண்டையும்விட, அவரது செழுமையான அனுபவங்களின் விளைவாய், 'பர்மிய நாட்கள்', 'பாரிசிலும் லண்டனிலும்', 'கற்றலோனியாவிற்கு வணக்கம்' ஆகிய படைப்புக்கள் உருவாகின. இவற்றில் ஈற்றில் குறிப்பிடப்பட்டது, ஓர்வெல்லின் மிகச் சிறந்த சாதனையாகப் பலராலும் கொள்ளப்படுகிறது. இவைதவிர, 'அவையெல்லாம் ஆனந்தம்' என்ற தலைப்பில் தமது அனுபவங்களையும் அவர் நூலாக்கினார். சோவியத் அரசின் போக்கை விமர்சித்தார் என்பதற்காக ஏகாதிபத்தியப் போக்கினை அவர் ஏற்றுக்கொண்டார் என்பதன்று. அமெரிக்க - பிரிட்டிஷ் அரசுகளையும் அவர் விமர்சிக்கவே செய்தார்.

ஓர்வெல்லின் கருத்துக்களுடன் முரண்பட்டவர்கள் கூட, அவர் தம வாழ்விலும் எழுத்திலும் மனச்சாட்சிக்கு விசுவாசமாய் நடந்துகொண்டார் என்பதையும், மனிதகுல மேம்பாட்டிற்காகத் தம் கலையாற்றலையும் வாழ்வையும் அர்ப்பணித்தார் என்பதையும் கட்டாயம் ஏற்றுக்கொள்ளவே செய்வார்கள்.

## சாந்தன்

இந்த நூற்றாண்டின் ஆங்கிலக் கவிஞர்களில் முதலிடம் வகிப்பவர் ரி.எஸ். எலியட். 1948இல் நோபல் பரிசு பெற்றவர். நவீன கவிதை முன்னோடியாகவும் மிகவும் செல்வாக்குப் பெற்ற கவிஞராயும் திகழ்ந்தவர்.

அவருடைய ஆரம்பகாலக் கவிதைகள் அந்நியமாதலையும், ஆன்மீக வறுமையையும் சுட்டி நின்றன. 'ப்றூ.'. ப்றொக்', 'வெறும் நிலம்', 'வெற்று மனிதர்', ஆகிய தொகுதிகள் அவை. ஆனால் இவற்றின் பிறகு விழித்துக் கொண்ட எலியட்டின் ஆன்மீக உணர்வு, அவருடைய பிற்காலக் கவிதைகளில் எதிரொலிக்கலாயிற்று.

அமெரிக்காவில் பிறந்த எலியட், தமது 27ஆவது வயதில் இங்கிலாந்தில் குடியேறி, பின்னர் அந்நாட்டுப் பிரஜையாகவே ஆனார். ஆங்கிலத் திருச்சபையில் சேர்ந்தபின் அவர் எழுதிய 'விபூதிப் புதன்' அவநம்பிக்கையிலிருந்து நம்பிக்கைக்கும் விரக்தியிலிருந்து விசுவாசத்திற்கும் அவர் ஏற்றம் பெற்றதைக் காட்டுவது.

முதலாம் உலகப் போரினைத் தொடர்ந்து வாழ்வு பற்றிய தம் கண்ணோட்டத்தை மாற்றிக்கொண்ட ஒரு தலைமுறைக் கவிஞர்களைச் சேர்ந்தவர் எலியட். நவீன வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடமுயன்றவர் அவர். கவிதையானது, உணர்வுகளை நேரடியாகக் கூறக்கூடாது என்பது அவர் கொள்கை; பதிலாக, படிமங்களைக் கவிஞன் தேர்வு செய்யும் முறைமையினூடாக, அவை வாசகருள் உணர்வுகளைத் தூண்டவேண்டும் என அவர் நம்பினார்.

அமெரிக்காவில் பிறந்த எலியட், பிரிட்டனைத் தமது தாயகமாக்கினாரென்றால், பிரிட்டனில் பிறந்த ஒரு கவிஞர், அமெரிக்காவைத் தாயகமாக்கிக் கொண்டார். அவர் ஓடென். எலியட்டின் சமகாலத்தவர் மட்டுமன்றி, யீட்சுக்கும் எலியட்டுக்கும் அடுத்தாற்போல முக்கியத்துவம் வாய்ந்த நவீன காலக் கவிஞராகவும் மதிப்புப் பெறுபவர்.

ஓடெனின் வாழ்வும் ரசமானது. நாம் ஏலவே பார்த்த ஜேர்மன் நாவலாசிரியரான தோமஸ்மானின் மகளை அவர் மணமுடித்தார். அதே 37ஆம் ஆண்டில், ஸ்பானிய உள்நாட்டுப் போரில் ஜனநாயக சக்திகளுக்கு உதவுமுகமாக - ஓர்வெல் போலவே - ஓடெனும் ஸ்பெயினுக்குப் போனார். இரண்டாண்டுகள் கழித்து அவர் அமெரிக்காவில் குடியேறினார். 'புலிட்ஸர்' பரிசும் பெற்றார். எலியட்டைப போலவே ஓடெனும் ஆத்மீகத்திற்கு திரும்பிய பின் அவரின் படைப்புக்கள் கனதி கொண்டு மிளிர்ந்ததாகக் கூறப்படுகின்றது. 'இந்தத்தீவில்', 'தற்காலிகமாக', 'அவதிக்காலம்' - ஆகியன அவரின் பிரபலமான படைப்புக்களாகும்.

குறிப்பிடப்படவேண்டிய இன்னொரு பிரிட்டிஷ் படைப்பாளி, வேர்ஜினியா வூல்.'.ப். சக எழுத்தாளரும் இலங்கை நிலைக்களனில், 'காட்டிலொரு கிராமம்' என்ற நாவலை எழுதியவருமான லெனாட் வூல்.'.பின் மனைவி. நாவலாசிரியையாக மட்டுமன்றிச் சிறந்த விமர்சகராகவும் திகழ்ந்தவர். ஜேம்ஸ் ஜொஸ்ஸைப் போலவே நனவோடை உத்தியைக் கையாண்ட முன்னோடிகளில் ஒருவர். (தொடரும்...)

# கபிலர் கூறும் இன்னாதன சில

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒரு சிலவற்றுள் கூறப்பட்டுள்ள வாழ்வியற் கோட்பாடுகள் குறித்துக் கடந்த சில வாரங்களாகச் சிந்தித்து வருகின்றோம். அவ்வரிசையில் இன்று இன்னா நாற்பது என்னும் நூலுள் வரும் ஒரு செய்யுள் குறிப்பிடும் இன்னாதன – துன்பந்தருவன – வெளியிடும், துன்பத்திற்குரிய மூலங்களை காண்போம்.

இன்னா நாற்பது, கடவுள் வாழ்த்து முதலாக நாற்பத்தொரு வெண்பாக்களைக் கொண்டது. ஒவ்வொருபாடலும் ஒருசில இன்னாதனவற்றை அட்டவணைப்படுத்தி வெளியிடுகின்றது. 'இன்னா' எனுஞ் சொல் பெரும்பாலும் துன்பம் என்னும் பொருளிலேயே பயின்று வருகின்றது. மேலும்'தகுதி அற்றது', 'நன்றற்றது' என்னும் பொருளும் சில இடங்களில் குறிப்பிடுதலைக் காண்கின்றோம்.

அனைத்து மக்களும் இன்பத்தையே விழைகின்றனர். துன்பத்தின் காரணங்களை அறிந்து கொண்டால் ஏற்ற பெற்றி ஒழுகி, வருமுன் காத்து, இன்பம் பெறலாமன்றோ!

தேன்கூடு

இன்னா நாற்பது நூலின் ஆசிரியர், கற்றார் போற்றும் கபிலர் பெருமான். இவர் சங்கப் புலவர்களுள் முன்னணியில் வைத்து எண்ணப்படுபவர். எட்டுத் தொகையுள்ளும் பத்துப் பாட்டினுள்ளும் இவர் பாடிய பாடல்கள் பல இடம்பெற்றுள்ளன. கற்றுணர்ந்த சான்றோர்கள், 'இன்னா நாற்பது' நூலை இயற்றியவர் இவரே என்றும் அறுதியிட்டுக் கூறுவர்.

கற்றோர் போற்றும் கபில தேவர், புறநானூற்றுள்ளே தம்மை 'யானே பரிசில் மன்னும் அந்தணன்' என்றும் 'அந்தணப் புலவன்' என்றும் கூறியிருக்கின்றார். ஒரு சமயம் செல்வக்கடுங்கோ வாழியாதன் என்னும் வேந்தன், அவர் கையைப்பற்றி ஆரா அன்பின் நும்கை மெல்லியவாமால் என்று காரணம் கேட்டு நின்றான். கபிலர், 'ஆமாம், உண்டு வருந்துதல் அல்லது பிறர் தொழில் அறியேன்' என்று விடை பகர்ந்தனராம். பாடும் பணியே பணியாகக் கொண்டவர் அவர்.

சங்கப்புலவர் பலரும் இவரைப் பெரிதும் பாராட்டுவர். 'செறுத்த செய்யுள் செய் செந்நாவின் வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்' என்று மேலும் 'புலனழுக்கற்ற அந்தணாளன்' என்று வருவன ஒருசில எடுத்துக் காட்டுக்களாம்.

வரையா வள்ளன்மையால் வையமுற்றும் புகழ்நிறுவிய பறம்புமலைக் கோமானாகிய வேள்பாரி இவரை ஆருயிர்த் தோழனாகக் கொண்டொழுகியமை நாமறிந்ததே!

எடுத்துக் காட்டாக இன்னா நாற்பதில் வரும் ஒரு செய்யுளை நோக்குவோம். பெரியாரோடு என்று தொடங்கும் பாடலை எடுத்துக்கொள்வோம். இப்பாடலில் துன்பந்தருவன நான்கு வருகின்றன. அவை பெரியார் தொடர்பைக் கைவிடுதல், அரியவை செய்தும் என்று ஆர்ப்பரித்தல், அன்பிலாரிடத்துத் தமது துன்பங்களைக் கூறுதல், பெரியாருக்குத் தீங்கு விளைவித்தல் என்பன.

பெரியார் என்றால் யார்? உருவத்தினால் பெரியவரா? இல்லை! இல்லை!! கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்த நல்லோரையே பெரியார் என்கின்றோம். அவர் அறத்தின் திறமனைத்தும் அறிந்திருப்பர். பெரியோரை மூத்தோர் என்றும் கூறுகின்றோம். அவர் வெறும் வயதில் மட்டும் மூத்தவர் அல்லர்; அறிவானும், சீலத்தானும், காலத்தானும் மூத்தவர் என்று கொள்ளுதல் வேண்டும். அவர் நீதியையும், உலகியலையும் நன்கு உணர்ந்திருப்பர்; பெரியார் தொடர்பு, அரியவற்றுள் எல்லாம் அரியதாகும். திருவள்ளுவதேவர்,

> 'பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
> நல்லார் தொடர்கை விடல்'

என்று கூறுவர்; துர்ச்சனர் பதினாயிரம் பேரைப் பகை கொள்ளுவதிலும் கொள்ளாதது, நல்லோர் தொடர்பைக் கைவிடுதலாகும். ஒருவர்,

## சிந்திப்போம் செயற்படுவோம்

என்றும் தம்மினும் பெரியாரை, அறிவு முதலியவற்றால் மிக்காரைத் தமராகக் கொண்டு ஒழுகுதல் வேண்டும். பெரியார் தொடர்பைத் துண்டித்தல் துன்பம் தரும்.

சிலர் தம்மாற் செய்தற்கரியவற்றைச் செய்துமுடிப்போம் என்று நாப்பறை கொட்டுவர்; சொல்லால் முழக்குவதில் ஒரு சுகமும் இல்லை. திருக்குறள் இதனை, 'சொல்லுதல் யார்க்கும் எளிது; சொல்லிய வண்ணம் செய்தல் அரிது' என்று கூறும்; புறநானூறு 'ஒல்லாததை ஒல்லும்' என்று கூறுவது, இரப்போரையும் ஏனையோரை வருத்தும் – வாட்டும் என்று குறிப்பிடும். (ஒல்லாதன = இயலாதன)

அடுத்து வருவது, தாம் உற்ற துன்பங்களை அன்பிலாரிடம் கூறுவது. ஆசிரியர் 'பரியார்க்கு' என்று கூறுவர். பரிதல் – இரங்குதல்; அன்பினாலே இரக்கம் உண்டாகும் – அதுவே ஆண்மை நேயமும். தாயுமானாரடிகள் 'எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவுநின் தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே' என்றருளவர்.

இறுதியில் வருவது பெரியார்க்குத் தீங்கு செய்தல். திருவள்ளுவதேவர், இதனை சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார். காட்டகத்துச் செல்லும் ஒருவன், ஆங்குத் தீயாற் சுடப்பட்டானாயினும், ஒருவகையில் உய்தல் கூடும். ஆனால் பெரியாரைப் பிழைத்தொழுகுவானாயின் எவ்வகையானும் உய்யானென்று கூறுவர். இனிப் பாடலைப் படிப்போம்,

> பெரியாரோ டியாத்த தொடர் விடுதல் இன்னா,
> அரியவை செய்தும் எனவுரைத்தல் இன்னா
> பரியார்க்குத் தாமுற்ற கூற்றின்னா, இன்னா
> பெரியார்க்குத் தீய செயல். (செ.26)
> (குற்றியலிகரம் அலகு பெறவில்லை)

ஆவவே நாம் பெரியார் தொடர்பைப் பேணி, அது செய்வோம் இது செய்வோம் என்று பறைசாற்றாது, கருமத்தைச் செயலில் காட்டி, அன்புடையாருடன் அளவளாவி, பெரியார்க்குத் தீங்கு செய்யாது வளமான வாழ்வை அமைத்துக் கொள்வோம்.

(தொடரும்)

-சிகண்டியார்.

## இரு தவறுகள்!

சஞ்சீவியில் இடம்பெற்ற இரு தவறுகளை வாசகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஒன்று கடந்தவார சஞ்சிகையின் XIII ஆம் பக்கத்தில் 'விஞ்ஞானிகளின் மறுபக்கம்' என்ற தலைப்பில் பிரசுரமான துணுக்கில் பென்ஸிலினைக் கண்டுபிடித்தவர் அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் என்று பிரசுரிக்கப்பட்டது. பென்ஸிலினைக் கண்டுபிடித்தவர் அலெக்ஸாண்டர் பிளெமிங் என்பதே சரியானது.

கடந்த 18-09-1999 சஞ்சீவி சஞ்சிகையின் கவிதைமுற்றத்தில் 'கண்ணோடு காண்பேனோ?' என்ற தலைப்பில் கொடிகாமம் இ.பரமேஸ்வரன் என்பவர் அனுப்பிய கவிதை இடம்பெற்றிருந்தது.

இக்கவிதையின் பல அடிகள் 11-07-99 திகதிய ஆனந்தவிகடனில் 'போய் வருகிறேன்...' என்ற தலைப்பில் பாஸ்கர் சக்தி வரைந்த கவிதை அப்படியே கொண்டிருந்தன. இத்தவறுகள் இடம்பெற அனுமதித்ததற்காக வாசகர்களிடம் மன்னிப்புக் கோருகின்றோம்.

(ஆர்)

## எனது தேடல்

பனித்துளிகள் ~
நதிக்கனிகளில் குளிக்கும் ~
நந்தவன நாள்களை.
நான் தேடுகிறேன்...

கனவின் வர்ணங்கள்
பௌர்ணமி விளக்குகளில்.
கவிதைகள் வரையும்~
நாள்களை தேடுகிறேன்...

செம்மண்ணில் விளைந்த ~
மாங்கனிகளின்~
இனிப்பை
மனைகளில் தேடுகிறேன்...

குடிசைகள் வழங்கிய
கூழின் சுவையை
குடங்கள் நிறைந்த
நீரின் சுவையை...
..................

மாவலியிலும் தேடுகிறேன்
தொண்டமானாற்றிலும் தேடுகிறேன்
கிடைக்கவில்லையே! கிடைக்க
~வில்லையே

எப்போது! எப்போது!!
நான்
இவைகளோடு
கைகோர்ப்பேன்; கைகோர்ப்பேன்.

-நல்லை அமிழ்தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'டாட்டா' காட்டிய இளைஞன் 'பயோ-டேட்டா' கேட்கிறானே!

**அரியாலை. ம.நேசன்.**
கார் ஓட்டப் பழகுபவருக்கு முதலில் என்ன தெரிந்திருக்க வேண்டும்?
☺**முதலில் 'ஹோர்ண்' அடிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.**

✿ ✿ ✿

**சீரணி. ப.பழனி.**
குருவுக்கு மிஞ்சிய சிஷ்யன் யார்?




☺**எல்லாச் சிஷ்யர்களும் போக ஒருவன் மட்டும் குருவுடன் எஞ்சி நின்றால் அவன்தானே 'மிஞ்சிய சிஷ்யன்'!**

✿ ✿ ✿

**நல்லூர். சடகோபன்.**
ஏன்னைப் புரிந்து நடக்கும் பெண் கிடைப்பாளா?
☺**கிடைத்த பெண்ணைப் புரிந்து நடப்பதுதான் புத்திசாலித்தனமானது.**

✿ ✿ ✿

**நெல்லியடி. தயாபரன்.**
பொருந்தா மணம் செய்தவர்களும் சேர்ந்து வாழ்கின்றார்களே?
☺**கிணற்றில் விழுந்தவன் முயற்சியைக் கைவிடலாமா?**

✿ ✿ ✿

**சங்கரத்தை. ஐ.குகேஸ்.**
சங்கீத வித்துவானின் மகன் சங்கீதம் படிக்க மறுக்கின்றானே?
☺**தகப்பன் பாடிய பாட்டையும், தகப்பன் பட்ட பாட்டையும் அவன் அறிந்திருப்பானோ என்னமோ?**

✿ ✿ ✿

**அரியாலை. ப.வனஜா.**
எனக்கு டாட்டா காட்டிய இளைஞன், இப்போது என்னிடம் Bio - Data கேட்கின்றானே?
☺**ஆழம் அறியாமல் காலை விடாத ரகத்தைச் சேர்ந்தவராக்கும் அவர்.**

✿ ✿ ✿

**நல்லூர். நாகலிங்கம்.**
வெள்ளைக்காரப் பெண்கள் ஆடவரை விட நாய்க்கு அதிக மதிப்புக் கொடுக்கின்றார்களே?

**ஊரெழு. க.சுபாஸ்.**
இப்போது அச்சு மை யாழ்ப்பாணத்தில் தாராளமாகக் கிடைக்கின்றதா?
☺**உண்மை, நேர்மை, அஞ்சாமை..... முதலிய நல்ல 'மை'களைத் தவிர ஏனைய 'மை'எல்லாம் தாராளமாகவே கிடைக்கின்றன.**

✿ ✿ ✿

**கொக்குவில். ஜெ.பாலன்.**
மனப்பால் குடிப்பதில்தான் சுவை அதிகம் என்கின்றார்களே! காரணம் ஏனோ வித்தையா?
☺**ஓஸியில் கிடைப்பது சுவைக்கும் தானே? பாலும் பால்மாவும் விற்கும் விலையில் இலவச மனப்பால் சுவைக்கத்தானே செய்யும்.**

✿ ✿ ✿


**பருத்தித்துறை. மிக்கி.**
வித்தூ ஸார்! இறைவன் மனிதனைப் பார்த்து எப்போது சிரிப்பான்?
☺**அவன் கொடுத்த சந்தர்ப்பத்தைக் கோட்டை விட்டு விட்டு முழுசிக்கொண்டு நிற்பதைக் பார்க்கும்போது!**

✿ ✿ ✿

**கரவெட்டி. ரமேஷ்.**
வித்தையா! அந்தக்காலப் பெண்கள் கணவனை மதிக்கத் தெரிந்தவர்களாக இருந்தார்கள். இந்தக்காலப் பெண்கள்.....?
☺**ஏன் மிதிக்கத் தெரிந்தவர்களாக இருக்கின்றார்களே!**

✿ ✿ ✿

**சுண்டுக்குழி. வி.காசி.**
கிரிக்கெட் மட்டையால் என் முன்பல்லை இழந்துவிட்டேன். சீதனம் குறையுமா?



☺ **மாட்டுத் தரகர் மாப்பிள்ளை பார்க்க வந்தால் நிச்சயம் குறையும்.**

✿ ✿ ✿

**அராலி. சுந்தர்ஸன்.**
வெள்ளை மாளிகை - அலரி மாளிகை: ஒப்பிடுங்களேன்!
☺**மாளிகை விவகாரங்களை விட்டு விடுங்களேன். நாங்கள் இங்கு ஜோக்காக எழுதும் விடயங்கள் அங்கு 'ஸீரியஸாக' நடக்கும். அதற்குள் மூக்கை நுளைத்து நாம் ஏன் வாங்கிக்கட்டிக் கொள்வான்?**

# குடும்பக் கட்டுப்பாட்டுக்கு என்ன செய்ய வேண்டும்?

☺**நன்றியும் விசுவாசமும் உள்ளது நாய் என்பது தெரிந்தவர்கள் போலும்.**

✿ ✿ ✿

**கோண்டாவில். அ.அகிலன்.**
நகைச்சுவை உணர்வு யாருக்கு அதிகம்? பெண்களுக்கா? ஆண்களுக்கா?




☺**இதிலென்ன சந்தேகம்? பெண்களுக்குத்தான். அவர்கள்தானே 'நகை'ச்சுவை உணர்ந்தவர்கள்.**

✿ ✿ ✿

**அராலி. ஐ.கனகு.**
குடும்பக் கட்டுப்பாட்டுக்கு என்ன செய்ய வேண்டும்?
☺**ஒண்டும் செய்ய வேண்டாம்!**

✿ ✿ ✿

**- அது பெரிய இடத்துச் சமாச்சாரமல்லவா?**

✿ ✿ ✿

**நவாலி. க.தீபன்.**
மனைவிக்கு சாரதியாக இருக்கும் கணவன்மார் குறித்து?
☺**காரோட்டி, தேரோட்டி போல ஓட்டிகள்தானே கணவன்மார்!**

✿ ✿ ✿

**மானிப்பாய். பிரதீப்.**
வீட்டுச் சாப்பாடா, வெளிச்சாப்பாடா உடம்புக்கு நல்லது?
☺**வெளிச்சாப்பாடு சிலவேளைகளில் ருசியாக இருக்கலாம். ஆனால் உடலுக்கு உபத்திரவம் வாங்கித் தந்துவிடும். கவனம்!**

✿ ✿ ✿

**குருநகர். ஜோன்சன்.**
பள்ளிக்கல்வி இந்நிலைக்குச் சென்றதற்கு காரணம் யாது?
☺**சில ஆசிரியர்கள், அதிபர்கள் பள்ளியைத் தாங்கள் பள்ளி கொள்ளும் பள்ளியறையாகக் கருதிச் செயற்பட்டதுதான் முக்கிய காரணம்.**

✿ ✿ ✿

**எழுதுமட்டுவாள். அருள்.**
திருமணமாகாத இளைஞர்களைவிட, திருமணமான ஆண்களே அதிகம் தவறுகின்றார்கள். இது ஏன்?
☺**ருசி கண்ட பூனைதானே தேடி அலைவது வழக்கம்.**

✿ ✿ ✿


**நவாலி. ரமேஷ்.**
காதலுக்கும் கல்விக்கும் என்ன வித்தியாசம்?
☺**மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் கேள்வி. என்றாலும் பதில் தரலாம்.**
**1 + 1 =2 - இது கல்வி.**
**1 + 1 =1 - இது காதல்.**
**1 + 1 =3 - இது கலவி.**

✿ ✿ ✿

**கொடிகாமம். எம்.பிரதீபன்.**
எது அவசியம் காதலா? வீரமா?
☺**வீரம்தான்! காதலிக்கக்கூட அது தானே தேவைப்படுகின்றது.**

✿ ✿ ✿

**மட்டுவில் வடக்கு. தனம்.**
'ஸ்டார்' தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் ஆங்கிலப் படங்கள் குறித்து?




☺ **சிறிசுகளைவிட பெருசுகளே (அதிலும் பழசுகள்) அதிகம் ரசித்துப் பார்க்கக் கேள்வி.**

✿ ✿ ✿

**நாவாந்துறை. சுகந்தி.**
பல்லு மிதந்த ஒருவரைக் காதலிக்கலாமா?
☺ **ஆம். நன்றாகப் பளீரென மினுக்கி வைத்திருந்தால் அவ்வப்போது கண்ணாடி போல பார்த்துத் தலைசீவவும் உதவும்.**

✿ ✿ ✿

# வித்துவான் பதில்கள்

**அச்சுவேலி. பிரின்ஸ்.**
வெளிநாடுகள் போன்று நமது ஊர் கல்லூரிகளிலும் 'செக்ஸ்' ஒரு பாடமாக வைக்கலாமா?
☺Theory **ஆக வைப்பதில் தவறில்லை. ஆனால் நம்மவர்கள்** Practical **வகுப்பும் அல்லவா நடத்த முற்படுவார்கள்?**

✿ ✿ ✿

**கச்சாய். ப.சிவதாஸ்.**
கிணற்றில் மூழ்கிய இளம்பெண்ணை நான் காப்பாற்றினேன். எனது ஆண்மைமிக்க வீரத்தைப் பாராட்டுவீர்களா?
☺**ஒரு பெண்ணை (தலை) முழுகாமல் செய்தது ஆண்மைதானே!**

✿ ✿ ✿

**வட்டுக்கோட்டை. சுலோ.**
ஜெயலலிதா இப்போது என்ன செய்து கொண்டிருப்பார்?
☺**கம்பி எண்ணுவதற்கு பயிற்சி எடுத்துக் கொண்டிருப்பதாகக் கேள்வி.**

✿ ✿ ✿

**அரியாலை. ரி.சஞ்சீவ்.**
ஜெயலலிதாவின் அரசியல் வேகம் என்னவாயிற்று?
☺**வேகம் இல்லாத விவேகத்தால் மூக்குடைபட்டுப் போய்விட்டது.**

✿ ✿ ✿

**அல்வாய். சிவசங்கர்.**
தமிழ் வைத்தியம் - மாட்டுவண்டில் பயணம் போன்றும், ஆங்கில வைத்தியம் - விமானப் பயணம் போன்றும் வேகமாகப் பயன் தரும் என்கின்றார்களே. உண்மையா?
☺**சரிதான். மாட்டுவண்டில் பயணத்தில் விபத்துக்குறைவு. விமானப் பயணத்தில் விபத்து என்றால் அதோகதிதான்.**

✿ ✿ ✿

**அரியாலை. இந்திரன்.**
வாகனம் செலுத்த முன் 'எல்' போட் போட்டுப் பழகுவது போல திருமணம் முடிக்கு முன்னரும் 'எல்' போட் போட்டுப் பழகலாமா?
☺**நேரத்துடனேயே ஓட்டக் கற்றுக் கொள்வதற்கு இதென்ன வாகனமா?**

✿ ✿ ✿

**வேலணை. கஸ்தூரி.**
வித்துவான் ஐயா! உங்களுக்கு சிலை வைக்க விரும்புகின்றேன். திறப்புவிழாவுக்கு வருவீரா?
☺**என் உயிருக்கு 'விலை' பேசி உலை வைப்பதற்கு வலை விரிக்கும் வேலை இது. வித்துவான் அப்படி ஒன்றும் ஏமாளியல்ல! (மனைவிக்கு முன்னால் மட்டும் ஏமாளி என்பது வேறுவிடயம்)**

✿ ✿ ✿

**நவாலி. தீப்.**
எனது காதலிக்கு முதன்முதலாக எதைக் கொடுக்கலாம்?
☺ **முதலில் மூன்று முடிச்சைப் போட்டு ஆட்சி உரிமையைப் பெற்றுக்கொள்ளுங்கள். பிறகு ஆட்சியை நிலைநாட்டும் வேலையைத் தொடங்கலாம்.**

✿ ✿ ✿

**இருபாலை. தி.நிஸ்வி.**
ஒரு கழுதை தினமும் எனது 'பாஸ்கட்'டுக்குள் (கூடைக்குள்) கடிதம் போடுகின்றானே!
☺**குப்பைபைக்கூடை என்று நினைத்து விட்டான் போலும்!**

✿ ✿ ✿

**நல்லூர். வாட்டுவான்.**
கண்ணிவெடி அகற்ற வந்த நாய்கள் நம்மூர் நாய்களுடன் மிக அணைவாக இருக்கின்றனவே. - அவற்றைக் கூட்டி வந்தவர்கள் மாதிரி. இதற்குக் காரணம் அவை "பிக்-அப்'பில் பவனி வருவதா?
☺**அத்தோடு 'மேக்-அப்' போட்டது போன்ற தோற்றத்துடன் நடமாடுவதும் நம்மூர் நாய்களின் நப்பாசையும்தான் காரணம்.**

✿ ✿ ✿

**துறையூர். ஜெஸ்ரின்.**
'கராட்டி அல்லது சமையல் கற்றுவிட்டுவா? அதன்பின் கல்யாணம் பேசலாம்' என்கிறார் தரகர்...!
☺ **அடிப்பவர்க்கு அல்லது அடிபணிபவர்களுக்குத்தான் திருமண வாழ்க்கை என்ற யதார்த்தத்தைப் புரிந்தவராக்கும் உமது தரகர்.**

✿ ✿ ✿

**நெல்லியடி. ஆர்.எஸ்.தாஸ்.**
அதிகமாக - வேகமாக - ஆத்திரப்படுபவர்கள் குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?
☺ **சோடாப்புட்டி போன்றவர்கள். வேகமாகச்சீறி, வெகு சீக்கிரத்தில் அடங்கி விடுவார்கள்!.**

✿ ✿ ✿

**கொக்குவில். ஜிந்தன்.**
பாடசாலைமட்டக் கணிப்பீடு குறித்து...?




☺**இப்போதாவது ஆசிரியர்களுக்கு வேலை கொடுத்திருக்கின்றார்கள் என்று திருப்திப்படலாம்.**

✿ ✿ ✿

**வடமராட்சி. மிக்கி.**
எனது நண்பனின் மனைவி எந்நேரமும் அவனுடன் எரிந்து விழுகின்றாளே....?
☺**(நெருப்பை) அணைத்து குளிர்விக்கக் கோருகின்றாளோ!**

✿ ✿ ✿

**சாவகச்சேரி. பிரணவ்ன்.**
கண்டி வீதி போன்ற நீண்ட கருங்கூந்தலை உடைய அழகிய பெண்ணைக் காதலிக்கலாமா?
☺**பாருங்கள் அந்த கண்டிவீதி கருங்கூந்தலில் பேருந்துகள் போல பேன்கள் ஓடித் திரிகின்றனவா என்று.**

## இவ்வார ஜோக்!

**புதிதாகத் திருமணம் செய்திருந்த ஜோடி சினிமா பார்க்க தியேட்டருக்கு சென்றிருந்தது.**

**புது மாப்பிளை:-"இவ்வளவு நேரம் 'கரண்ட் கட்' நீடிக்கும் என்று தெரிந்திருந்தால் உனக்கு ஒரு முத்தம் கொடுத்திருப்பேன்."**

**புதுமனைவி (அதிர்ச்சியுடன்):- "அப்படியானால் சற்றுமுன் எனக்கு முத்தம் கொடுத்தது நீங்கள் இல்லையா?"**

# காதல் - கல்வி என்ன வேறுபாடு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திப்பு

விடியும் வேளை எனது மனைவி புவனேசுவரி பதகளிப்போடு என் முதுகில் தட்டி, "இஞ்சருங்கோ, எழும்புங்கோ, ஆரோ காரிலை வந்திருக்கினம்" என்றாள். காலம் கெட்ட காலத்தில், நேரம் கெட்ட நேரத்தில் தனிமையும் முதுமையுமாக இருக்கும் எங்களின் அமைதியை அந்தக்காரின் வருகை பெரிதும் குழப்பியது.

துடித்துப் பதைத்து எழுந்த நான் அறையிலிருந்து வெளிப்பட்ட வேகத்தில் எனது தலை சுவரில் மோதிக் கொண்டது. "பாத்து, பாத்துப் போங்கோ" என்ற புவனேசின் நடுங்கற்குரல் எரிச்சல் மூட்ட, "சீச்! சும்மா இரும்" என்று அதட்டிவிட்டு, மோதலால் ஏற்பட்ட தலை நோவையும் தாங்கிக்கொண்டு, படலைத்திறப்பை எடுத்துச் சென்று படலையைத் திறந்தேன்.

கார்க்கதவைத் திறந்தவண்ணம் முதிய பெண் ஒருவரும், இளைஞர் ஒருவரும் காரிலிருந்து இறங்கி "வணக்கம்" சொன்னார்கள். நானும் வணக்கம் சொல்லிவிட்டு அவர்களை உற்று நோக்கினேன். மங்கல் இருட்டும் அதனோடு ஒத்துழைக்க முடியாத எனது வெள்ளெழுத்துக் கண்களும் அவர்கள் மீது கேள்விக் கொளுக்கியாய்த் தொற்றி நின்றன. விடை காணமுடியாத தடுமாற்றம்!

காரிலிருந்து இறங்கியவர்கள் எவ்வித தயக்கமுமின்றிப் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார்கள். நான் அவர்களைத் தொடர்ந்தேன்.

"வாருங்கோ, இருங்கோ" என்று சொல்ல முன்பே விறாந்தையிலிருந்த கதிரைகளில் அமர்ந்தார்கள்.

புவனேசும் வெளியில் வந்து என் அருகிலே நின்றபடி, அவர்களை நோட்டம் விட்டாள். ஆர் என்று அறிந்து கொள்ள முயன்ற அவளின் முயற்சியும் தோற்றுவிட, "நீங்கள்?" என்ற கேள்வி எங்கள் இருவரதும் வாய்களிலிருந்து ஒரே சமயத்தில் புறப்பட்டது.

"உங்ளுக்கு எங்களைத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. நாங்கள் கொக்குவில் ஆக்கள். ஐயாவின்ர அக்காவின்ர வீட்டிலை வாடைக்கிருக்கிறம். இவர் என்ர மகன். கொக்குவில் பள்ளிக்கூடத்திலை படிப்பிக்கிறார்." என்ற முதிய பெண்ணின் சுய அறிமுகம் எனக்கோ, புவனேஸ்வரிக்கோ உற்சாகத்தை விளைவிக்கவில்லை. மாறாகச் சலிப்பும், எரிச்சலும் கோபமுந்தான் எழுந்தன.

"அக்கா, அவவுக்கு என்னவாம்?" எனது சொற்களின் வெப்பம் அவர்களுக்குப் புரிந்திருக்கவேண்டும்.

"உங்கடை அக்கா எல்லாம் சொன்னவ. இருபது வருசத்துக்கு மேலாய் நீங்கள் ஒருவர் முகத்திலை மற்றவர் முழிக்கிறதில்லை எண்டும் எங்களுக்குத் தெரியும்" என்று ஆசிரியர் பேசத் தொடங்கினார்.

"இன்னும் எத்தினை நாளைக்கு இப்பிடி இருக்கப்போறியள்? சொல்லுங்கோ" இது அவர் தாய்.

"சாகும் வரையிலை... இது அவவுக்குத் தெரியுந்தானே?" என்ற பொழுது எனது குரலில் வெறுப்பும் கோபமும் கொப்பளித்தன.

"என்னையும் என்ர பிள்ளையையும் நாயிலும் கேவலமாய் நடத்தி வீட்டை விட்டு ஓட்டிக் கலைச்சவ, இப்ப சமாதானப் பேச்சுக்கு உங்களை அனுப்பி வைச்சவவோ?" என்று புவனேஸ் வெடித்தாள்.

இப்படியெல்லாம் நாங்கள் பேசுவோம் என்று எதிர்பார்த்து அவற்றுக்கெல்லாம் சமாதானம் சொல்லத் தயாராக அந்தத் தாயும் மகனும் வந்திருக்கிறார்கள் என்பதைச் சலனமற்ற அவர்களின் முகங்கள் துலாம்பரப்படுத்தின.

எனக்குப் பழைய நிகழ்ச்சி ஒவ்வொன்றும் அலையலையாய் நினைவுக்கடலில முட்டிமோதத தொடங்கியது.

அப்பு இறக்கும்போது எனக்கு வயசு பதினைந்து. அக்காவுக்குப் பதினெட்டு.


ஆச்சி தனது சீதனத் தோட்டத்திலும் வயலிலும் மாடாய் உழைத்து ஓடாய்த்தேய்ந்து என்னையும் அக்காவையும் வளர்த்து ஆளாக்கினார்.

நான் எஸ்.எஸ்.ஸி. சித்தியடைந்து எழுதுவினைஞன் ஆனேன். அந்தக் கால வழக்கப்படி, (பதினைந்து வயதில்) பெரிய பிள்ளையான நாளிலிருந்து வீட்டுக்குள் அக்கா அடைகிடந்தாள்.

நான் கடினமாய் உழைத்து, 'ஓவர் டைம்' அது இது என்று பாடுபட்டு, என்னையே பொறுப்பாக்கிக் கடன் பட்டுச் சீதனபாதனத்துடன் அக்காவின் இருபத்தொரு வயதில் அவவுக்குத் திருமணம் செய்து வைத்தேன்.

காலம் ஓடுகிறது. அக்காவின் சீதனக்கடன் ஒருபடியாய் அடைக்கப்பட்டு நான் தலைநிமிர்வதற்கிடையில் எனக்கு முப்பது வயதை எட்டுகிறது. மச்சாள் என்ற உறவு முறையாலும், வறியவர்கள் என்ற அனுதாபத்தாலும் வெறுங்காணி ஒன்றோடு புவனேஸ்வரியையும் கைப்பிடித்தேன்.

புவனேஸ்வரிக்கு அப்பா, அம்மா சிறுவயதிலேயே இறந்துபோனார்கள். தனிக்கட்டை. நான் வெளியிடங்களிலே கடமையாற்றியதால் புவனேஸ்வரியை அக்கா வீட்டில் - நாங்கள் சீதனமாகக் கொடுத்த வீட்டில் - அக்காவோடு தங்கவைக்க வேண்டிய நிர்ப்பந்தத் தேவை உண்டாகியது.



மாதாமாதம் நான் அனுப்பிவைத்த பணத்தில் புவனேஸ்வரி செட்டுமட்டாகச் செலவுசெய்து பெருகிவந்த பிள்ளைச் செல்வங்களையும் - இரண்டு பெண், ஒரு ஆண் - வளர்த்து வருவது ஏனோ அக்காவுக்கும் அவவின் கணவருக்கும் பிடிக்கவில்லை.

அவர்களுக்கும் பிள்ளைகள். அந்தப் பிள்ளைகளுக்கு எங்கள் பிள்ளைகள் எடுபிடி ஆள்கள். புவனேஸ் தனிச் சமையல், தனிச்செலவு செய்து வந்தாலும், அவளும் பிள்ளைகளும் தங்கள் தலையிலே ஏறி இருப்பது போலவும், பெருஞ்சுமை போலவும் அவர்கள் கருதினார்கள்.

**- சொக்கன் -**

அந்த உணர்ச்சி பேச்சாகி, ஏச்சாகி என் மனைவி மக்களுக்கு அக்காவின் வீடு நரகமாகியது.

ஒரு நாள் அக்காவின் மகனுக்கும் என் மகனுக்கும் இடையே முளைத்த சிறுசண்டை, பெரும்புயலாகி அக்காவும் அத்தானும் நாக்கில் நரம்பில்லாமல் ஏச, 'வீட்டைவிட்டு வெளிக்கிடு' என்று புவனேசைப் பிடரியிற் பிடித்து தள்ள.....

அதன் பிறகு.....
இருபது வருடங்கள்....
நானும் யாழ்ப்பாணம் வந்து....
வாடகை வீட்டில் இருந்து....
காலப்போக்கில்....
புவனேசின் காணியில் வீடு கட்டி...
நிம்மதியாய் இருக்கிறோம்.
இன்று.... அக்காவின் சமாதானத் தூது.... ஏன்?

அத்தான் நிறைகுடி காரணமாக ஈரல் பழுதுபட்டு, ஐந்து வருடங்களுக்கு முன்பு இறந்துபோனார். அக்காவோ அவவின் மக்களோ எங்களுக்கு அறிவிக்கவில்லை; நாங்களும் போகவில்லை.

அக்காவின் முதல்மகன் ஸ்ரீரங்கன் படிப்பை இடையில் குழப்பிவிட்டு, தாயின் நகைநட்டை விற்று காணியை ஈடுவைத்து வெளிநாடு போனவன் போனவன்தான். அவனைப் பற்றிப் பிறகு எதுவும் தெரியாமல் அக்கா வேதனையில் மூழ்கியிருந்ததாய்க் கேள்விப்பட்டபொழுது "இது அவவுக்கு வேணும்" என்று குரூரமாக நினைத்துத் திருப்திப்பட்டது இப்பொழுது நினைவுக்கு வருகிறது.

அவனுக்கு ஒரே தங்கை சுமதி. அவள் தன்னிஷ்டத்துக்கு எவன் ஒருவனோடோ கூடி வீட்டைவிட்டு ஓடிவிட்டதாகக் கேள்வி. அக்கா அவமானத்தால் கூம்பிப்போய்ப் பலமாதங்கள் வீட்டைவிட்டு வெளியில் வராமல் இருந்தாள் என்றும் கேள்விப்பட்டோம்.

மூன்றாவதும் கடைசியுமான மகன் போராளி இயக்கம ஒன்றிலே இணைந்து 'மாவீரன்' ஆகிவிட்டான்.

இரண்டு வீடுகளும், கணவரின் இறப்பால் கிடைக்கும் விதவைப் பென்சனும், அறுபத்தைந்து வயதின் முதுமையும் நோய்நொடியும் தனிமையுமாக அக்கா அவலப்படுவதாகவும், தனது அந்திய காலத்தில் தம்பி குடும்பத்தை ஒருமுறை காணவிரும்புவதாகவும் வந்தவர்கள் சொன்னார்கள்.

வீடுவாசலைப் பூட்டிவிட்டுத் தங்களோடு காரில் வரும்படி வற்புறுத்தினார்கள்.

நான் புவனேசைப் பார்த்தேன். புவனேஸ் என் பார்வையின் பொருளை உணர்ந்து கொண்டாள்.

ஆனால்.....

எந்தத் தீர்மானத்திற்கும் வரமுடியாமையாலோ, அக்காவின்மீது கொண்ட வன்மம் குறையாததனாலோ, அவள் மௌனச் சிலையாய் தலை குனிந்து நின்றாள்.

இருபது வருடங்களாய் என் உள்ளத்தினுள்ளே பலவந்தமாய் நான் புதைந்து, வெறுப்பு என்ற களிமண்ணால் பூசி மறைத்திருந்த சகோதர பாசம் வெளிப்பட முயன்று தோற்றதா, வென்றதா?

என்னால் சொல்ல முடியவில்லை.

"வீடு, வாசலை அப்பிடி அப்பிடியே விட்டிட்டு வர ஏலுமோ? கொஞ்சம் அயந்திட்டால் பக்கத்துவீட்டுப் பரிகலங்கள் சுற்றாடலிலை ஒண்டும் இல்லாமல் அள்ளிக்கொண்டு போயிடும். ஆரையாவது வீட்டைப் பார்த்துக் கொள்ள ஒழுங்கு பண்ணிட்டுப் பின்னேரம் போல வாறம். நீங்கள் போய் வாருங்கோ." என்று சொல்லி வந்தவர்களுக்குத் தேநீரும் வழங்கி ஒருவாறு அனுப்பிவைத்தோம்.

"உங்கடை அக்கா படுத்த படுக்கைதான். என்ரமோள்தான் அவவைப் பார்த்து வேண்டியதைச் செய்யிறா. உரிமைக்காரர் நீங்கள். ஊருலகம் உங்களைப் பேசாமல் நடந்து கொள்ளுங்கோ. வேறை என்னத்தைச் சொல்ல? நாங்கள் வாறம்"

தாயும் மகனும் போய்விட்டார்கள். அவர்கள் போனதும் புவனேஸ், "உங்கடை அக்காவுக்கு இப்பதான் ஞானம் பிறந்திருக்கு. புரிசனும் செத்துப்போய், பிள்ளையளும் பக்கத்திலை இல்லை எண்ட நிலையிலைதான் இறங்கிவந்திருக்கிற. இதையெல்லாம் அப்ப யோசிச்சிருக்க வேணும்" என்றாள். அவளின் மனக்குமுறல் சொற்களின் படபடப்பில் எதிரொலித்தது.

"இஞ்ச பாரும் அப்பா, அக்காவின்ரை நிலையிலைதானை நாங்களும் இருக்கிறம். எங்கடை பொம்பிளைப்பிள்ளையள் புருசன்மாரோடை கனடாவிலை. எட்டிலை இடையிலை கடிதம் போட்டால் உண்டு. ஒண்டே ஒண்டெண்டிருந்த பொடியனும்..." அப்பாற் சொல்லமுடியாது விம்மலும் பொருமலும் என்னைத் தடுத்தன.

புவனேசுக்கு அது போதியதாயிருந்தது. "என்ர பிள்ளை குண்டுச் சிதறல் தாக்கித் துண்டுதுண்டாய்க் கூட்டி அள்ள வைச்சிட்டுப் போயிட்டானே." என்று கதறி அழத்தொடங்கிவிட்டாள்.

சில நிமிஷங்கள், சொல் கடந்த சோகத்தில் சில யுகங்களாய்க் கழிந்துபோயின.

"சரி! இனி உதை நினைச்சு ஆகப் போறதொண்டுமில்லை அழுகையை நிறுத்திப்போட்டுச் சொல்லும். அக்கா வீட்டை போறதோ இல்லையோ?" புவனேஸ் முந்தானையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு சொன்னாள்.

"அந்த மனிசி சொன்னமாதிரி ஊர் உலகத்துக்குப் பயந்தாவது போகத்தானே வேணும்?"

* * *

நான் அதிர்ந்து போனேன்.

அங்க சாங்க உபாங்கங்கள் எல்லாம் சிற்பசாஸ்திரப் பிரமாணங்களில் அணுவளவுந் தவறாது கைதேர்ந்த சிற்பி உருவாக்கிய அம்மன் சிலை போல கட்டுடலும் கட்டழகுமாய் விளங்கிய என் அக்காவா இது?

அறுபத்தைந்து வயதிலே தொண்ணூறு வயதாகிவிட்ட படுகிழம் ஒன்றல்லவா என் முன்பு காட்சி தருகிறது? மூச்சுப்பிடித்து ஊதிவிட்ட பலூன்போல உப்பிப்பருத்து, பற்கள் விழுந்து மேலுதடும் நாடியும் பேதமின்றிச் சங்கமமாகிவிட்ட வாயுடன், மருந்துக்குக் கூடக் கறுப்புக் காணாத வெள்ளை வெளேரென்று நாலைந்து மயிர்கள் கொண்ட மலட்டுத்தரைத் தலையுடன், இருந்த இடம் கறையான் அரிக்க, அத்துவானக் கிறக்கத்தில், நான் 'அக்கா! அக்கா!!' என பலதடவைகள் அழைத்தும் கேட்காத பீரங்கிச் செவிடாய் அமர்ந்திருக்கும் இதுவா என் அக்கா?

என்னால் அழுகையை அடக்க முடியவில்லை. தனிமையும் இழப்புக்களும், பற்றிப்படரக் கொழுகொம்பற்ற அநாதைத்தனமும் சேர்ந்து அக்காவை இந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டதை என்ன என்பேன்?

நான் அக்காவை உலுக்கி உணர்வு பெறச் செய்து, நானும், புவனேசும் வந்திருப்பதை அறிய வைத்தேன்.


அக்கா தமது புசுபுசுப்பஞ்சுக் கையால் என் முகத்தைத் தடவியபொழுது எனது அறுபத்திரண்டு வயது மறைந்து போய், ஐந்து வயதுக் குழந்தையாய் மாறி அக்காவின் மடியிலே சாய்ந்து குமுறிக் குமுறி அழுதேன். புவனேசையும் அந்த அழுகை தொற்றிக்கொள்ள அவளும் அழுதாள்.

அக்காவில் எவ்வித சலனமும் இல்லை. அவளால் அழவும் முடியாது, சிரிக்கவும் முடியாது. ஆனால் அவளின் உள்ளத்தின் உள்ளே பாசக்கடல் பொங்கி அலை எறிவதை அவளின் தடவல் எனக்கு உணர்த்தியது. அவள் சொன்னாள்.

"என்னாலை இங்கை தனிய இருக்க முடியாது. என்னை உன்ர வீட்டை கூட்டிக்கொண்டுபோ."

(*முதியோர் தினத்தை ஒட்டிய சிறப்புச் சிறுகதை இது.)

# சொற்சிலம்பம்
## புதிர்ப் போட்டி இல.123



**சொற்சிலம்பம் இல. 123**
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ....................................................................

விலாசம்: ....................................................................

....................................................................

..............................இங்கே வெட்டுக..............................

முடிவுத் திகதி:- 15-10-1999

### இடமிருந்து வலம்

1. இகழ்வாக மதித்தல். 7. மறைத்து இலக்கு வைப்பது இதனால். 8. காலில் கட்டுவது. 9. காயத்தின் அடையாளம். 10. கருக்கட்டிய முட்டை. 11. உலகம். 12. உடலில் வளைவு. 13. கவிஞர். 15. இணக்கத்துக்குரிய சொல். 16. உட்பகை. 17. கணவன். 19. பிரச்சினை 20. ஒன்று. 21. சௌக்கியம். 22. மறு.

### மேலிருந்து கீழ்

1. ஐந்து விதப் பாவில் ஒன்று. 2. பூச்சி வகை சார்ந்தது. 3. நேர அலகு. 4. இரத்தல். 5. மருந்து வடிவம். 6. எதிரி. 10. அனுபவித்தல்/பாவித்தல். 11. நீரிழிவு. 12. ஒரு வடிவம். 14. பிரிக்க. 18. பூட்டான் தலைநகர். 19. குழந்தை. 20. ஓர் இலக்கம்.

### சொற்சிலம்பம் 121 இன் விடைகள

### இடமிருந்து வலம்

1. எமகாதகன். 7. சத்துராதி. 8. நான். 9. மாது. 10. சுரபி. 13. வன்மம். 15. கணவன். 17. சுருக்கு. 18. அன்பு. 20. கதியால். 22. குலம். 23. துவாரம்.

### மேலிருந்து கீழ்

1. எசமான். 2. மத்து. 3. காது. 4. தராசு. 5. கதிரவன். 6. கன்னம். 8. நா. 11. பின். 12. சுணக்கம். 14. மகன். 15. கரு. 16. வகுதி. 17. சுக்கு. 18. அல்வா. 19. புலம். 21. யாது.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு:-** கந்தசாமி ஜெகதீபன், கலையரசு லேன், நவாலி தெற்கு, மானிப்பாய்.

**இரண்டாம் பரிசு:-** கே. இராஜகோபால், "பொன்மனை", தொல்புரம், சுளிபுரம்.

**மூன்றாம் பரிசு:-** த. கஸ்தூரி, 60, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும். சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 122 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில்.

## 35 ஆண்டுகள்......

(X ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலையை விட்டு வெளியேறத் தயங்கி மர நிழலில் நின்றார்.

அவரது மகளை அழைப்பித்ததை அவர் பார்த்ததும் விரைந்து வெளியேறிச் சென்றுவிட்டார். அவர் மகளிடம் பணம் கொடுத்தது பொய் என்பதும், அன்று காலை தன்னுடன் சாட்சியாக வருமாறு மகளை வற்புறுத்தினார் என்பதும் விசாரணையில் தெரியவந்தன.

அவர் மறுபடி பாடசாலைப் பக்கம் ஏன் வரப்போகிறார்...?

10 மணியளவில் மற்றுமொருவர் அதே பணத்தைக் கோரிவந்தார். 50 ரூபா ஒரே நோட்டு என்பதையும் சொன்னார். அவர் 'எப்படியானவர்' என்பதை முன்னரே அதிபர் நன்கு அறிவார் என்பதால், கண்டெடுத்த தொகை 100 ரூபா என்றும் யாராவது முறையீனமாய் வராமல் தடுப்பதற்காகவே சும்மா 50ரூபா கதைவிட்டதாகவும் சொல்லும் போதே அதிபரின் கண்களில் கனல் பறந்தது. தன் பாச்சா பலிக்காது என்பது புரியவே அவர் கணமும் தாமதிக்காது வெளியேறிவிட்டார்.

சற்றுநேரத்தில், 50ரூபா தொலைந்த இன்னொருவர் வந்தபோது,

"அன்று, ஒரேநாளில் இதே தெருவில், ஊரிலுள்ள பாதிப்பேர் [illegible] வாகவே எல்லாரும் ஒத்துப் [illegible] தொலைத்திருக்கிறார்கள். ஒரு 50ரூபா தவிர, மீதி 50ரூபா நோட்டெல்லாம் இந்தத் தெருவில்தான். பார்த்து ஒன்றை எடுத்துக் கொள்ளச் சொல்லியிருக்கிறேன். உமக்கும் அதுதான் மறுமொழி...! அல்லது உமக்கு இந்த 50 ரூபா நோட்டுத்தான் தேவையோ...?" என்று தாட்சண்யமின்றிச் சொன்னபோது, அவர், காசுக்காக வராதது போலச்சமாளிக்கப் பார்த்தார். ஆயினும் வந்ததற்கான காரணம் ஒன்றைச் சடுதியாய்ச் சொல்ல அவரால இயலவில்லை.

அவரும் தன எத்தனம் நிறைவேறாமலேயே திரும்ப நேர்ந்தது.

இறுதியாக, அந்தப் பணத்தின் [illegible] குரிய பணத்துடன் சேர்க்கப்பட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொகுப்பு: நம்பி

## அறிந்து கொள்ளுங்கள்



மனிதர்களை அடிமைகளாக விற்கும் முறை அமெரிக்காவில் தீவிரமாகக் காணப்பட்டது. அம்முறையை எதிர்த்து, அடிமை முறையை ஒழித்த பெருமை அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரஹாம் லிங்கனுக்கே உரியது. அடிமை முறையை ஒழித்ததன் மூலம் மனித குலத்திற்கே மாபெரும் சேவையைச் செய்துள்ளார் இவர்.

அடிமைமுறையை இல்லாதொழித்த பெருமை ஆபிரகாம்லிங்கனுக்குரியது எனினும் 'அடிமை கொள்வது என்பது மனிதன் செய்யக் கூடிய செயலே அல்ல. அது இழிவான செயல்' என்று அடிமைமுறைக்கு எதிராக முதன்முதலில் உரத்துக் குரல் தந்தவர். 'யூரிபைட்ஸ்' என்பவர்தான்.

## எது கிடைக்கும்?




இங்குள்ள ஐந்து பொருட்களில் எது/எவை நாய்க்குட்டிக்குக் கிடைக்கும் என்று கண்டுபிடியுங்கள்.

## இது தெரியுமா?

ஆங்கில எழுத்துக்களின் எண்ணிக்கை 26 என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆங்கில எழுத்துக்கள் 26உம் உள்ள வாக்கியம் -


PACK MY BOX WITH FIVE DOZEN LIQUOR JUGS.

என்பதுதான் என்பதையும் அறிந்துகொள்ளுங்கள்.

## மழையும் முல்லாவும்

மதக் கொள்கைகளைத் தவறாது கடைப்பிடித்து அறநெறியோடு வாழும் பெரியார் ஒருவர் முல்லாவின் ஊரில் வாழ்ந்து வந்தார். மக் கள் அனைவரும் அவரிடம் மிக்க மரியாதை கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் திடீரென கனத்த மழை பெய்ய ஆரம்பித்தது. தெருவில் சென்றுகொண்டிருந்த அனைவரும் விரைந்து ஓடத் தொடங்கினர்.



அவ்வாறு ஓடுபவர்களில் அந்த மதப் பெரியாரும் ஒருவராக இருந்தார்.

அதனைத் தன் வீட்டுத் திண்ணையிலிருந்து கண்ட முல்லா, "ஐயா, நீங்கள் அப்படிச் செய்யலாமா? கடவுள் மக்கள் மேல் கொண்ட கருணையால் பெய்விக்கும் மழையைக் கண்டு ஓடினால் அது கடவுளை அவமதிப்பதாகாதா?" என்று வினாவினார்.

கடவுள் அருளையும் உயர்வினையும் உணர்ந்திருந்த பெரியவர், "இனிமேல் நான் மழையைக் கண்டு ஓடமாட்டேன்" என்று கூறிவிட்டு மழையில் நனைந்தவாறே மெதுவாக வீட்டிற்குச் சென்றார். அதனால் அவருக்குக் காய்ச்சல் ஏற்பட்டு நான்கைந்து நாள்கள் சிரமப்பட்டார்.

பின்னர் ஒரு நாள் அந்த மதப் பெரியார் அவரது வீட்டில் உட்கார்ந்திருக்கையில் மழை பெய்ய ஆரம்பித்தது. மழையில் நனைந்து கொண்டு முல்லா ஓடுவதைப் பார்த்த பெரியார், முல்லாவை அழைத்து "என்ன முல்லா, எனக்குப் புத்திமதி கூறிவிட்டு, நீர் மழையைக் கண்டு ஓடுகிறீரே! இது கடவுளை அவமதிக்கும் செயலல்லவா?" என்று முல்லாவிடம் வினாவினார்.

அதற்கு முல்லா, "ஐயா, கடவுளின் அருள்தான் மழை என்பதை நான் மறக்கவில்லை. அத்தோடு மழைக்கு அஞ்சியும் நான் ஓடவில்லை. மாறாகக் கடவுளின் அருளால் கிடைக்கும் மழையை மிதிக்கக் கூடாதே என்றுதான் வேகமாக ஓடுகிறேன்" என்று பதிலளித்தார்.

பெரியவர் வாயடைத்துப் போனார்.

- மா.பா.ராஜ் -

## றோசாப் பூ!

கண்ணைப் பறிக்குது றோசாப்பூ
காற்றில் ஆடுது றோசாப்பூ
வண்ண நிறத்திலே றோசாப்பூ
வடிவாய் இருக்குது றோசாப்பூ.


பச்சை இலைகள் ஆடுது
பார்த்து முள்ளுக் காக்குது
உச்சிக் கிளையில் றோசாவை
உயரத்தில் பிடித்துக் காட்டுது.

தென்றல் அணைத்துக் கொள்ளுது
சுகமாய் மணத்தைப் பரப்புது
இன்பம் பரப்பும் வண்டுகள்
இரைந்து செடியைச் சுற்றுது.

தண்டு நிறைந்த முட்களே
தன்னைக் காக்கும் படைகளாய்
கொண்டு றோசா சிரிக்குது
கொள்ளை அழகை சொரியுது.

-ச.அருளானந்தம்-

## குட்டி முயலும் ஆமையும்



முயல்குட்டி ஒன்று காட்டில் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. அந்தவழியே வந்த ஆமையைப் பார்க்க அதற்கு வேடிக்கையாக இருந்தது. ஆமை மெல்ல மெல்ல ஆடி அசைந்து நகர்ந்து வந்து கொண்டிருந்தது.

முயல், ஆமையின் ஓட்டின்மேல் குதித்து விளையாட ஆரம்பித்தது. அதனால் முயல்மேல் ஆமைக்குக் கோபம் ஏற்படவில்லை. அது முயலைப்பார்த்து, 'நண்பனே நன்றாக ஓடிவிளையாடு. அதுதான் உன் உடல் நலத்திற்கு நல்லது' என்றது.

அதைக் கேட்ட முயல்குட்டி நகைத்தது. 'விளையாட்டைப்பற்றி நீ பேசுகிறாயா? ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு நகர்ந்து போவதே உனக்குப் பெரிய காரியமாக இருக்கிறது. நீ போய் விளையாட்டைப் பற்றி எனக்கு அறிவுறுத்துகிறாயே?' என்று ஆமையைப் பார்த்துக் கூறியது.

'நண்பனே. துள்ளித்துள்ளி விளையாட வேண்டியவன் நீ. அதுதான் முயல் இனத்தின் இயல்பு. நீ விளையாடத்தான் வேண்டும். அப்போதுதான் ஆபத்துவரும்போது ஓடித் தப்பிக்கொள்ளமுடியும். எனக்கு அந்த அவசியம் இல்லை' என்று பணிவாகப் பதிலளித்தது ஆமை.

'ஆபத்தா? எனக்கா?' என்று கூறிப் பெரிதாகச் சிரித்தது முயல்குட்டி.

'என்னை யாரும் பிடிக்கமுடியாது. காற்றை விட வேகமாக என்னால் ஓடமுடியும்' என்று கர்வமாகப் பேசியது.

முயலின் கர்வப் பேச்சு ஆமைக்குப் பிடிக்கவில்லை. அதேநேரம் முயல்குட்டி மீண்டும் ஆமையின் முதுகின் மீது அமர்ந்து அதன் தலையைத் தட்டிச் சீண்டியது. ஆமைக்குக் கோபம் வந்தது. ஆனால் தன்னால் முயல் குட்டியை ஒன்றும் செய்யமுடியாது என்பதை நினைத்து மனதிற்குள் பொருமியது. ஆமையின் இயலாமை முயல் குட்டிக்கு மேலும் உற்சாகத்தை தரவே, அது ஆமையை மேலும் சீண்டியது.

தொலைவிலிருந்து வெகுவேகமாக ஓடிவந்து ஆமையின் தலையில் 'தொப்' என்று குதித்தது. அந்த அதிர்ச்சியைத் தாங்கமுடியாத ஆமை துடித்தது.

'முயல் குட்டியே! விளையாட்டுப் போதும். எனக்கு வலிக்கிறது. பேசாமல் இரு!' என்று கெஞ்சும் குரலில் சொன்னது ஆமை.

ஆனால் முயல் குட்டி குதிப்பதை நிறுத்தவில்லை.

'உனக்குச் சமமானவர்களோடு மோதுவதும் அவர்களைத் தாக்குவதும்தான் வீரம். எளியவர்களைத் தாக்குவது கோழைத்தனம்' என்றது ஆமை.


'இவ்வளவு பெரிய உடலில் சின்னஞ்சிறிய தலையை வைத்துக் கொண்டிருக்கிறாய். அதில் மூளை இருக்கிறதோ என்னவோ? நீ எனக்கு அறிவுரை கூறுகிறாயா?' என்று கேட்டுவிட்டு, முயல் மறுபடி ஆமையின் மேல் குதித்தது.

அப்போது சட்டென்று ஆமை தனது தலை, கால்கள் எல்லாவற்றையும் ஓட்டினுள்ளே இழுத்துக் கொண்டது. தனக்குப் பயந்துதான் ஆமை அவ்வாறு பதுங்குவதாக நினைத்த முயல் குட்டி, தன் எதிரே ஓநாய் ஒன்று வந்து நிற்பதைக் கண்டதும் கதிகலங்கிப்போனது. ஆமையைச் சீண்டி வருத்தும் மும்முரத்தில் அது ஓநாய் வந்ததைக் கவனிக்கவில்லை. ஓநாய் தன்னைக் குறிவைத்தப் பாய்ந்து வருவதைக் கண்டதும் தலைதெறிக்க ஓட ஆரம்பித்தது முயல்குட்டி.

ஓநாயிடமிருந்து தப்பிக்க மிக வேகமாக ஓடவும் பதுங்கவும் வேண்டியிருந்தது. ஒருவழியாக ஓநாயிடமிருந்து தப்பித்தது முயல் குட்டி. ஆனாலும் உடலில் பல காயங்களுடன்தான் திரும்ப முடிந்தது. மிகவும் சோர்ந்துபோய் மெதுவாகத் தன் இருப்பிடத்திற்கு வந்துசோந்தது. அங்கே அப்போதும் ஆமை நிதானமாக உலாவிக்கொண்டிருந்தது. ஆமையைப் பொறாமையுடன் பார்த்தது முயல் குட்டி.

நிதானமானவர்களிடம்தான் அறிவும் திறமையும் அதிமாகக் காணப்படும். ஆண்டவன் அதனதன் தேவைகளை உணர்ந்துதான் உடலின் அமைப்புக்களைத் தந்திருக்கின்றான் என்பது முயலுக்கு இப்போதுதான் புரிந்தது. ஆமையிடம் சென்று தன் தவறுக்காக மன்னிக்கும் படி வேண்டிக்கொண்டது. ஆமையும் அதனை மன்னித்து முயல்குட்டியை தன் நண்பனாக ஏற்றுக்கொண்டது.

- நிஷார் -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org